கடவுள்துணை

நாற்கவிராசநம்பி யியற்றிய

# அகப்பொருள் விளக்கம்

மூலமு முரையும்.

இவை

மதுரைத் தமிழ்ச்சங்கத்து அக்கிராசனாதிபதியாயிருந்த

பாலவனத்தம் ஜமீந்தார்

ஸ்ரீமாந்-

பொ. பாண்டித்துரைத்தேவரவர்களால்

பரிசோதிக்கப்பெற்றன.

செந்தமிழ்ப்பிரசுரம்—௬௪.

மதுரை:

தமிழ்ச்சங்க முத்திராசாலை

இரண்டாம் பதிப்பு.

1926.

[காபிரைட் ரிஜிஸ்டேர்ட்.]

# அகப்பொருள்விளக்கம்

## முகவுரை.

---

பண்டைக்காலத்து வழங்கிவந்த தமிழிலக்கியங்களைக் கற்போர் எளிதி னுணர்தற் குபகாரமாகவும், கற்றுவல்லோர் மற்று மிலக்கியங்க ளியற்றுவதற்குக் கட்டளையாகவும் முன்னோரால் விதிக்கப்பட்ட பழைய இலக்கணநூல்கள் பலவற்றுள்ளும் தொல்காப்பியம் மிகச் சிறந்தது. அது எழுத்துச் சொற் பொருள் என்னும் மூன்றதிகாரங்களை யுடையதாய் எழுத்ததிகாரத்தில் எழுத்திலக்கணங்களையும் சொல்லதிகாரத்துட் சொல்லிலக்கணங்களையும் விரித்தும், பொருளதிகாரத்துள் அகம் புறம் என்னும் இருபகுதியாகிய பொருளிலக்கணங்களையும் அவைபற்றி நிகழும் யாப்பிலக்கண முதலியவற்றையும் அக்காலவழக்கொடு பொருந்த வேண்டுமளவு விதித்தும் முடிக்கப்பெற்றுள்ளது.

அரும்பெருநூல்களைக் கற்குமாற்றன் மிக்குள்ள முற்காலத்தவரால் அந்நூல் எளிதி னுணரப்பட்டிருப்பினும் அவ்வாற்றல் குன்றிவரும் பிற்காலத்துக் கல்விமுதிர்ச்சியுடையார்க்கன்றிக் கற்குஞ் சிறார்க்கெல்லாம் அங்ஙன முணர்தற்கரியதாயிற்று. ஆகவே, பிற்காலத்து அவ்விலக்கணங்களுள் எழுத்து சொல் என்னும் இருவகை யிலக்கணங்களையும் தற்காலவழக்குநோக்கிப் புதியன புகுத்துக் கற்போர் எளிதினுணரத் தொகை வகை விரியாற் சுருங்கியதாய்ப் பவணந்திமுனிவரால் நன்னூலென்று மிலக்கணநூலொன்று செய்யப்பட்டிருக்கிறது. அவ்வாறே பன்னிருபடலத்துள் விரிந்து பரந்துகிடந்த புறப்பொருளிலக்கணங்களைக் கற்பவர்கள் தெளிவுறுமாறு முறைப்படுத்தி ஐயனாரிதனாரால் 'வெண்பாமாலை' யென்னும் புறப்பொரு ளிலக்கணநூலும் ஒன்று செய்யப்பட்டுள்ளது. மற்றும் யாப்பிலக்கணங்களைப் பிற்காலவழக்கு நோக்கி விரித்து யாப்பருங்கலமென்னும் இலக்கணநூல் ஒன்று பிருகத்ஸாகரராற் செய்யப்பட்ட

அதனைக் கற்போர் எளிதி னுணருமாறு, அவ்விலக்கணங்களைச் சுருக்
'யாப்பருங்கலக்காரிகை' யென்னும் யாப்பிலக்கணநூலொன்று அமு
சாகரராற் செய்யப்பட்டிருக்கிறது. அங்ஙனம் அணியிலக்கணங்களு
பிறரால் செய்யப்பட்டுள்ளன.

அம்முறையில் அகப்பொருள் விளக்க' மென்னு மிந்நூலு
நாற்கவிராசநம்பி என்பவரால், தொல்காப்பியத்தும் வேற்றிலக்கணவிட
ங்களிலும் விரிந்து பரந்து கிடந்த அகப்பொரு ளிலக்கணங்களைத் த
காலத்துச் சான்றோ ரிலக்கியங்களுக்கிசைய முறைப்படத் தொகுத்து
பொரு ளினிது விளங்கச் சூத்திரம் வகுத்து உரையுமெழுதி உதார
ணுங் காட்டி முடிக்கப்பெற்றது.

இது, அகப்பொருளிலக்கணங்களைத் தெளிவுற விளக்கு மிட
புடைய தென்பதுபற்றி 'இலக்கணவிளக்க' நூலுடையாரால் அக
பொருளிலக்கணங் கூறுமிடத்துப் பெரும்பாலும் இந்நூற் சூத்திர
ங்களைக்கொண்டே அவ்விலக்கணங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன.

இந்நூலாசிரியரது ஊர் பாண்டிநாட்டுப் பொருநையாற்று
கரையருகிலுள்ள திருப்புளிங்குடி என்னுந் திருப்பதி. இவ..
பெயர் நம்பிநயினார் என்பதே. இவரது ஸமயம் ஜைனம். இவர் வ
மொழியிலும் வல்லுநர். இவர் தமது புலமைத் திறமைகொண்
நாற்கவிராசர் என்னும் சிறப்புப்பெயரும் பெற்றமையால் நாற்கவிர
நம்பி என வழங்கப்பெற்றனர். இவர் தந்தையார் முத்தமிழ்
புலமையும் உத்தமகுணங்களு மொருங்கமைந்த உய்யவந்தநயி
என்பார். இவர் ஆசிரியபதம் பெற்றவர். இந்நூல் அரங்கேறிய இட
பாண்டியன் குலசேகரன் அவைக்களம். இவையெல்லாம் இந்நூல்
சிறப்புப்பாயிரத்தாலும் அதனுரையாலும் நன்கு விளங்குகின்றன.

இந்நூலை, மதுரைத் தமிழ்ச்சங்கஸ்தாபகரும் அச்சங்கத் த
வருமாயிருந்த தமிழபிமானம்பூண்ட பாலவநத்தம் ஜமீந்தார் ஸ்ரீப
பாண்டித்துரைத்தேவரவர்கள் அச்சிடக்கருதிப் பலராலும் சங்
துக்குக் கொடுக்கப்பட்ட ஏட்டுப்பிரதிகள் பலவற்றையும் ஒப்புநே
கிப் பரிசோதித்துச் செந்தமிழ்ப் பிரசுரமாக வெளியிட்டுவந்தார்க
அப்பிரதிகளுட் சில தஞ்சைவாணன்கோவைச் செய்யுண் மட்டு

யுதாரணமாகக் காட்டப்பட்டுள்ளன. வேறுபல பிரதிகளில் தஞ்சை வாணன்கோவைச் செய்யுளுடன் ஏற்றபெற்றி இடையிடையே பல துறைகளுக்கு நற்றிணை குறுந்தொகை அகநானூறு முதலிய சங்க நூற் செய்யுள்களும், அகப்பொருட்டுறையிற் றாற்பரியமில்லாத சில பிறநூற் செய்யுள்களும் உதாரணம் காட்டப்பட்டிருந்தன. சங்கச் செய்யுள்களிற் சில துறை வேறுபடக் காட்டப்பட்டுள்ளன. அகப்பொருட்டுறையிற் றாற்பரியமில்லாத உதாரணச் செய்யுள்களிற் சில பொருந்தாதனவுமிருந்தன. அவை இடைச்செருகலென விலக்கப்பட்டன. இடையிடையே யுதாரணமாகக் காட்டப்பட்ட சங்கச் செய்யுள்கள்பலவும் பல பிரதிகளிலும் பிழைபட்டுக் கிடந்தமையால் அவற்றை இயன்றவளவு திருத்தியும், தெளிவில்லாத செய்யுள்கள் பலவும் தேவரவர்கள் விருப்பத்தின்படி மஹாமஹோபாத்தியாய பிரும்மஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்களாற் திருத்தியனுப்பப்பெற்றும் பெரும்பாகமும் அச்சிட்டு முடியுந்தருணத்தில் தேவரவர்கள் தெய்வ கதியால் தேகவியோகமடைந்துவிட்டார்கள்.

பின்பு எஞ்சிய சிறுபாகமும் அவர்கள் திருத்திவைத்திருந்த பிரதியைக்கொண்டு அச்சிட்டு முடிக்கவேண்டியதாயிற்று. இத்தருணத்தில் மஹாமஹோபாத்தியாய ஐயரவர்கள் திருத்தியனுப்பிய உதாரணச் செய்யுள்கள் அகப்படாமையால் மறுமுறையும் அவர்களுக்குச் சிரமங்கொடுக்க நேர்ந்தேன். அவர்கள் எனது வேண்டுகோளுக்கிணங்கி, தங்கள் இடையில்லாக் காரியங்களுக்கிடையே சிரமம் பாராட்டாது திருத்தியனுப்பிய பரோபகாரப் பெருந்தகைமை பாராட்டற்பாலது.

இங்ஙனம்,

திரு. நாராயணையங்கார்,

பத்திராதிபர்.

"செந்தமிழ்."

(1926)

உ

கடவுள் துணை

# அகப்பொருள் விளக்கம்.

## மூலமும் உரையும்.

### பாயிரம்.

பூமலி நாவன் மாமலைச் சென்னி
யீண்டிய விமையோர் வேண்டலிற் போந்து
குடங்கையின் விந்த நெடுங்கிரி மிசைதீர்த்
தலைகட லடக்கி மலையத் திருந்த
விருந்தவன் றன்பா லியற்றமி ழுணர்ந்த
புலவர்பன் னிருவருட் டலைவ னாகிய
தொல்காப் பியனரு ளொல்காப் பெரும்பொரு
ளகப்பொரு ளிலக்கண மகப்படத் தழீஇ
யிகப்பருஞ் சான்றோ ரிலக்கிய நோக்கித்
தொகுத்து முறைநிறீஇச் சூத்திரம் வகுத்தாங்
ககப்பொருள் விளக்கமென் றதற்கொரு நாமம்
புலப்படுத் திருளறப் பொருள்விரித் தெழுதினன்
மாந்தரும் தேவரும் வாழ்த்தமுக் குடைக்கீ
ழேந்தெழி லரிமா னேந்துபொன் னணைமிசை
மதிமூன் றுகவிப்ப வுதய மால்வரைக்
கதிரோன் றிருந்தெனக் காண்டக விருந்து
தத்துவம் பகர்ந்தோன் சரணம் பொருந்திய
வுத்தமன் புளிங்குடி யுய்யவந் தானெனு
முத்தமி ழாசான் மைந்த னித்தலத்
திருபெருங் கலைக்கு மொருபெருங் குரிசில்
பாடற்கடற் பல்புகழ் பரப்பிய
நாற்கவி ராச நம்பியென் பவனே.

என்பது பாயிரம். பாயிரமென்பது புறவுரையென்றவாறு. ஆயின் நூல் கேட்பான் புகுந்தே நூல் கேளாது புறவுரை கேட்டாற் பயனென்னையெனின்; "பருப்பொருட்டாகிய பாயிரங்கேட்டார்க்கு நுண்பொருட்டாகிய நூலினிது விளங்கு" மென்பவாகலாற் பாயிரங்கேட்டே நூல்கேட்கவேண்டும். அப்பாயிரம் பொதுப்பாயிரமுஞ்சிறப்புப்பாயிரமுமென விரண்டு வகைப்படும். அவற்றுள் 'முன்னையது நூன்முகத்துரைப்பினுமுரையாதொழியினு மமையுமாதலிற் பொதுப்பாயிரமென்றாயிற்று.' பின்னையது நூன்முகத் துரைக்கவேண்டுதலிற் சிறப்புப்பாயிரமென்றாயிற்று. அச்சிறப்புப்பாயிரம் எட்டுவகைப்படும். "ஆக்கியோன்பெயரே வழியேயெல்லை - நூற்பெயர்யாப்பே நுதலிய பொருளே-கேட்போர் பயனோ டாயெண் பொருளும் வாய்ப்பக்காட்டல் 'பாயிரத்தியல்பே" என்றாராகலின். இனியிதனைக் காலமுங், களனுங், காரணமுங்கூட்டிப்பதினொன்றென்பாருமுளர். என்னை? "காலங்களனேகாரணமென்றிம்-மூவகையேற்றி மொழிநருமுளரே" என்றாராகலின். ஆக்கியோன் பெயரென்பது நூல்செய்த வாசிரியரின் பெயராயிற்று, வழிநூலின்வழியாயிற்று, எல்லை நூனடக்குமெல்லையாயிற்று, நூற்பெயர் நூலின் பெயராயிற்று, யாப்பு தொகுத்தலும் விரித்தலுந்தொகைவிரியு மொழிபெயர்த்தலு மென்னு நான்கனுள் ஒன்றனானல் செய்தலாயிற்று, நுதலிய பொருள் நூலாற் கருதப்பட்ட பொருளாயிற்று, கேட்போர்நூல்கேட்டற்குரியாராயிற்று, பயன் நூல் கற்றதனாலாய பயனாயிற்று, காலம் நூல்செய்தகாலமாயிற்று, களன் நூலரங்கேறியவவைக்களமாயிற்று, காரணம் நூல்செய்தற்குக் காரணமாயிற்று. இப்பதினொன்றனுள்ளும் பாயிரச்சூத்திரத்து ளெடுத்தோதப்படாதன எல்லையுங், கேட்போரும், பயனுங், காலமுங், களனுமென்னுமைந்துமாம். அவற்றையும் ஒருவாற்றானுய்த்துணர்ந்து அல்லாதவாறு மிச்சூத்திரப் பேருரையிற் காண்க.

(இதன் பொருள்) பூமலி நாவல் - வேண்டலிற் போந்து என்பது, பூமிக்க நாவலையுடைய பெரிய மேருவினுச்சியின்கண்ணே திரண்ட முப்பத்து முக்கோடி தேவர்களும் வேண்டிக்கொள்கையாலே அங்குநின்றும்போந்து எ - று. குடங்கை—அடக்கி எ - து குழிந்தகையாலே விந்தமென்னு நெடிய மலையினது மிகையைத்தீர்த்து அலைகடலினையடக்கி எ - று. (குடங்கையினென்பதனை யிரண்டிடத்துங் கூட்டிக்கொள்க.) மலயத்—தன்பால் எ-து பொதியு

மலையின்கண்ணேயிருந்த பெருந்தவத்தோனாகிய வகத்தியன் பக்கத்து எ - று. இயற்றமிழ்—பன்னிருவருள் எ - து இயலிசைநாடக மென்னு முத்தமிழுள்ளு மியலாகியதமிழைக்கற்றமாணுக்கர்பன்னிருவருள்ளும் எ - று. தலைவ - பெரும் பொருள் எ - து முதல்வனாகிய தொல்காப்பியனாலருளிச்செய்யப்பட்ட கோடாத பெரிய பொருளென்னு நூலுள் எ - று. அகப்—தழீஇ எ-து அகப் பொருட்குரிய விலக்கணத்தை யுளப்படக்கூட்டிக்கொண்டு. எ - று. இகப்—நோக்கி எ-து அகப்பொருளிலக்கணத்தைக் கடவாத சங்கத்தாருடைய செய்யுட் களை யாராய்ந்து எ-று. தொகு—நிறீஇ எ-து அவ்விலக்கண விலக்கியங்களுட் கலந்துகிடந்த கிளவிகளைச்சேர்த்தடைவுடனிறுத்தி எ-று. சூத்திரம்வகுத்தாங்கு எ-து அவ்வடைவிற் கேற்பச்சூத்திரஞ்செய்து எ-று. அகப்-படுத்து எ-து அந் நூற்ககப்பொருள் விளக்கமென்றொரு பெயரை வெளிப்படுத்தி எ-று. இருளற-எழுதினன் எ-து மயக்கந்தீர வுரையைப் பரப்பி யெழுதினன் எ-று. மாந்தரும்-வாழ்த்த எ-து அமரரு மனிதரு மதிக்க எ-று. முக்குடைக்கீழ் எ-து *முக்குடை யின் கீழ் எ - று. எந்—மிசை எ-து உயர்ந்தவழகினையுடைய சிங்கஞ்சுமந்த பொன்னணைமேல் எ - று. மதி—விருந்து எ-து நிறை மதி மூன்று கவிப் பவுதயமென்னும் பெரிய மலையின்கண்ணேயிளஞாயிறொன்றிருந்தாற்போல வழகுதகவிருந்தருளி எ - று. தத்துவம்—மைந்தன் எ - து உண்மைப்பொருளை யருளிச்செய்தோனுடைய திருவடிகளைச்சேர்ந்த மேலோனென்றுந் திருப்புளிங் குடி யென்னு மூரகத்துத்தோன்றிய வுய்ய வந்தானென்றுஞ் சொல்லப்படா நின்ற முத்தமிழாசானுடைய மைந்தன் எ - று. இத்தல—குரிசில் எ-து இவ் வுலகத்தின் கணுண்டாயவாரியமுத்தமிழென்னு மிரண்டு கலைக்கு மொருபெரிய நாயகன் எ - று. பால்—என்பவனே எ - து பாற்கடல்போலும் பலவாகிய புகழைப் பரப்பின நாற்கவிராச நம்பியென்னும் பெயருடையோன் எ - று.

மாமலைச்சென்னி யென்புழி யாறுமுருபுஞ், சென்னியீண்டிய வென்புழி யேழாமுருபுந் தொக்கன. போந்து, தீர்த்து, அடக்கியென்னும் வினையெச்சங் களடுக்காய் இருந்தவென்னும் பெயரெச்சத்தோடு முடிந்தன ; அப்பெயரெச்ச மிருந்தவனென்னும் பெயர்கொண்டது. இயற்றமிழென்பதிருபெயரொட்டு. தமிழை யென விரண்டாவது விரிக்க. பெரும்பொருளென்புழியுள்ளென்னு

---

*முக்குடை, சந்திராதித்தியம், நித்தியவிநோதம், சகலபாஜனம் என்பனவாம்.

## பாயிரம்.

மேழா முருபு தொக்கது. தழீஇ, நோக்கித், தொகுத்து, நிறீஇ வகுத்துப், புலப்படுத்தென்னும் வினையெச்சங்கள் அடுக்காய் எழுதினனென்னு முற்று வினைகொண்டன. ஆங்கென் பதசை. வாழ்த்தப்பகர்ந்தோனெனவியையும் இருந்தென்னும் வினையெச்சம் பகர்ந்தோனென்னுந் தொழிற்பெயருட் பகர்த லென்னுந் தொழிலோடு முடிந்தது. பரப்பியவென்னும் பெயரெச்சம் நாற்கவி ராசனென்னுஞ் சிறப்புப்பெயர் கொண்டது. நாற்கவியாவன ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரமென்பனவாம். பாற்கடற்பல்புகழென்புழியுவமந்தொக்கது. நம்பியென்னுமியற்பெயர் எழுதினனென்னுமுற்றுவினைப்பயனிலைகொண்டது.

ஆக்கியோன் பெயர் நம்பி. வழி தொல்காப்பியத்தின்வழி. அதன்வழியா யினுந் தொல்காப்பியம் வழிநூலானமையின் இது சார்புநூலெனப்படும். எல்லையு மதனுளேயடங்கும். நூற்பெயர் அகப்பொருள்விளக்கம். யாப்பு தொகுத்தியாத்தல். நுதலிய பொருள் அகப்பொருள். கேட்போர் கற்றுவல் லோர். பயன் வீடுபேறு. காலம் பாண்டியன் குலசேகரன் காலம். களம் அறிவோரவைக்களம். காரணம் கிளவிகளையடைவுறக் கோத்தல். இவை யெல்லாம் பாயிரத்தியல்பெனக் கொள்க. (க)

# நூல்.

## அகத்திணையியல்.

க. மலர்தலை யுலகத்துப் புலவோ ராய்ந்த
வருந்தமி ழகப்பொருள் கைக்கிளை யைந்திணை
பெருந்திணை யெனவெழு பெற்றித் தாகும்.

என்பது சூத்திரம். மேற் பாயிரத்திலக்கண முணர்த்திப்போந்தாம். இனி நூலிலக்கண முரைக்கின்றாம். அஃதுரைக்குங்கா னூனுதலிய துரைத்தலும், நூலு ளதிகாரநுதலிய துரைத்தலும், அதிகாரத்து ளோத்துநுதலிய துரைத்தலும், ஒத்தினுட் சூத்திரநுதலியதுரைத்தலு, மெனநான்கு வகையா லுரைத்தல் வேண்டும். அவற்று ணூனுதலிய துரைக்குங்கால் நூலா மாறும், நூலென்ற சொற்குப் பொருளாமாறு முரைத்தல் வேண்டும். அவற்றுள் நூலாமாறுரைக்குங் கால், நூன் மூன்றுவகைப்படும். முதனூலும், வழிநூலும், சார்புநூலுமென. என்னை? "முதல்வழிசார்பென நூன்மூன்றாகும்." என்றாராகலின். அவற்றுள் முதனூலாவது வரம்பிலறிவன் பயந்ததாகும் என்னை? "வினையினீங்கி விளங்கியவறிவின்-முனைவன்கண்டது முதனூலாகும்" என்றாராகலின். வழிநூலாவது முதநூலின் வழிதப்பாமற் பின்னரும் வேண்டும் விகற்பங்காட்டி வழுவாமற் சொல்வது; என்னை? "முன்னோர் நூலின் முடிபொருங்கொத்துப்-பின்னோன் வேண்டும் விகற்பங்கூறி - யழியாமரபினது வழிநூலாகும்" என்றாராகலின். சார்புநூலாவது அவ்விருவர் நூலின் முடிந்த பொருளையோருபகார நோக்கி யொருகோவைப்படவைப்பது; என்னை? "இருவர் நூற்குமொருசிறை தொடங்கித்-திரிபுவேறுடையது புடைநூலாகும்" என்றாராகலின். நூலென்றசொற்குப் பொருளுரைக்குங்கால், தந்திரமென்னும் வடமொழியை நூலென்று வழங்குவது தமிழ் வழக்கெனக்கொள்க. நூனுதலியதுரைத்தலாவது, இந்நூலின்னது கருத்திற்றென்றுரைத்தல். அது தமிழ்நுதலிற்றென்றல்; அந்நூல் மூன்று வகைப்படும் இயனூலு, மிசைநூலு, நாடகநூலு மென. அவற்றுள், இயனூல் மூன்றுவகைப்படும் எழுத்துஞ், சொல்லும், பொருளுமென; என்னை "தமிழ் கூறுநல்லுலகத்து-வழக்குஞ் செய்யுளுமாயிரு முதலி-னெழுத்துஞ் சொல்லும் பொருளுநாடி" என்றாராகலின். அஃதேல், யாப்புமலங்காரமும் அவற்றுள் யாதனுளடங்குமோவெனின்; அவையிரண்டும் பொருளினுளடங்குமெனக் கொள்க. அதிகாரநுதலியதுரைத்தலாவது இவ்வதிகாரமின்னது கருத்திற்றென்றல். ஆயினிவ்வதிகார மென்னுதலிற்றோவெனின்; அது பாயிரவுரையுளுரைத்துப் போந்தாம். இவ்வதிகாரம் அகத்திணையியலுங், களவியலும்,

களவியலும், கற்பியலு, மொழிபியலுமென வைந்தோத்துங்கொண்டதாம். அதிகாரத்து ளோத்துநுதலியதுரைத்தலாவது இவ்வதிகாரத்துள் இவ்வோத்து இன்னது கருதிற்றென்றல். ஆயினிவ்வதிகாரத் துளிவ்வோத்தென்னுதலிற்றோ வெனின்; அகத்திணை யிலக்கண்முணர்த்துதனுதலிற் றெனக்கொள்க. ஓத்தி னுட் சூத்திரநுதலியதுரைத்தலாவது இவ்வோத்தினுளிச் சூத்திரமின்னது கருத்திற்றென்றல். ஆயினிவ்வோத்தினுள் இச் சூத்திரமென்னுதலிற்றோவெ னின்; அகப்பொருளெல்லாந் தொகுத்துணர்த்துதனுதலிற்று. அன்னதாதல் இச்சூத்திரப்பொருளுரைப்பவே விளங்கும். அப்பொருளுரை நான்குவகைப் படும் கருத்துரைத்தலுங், கண்ணழித்துரைத்தலும், பொழிப்புத்திரட்டலு மகலங்கூறலுமென. என்னை? "கருத்துரை கண்ணழிபு பொழிப்புத்திரட்ட-லகலங்கூற லெனநால்வகைத்தே-புகலுஞ் சூத்திரப் பொருளுரை யென்ப" என்றாராகலின். அவற்றுள் கருத்துரைத்தலாவது சூத்திரத்துட்கோளுரைத்தல். என்னை? "சூத்திரத்துட்கோள் சொல்லல் கருத்துரை" என்றாராகலின். கண்ணழித்தலாவது சூத்திரத்துட் சொற்றொறுஞ் சொற்றொறும் பொருளுரைத்தல், என்னை? "சொற்றொறுஞ் சொற்றொறுந் துணிபொருளுரைத்தல்—கற்றறி புலவர் கண்ணழிபென்ப" என்றாராகலின், பொழிப்புத்திரட்டலாவது சூத்திரத் பொருளை யெல்லாந் தொகுத்துரைத்தல். என்னை? "பொழிப்பெனப்படுவது பொருந்திய பொருளைப்-பிண்டமாகக் கொண்டுரைப்பதுவே" என்றாராகலின், அகலங்கூறலாவது சூத்திரப்பொருளைத் தூய்மை செய்தற்குக்கடாவும் விடையு முன்னூறுத்து விரித்துரைத்தல். என்னை?" அகலமென்பதாசறக்கிளப்பின் விகலமின்றி விரித்துரைப்பதுவே" என்றாராகலின். அவற்றுள் கருத்துரை மூற்கூறப்பட்டது.

இனிக்கண்ணழிக்குமாறு:— மலர்தலையுலகத்தென்பது — பரந்தவிடத்தை யுடைய தமிழ் நாட்டகத்தென்றவாறு. புலவோராய்ந்தவருந் தமிழகப்பொரு ளென்பது-தலைச்சங்கத்தோரு மிடைச்சங்கத்தோருங் கடைச்சங்கத்தோருமாகிய சான்றோராலாராயப்பட்ட வரியதமிழ் நூலகத்தகப்பொருளென்றவாறு. கைக் கிளையைந்திணை பெருந்திணை யெனவெழுபெற்றித்தாகும் என்பது—கைக்கிளையு மைந்திணையும் பெருந்திணையுமென வேழியல்பினையுடைத் தென்றவாறு. என்னை "கைக்கிளை முதலாப்பெருந்திணையிறுவாய்-முற்படக்கிளந்த வெழு திணையென்ப" என்றாராகலின்.

பொழிப்புத்திரட்டுமாறு:—பரந்தவிடத்தை யுடைத்தாகிய தமிழ்நாட் டிடத்து மூன்றுவகைப்பட்ட சங்கத்தோராலாராயப்பட்ட வரியதமிழ் நூலகத் தகப்பொருளாவது கைக்கிளையுமைந்திணையும் பெருந்திணையுமென வேழியல் பினையுடைத்தா மென்றவாறு.

இனி அகலங் கூறுமாறு:—இச்சூத்திரத்துள் மலர்தலை பென்பதியாதோ வெனின் வினைத்தொகை யெனக்கொள்க. வினைத்தொகையாவது ஒரு காலத்திற்கேயுரித்தாகாது மூன்று காலத்திற்கும் பொதுவாய் நிற்பதாம். மூன்று காலமாவன இறப்பு, நிகழ்வு, எதிர்வென்பனவாம். அஃதவற்றோடு வருங்கால் மலர்ந்த வென்றும், மலராநின்றவென்றும், மலருமென்றும் வரும். அவற்றுள் ஈண்டு மலர்ந்தவென்பதே பொருளாம். தலையுலகத்தென்புழி இரண்டாமுருபு மேழாமுருபுந் தொக்கன. புலவோரென்று மெழுவாய்க்கு ஆய்ந்தவென்னும் வினை பயனிலைபாமாயினு மதுபெயரெச்சவாய் பாடாதலான் அருந்தமிழென்னும் பெயரோடு முடிந்தது. அருந்தமிழகப்பொருளென்புழி ஏழாமுருபு தொக்கது. அகப்பொருளென்று மெழுவாய், பெற்றித்தென்னுங் குறிப்புவினை கொண்டது. கைக்கிளை, பைந்திணை பெருந்திணையென வும்மைத்தொகையாயேழென்னுந் தொகைபெற்றன. என வென்பதெண்ணிடைச்சொல். (க)

உ. அதுவே, புனைந்துரை யுலகிய லெனுந்திற மிரண்டினுந்
தொல்லியல் வழாமற் சொல்லப் படுமே.

(இச் - ம்.) மேற்சொல்லப்பட்ட வகப்பொருட்குரிய விதி யுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்.) அதுவே, அவ்வகப்பொரு ளில்லது முள்ளதுமாகிய விரண்டு கூறுபாட்டானும் பழையநெறி பிழையாமற் கூறப்படுமென்றவாறு. என்னை? "நாடகவழக்கினு முலகியல் வழக்கினும் - பாடல் சான்ற புலனெறி வழக்கம் - கலியே பரிபாட் டாயிரு பாங்கினு - முரிய தாகு மென்மனார் புலவர்" என்றாராகலின். (உ)

ங. அவற்றுட், கைக்கிளை யுடைய தொருதலைக் காமம்.

(இச் - ம்.) நிறுத்த முறையானே கைக்கிளைக்குரிய காமப்பொருளுணர்த்துத னுதலிற்று.

(இ - ள்.) மேற்சொல்லப்பட்ட வகப்பொருள் விகற்பமாகிய வேழனுட் கைக்கிளை யென்பதனுடைய பொருள் ஒருதலைக் காமமாமென்றவாறு. அவற்றுளென்பதனை மேல்வருகின்ற சூத்திரமிரண்டற்குந் தந்துரைக்க. (ங)

ச. ஐந்திணையுடைய தன்புடைக் காமம்.

(இச்-ம்.) ஐந்திணைக்குரிய காமப்பொருளுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) ஐந்திணையென்பதனுடைய பொருளன்புடைக் காமமாமென்றவாறு (ச)

௫. பெருந்திணை யென்பது பொருந்தாக்காமம்.

(இ-ம்.) பெருந்திணைக்குரிய காமப்பொருளுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) பெருந்திணையென்பதனுடைய பொருள் பொருந்தாக்காமமா மென்றவாறு. இவற்றின் விகற்பமெல்லா மேலே காட்டப்படும். (௫)

குறிஞ்சி பாலை முல்லை மருத
நெய்த லைந்திணைக் கெய்திய பெயரே.

(இ-ம்.) நிலம் வகுக்கப்படாத கைக்கிளையும் பெருந்திணையு மொழித்து நிலம் வகுக்கப்படு மைந்திணைக்குமுரிய பெயருணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) குறிஞ்சியும் பாலையுமுல்லையுமருதமு நெய்தலுமவ்வைந்து திணைக்கும் பொருந்திய பெயராமென்றவாறு. என்னை? "மாயோன் மேய காடுறை யுலகமுஞ் - சேயோன் மேய மைவரை யுலகமும் - வேந்தன் மேய தீம் புன லுலகமும் - வருணன் மேய பெருமண லுலகமு - முல்லைகுறிஞ்சி மருத நெய்தலெனச் - சொல்லிய - முறையாற்சொல்லவும்படுமே" என்றாராகலின். மற்றிதனுட் பாலைக்குத்திணையில்லையாலோவெனின்; அது நிலமின்மையா னொழிக்கப்பட்டதெனக்கொள்க. அஃதே லீண்டுக்கூறியதென்னையெனின் மதுரைக்காஞ்சியுட் 'பாலைசான்றசுரஞ்சார்ந்தொருசா' ரென்பதனானும் பிறவாற் றானுங் கூறப்பட்டதெனக்கொள்க. அஃதற்றாக, முல்லை குறிஞ்சி மருத நெய்த லென்றிம்முறைபெண்ணாது குறிஞ்சிபாலை முல்லை மருத நெய்தலென வெண்ணிய தென்னையோவெனின்; அச்சூத்திரத்துட் "சொல்லிய முறையாற் சொல் லவும்படு" மென்றவும்மையாற் பிறவாற்றானுஞ்சொல்லப்படும் என்பதுபட நிற்ற லானும், பத்துப்பாட்டுங் கலித்தொகையு மைங்குறுநூறுங் கீழ்க்கணக்குஞ் * சிற்றட்டகமு முதலாகிய சான்றோர்செய்யுட்களெல்லாம் வேண்டியமுறை யானே வைத்தலானு மிவ்வாற்றானெண்ணப்பட்ட தெனக்கொள்க. மற்றுங் குறிஞ்சிமுதலாகிய பெயரிந்நிலங்கட் கெய்தியவாறென்னையெனின்; உலகத்தார் வழங்கிப்போந்த முறையாமெனக்கொள்க. அன்றியுங் குறிஞ்சியும் பாலையு முல்லையு மருதமு நெய்தலு மென்னும் பொருள்கள் அவ்வந்நிலத்திற்குச்சிறந்தன வாதலானவற்றாற் பெற்ற பெயரெனவுமாம். என்னை? "கருங்கோற்குறிஞ்சிப் பூக்கொண்டு-பெருந்தேனிழைக்கு" மெனவும், "கோடுறு பல்காய் வாலிணர்ப் பாலை" யெனவும், முல்லையந்தண்பொழி" லெனவும், "மருதமாநீழ"லெனவும், பாசடை நிவந்த கணைக்காணெய்தலெனவுஞ்சான்றோரெடுத்துக்கூறப்படுதலா னெனக்கொள்க. இவையாகுபெயராம். (௬)

---

* சிற்றடக்கமென்பது பிரதிபேதம்.

எ. அவ்வத்தாம், முதற்பொருள் கருப்பொரு ளுரிப்பொரு ளென்முறை
நுதற்பொருண் மூன்றினு நுவலப் படுமே.

(இச் - ம்.) ஐந்திணைக்குமுரிய பொதுவாகிய பொருளுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்.) மேற்சொல்லப்பட்ட குறிஞ்சி முதலாகிய வைந்திணைதாம் முதற்பொருளுங் கருப்பொருளு முரிப்பொருளுமென முறையானே கருதுதலையுடைய பொருண் மூன்றானுஞ் சொல்லப்படுமென்றவாறு. என்னை? "முதல் கருவுரிப் பொருளென்றமூன்றே - நுவலுங்காலைமுறைசிறந்தனவே - பாடலுட் பயின்றவை நாடுங்காலை" என்றாராகலின். அவைதாம் நுவலப்படுமெனக் கூட்டுக. எனவென்பதெண்ணிடைச்சொல். (எ)

அ. நிலமும் பொழுதுமென முதலிருவகைத்தே.

(இச் - ம்.) நிறுத்தமுறையானே முதற்பொருளின் பாகுபாடுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்.) முதற்பொருளாவது நிலமும் பொழுதுமென விரண்டுகூற்றினையுடைத்தா மென்றவாறு. என்னை? "முதலெனப்படுவது நிலம்பொழுதிரண்டி-னியல்பெனமொழிபவியல்புணர்ந்தோரே." என்றாராகலின். (அ)

கூ. வரையே சுரமே புறவே பழனந்
திரையே யவையவை சேர்தருமிடனே
யென விரைவகைத் தணைபிய னிலமே.

(இச்-ம்.) முதற்பொருளின் பாகுபாடாகிய விரண்டனுள்ளும் முன்னதாகிய நிலத்தின் வரையறை யுணர்த்துத லுதலிற்று.

(இ - ள்.) மேற்சொல்லப்பட்ட வியல்பினையுடைய நிலமென்னுமுதற்பொருள் வரையும் வரைசார்ந்தவிடமுஞ் சுரமுஞ் சுரஞ்சார்ந்த விடமும் புறவும் புறவு சார்ந்தவிடமும் பழனமும் பழனஞ்சார்ந்த விடமுங் கடலுங் கடல் சார்ந்த விடமுமெனப் பத்துவகையினையுடைத்தென்றவாறு. இவற்றிற்கு விதிமேலே காட்டப்பட்டன. இவற்றையைந்திற்கும் நிரனிரையாகக்கொள்க. புறவெனினுங் காடெனினு மொக்கும். பழனமென்புழி யேகாரந்தொக்கதாயினுங் குற்றமின்றாம்; என்னை? "எண்ணேகாரமிடையிட்டுக்கொளினு - மெண்ணுக்குறித்தியலுமென்மனார் புலவர்." என்றாராகலின். அணையவியலென்றற் பாலது அணையியலென விகாரமாயிற்று. (கூ)

க0. பெரும்பொழு தென்று சிறுபொழு தென்று
இரண்டே யாகு மியம்பிய பொழுதே.

(இ-ம்.) பொழுதென்னு முதற்பொருளின் பாகுபாடுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்.) மேற்சொல்லப்பட்ட பொழுதென்னு முதற்பொருள் பெரும்பொழுதென்றுஞ் சிறுபொழுதென்று மிரண்டு பகுதியினையுடைத்தென்றவாறு. என்றுவென்ப தெண்ணிடைச்சொல். (௧௦)

௧௧. காரே கூதிர் முன்பனி பின்பனி
சீரிள வேனில் * வேனி லென்றாங்
கிருமூன் றிறத்தது தெரிபெரும் பொழுதே.

(இ-ம்.) நிறுத்த முறையானே பெரும்பொழுதினது பாகுபாடுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்.) கார்முதலாக வேனிலீறாகச் சொல்லப்பட்ட வாறுபகுதியினை யுடைத்தாம் புலவோராலாராயப்பட்ட பெரும்பொழுதென்றவாறு. ஆங்கு - அசை. (௧௧)

௧௨. மாலை யாமம் வைகறை யெற்பாடு
காலை வெங்கதிர் காயுநண் பகலெனக்
கைவகைச் சிறுபொழு தைவகைத் தாகும்.

(இ-ம்.) சிறுபொழுதின் பாகுபாடுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) மாலைமுதலாக நண்பகலீறாகச் சொல்லப்பட்ட வைவகையினை யுடைத்தாம் அவ்வவ் வொழுக்கத்திற்குரியசிறுபொழுதென்றவாறு. அவற்றுள், மாலையாவது நிசியின்முன்னு மெற்பாட்டின்பின்னுமுண்டாகிய காலம். யாமமாவதிடையிரவு. வைகறையாவது விடியற்காலம். †எற்படுகாலையாவது ஆதித்தன் படுகிறபொழுது. நண்பகலாவதுச்சிப்பொழுது. கையென்ப தொழுக்கம். (௧௨)

௧௩. அவற்றுள், கூதிர் யாம முன்பனி யென்றிவை
யோதிய குறிஞ்சிக் குரிய வாகும்.

(இ-ம்.) குறிஞ்சிக்குரிய பெரும்பொழுதுஞ் சிறுபொழுதுமுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்.) பெரும்பொழுதுஞ் சிறுபொழுதுமாகிய பதினொன்றனுள்ளுங் கூதிரும்யாமமும் முன்பனியுமாகிய மூன்றும் மேற்சொல்லப்பட்ட குறிஞ்சிக்

---

* முதுவேனிலென்றும் பாடம்.

† எற்பாடு - ஞாயிற்றினுதயமென்பர் தொல்காப்பியச்சூத்திரவிருத்தியார்.

குரியவாமென்றவாறு. இதனுட் பெரும்பொழுதாகிய முன்பனியைக் கூறிதொன் பதனோடு சேர்க்கூறுதியாமமாகிய சிறுபொழுதின் பிற்கூறியதென்னையோ வெனின், அது கூதிரின்றுணைச் சிறப்புடைத்தன்மையினவ்வாறு கூறப்பட்ட தெனக்கொள்க. வருகின்ற சூத்திரத்திற்குமொக்கும். (௧௩)

௧௪. வேனி னண்பகல் பின்பனி யென்றிவை
பான்மையி னுரிய பாலை தனக்கே.

இச் - ம். பாலைக்குரிய பெரும்பொழுதுஞ் சிறுபொழுதுமாமாறுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்.) * பாலைக்குவேனிலு நண்பகலும் பின்பனியுமாகிய மூன்றும் விதியானுரியவாமென்றவாறு. இனியவற்றது சிறப்புண்மையுஞ் சிறப்பின் மையுமெற்றாற் பெறுவதெனின் "குறிஞ்சி-கூதிர்யாமமென் மனார்புலர்" எனவும், "பனியெதிர் பருவமு முரித்தென மொழிப" எனவும், "நடுவுநிலைத்திணையே நண்பகல்வேனிலொடு—முடிவுநிலைமருங்கின் முன்னியநெறித்தே," எனவும், "பின்பனிதானு முரித்தென மொழிப" எனவுங் கூறியவதனாற் பெறுதுமெனக் கொள்க. (௧௪)

௧௫. மல்குகார் மாலை முல்லைக் குரிய

(இச் - ம்.) முல்லைக்குரிய பெரும்பொழுதுஞ் சிறுபொழுதுமுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்.) மிகாநின்ற கார்காலமுமாலைக்காலமுமாகிய விரண்டு காலமும் முல்லைக்குரியவென்றவாறு. என்னை ? " காருமாலையு முல்லைக்குரிய " என்றுராகலின். (௧௫)

௧௬. இருள் புலர்காலை மருதத்திற் குரித்தே

(இச்-ம்.) மருதத்திற்குரிய சிறுபொழுதுணர்த்துதலுதலிற்று.

(இ-ள்.) மருதத்திற்கு விடியற்கால முரித்தென்றவாறு. என்னை? "வைகுறுவிடியன் மருதம்" என்றுராகலின். (௧௬)

௧௭. வெய்யோன் பாடு நெய்தற் குரித்தே.

(இச் - ம்.) நெய்தற்குரிய சிறுபொழுதுணர்த்துதலுதலிற்று.

---

* பாலைக்கிருவேனிலு நண்பகலும் பின்பனியுமாகிய நான்கும் என்றும் பாடம்.
வைகறை என்றும் பாடம்.

(இ-ள்.) † ஆதித்தன் படுகின்றகாலம் நெய்தற்குரித்தென்றவாறு. என்னை? "எற்பாடு, நெய்தலாதன் மெய்பெறத் தோன்றும்" என்றாராகலின். (கஎ)

கஅ. மருத நெய்தலென் றிவையிரண் டிற்கு
முரிய பெரும்பொழு திருமூன் றும்மே.

(இச் - ம்.) மருதத்திற்கு நெய்தற்குமுரிய பெரும்பொழுதுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்.) மருதமு நெய்தலு மென்னு மிரண்டிற்கும் பெரும்பொழுதாறு முரியவாமென்றவாறு. இஃதெற்றாற்பெறுதுமெனின் ஞாபகத்தாற்பெறுது மெனக்கொள்க. அஃதியாதோவெனின் வினைமூன்றற்கும் பெரும்பொழுது கூறிப் * போந்து மருதத்திற்கு நெய்தற்கும் பெரும்பொழுதுகூறாததனாலெனக. அதனாற், பெரும்பொழுதாறு முரியவாமெனக் கொள்க. (கஅ)

ககூ. ஆரணங் குயர்ந்தோ ரல்லோர் புள்விலங்
கூர்நீர் பூமர முணுப்பறை யாழ்பண்
டொழிலெனக் கருவீ ரெழுவகைத் தாகும்.

(இச் - ம்.) கருப்பொருளின் பாகுபாடுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) தெய்வமுதலாகத் தொழிலீறாகச்சொல்லப்பட்ட பதினான்கு வகையினையுடைத்தாங் கருப்பொருளென்றவாறு. என்னை? "தெய்வ முணாவே மாமரம்புட் பறை - செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ - † யவ்வகை பிறவுங் கருவென மொழிப" என்றாராகலின். மற்றக்கருப்பொருளெண் பதினான் கென்று வரையறுத்ததென்னை? இதனுளெடுத்தோதப்பட்ட தெட்டன்றோ வெனின், ஒழிந்தவாறு மிச்சூத்திரத்துப் பிறவென்னு மிலேசானே பெறப்பட் டனவெனக. (ககூ)

உ0. சிறற்சேய் பொருப்பன் வெற்பன் சிலம்பன்
குறத்தி கொடிச்சி குறவர் கானவர்
குறத்தியர் கிளிமயின் புறப்புலி குடாவடி
கறையடி சீயஞ் சிறுகுடி யருவி
நறுஞ்சுனை வேங்கை குறிஞ்சி காந்த
ளாரந் தேக்ககி லசோக நாகம்

† ஆதித்தன் படுகின்ற காலமாவது சண்டுமாலைக்குமுன்னும் நண்பகற்கு பின்னுமாகிய காலமெனக.

* போந்தார் என்றும் பாடம். † அவ்வகை என்றும் பாடம்.

வேரலை வனந் தோரை யேனல்
கறங்கிசைத் தொண்டகங் குறிஞ்சியாழ் குறிஞ்சி
வெறிகோ ளைவனம் வித்தல் செறிகுரற்
பைந்தினை கடிதல் செந்தே னழித்தல்
செழுங்கிழங் ககழ்தன் மூழ்கலி னருவியொடு
கொழுஞ்சுனை யாடல் குறிஞ்சிக் கருப்பொருளே.

(இச் - ம்.) குறிஞ்சிக்குரிய கருப்பொருளுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) சேய்முதலாகச் சுனையாடலீறாகச் சொல்லப்பட்ட குறிஞ்சிக்கருப்பொருளாமென்றவாறு. (௨௦)

௨௧. கன்னி விடலை காளை மீளி
யின்னகை யெயிற்றி யெயின ரெயிற்றியர்
மறவர் மறத்தியர் புறவு பருந் தெருவை
கழுகு செந்நாய் கல்கெழு * குறும்பு
குழிவறுங் கூவல் குராஅ மராஅ
வுழிஞ்சில் பாலை யோமை யிருப்பை
வழங்குகதிக் கொண்டன செழும்பதிக் கவர்த்தன
பகைத்துடி பாலையாழ் பஞ்சுரம் வெஞ்சுரம்
பகற்சூறை யாடல் பாலைக் கருப்பொருளே.

(இச் - ம்.) பாலைக்குரிய கருப்பொருளுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) கன்னிமுதலாகச் சூறையாடலீறாகச் சொல்லப்பட்டனவெல்லாம் பாலைக்கருப்பொருளாமென்றவாறு. (௨௧)

௨௨. நெடுமால் குறும்பொறை நாடன் றோன்றல்
வடுவில் கற்பின் மனைவி கிழத்தி
யிடைய ரிடைச்சிய ராய ராய்ச்சியர்
கான வாரண மான்முயல் பாடி
குறுஞ்சுனை கான்யாறு குல்லை முல்லை
நிறங்கிளர் தோன்றி பிறங்கலர்ப் பிடவங்
கொன்றை காயா மன்றலங் குருந்தந்
தாற்றுக் கதிர்வர கொடுசாமை முதிரை

* குறும்பூர் என்றும் பாடம்.

ஏற்றுப்பறை முல்லை யாழ்சா தாரி
சாமை வரகு தாமுடன் வித்த
லவைகளை கட்ட லரிதல் கடாவிடல்
செவிகவர் கொன்றைத் தீங்குழ லூதன்
மூவின மேய்த்தல் சேவினந் தழுவல்
குழுமிய குரவையொடு கான்யா றென்றிவை
முழுதுட னுடன்முல் லைக்கருப் பொருளே.

(இ - ம்.) முல்லைக்குரிய கருப்பொருளுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) நெடுமான் முதலாகக்கான்யாறுடலீறாகச் சொல்லப்பட்ட வெல்லா முல்லைக்கருப்பொருளாமென்றவாறு. (உஉ)

உங. இந்திர னூரன் பைந்தார் மகிழ்நன்
கெழுதகு கற்பிற் கிழத்தி மனைவி
யுழவ ருழத்தியர் கடையர் கடைச்சியர்
மழலைவ ண்டான மகன்றி னாரை
யன்னம் போதா நன்னிறக் கம்புள்
குருகு தாரா வெருமை நீர்நாய்
பெருகிய சிறப்பிற் பேரூர் மூதூர்
யாறு மனைக்கிண றிலஞ்சி தாமரை
நாறிதழ்க் கழுநீர் நறுமலர்க் குவளை
காஞ்சி வஞ்சி பூஞ்சினை மருதஞ்
செந்நெல் வெண்ணெ லந்நெல் லரிகிணை
மன்றன் முழவ மருதயாழ் மருத
மன்றணி விழாக்கோள் வயற்களை கட்ட
லரிதல் கடாவிட லகன்குளங் குடைதல்
வருபுன லாடன் மருதக்கருப் பொருளே.

(இ - ம்.) மருதத்திற்குரிய கருப்பொருளுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) இந்திரன்முதலாக வருபுனலாடலீறாகச் சொல்லப்பட்டன வெல்லா மருதக்கருப்பொருளாமென்றவாறு. (உங)

உச. வருணன் சேர்ப்பன் விரிதிரைப் புலம்பன்
பரும வல்குற் பரத்தி நுளைச்சி

நுளையர் நுளைச்சியர் பரதர் பரத்திய
ரளவ ரளத்திய ரலைகடற் காக்கை
சுறவம் பாக்கம் பெறலரும் பட்டின
மூவர்நீர்க் கேணி கவர்நீர் நெய்தல்
கண்டகக் கைதை முண்டக மடம்பு
கண்டல் புன்னை வண்டியிர் ஞாழல்
புலவு மீனுப்பு விலைகளிற் பெற்றன
நளிமீன் கோட்பறை நாவாய் பம்பை
விளரியாழ் செவ்வழி மீனுப்புப் படுத்த
லுணங்கலை விற்றன்மீ னுணக்கல் புள்ளோப்ப
னெடுங்கட லாடனெய் தற்கருப் பொருளே.

(இச் - ம்.) நெய்தற்குரிய கருப்பொருளுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) வருணன்முதலாகக் கடலாடலீறாகச் சொல்லப்பட்டனவெல்லா நெய்தற்கருப்பொருளாமென்றவாறு. இச்சூத்திரங்களுட் டெய்வமுதலாகத் தொழிலீறாகச்சொல்லப்பட்ட கருப்பொருள் பதினான்குமுறையானே வந்தவாறு கண்டுகொள்க. (௨௪)

புணர்தலும் பிரிதலு மிருத்தலு மூடலு
மிரங்கலு மிவற்றி னிமித்தமு மெனவாங்
கெய்திய வுரிப்பொரு ளையிரு வகைத்தே.

(இச் - ம்.) உரிப்பொருளின் பாகுபாடுணர்த்துதனுதலிற்று

(இ-ள்.) மேலெய்திய வுரிப்பொருள் புணர்தலும், புணர்தனிமித்தமும், பிரிதலும், பிரிதனிமித்தமும், இருத்தலும், இருத்தனிமித்தமும், ஊடலும், ஊடனிமித்தமும், இரங்கலும், இரங்கனிமித்தமும் எனப்பத்துவகையினை யுடைத்தாமென்றவாறு. என்னை? "புணர்தல் பிரித லிருத்தலிரங்க-லூடலிவற்றி னிமித்தமென்றிவை—தேருங்காலைத் திணைக்குரிப்பொருளே" என்றாராகலின். இச்சூத்திரத்தானு மைந்திணையையும் வேண்டியமுறையானே வைத்தெண்ணலா மென்பது பெறப்பட்டது. (௨௫)

௨௬. அளவி லின்பத் தைந்திணை மருங்கிற்
களவுகற் பெனவிரு கைகோள் வழங்கும்.

(இச்-ம்.) ஐந்திணைக்குரிய கைகோள்வரையறை யுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) எல்லையில்லாத வின்பத்தையுடையார் களவிற்கிளவியுடைத்தாக்களவுங் கற்புமெனவிரண்டொழுக்கநிகழுமென்றவாறு. களவுங்கற்புமெனவும்மை விரிக்க. கைகோளென்பது ஒழுக்கம். (௨௬)

௨௭. இயற்கைப் புணர்ச்சி யிடந்தலைப் பாடே
பாங்கற் கூட்டம் பாங்கியிற் கூட்டமென்
றுணர்த்திய களவிற் புணர்ச்சிநால் வகைத்தே.

(இச் - ம்.) நிறுத்தமுறையானே களவென்னுங் கைகோளிற்புணர்ச்சி யுணர்த்துதனுதலிற்று.

(இ - ள்.) மேற்சொல்லப்பட்ட களவென்னுங் கைகோளிற்புணர்ச்சி யியற்கைப்புணர்ச்சி, யிடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், பாங்கியிற்கூட்டமென நான்குவகையினையுடைத்தாமென்றவாறு. என்னை? "காமப்புணர்ச்சியுமிடந் தலைப்பாடும் - பாங்கொடுதழாஅலுந் தோழியிற்புணர்வுமென் - றாங்கநால்வகை யினு மடைந்தசார்பொடு - மறையெனமொழிதன் மறையோராறே" என்றா ராகலின் (௨௭)

௨௮. மெய்க்கிளை யாயோர் வேண்டும் புணர்ச்சிமுன்
கைக்கிளை நிகழ்தல் கடனென மொழிப.

(இச் - ம்.) கைக்கிளை நிகழுமிட முணர்த்துதனுதலிற்று.

(இ - ள்) பொருள்பெறு கிளைகளாம் வினையுடைத்தாய யாழினையுடைய கந்திருவர் விரும்புங் களவிற்புணர்ச்சிமுன் கைக்கிளைநிகழ்தல் கடனென்று சொல்லுவர் புலவரென்றவாறு. (௨௮)

௨௯. அதுவே, காமஞ்சான்ற விளமை யோள்வயிற்
குறிப்பறி காறுங் குறுகாது நின்று
குறிப்புச் செஞ்சொற் கூற லாகும்,

(இச் - ம்.) கைக்கிளைக்குரிய விலக்கணமுணர்த்துதனுதலிற்று,

(இ - ள்) மேற்சொல்லப்பட்ட கைக்கிளையாவது காமநுகர்தற்கமைந்த விளமையுடைய தலைமகளிடத்துண்டாகிய குறிப்பினைத்தானறியுமளவுந் தலைமகளைச் சாராதுநின்று தன்வசமாகிய செஞ்சொல்லாற் சொல்லுதலா மென்றவாறு. (௨௯)

௩௦. மறையோர் மன்னவர் வணிகர்சூத் திரரென்
றிறையோர் * தத்தமக் கெய்துமற் றதுவே

* [illegible] என்னும் பாடம்.

-ம்.) கைக்கிளைக்குரிய தலைமக்களை யுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட கைக்கிளை மறையோரும், மன்னரும், வணிகருஞ், சூத்திரருமாகிய நால்வகைத்தலைமக்கட்கே கூடுவதாமென்றவாறு()

௩க. அதுவே, மொழிந்தோர் நால்வரு மொழிந்தைந் நிலத்துறை யிழிந்தோர் தம்மு ளுயர்ந்தோரு மெய்துப.

(இச் - ம்) கைக்கிளைக்கெய்துவதோர் வேறுபாடுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட கைக்கிளையை நால்வகைத்தலைமக்களுமன்றி யைந்நிலத்துமுறையு நிலைமக்களுட்டலைமக்களும் பெறுவரென்றவாறு. உம்மை யிழிவுசிறப்பாதலாற் சிறுபான்மைநோக்கிநின்றதெனக்கொள்க. (௩க)

௩உ. தெய்வந் தன்னி னெய்தவுங் கிழத்தியி னெய்தவும் படூஉ மியற்கைப் புணர்ச்சி.

(இச் - ம்.) இயற்கைப்புணர்ச்சிக் கிலக்கணமுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) மேற்சொல்லப்பட்ட நால்வகைப்புணர்ச்சியுள்ளு மியற்கைப் புணர்ச்சியாவது தெய்வத்தாற்பெறவும்படுந் தலைமகளாற்பெறவும்படுமென்றவாறு. படுமென்றதனை யிரண்டிடத்துங் கூட்டிக்கொள்க. (௩உ)

௩௩. இயற்கைப் புணர்ச்சி தெய்வத்தி னெய்துழி முயற்சி யின்றி முடிவ தாகும்.

(இச் - ம்.) இயற்கைப்புணர்ச்சிக் கெய்தியதன்மேற் சிறப்புவிதியுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) அவ்வியற்கைப்புணர்ச்சி தெய்வத்தாற்பெறுங்காலத்து முயற்சியின்றித் தானேமுடிவதாமென்றவாறு. எனவே அப்புணர்ச்சி தலைமகளாற் பெறுங்காலத்து முயற்சியானே முடிவதாகுமென்பதாயிற்று. முயற்சியின்றி முடிவதற்குவிதி "சொல்லிய நுகர்ச்சி வல்லே பெற்றுழி" யென்பதாம். (௩௩)

௩௪. உள்ளப் புணர்ச்சியு மெய்யுறு புணர்ச்சியுங் கள்ளப் புணர்ச்சியுட் காதலர்க் குரிய.

(இச் - ம்.) எய்தாததெய்து வித்தனுதலிற்று.

(இ-ள்.) உள்ளத்தாற் புணரும்புணர்ச்சியு மெய்யுற்றுப்புணரும் புணர்ச்சியுமென்று மிரண்டுந் தலைமகற்குந் தலைமகட்குமுரியவாங் களவுப்புணர்ச்சிக்கண்ணென்றவாறு. கள்ளமென்பது களவு. (கச)

கரு. பொரு விறந் தோற்றுப் பெருமையு முரனு
நன்னுதற் கச்சமு நாணு மடனு
மன்னிய குணங்க ளாதலின் முன்ன
ருள்ளப் புணர்ச்சி யுரிய தாகும்.

(இச் - ம்.) உள்ளப்புணர்ச்சிநிகழு மிடமுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) பெருமையுமுரனுந் தலைமகற்கு நிலைபெற்ற குணமாதலானும், அச்சமுநாணுமடனுந் தலைமகட்குநிலைபெற்றகுணமாதலானு, மேற்சொல்லப்பட்ட விரண்டுபுணர்ச்சியுள்ளு முள்ளப்புணர்ச்சி முன்னிகழ்தற்குரித்தாமென்றவாறு. உரனெனினு மறிவெனினுமொக்கும். பெருமை யென்பது பழியும் பாவமுமஞ்சுதல். அறிவென்பது தக்கதறிதல். அச்சமென்பது காணாததொன்று கண்டாற் பெண்டிரிடத்து நிகழ்வது. நாணமென்பது பெண்டிர்க் கியல்பாகிய குணம். மடமென்பது பேதைமையெனக்கொள்க. அவையவர்க்குக்குணமாகியவா றென்னையெனின்; "பெருமையுமுரனு மாடூஉ மேன" எனவும் "அச்சமு நாணு மடனுமுந்துறுத்த-னிச்சமும் பெண்பாற் குரிய வென்ப" எனவும் சொன்னாராதலி னெனக்கொள்க. (கரு)

கசு. காட்சி முதலாச் சாக்கா டீறாக்
*காட்டிய பத்துங் கைவருமெனினே
மெய்யுறு புணர்ச்சி யெய்துதற் குரித்தே.

(இச் - ம்.) மெய்யுறுபுணர்ச்சி நிகழுமிடமுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) காட்சியும், வேட்கையு, மொருதலையுள்ளுதலு, மெலிதலு, மாக்கஞ்செப்புதலு, நாணுவரையிறத்தலு, நோக்குவவெல்லாமவையே போறலு, மறத்தலு, மயக்கமுஞ், சாக்காடுமென்னும் பத்தவத்தையு மொருங்கே நிகழுமாயிற் றலைமகற்கு மெய்யுறுபுணர்ச்சிகூடுதற்குரித்தாமென்றவாறு. அவற்றுள், காட்சியாவது தலைமகளைத் தலைமகன் றனியிடத்துக் காண்டல். வேட்கையாவது இவளைப்பெறவேண்டுமென்னுமுள்ளநிகழ்ச்சி. ஒருதலையுள்ளுவதாவது இடைவிடாது நினைத்தல். மெலிதலாவது உடம்புவாடுதல். ஆக்கஞ் செப்பலாவது தன்னெஞ்சின்கண் வருத்தமிகுமின்றபடியைப் பிறர்க்குரைத்தல். நாணு

---

* தலாவஸ்தைத

வரையிறத்தலாவது நாணத்தினெல்லையைக் கடத்தல். நோக்குவவெல்லா மவையே போறலாவது காணுமவையெல்லா மவளுறுப்புக்களேபோலத்தோற் றுதல். மறத்தலாவது அறிவுதிரிதல். மயக்கமாவது மோகித்தல். சாக்காடா வது இறந்துபடுதல். இவற்றுட் சாக்காடொழிந்தவொன்பது மேலேகாட்டுதும். அஃதேலிவற்றுக்கிலக்கணம் ''யாண்டுப்பெறுதுமெனின்; "ஒத்தகிழவனுங் கிழத்தியுங் காண்ப" எனவும், "வேட்கையொருதலையுள்ளுதன்மெலிந்த - லாக்கஞ் செப்பனுணுவரையிறத்த - னோக்குவவெல்லாமவையேபோறன் - மறத்தன் மயக்கஞ் சாக்காடென்றச் - சிறப்புடைமரபினவைகளவென மொழிப" எனவும் வந்த சூத்திரங்களிற் பெறுதுமெனக்கொள்க. (கசு)

கஎ. பகற்குறி யிரவுக் குறியெனும் பான்மைய
புகற்சியி னமைந்தோர் புணர்ச்சி நிகழிடனே.

(இச் - ம்) குறியின் பாகுபாடுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) அன்பினாலமைந்தோர் புணர்ச்சி நிகழிடம் பகற்குறியுமிரவுக் குறியுமென்னும் இரண்டு பகுதியினையுடையவா மென்றவாறு. (கஎ)

கஅ. இல்வரை யிகந்தது பகற்குறி யிரவுக்குறி
யில்வரை யிகவா வியல்பிற் றாகும்.

(இச் - ம்.) குறிகட் கிலக்கண முணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) பகற்குறி யில்லினெல்லையைக்கடந்ததா, மிரவுக்குறி யில்லி னெல்லையைக் கடவாததாமென்றவாறு. (கஅ)

கக. ஒருவழித் தணத்தல் வரைவிடை வைத்துப்
பொருள்வயிற் பிரிதலென் றிருவகைத் தாகு
நிறைதரு காதன் * மறையினிற் பிரிவே.

(இச் - ம்.) களவின்கட் பிரியும் பிரிவுவரையறை யுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) ஒருவழித்தணத்தலும், வரைவிடைவைத்துப் பொருள்வயிற் பிரிதலுமென விரண்டு பகுதியினையுடைத்தாம் நிறைந்த காதலையுடைய களவின் கட் பிரியும் பிரிவென்றவாறு. அவற்றுள் ஒரு வழித்தணததலாவது ஒரூரின் கண்ணு மொருநாட்டின்கண்ணும்பிரிதல். வரைவிடைவைத்துப் பொருள் வயிற் பிரிதலாவது வரை விடை வைதது்க் காடிடையிட்டும் நாடிடையிட்டும் பொருள் வயிற்பிரிதலெனக் கொள்க. (கக)

* மறைவயின் என்றும் பாடம்.

௪0. அவற்றுள், ஒருவழித் தணத்தற்குப பருவங் கூறுூர்.

(இச் - ம்.) ஒருவழித்தணத்தற்குரியநோரி லக்கணமுணர்த் து த லு த லிற்று.

(இ-ள்.) மேற்சொல்லப்பட்ட விரண்டினுள்ளு மொருவழித்தணத்தல் காடிடையிட்டும் நாடிடையிட்டும் பிரியப்படாமையி னிதற்குப்பருவவரையறை சொல்லார் சான்றோரென்றவாறு. (௪0)

௪௧. வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவோ
ரிருதுவின் கண்ணுடைத் தென்மனூர் புலவர்.

(இச் - ம்.) வரைவிடைத்துப் பொருள்வயிற்பிரிதற் கிலக்கணமுணர்த் துதலுதலிற்று.

(இ-ள்.) வரைவிடைவைத்துப்பொருள்வயிற்பிரிதல் காடிடையிட்டும் நாடிடையிட்டும்பிரிதலினஃதிரண்டுதிங்களினிகவாமையை யுடைத்தென்று சொல்லுவராசிரியரென்றவாறு. என்னை? "களவினுட்டவிர்ச்சிவரைவினீட் டந்-திங்களிரண்டினகமெனமொழிப" என்றூராகலின். (௪௧)

௪௨. களவு வெளிப்படா முன்னும் பின்னும்
விளையு நெறித்தென விளம்பினர் வரைவே.

(இச் - ம்.) வரைவுநிகழு மிட முணர்த்துதலுதலிற்று.

(இ-ள்.) களவுவெளிப்படாமுன்னுங்களவுவெளிப்பட்டபின்னும் விளையு நெறியினையுடைத்தாம் வரைவென்றுசொல்லுவர் புலவரென்றவாறு. களவு வெளிப்படாமுன்னு மென்றதனுற் களவுவெளிப்பட்டபின்னுமெனத்தந்துரைக் கப்பட்டது. இவ்வாறுரைத்தற்கிலக்கணம் யாதோவெனின்; "களவுவெளிப் படா முன்னுறவரைதல் - களவுவெளிப்பட்ட பின்னுறவரைதலென் - றுயிரண் டென்பவரைதாலாறே" என்பதாம். (௪௨)

௪௩. நான்குவகைப் புணர்வினுந் தான்றெருண்டு வரைதலும்
பாங்கனிற் பாங்கியிற் றெருளுற்று வரைதலுங்
களவு வெளிப்படா முன்வரைத லாகும்.

(இச் - ம்.) களவுவெளிப்படா முன்னிகழும் வரைவுக்கிலக்கணமுணர்த் துதலுதலிற்று

(இ - ள்.) மேற்சொல்லப்பட்ட வியற்கைப்புணர்ச்சி முதலாகிய நான்கு வகைப்புணர்ச்சிக் கண்ணுந் தலைமகன்றானேதெருண்டுவரைதலும், பாங்கனுலா

தல் பாங்கியாலாதல் தெருட்டப்பட்டு வரைதலுமாகிய அவை களவு வெளிப் படாமுன் வரைவாமென்றவாறு. (சங)

சச. உடன்போய் வரைதலு மீண்டு வரைதலு
முடன் போக்கிடையீ டுற்று வரைதலுங்
களவு வெளிப்பட்ட பின்வரைத லாகும்.

(இச் - ம்.) களவு வெளிப்பட்ட பின்னிகழும் வரைவிற்கிலக்கண முணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) புணர்ந்துடன்போய்த் தலைமகன்றன்னூரின்கண்ணே வரைதலு, மீண்டுவந்து தம்மூரின்கண்ணே வரைதலு, முடன் போக்கிடையீடுபட்டுத் தலை மகன் றலைமகடமரைவழிபட்டுவரைதலுமாகியவிவை களவுவெளிப்பட்டபின் வரைதலாமென்றவாறு. (சச)

சரு. அவற்றுள், உடன்போய் வரைத லொருவகைத் தாகும்.

(இச்-ம்.) உடன்போய்வரைத லுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) மேற்சொல்லப்பட்ட மூன்றனுள், உடன்போய்த் தன்னூரின் கண்ணே வரைதலாகியவஃ தொருவகையினையுடைத்தாமென்றவாறு. (சரு)

சசு. அவன்மனை வரைதலுந் தன்மனை வரைதலு
மெனமீண்டு வரைத லிருவகைத் தாகும்.

(இச் - ம்.) மீண்டுவரைதலின் வகையுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) தலைமகள் மனையின்கண்ணேவரைதலுந், தலைமகன் மனையின் கண்ணேவரைதலுமென விரண்டுவகையினையுடைத்தா முடன்போய்மீண்டு தம் மூரின்கண்ணேவரைதலென்றவாறு. (சசு)

சஎ. ஆற்றா றஞ்சினு மவன்வரைவு மறுப்பினும்
வேற்றுவரைவு நேரினுங் காப்புக்கை மிகினு
மாற்றுறத் தோன்று மறத்தொடு நிலையே.

(இச் - ம்) அறத்தொடு நிலைநிகழுமிட முணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) தலைமகன்வரும் வழியுண்டாகிய வேதத்தினையஞ்சியவிடத்துந், தமர் வரைவெதிர்கொள்ளாத விடத்தும், பிறர்வரைவு நேருமிடத்துங், காவல் கைமிகுந்த விடத்தும் நெறிப்படப் புலப்படும் அறத்தொடுநிலையென்றவாறு. என்னை? "காப்புக்கைமிக்குக் காமம்பெருகினு - நொதுமலர்வரையும் பருவ மாயினும் - வரை வெதிர்கொள்ளாது தமரவன் மறுப்பினு-மவனூறஞ்சுங்கால

மாயினு - மன்னாவிடத்து மெய்ந்நவின்றோரிஇ - யறத்தொடுநிற்ற றோழிக்கு ரித்தே." என்றாராகலின். (௪௭)

௪௮. தலைவி பாங்கிக் கறத்தொடு நிற்கும்
பாங்கி செவிலிக் கறத்தொடு நிற்குஞ்
செவிலி நற்றாய்க் கறத்தொடு நிற்கு
நற்றாய் தந்தை தன்னையர்க் கறத்தொடு
நிற்கு மென்ப நெறியுணர்ந் தோரே.

(இச் - ம்.) அறத்தொடு நிற்றற் குரியாரை யுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) தலைவிமுதலாய நால்வருமிவ்வாறறத்தொடு நிற்றற்குரியரென்று சொல்லுவரகப்பொருளிலக்கண மறிந்தோ ரென்றவாறு. (௪௮)

௪௯. ஒருபுணர் வொழிந்தவற் றொருவழித் தணப்பவும்
வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரியவு
மிறைவனைச் செவிலி குறிவயிற் காணவு
மனைவயிற் செறிப்பவும் வருத்தங் கூரின்
வினவியக் கண்ணும் வினவாக் கண்ணு
மனைநடைக் கிழத்தி யறத்தொடு நிற்கும்.

(இச் - ம்.) தலைமகளறத்தொடுநிற்குமிட முணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) பாங்கியிற் கூட்டமென்னுமொன்றுநீங்கிய மூன்றுபுணர்ச்சிக் கண்ணுந்தலைமக னொருவழித்தணத்தலானும், வரைவிடைவைத்துப் பொருள் வயிற்பிரிதலானுஞ், செவிலிதலைமகனைக்குறிவயிற்காண்டலானு, மிற்செறித்த லானுந், தனக்குவருத்தமிகுமாயிற் றன்னை யவள் வினவியவிடத்தும் வினவாத விடத்தும், தலைமகள் பாங்கிக் கறத்தொடுநிற்கு மென்றவாறு. பாங்கிக்கென்ப ததிகாரத்தான்வந்தது. இதற்கு விதியாதோவெனின்; "வரைவிடை வைத்த காலத்து வருந்தினும் - வரையா நாளிடை வந்தோன் முட்டினு - முரையெனத் தோழிக்குரைத்தற் கண்ணுந்-தானேகூறுங்காலமு முளவே." என்பதாம். (௪௯)

௫௦. முன்னிலைப் புறமொழி முன்னிலை மொழிகளிற்
பின்மொழிப் பாங்கி செவிலிக் குணர்த்தும்.

(இச் - ம்.) பாங்கியறத் தொடுநிற்குந் திறமுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) முன்னிலைப்புறமொழியு, முன்னிலை மொழியுமாகிய விரண்டி னுள்ளும் பாங்கி செவிலிக் கறத்தொடுநிற்கு மென்றவாறு. (௫௦)

௫க. செவிலிநற் றாய்க்குக் கவலையின் றுணர்த்தும்.

(இச் - ம்.) செவிலியறத்தொடு நிற்குந் திறமுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) செவிலி யறத்தொடுநிற்குங்காலத்து நற்றாய்க்கு விளங்கவறிவிக்குமென்றவாறு. (௫க)

௫௨. நற்றா யறத்தொடு நிற்குங் காலைக்
குரவனுந் தன்னையுங் குறிப்பி னுணர்ப

(இச் -ம்.) நற்றாயறத்தொடுநிற்குந்திறமுணர்த்தனுதலிற்று.

(இ-ள்.) நற்றா யறத்தொடுநிற்குங்காலத்துச் சொல்லாடப்பெறாளாதலிற் றலைமகடந்தையுந்தன்னையுமவள்குறிப்பினானேயறிவரென்றவாறு. என்னை? "தந்தையுந் தன்னையுமுன்னத்தினுணர்ப" என்றாராகலின். (௫௨)

௫௩. பாங்கி தலைவியை வினவுஞ் செவிலி
பாங்கியை வினவும் பாங்கி தன்னையு
நற்றாய் தானும வினவுஞ் செவிலியிற்
பொற்றொடிக் கிழத்தியை யுற்று நோக்கின்.

(இச்-ம்.) அறத்தொடு நிற்பார்க்குவினா நிகழுமிடமுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) தலைமகண்மாட்டு வேறுபாடுகண்டுழிப் பாங்கிமுதலாகிய மூவருமிவ்வாறுவினவப்பெறுவரென்றவாறு; பாங்கிதன்னையுமென்ற வும்மை நற்றாய் செவிலியைவினவுதலன்றி என்னும் பொருள்படநின்றது. நற்றாய்தானுமென்னு மும்மை பாங்கியைச்செவிலி வினவுதலன்றி என்னும் பொருள்படநின்றது. இவ்வாறு நற்றாய்வினவுவது செவிலியைபோலத் தலைமகளையுற்றுப்பார்த்தவிடத்தெனக்கொள்க. (௫௩)

௫௪. ஆங்குடன் போயுழி யறத்தொடு நிற்ப
பாங்கியுஞ் செவிலியும் பயந்த நற்றாயும்

(இச் - ம்.) புணர்ந்துடன் போயினவிடத்தறத்தொடுநிற்றற் குரியாரையுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) தலைமகளுந்தலைமகனும் புணர்ந்துடன்போயகாலத்தறத்தொடுநிற்பார் தோழியுஞ்செவிலியுநற்றாயுமென்றவாறு. ஆங்கென்பதசை. (௫௪)

௫௫. களவின்வழி வந்த கற்பும் பொற்பமை
களவின்வழி வாராக் கற்புமென் றாங்கு
முற்படக் கிளந்த கற்பிரு வகைத்தே.

(இ-ம்.) கற்பின்பாகுபா டுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) மேற்சொல்லப்பட்ட கற்பு, களவிற்புணர்ச்சிவழியான்வந்த கற்பும், களவிற்புணர்ச்சிவழியின்வாராக்கற்புமென விரண்டுபகுதியினையுடைத்தாமென்றவாறு. அஃதேற் களவின்வழிவந்தகற்பினை முற்கூறியதென்னையெனின்; "முற்படப்புணர்த்த சொல்லின்மையிற்-கற்பெனப்படுவது களவின் வழித்தே" என்றாராகலின் அதன் சிறப்புநோக்கியெனக்கொள்க. (௫௫)

௫௬. அவற்றுள், களவின் வழிவந்த கற்பிற்புணர்ச்சி
கிளைஞரி னெய்தாக் கேண்மையு முடைத்தே
யுடன்போய் வரைதலு முண்மை யான.

(இ-ம்.) களவின்வழிவந்த கற்பிற்புணர்ச்சிக்கெய்தியதோர் வேறுபாடுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) மேற்சொல்லப்பட்ட விருவகைக்கற்பினுள்ளுங் களவின்வழி வந்தகற்பினுட்புணரும் புணர்ச்சி தலைமகள்சுற்றத்தாராற் பெறப்படாதகோட்பாட்டினையுமுடைத்தாம் புணர்ந்துடன்போய்த் தலைமகன் றன்னூரின்கண்ணே வரைந்துகோடலு முண்டாதலானென்றவாறு. என்னை? "கொடுப்போ ரின்றியுங் கரண முண்டே-புணர்ந்துடன் போகிய காலை யான" என்றாராகலின் (௫௬)

௫௭. குரவரிற் புணர்ச்சி வாயிலிற் கூட்டமென்
றிருவகைத் தாகுங் கற்பிற் புணர்ச்சி.

(இ-ம்.) கற்பென்னுங் கைகோளிற் புணர்ச்சிவரையறை யுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) கற்பென்னுங் கைகோளிற்புணர்ச்சி குரவராற் புணரும்புணர்ச்சியும் வாயில்களாற் புணரும்புணர்ச்சியுமென விரண்டுபகுதியினையுடைத்தென்றவாறு. இவற்றுள் குரவராற்புணரும் புணர்ச்சியாவது வதுவைகூட்டிப்புணரும் புணர்ச்சி, வாயில்களாற் புணரும்புணர்ச்சியாவது புலவிதீர்த்துப்புணரும் புணர்ச்சியெனக்கொள்க. (௫௭)

௫௮. மறையிற் புணர்ச்சியு மன்றற் புணர்ச்சியு
மிறைவற் கெய்துஞ் டிருவகைக் கற்பினும்.

(இ-ம்.) தலைமகற்குக் கற்புக்காலத்துநிகழு மொழுக்கவேறுபாடுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) மேற்சொல்லப்பட்ட விருவகைக்கற்பின்கண்ணுந் தலைமகற்குக் களவிற்புணர்ச்சியும் வதுவைப்புணர்ச்சியும் பொருந்துதலுண்டென்றவாறு. (௫அ)

௫௯. காதற் பரத்தையர் காமக் கிழத்தியர்
பின்முறை வதுவைப் பெருங்குலக் கிழத்தியென்
றன்னவ ருரிய ரவையிரண் டிற்கும்.

(இச் - ம்.) அவ்வொழுக்க மிரண்டிற்குமுரிய மகளிரையுணர்த்துதனுதலிற்று.

(இ - ள்.) காதற்பரத்தையர் முதலாகிய மூவகையோருந் தலைமகனவ்வா றொழுகு மொழுக்கமிரண்டிற்கு முரியரென்றவாறு. (௫௯)

௬0. அவற்றுட், காதற் பரத்தையர் களவிற் குரியர்.

(இச் - ம்.) களவிற்குரிய மகளிரை யுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) மேற்சொல்லப்பட்ட மூவகையோருள்ளுங் காதற்பரத்தையர் களவொழுக்கத்திற்குரிய ரென்றவாறு. (௬0)

௬௧. ஒழிந்தோர் மன்றற் புணர்ச்சிக் குரியர்.

(இச்-ம்.) வதுவைப்புணர்ச்சிக்குரிய மகளிரையுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்.) காமக்கிழத்தியும், பின்முறைவதுவைப் பெருங்குலக்கிழத்தியு மாகிய விருதிறத்தோரும் வதுவைப்புணர்ச்சிக்குரியமகளிரென்றவாறு. (௬௧)

௬௨. பரத்தையிற் பிரித லோதற்குப்படர்த
லருட்டகு காவலொடு தூதிற் ககற
லுதவிக் கேக னிதியிற் கிகத்தலென்
றுரைபெறு கற்பிற் பிரிவறு வகைத்தே.

இச் - ம்.) கற்பிற்பிரியும் பிரிவின்வகையறை யுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) பரத்தையிற்பிரிதல் முதலாக நிதியிற்கிகத்தலீறாக வாறுவகை யினையுடைத்தாங் கற்பின்கட் பிரியும் பிரிவென்றவாறு. என்னை? "ஓதல் காவல் பகைதணிவினையே - வேந்தர்க்குற்றுழி பொருட்பிணிபரத்தையென் - றாங்கவ்வாறே யவ்வயிற்பிரிவே" என்றாராகலின்; அஃதே லீண்டுப் பரத்தை யிற்பிரிவு முற்கூறியதென்னையோவெனின்; அது தொல்காப்பியனார் துணி பெனக்கொள்க. (௬௨)

௬௩. அயன்மனைப் பிரிவயற் சேரியி னகற்சி
புறநகர்ப் போக்கிவை புரவலற் குரிய
பரத்தையிற் பிரியும் பருவத் தான.

(இச் - ம்.) தலைமகற்குரிய சிலதொழிலுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) அயன்மனைப்பிரிவு முதலாகிய மூன்றுபிரிவுந் தலைமகற்குரியனவாம் பரத்தையிற்பிரியுங்காலத்தென்றவாறு. (௬௩)

௬௪. கெழீஇய காமக் கிழத்தியர் பொருட்டாத்
தழீஇய வயமன்மனைத் தலைவன் பிரியும்.

(இச் - ம்.) நிறுத்தமுறையானே யயன்மனைப்பிரிவுக் கேதுவுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) பொருந்திய காமக்கிழத்தியர் காரணமாகத் தலைமகன் றொடர்ந்த வயன்மனைக்கண்ணே பிரியுமென்றவாறு. (௬௪)

௬௫. பின்னர் வரைந்த பெதும்பையும் பரத்தையு
மின்னியல் விழவு மேது வாக
வவனயற் சேரியி னகலு மென்ப.

(இச் - ம்.) அயற்சேரியிற்பிரிவுக் கேதுவுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) இரண்டாவது வரைந்துகொள்ளப்பட்ட பெதும்பைப்பருவக் கிழத்தியுங், காதற்பரத்தையும், இனியதன்மையுடைய விழவுங் காரணமாகத் தலைமக னயற்சேரியின்கண்ணே பிரியுமென்றவாறு. (௬௫)

௬௬. விருந்தின் பரத்தையைப் பெருந்தேர் மிசைக்கொண்
டிளமரக் காவின் விளையா டற்கும்
புனலாடற்கும் புறநகர்ப் போகும்.

இச் - ம்.) புறநகர்ப்போக்குக் கேதுவுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) இளமரக்காவின்கண்ணே விளையாடுதல் காரணமாகவும், புனலாடுதல் காரணமாகவும் தலைமகன் புதியளாகிய பரத்தையைத்தேர்மேலேற்றிக் கொண்டு நகர்ப்புறத்திலே போமென்றவாறு. நகர்ப்புறமெனமாறுக. (௬௬)

௬௭. ஊட லவ்வழிக் கூடுங் கிழத்திக்கு.

(இச் - ம்.) தலைமகளுக்கூடனிகழுமிடமுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) அம்மூன்றுபிரிவின்கண்ணுந் தலைமகட் கூடல்பொருந்துமென்றவாறு. (௬௭)

சுஅ. கொளிவல் பாணன் பாடினி கூத்த
ரிளையர் கண்டோ ரிருவகைப் பாங்கர்
பாகன் பாங்கி செவிலி யறிவர்
காமக் கிழத்தி காதற் புதல்வன்
விருந்தாற் றாமை யென்றிவை யூடன்
மருந்தாய்த் தீர்க்கும் வாயில்க ளாகும்.

(இச் - ம்.) மேற்சொல்லப்பட்ட வாயில்களாவன விவையென்பதுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) பாணன் முதலாக வாற்றாமையீறாகச்சொல்லப்பட்ட விவையனைத்தும் தலைமகளூடலைத்தீர்க்கும்வாயில்களாமென்றவாறு. இதனுளுயர்திணையு மஃறிணையும் விரவியெண்ணி யிவையென வஃறிணையாற்றொகை கொடுத்தது என்னை? "பலவயினானுமெண்ணுத் திணைவிரவுப்பெய ரஃறிணை முடிபினசெய்யுளுள்ளே." என்றாராகலின். (சுஅ)

சுகூ. ஓதற் றொழி லுரித் துயர்மூ வர்க்கும்.

(இச் - ம்.) ஓதற்றொழிற்குரியதோர் சிறப்புணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) ஓதலென்னுந்தொழிலந்தணரரசர்வைசியரென்கின்ற மூவர்க்குமுரித்தென்றவாறு. (சுகூ)

எ0. அல்லாக் கல்வி யெல்லார்க்கு முரித்தே.

(இச் - ம்.) ஒழிந்தகல்வியதுதன்மையுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) வேதமல்லாதகல்வி நால்வர்க்கு முரித்தென்றவாறு. (எ0)

எக. படைக்கலம் பயிறலும் பகடுபிற வூர்தலு
முடைத்தொழி லவர்க்கென வுரைத்திசி னோரே.

(இச் - ம்.) நால்வரிற்சிலர்க்குக்கல்வியல்லாத தொழிலுரிமையுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) படைக்கலங்களைக்கற்றலும், யானையுந்தேருங் குதிரையு முதலாயினவூர்தலு மூவர்க்குமுடைமையாகிய தொழிலெனச் சொன்னார் புலவரென்றவாறு. பிறவென்றதனாற் றேருங் குதிரையு முதலாயினவுங் கொள்ளப்பட்டன. பகடுபிறவென்றது உம்மைத்தொகை. (எக)

எஉ. அறப்புறங் காவ லுடுகா வலெனச்
சிறப்புறு காவற் றிறமிரு வகைத்தே.

(இச் - ம்.) காவற்றொழிலின் பாகுபாடுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) அறப்புறங்காவலு நாடுகாவலுமென விருகூற்றதாமேம்பாடுற்ற காவற்றொழிலின் பாகுபாடென்றவாறு. (எஉ)

எ௩. அவற்றுள்,

அறப்புறங் காவ லனைவர்க்கு முரித்தே.

இச் - ம்.) அறப்புறங்காவற்றன்மை யுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) மேற்சொல்லிய விரண்டனுள்ளு மறப்புறங்காவலென்பது நால்வர்க்கு முரித்தென்றவாறு. (எ௩)

எச. மற்றைக் காவல் கொற்றவர்க் குரித்தே.

(இச் - ம்.) நாடுகாவற் றன்மையுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) நாடுகாவலென்பதரசர்க்குரித்தென்றவாறு. (எச)

எ௫. வேத மாந்தர் வேந்தரென் றிருவர்க்குந்

தூது போதற் றொழிலுரித் தாகும்.

(இச் - ம்.) தூதுபோதற்றொழிலின்றன்மை யுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) பார்ப்பாரும் வேந்தருமென்னு மிருவர்க்குமுரித்தாந்தூதுபோதற்றொழிலென்றவாறு. பகைதணிவினையெனினுந் தூதுவினையெனினுமொக்கும். "வயலைக்கொடியின் வாடியமருங்கு-லுயவலூர்திப் பயலைப்பார்ப்பா-னெல்விவந்து நில்லாதுபுக்தச்-சொல்லிய சொல்லோசிலவேயதற்கே-யேணியுஞ்சிப்பு மாற்றி-மாண்வினையானையு மணிகளைந்தனவே" என்பதனாலும், "மடந்தாழு நெஞ்சத்துக்கஞ்சனார்வஞ்சங் - கடந்தானை நூற்றுவர்பானூற்றிசையும்போற்றத் - தொடர்ந்தாரணமுழங்கப்பஞ்சவர்க்குத்தூது - நடந்தானையேத்தாத நாவென்ன நாவே-நாராயணாவென்னா நாவென்னநாவே"என்பதனாலு மவ் விருவர்க்குந் தூது போதற் றொழிலுரித்தாயினவாறு காண்க. (எ௫)

எசு. சிறப்புப் பெயர்பெறிற் செப்பிய விரண்டு

முறற்குரி மரபின வொழிந்தோ ரிருவர்க்கும்.

இச் - ம்.) நாடுகாவற்றொழிற்குந் தூதுபோதற்றொழிற்குமுரியதோர் வேறுபாடுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) அரசனாற்சிறப்புப்பெயர் பெற்றாராயின் வைசியருஞ்சூத்திரருமென்னு மிருவர்க்கு மேற்கூறியநாடுகாவற்றொழிலுந் தூதுபோதற்றொழிலுமாய விரண்டும் பொருந்துதற்குரிய மரபினவாமென்றவாறு. உரியமரபென்பது விகாரம். (எசு)

எஎ. உதவி யந்தண ரொழிந்தோர்க் குரித்தே.

(இச் - ம்.) உதவியிற்றொழி லுரிமை யுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) வேந்தர்க்குற்றுழியுதவியாகிய தொழிலந்தணரொழிந்த மூவர்க்கு முரித்தாமென்றவாறு. (எஎ)

எஅ. பரத்தையிற் பிரிவும் பொருள்வயிற் பிரிவு
முரைத்த நால்வர்க்கு முரிய வாகும்.

(இச் - ம்.) நால்வர்க்கும்பொதுவாகிய தொழிலிவையென்ப துணர்த்துத னுதலிற்று.

(இ-ள்.) பரத்தையிற்பிரிவும், பொருள்வயிற்பிரிவுமாகியவிரண்டு மேற் சொல்லப்பட்ட நால்வர்க்குமுரியவா மென்றவாறு. (எஅ)

எகூ. இழிந்தோர் தமக்கு மிவற்றுண்மேம் பட்டவை
யொழிந்தன வாமென மொழிந்தனர் புலவர்.

(இச் - ம்.) நிலமக்களுட் டலைமக்கட் குரிய தொழிலுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்.) இவ் வறுவகைத் தொழிலுள்ளுமேம்பட்டனவாகிய வோதலு நாடுகாவலுந் தூதுபோதலுமாகிய மூன்றுமொழித்தல்லாதனவெல்லாமிழிந்தோராகிய நிலமக்களுட் டலைமக்கட்கு முரியவாமெனச்சொன்னா ரறிவோரென்றவாறு. (எகூ)

அ0. கல்வி முதலா வெல்லா வினைக்குஞ்
சொல்லி யகறலுஞ் சொல்லா தகறலு
முரியன் கிழவோன் பெருமனைக் கிழத்திக்கு.

(இச் - ம்.) பிரியுந்தலைமகற்குரியதோரிலக்கணமுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்.) கல்விமுதலாகிய * வெல்லாவினைக்குந் தலைமகட்குச் சொல்லிப் பிரிதலுஞ், சொல்லாது பிரிதலு முரியன் றலைமகனென்றவாறு. (அ0)

அக. சொல்லா தகலினுஞ் சொல்லும் பாங்கிக்கு.

இதுவுமது.

(இ-ள்.) தலைமகன் றலைமகட்குச் சொல்லாதுபிரியுமாயினுந் தோழிக்குச் சொல்லியே பிரியுமென்றவாறு. (அக)

---

* ஐந்துவினைக்கும் என்றும் பாடம்.

௮௨. காலிற் சேறலுங் கலத்திற் சேறலு
மூர்தியிற் சேறலு நீதி யாகும்.

(இ-ம்.) பிரியுங்காலத்து நால்வர்க்கும்பொதுவாகியதுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்.) காலிற்சேறன்முதலாகிய மூன்று மெல்லாப்பிரிவின் கண்ணு மெல்லார்க்குமியல்பா மென்றவாறு. (௮௨)

௮௩. புலத்திற் சிறந்த புரிநூன் முதல்வர்க்குக்
கலத்திற் சேறல் கடனன் றென்ப.

(இ-ம்.) அந்தணர்க்காகாத தொழிலுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) காலிற்சேறன் முதலாகிய மூன்றுள்ளுங் கலத்திற்சேறலாகிய தொழில் கல்வியினுன்மிக்க வந்தணர்க்குமுறைமையன்றென்று சொல்லுவர் புலவரென்றவாறு. (௮௩)

௮௪. வலனுயர் சிறப்பின் மற்றை மூவர்க்குங்
குலமட மாதரொடு கலமிசைச் சேறலும்
பாசறைச் சேறலும் பழுதென மொழிப.

(இ-ம்.) அரசர்முதலாகிய மூவர்க்குமாகாத தொழிலுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) குலமடமாதரொடு கலமிசைச்சேறலுங் குலமடமாதரொடு பாசறைச்சேறலுமாகிய விரண்டும் வெற்றியுயர்ந்த சிறப்பினையுடைய வேந்தர் முதலாகிய மூவர்க்குங் குற்றமென்று சொல்லுவர் கற்றுவல்லோரென்றவாறு. குலமடமாதரொன்பதனை ஈரிடத்துங்கூட்டிக்கொள்க. "மணன்மலி பூங்கானல் வருகலன்களேறக்கிக்-கணவன்வரக்கல்லுருவநீத்தாள்" என்பதனாற் குலமடமாதரொடு கலமிசைச்சேறலாகாமையறிக. "பனியிருங்கங்குலுந்தமியணீந்தித் - தம் மூரோளே நன்னுதல்யாமே - ......யிரவுத்துயின்மடிந்ததானை - யுரவுச்சினவேந் தன்பாசறையேமே"என்பதனாற் குலமாதரோடுபாசறைக்கட்செல்லாமையறிக. குலமாதரோடுசெல்லாரெனவே பரத்தையரோடு செல்வரென்பது பெற்றும். "துயிலின்றியானீந்தத்தொழுவையம்புனலாடி - மயிலியலார்மருவுண்டுமறந்தமை குவான்மன்னோ-வெயிலொளியறியாதவிரிமலர்த்தண்காவிற் - குயிலாலும்பொழுதெனக் கூறுந ருளராயின்" என்பதனாற் பரத்தையரோடு பாசறைக்கட் சென்றவாறறிக. ஏனையது வந்தவழிக்கண்டுகொள்க. (௮௪)

௮௫. ஓதன் முதலா வோதிய வைந்தினும்
பிரிவோ ரழுங்கற்கு முரிய ரென்ப.

(இச் - ம்.) தலைமகற்குப் பிரிவிடத்துரிய வேறுபாடுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்.) ஓதன்முதலாகச் சொல்லப்பட்டவைந்தின்கண்ணும்பிரியுந்தலைமகன் போதற்கேயன்றிப் போகாமைக்குமுரியனு மென்றவாறு. (அ௫)

அசு. இல்லத் தழுங்கலு மிடைச்சுரத் தழுங்கலு
மொல்லு மவற்கென வுரைத்திசி னோரே.

இதுவுமது.

(இ-ள்.) பிரியக்கருதிய தலைமக னவ்வில்லின்கண்ணே செலவழுங்குதலு மிடைச்சுரத்தின்கண்ணேசெலவழுங்குதலும் பொருந்துமெனக் கூறினர் புலவரென்றவாறு. இவற்றுக்கிலக்கியம் "புணரிற்புணராது பொருளே பொருள்வயிற் - பிரியிற்புணராது புணர்வேயாயிடைச் - சேறினுஞ்செல்லாயாயினுநல்லதற்-குரியைவாழியென் னெஞ்சேபொருளே - வாடாப்பூவின்பொய்கைநாப்ப - ணோடுமீன்வழியிற் கெடுகயானே - விழுநீர்வியலகந் தூணியாக - வெழுமாணளக்கும் விழுநிதிபெறினுங் - கனங்குழைக்கமர்த்த சேயரிமழைக்க - ணமர்ந்தினிதுநோக்கமொடு செகுத்தன - னெனையதாகுக வாழியபொருளே" எனவும்; "புறந்தாழ்பிருண்ட கூந்தற்போதி-னிறங்கிளர்நிரையிதழ்ப் பொலிந்தவுண்க - ணுள்ளம்பிணிக்கொண் டோள்வயினெஞ்சே - செல்லதீர்கஞ் செல்வாமென்னுஞ்-செய்வினைமுடியா தெவ்வஞ்செய்த - லெய்யாமையோ டிழிவுதலைத் தருமென - வுறுதிதூக்கத்தூங்கியறிவே - சிறிதுநனிவிரைய லென்னுமாயிடை - யொளிறேந்துமருப்பிற் களிறுமாறுபற்றிய - தேய்புரிப் பழங்கயிறுபோல-வீவதுகொல்லென் வருந்தியவுடம்பே." எனவும் வரும். (அசு)

அஎ. தலைவி தன்னையுந் தன்மனந் தன்னையு
முலமா லொழித்தற் கழுங்குவ தல்லது
செல்வத் தோன்றல் செல்லா னல்லன்.

(இச் - ம்.) எய்தியதுவிலக்குவதோரிலக்கணமுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) இல்லகத்துத் தலைமகளையுந் தன்னெஞ்சினையுந் தேற்றுதல் காரணமாகவு மிடைச்சுரத்துத் தன்னெஞ்சினைத்தேற்றுதல் காரணமாகவுமழுங்குதல் மாத்திரமல்லது தலைமகன் போகானல்ல னென்றவாறு. இல்லகத்துத் தலைமகளைத் தேற்றுதற்குச்செய்யுள். "பொன்னினுமணியினும் போதும்யாழநின்-னன்னர்மேனியு நாறிருங்கதுப்பும் - போதும்பணையும் போதும் யாழநின் - மாதருண்கணும் வனப்பின்றோளு-மிலைகாண்டோறு மகமெலிந்தியானு-மறநிலைபெற்றோ ரனையேன்றன்றலைப் - பொலந்தொடிப்புதல்வனும் பொய்தல்கற்ற

ளன்- விழையும்வேறு புலத்திலோனிலையின் - யாதுங்கிப்பிரிகோமடந்தை-காதரு ளுன்டைவிளும்பெரிதே" எனவரும், பிறவுமன்ன. (அஎ)

அஅ. அவற்றுள்,

ஓதற் பிரிவுடைத் தொருமூன் றியாண்டே.

(இச் - ம்.) ஓதற்பிரிவுக்கு யாண்டுவரையறை யுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) மேற்சொல்லப்பட்ட பிரிவுகளு ளோதற்குப் பிரியும்பிரிவு மூன்றியாண்டெல்லையினையுடைய தென்றவாறு. என்னை? "வேண்டியகல்வி யாண்டுமூன் றிறவாது" என்றாராகலின். (அஅ)

அகூ. தூதிற் பிரிவுந் துணைவயிற் பிரிவும்
பொருள்வயிற் பிரிவு மோர்யாண் டுடைய.

(இச் - ம்) தூதிற்பிரிவுமுதலாய மூன்றுபிரிவிற்கும் யாண்டுவரையறை யுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) தூதுகாரணமாகப் பிரியும்பிரிவு முதவிகாரணமாகப் பிரியும் பிரிவும், பொருள்காரணமாகப் பிரியும்பிரிவு மோர்யாண்டெல்லையினையுடைய வென்றவாறு. என்னை? " வேந்துறுதொழிலேயாண்டினதகமே " எனவும், "பிரிவுநீட்டனிலம்பெயர்ந்துறைவோர்க் - குரியதன்றேயாண்டுவரையறுத்தல்" எனவும், "தூதும்பொருளுமோதியதாகும்" எனவுஞ்சொன்னாராகலின், அஃதேற் பரத்தையிற் பிரிவுக்குங் காவற்பிரிவுக்கும யாண்டுவரையறாத தென்னையோ வெனின்; அவை காடிடையிட்டும் நாடிடையிட்டும் பிரியப்படாமையினீண்டு வரையறுத்திலரெனக்கொள்க. (அகூ)

கூ0. பூத்த காலைப் புனையிழை மனைவியை
நீரா டியபின் னீரா றுநாளும்
கருவயிற் றுறூஉங் கால மாதலிற்
பிரியப் பெறாஅன் பரத்தையிற் பிரிவோன்.

(இச் - ம்.) பரத்தையிற்பிரிந்த தலைமகற்குரியதோ ரிலக்கணமுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்.) நீராடியபின் பன்னிரண்டுநாளுங் கருப்பமுங் காலமாதலாற் பரத்தையிற்பிரிந்த தலைமகனப்பன்னிரண்டுநாளுந் தலைமகளைப்பிரியப்பெறான் பூப்புநிகழுங்காலத் தென்றவாறு. என்னை? "பூப்பின்புறப்பாடீராறுநாளு-நீத்த கன்றுறையாரென்மனார்புலவர்-பரத்தையிற்பிரிந்தகாலையான" எனவும், "இன்பா நாண்மூன்றுநாளுந்தொக்கார்நீராடியபின் - னீராறுநாளுமிவைத்தக்கவென்பதே - போதி வளர்துணிவு" எனத்தொல்காப்பியனாரும் பெருவாயின்முள்ளியாரு மெடுத்தோதி னாராகலின். (கூ0)

௪௧. ஓதற் ககன்றோ னொழிந்திடை மீண்டு
போதற் கியைபவும் புலம்பவும் பெறாஅன்.

(இச் - ம்.) ஓதற்குப்பிரிந்ததலைமகற்காகாததோ ரிலக்கணமுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்.) ஓதற்குப்பிரிந்த தலைமகனவ்வோதலை யொழிந்திடையிட்டு மீண்டுவருதற்குடம்படவு, மவ்விடத்துத் தலைமகளை நினைந்துபுலம்பவும் பெறா னென்றவாறு. (௧௧)

௪௨. தூதுந் துணைமையு மேது வாகச்
சென்றோ னவ்வினை நின்றுநீட் டித்துழிப்
புலந்து பாசறைப் புலம்பவும் பெறுமே

(இச் - ம்.) தூதுந்துணைமையுங் காரணமாகப் பிரிந்ததலைமகற் கெய்துவ தோர் வேறுபாடுணர்த்துதலுதலிற்று.

(இ-ள்.) தூதுகாரணமாகவு, முதவிகாரணமாகவும் பிரிந்த தலைமகனத் தொழில்கள் பிரிவிற்குரியதோர் யாண்டின்கண் முடியாதுநீட்டித்தகாலத்துப் பாசறைக்கண்ணேயிருந்து தலைமகளை நினைந்து வெறுத்துப் புலம்புதல் பெறு மென்றவாறு. அஃதாயினவாறென்றனையெனின்; "மூன்றன் பகுதியுமண்டிலத் தருமையுந் - தோன்றல் சான்றமாற்றோர் மேன்மையும் - பாசறைப்புலம்பலும்" என்னுமிலக்கணத்தா னாயிற்றெனக்கொள்க. (௧௨)

௪௩. பூத்தமை சேடியிற் புரவலற் குணர்த்தலு
நீத்தமை பொறாது நின்று கிழவோனைப்
பழிக்குங் காமக் கிழத்தியைக் கழறலுங்
கிழவோற் கழறலும் வழிமுறை மனைவியைக்
கொழுநனொடு வந்தெதிர் கோடலு மவனொடு
பாங்கொடு பாத்தையைப் பழித்தலு நீங்கிப்
புறநகர்க் கணவனொடு போகிச் செறிமலர்ச்
சோலையுங் காவு மாலையங் கழனியு
மாலைவெள் ளருவியு மலையுங் கானமுங்
கன்னிவினை யாடலுங் கடும்புனல் யாறும்
வண்டியிர் கமல வாவியுங் குளனு
மாடிவிளை யாடலுங் கூடுமெழுத்திக்கு.

(இ-ம்.) தலைமகட்குக் கற்புக்காலத்துரிய வொழுகலாறெல்லாந் தொகுத்துணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) பூத்தமைசேடியிற் புரவலற்குணர்த்தன் முதலாகக் குளனுடலீறாகச் சொல்லப்பட்டனவெல்லாங் கற்புக்காலத்துத்தலைமகட்குப் பொருந்துமென்றவாறு. கற்பென்பததிகாரத்தான் வந்தது. இவற்றுக்குதாரணமேலே காட்டப்படும். (௬௩)

௬௪ வாயில் வேண்டலும் வாயினேர் வித்தலுஞ்
செயிழை யூட றீர்த்தலும் போயுழி
யவணலந் தொலைவுகண் டழுங்கலு மவள்வயிற்
செல்ல விரும்பலுஞ் சென்றவற் குணர்த்தலுஞ்
சொல்லிய கூற்றெனச் சொல்லலுங் கிழவோன்
வரவு மீண்டவந் தரிவைக் குணர்த்தலு
மணிநலம் *பெறுமை யறியான் போன்றவட்
பணிவொடு வினுதலும் பாணற் குரிய.

(இச் - ம்.) வாயில்களுட் பாணற்குரியன வெல்லாந்தொகுத்துணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) வாயில்வேண்டன்முதலாகச் சொல்லப்பட்டனவெல்லாம் பாணற்குரியனவென்றவாறு. (௬௪)

௬௫. செலவிற் றேற்றலும் புலவியிற் றணித்தலும்
வாயில் வேண்டலும் வாயினேர் வித்தலுந்
தெரியிழை விறலிக் குரிய வாகும்.

(இச் - ம்.) விறலிக்குரியனவெல்லாந் தொகுத்துணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) செலவிற் றேற்றன்முதலாகச் சொல்லப்பட்டனவெல்லாம் விறலிக்குரியனவாமென்றவாறு. (௬௫)

௬௬. செல்வம் வாழ்த்தலு நல்லறிவு கொளுத்தலுங்
கலனணி புணர்த்தலுங் காமநுகர் புணர்த்தலும்
புலவி முதிர்காலைப் புலங்கொள வேறுவிற்
றேற்றலுஞ் செய்மை செப்பலும் பாசறை
மேற்சென் றுரைத்தலு மீண்டவர வுணர்த்தலுங்
கூற்றரு மரபிற் கூத்தர்க் குரிய.

---

*பெற்றமை என்றும் பாடம்.

(இச் - ம்.) கூத்தர்க் குரியனவெல்லாந் தொகுத்துணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) செல்வம்வாழ்த்தன்முதலாகச் சொல்லப்பட்டனவெல்லாங் கூத்தர்க்குரியனவாமென்றவாறு. (௧௬)

௧௭. மடந்தையை வாயில் வேண்டலும் வாயி
லுடன்படுத் தலுமவ ளூட றீர்த்தலுங்
கொற்றவற் குணர்த்தலுங் குற்றேவல் செய்தலுஞ்
சென்றுமுன் வரவு செப்பலு மவன்றிற
மொன்றிநின் றுரைத்தலும் வினைமுடி புரைத்தலும்
வழியியல்பு கூறலும் வழியிடைக் கண்டன
மொழிதலு மிளையோர் *தொழிலென மொழிப.

(இச் - ம்.) இளையோர்க்குரியனவெல்லாந்தொகுத்துணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) மடந்தையை வாயில்வேண்டன்முதலாகச் சொல்லப்பட்டனவெல்லா மிளையோர்க்குரியனவாமென்றவாறு. (௧௭)

௧௮. தீதுடைப் புலவி தீர்த்தலு மவன்வரல்
காதலிக் குரைத்தலுங் கண்டோர்க் குரிய.

(இச் - ம்.) கண்டோர்க் குரியனவெல்லாந் தொகுத்துணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) புலவிதீர்த்தன்முதலாகச் சொல்லப்பட்டனவெல்லாங் கண்டோர்க்குரியனவாமென்றவாறு. (௧௮)

௧௯. இளமையும் யாக்கையும் வளமையு மேனவு
நிலையாத் தன்மை நிலையெடுத் துரைத்தலுஞ்
செலவழுங்கு வித்தலுஞ் செலவுடன் படுத்தலும்
பிறவு மெல்லா மறையோர்க் குரிய.

(இச் - ம்.) இருவகைப்பாங்கரிற் பார்ப்பனப்பாங்கர்க் குரியனவெல்லாந் தொகுத்துணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) இளமைமுதலாகச் சொல்லப்பட்டனவெல்லாம் பார்ப்பனப் பாங்கர்க்குரியனவாமென்றவாறு. (௧௯)

---

* தொழிலெனற்குரிய என்றும் பாடம்.

௪௦௦. நன்மையி னிறுத்தலுந் தீமையி னகற்றலுஞ்
சொன்னவை பிறவுஞ் சூத்திரர்க் குரிய.

(இ-ம்.) சூத்திரப்பாங்கர்க் குரியனவெல்லாந் தொகுத்துணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) நன்மையினிறுத்தன்முதலாகச் சொல்லப்பட்டனவெல்லாஞ் சூத்திரப்பாங்கர்க் குரியனவாமென்றவாறு. சொன்னவையும் பிறவுமென்றதனல் வாயில்வேண்டன்முதலாயினவுங்கொள்க. (௪௦௦)

௪௦௧. செயிர்மைக் கிழத்திபை வாயில் வேண்டலும்
வாயிலோர் வித்தலும் வயங்குதுனி தீர்த்தலும்
வினைமுடித் ததன்பின் வியன்பதி சேர்த்தென
வினைவோற் றேற்றலும் பாகற் கியல்பே.

(இச் - ம்.) பாகற்குரியனவெல்லாந் தொகுத்துணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) தலைமகளை வாயில்வேண்டன்முதலாகச் சொல்லப்பட்டனவெல்லாம் பாகற்கியல்பாமென்றவாறு. (௪௦௧)

௪௦௨. பிரிவுழி விலக்கலும் பிரிவுடன் படுத்தலும்
*பிரிவுழித் தேற்றலும் பிரிவுழி யழுங்கலும்
பிறவு முரிய விறைவனைப் பாங்கிக்கு.

(இச் - ம்.) பாங்கிக்குரியனவெல்லாந் தொகுத்துணர்த்துத னுதலிற்று.

(இ-ள்.) பிரிவுழிவிலக்கன்முதலாகச் சொல்லப்பட்டனவெல்லாம் பாங்கிக்குரியனவாமென்றவாறு. பிறவுமென்றதனல் வாயில்வேண்டன்முதலாயினவுங்கொள்க. (௪௦௨)

௪௦௩. முன்வரு நீதியு முலகியன் முறைமையும்
பின்வரும் பெற்றியும் பிறவு மெல்லாந்
தெற்றெனக் கூறல் செவிலித் தாய்க்கு
முற்ற வறிவர்க்கு முரியன வாகும்.

(இச்-ம்.) செவிலிக்கும், அறிவர்க்குமுரியனவெல்லாந் தொகுத்துணர்த்துதனுதலிற்று.

---

* பிரிந்துழித்தேற்றலுமிருந்துடனிரங்கலும் என்றும் பாடம்.

(இ-ள்.) முன்னிருந்திறமுதலாகச் சொல்லப்பட்டனவெல்லாந் தெரியச் சொல்லுதல் செவிலித்தாய்க்கும், பொருந்திய வறிவர்க்குமுரியனவாமென்றவாறு. பிறவுமென்றதனால் வாயில்வேண்டன்முதலாயினவுங்கொள்க. (௧௦௩)

௧௦௪. குடிப்பிறந் தோரை வடுப்பத் துரைத்தலு
மனைவியைப் பழித்தலும் வாடா வூடலு
ளனையவற் கழறலு மனைவிக் கமைந்த
வொழுக்கமுங் காமக் கிழத்தியர்க் குரிய.

(இச் - ம்.) காமக்கிழத்தியர்க்குரியனவெல்லாந் தொகுத்துணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) குடிப்பிறந்தோரை வடுப்படுத்துரைத்தன்முதலாகச் சொல்லப்பட்டனவெல்லாங் காமக்கிழத்தியர்க்குரியனவாமென்றவாறு. (௧௦௪)

௧௦௫. கிழவோன் றன்னையுங் கிழத்தி தன்னையு
மிகழ்தலுந் தம்மைப் புகழ்தலு நிகழ்பொருள்
காத்தலும் பரத்தையர் கடனென மொழிப.

(இச் - ம்.) பரத்தையர்க்குரியனவெல்லாந் தொகுத்துணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) தலைமகனையுந் தலைமகளையு மிகழ்தன்முதலாகச் சொல்லப்பட்டனவெல்லாம் பரத்தையர் முறைமையென்றவாறு. (௧௦௫)

௧௦௬. பரத்தையர் காதற் பரத்தையைப் புகழ்தலுந்
தம்மை யிகழ்தலுந் தம்முளுங் கூறுப.

(இச் - ம்.) பரத்தையர்க்குரியதோர் வேறுபாடுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) காதற்பரத்தையைப்புகழ்தலுந், தங்களையிகழ்தலுந் தம்முளேயுங் கூறுவர் பரத்தையரென்றவாறு. (௧௦௬)

௧௦௭. இளையர் கிழவோற் கிரவும் பகலுங்
களைத லில்லாக் கவசம் போல்வார்.

(இச் - ம்.) இளையரதுரிமை யுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) இளையராவார்தலைமகற்கு நீங்காக்கவசம்போலுந் தன்மையரிரவும்பகலுமென்றவாறு. (௧௦௭)

கoஅ. இருவகைப் பாங்கரு மொருபெருங் குரிசி
லின்னுயிர்த் துணையா யிருபெருங் குரவரு
தன்னை யளித்த தகைமை யோரே.

(இச் - ம்.) பாங்கரதுரிமை யுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) பார்ப்பனப்பாங்கருஞ் சூத்திரப்பாங்கருமென்னு மிருவருந் தலைமகற்கினிய வுயிர்த்துணையாக வவன்றாயுந்தந்தையுமவனை யடைக்கலமாகக் கொடுக்கப்பட்ட தன்மையோரென்றவாறு. (கoஅ)

ககூ. தோழி செவிலி மகளாய்ச் சூழ்தலோ
டொத்துணை யாகி யசாத்தணி வித்தற்
குரிய காதன் மருவிய துணையே.

(இச் - ம்.) தோழியதுரிமையுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) தோழியென்பாள் செவிலிக்குமகளாய் நன்மையுந்தீமையுமாராய்தலுடனே தலைமகட்குசாத்துணையா யவளது வருத்தந்தீர்த்தற்குரிய வன்புபொருந்திய துணையாமென்றவாறு. (கoகூ)

ககo. செவிலி நற்றாய் தோழி யாகி
யவல நீக்கி யறிவுமா சாரமுங்
கொளுத்தித் தலைவியை வளர்த்த தாயே.

(இச் - ம்.) செவிலியதுரிமையுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) செவிலியென்பாள் தலைமகளுடைய நற்றாய்க்குத்தோழியாகித் தலைமகட்குவருந் துக்கங்களைந்து நல்லறிவுமாசாரமுங்கொளுத்தித் தலைமகளை வளர்த்த தாயாமென்றவாறு. (ககo)

ககக. அறிவர் கிழவோன் கிழத்தியென் றிருவர்க்கு
முறுதி மொழிந்த வுயர்பெருங் குரவர்.

(இச் - ம்.) அறிவரதுரிமையுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) அறிவரென்பார் தலைமகற்குந்தலைமகட்கு முறுதியைப்பயக்குமுபதேசங்களைச்சொல்லும் மேம்பட்ட குருக்களென்றவாறு. (ககக)

கக௨. ஒருவன் றனக்கே யுரிமை பூண்டு
வருகுலப் பாத்தையர் மகளி ராகிக்
காமக்கு வரைந்தோர் காமக் கிழத்தியர்.

(இச் - ம்.) காமக்கிழத்தியாதரிமையுணர்த்துதலுதலிற்று.

(இ-ள்.) காமக்கிழத்தியரென்பார் சேரிப்பாத்தையர்போலப் பலர்க்குமுரியாரன்றி யொருவற்கேயுரிமைபூண்டுவரும் குலப்பாத்தையர்மகளிராய்க் காமங்காரணமாகத் தலைமகனால் வரைந்துகொள்ளப்பட்டாரென்றவாறு. (ககஉ)

ககங. யாரையு நயவா வியல்பிற் சிறந்த
சேரிப் பாத்தையர் மகளி ராகிக்
காதலிற் புணர்வோர் காதற் பாத்தையர்

(இச் - ம்.) காதற்பாத்தையாதரிமை யுணர்த்துதலுதலிற்று.

(இ-ள்.) காதற்பாத்தையரென்போர் யாவரையும்விரும்பாத வியல்பினான் மிக்க சேரிப்பாத்தையருடைய மகளிராய்த்தம் மன்பினாற் றலைமகனோடுகூடுவோரென்றவாறு. (ககங)

ககச. அவருளும் வரைதற் குரியோ ருளரே.

(இச் - ம்.) காதற்பாத்தையர்க்குரியதோர் சிறப்புவிதி யுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) காதற்பாத்தையருள்ளுமுளர் தலைமகனால் வரைந்து கோடற்குரியரென்றவாறு. (ககச)

ககரு. மக்களொடு மகிழ்ந்து மனையறங் காத்து
மிக்க காம வேட்கை தீர்ந்துழித்
தலைவனுந் தலைவியுந் தம்பதி நீங்கித்
தொலைவில் சுற்றமொடு துறவறங் காப்ப.

(இச் - ம்.) தலைவனுந்தலைவியுந் துறவறங்காக்குங்கால முணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) மக்களொடுகூடிமகிழ்ந் தில்லறத்தினைக்காத்துத் தமக்குப்பெருகிய காமவேட்கையெல்லாந் தீர்ந்தகாலத்துத் தலைமகனுந்தலைமகளுந் தம்மூர் நீங்கி வனத்தின்கட்சென்றெல்லையில்லாச் சுற்றத்தோடுதுறவறத்தினைக்காப்பாரென்றவாறு. (ககரு)

முதலாவது அகத்திணையியல் முற்றிற்று.

# இரண்டாவது களவியல்.

௧௧௯. உளமலி காதற் களவெனப் படுவ
தொருநான்கு வேதத் திருநான்கு மன்றலுள்
யாழோர் கூட்டத் தியல்பின தென்ப.

என்பது சூத்திரம். இவ்வோத் தென்னபெயர்த்தோவெனின்? களவுணர்த்தினமையாற் களவியலென்னும் பெயர்த்து. இதனுளித்தலைச்சூத்திரமென்னுதலிற்றோவெனின்? களவுகற்பென்னுங் கைகோளிரண்டனுட் களவென்னுங் கைகோளின திலக்கணமுணர்த்துதனுதலிற்று.

(இ - ள்.) உளமலிதற்குக்காரணமாகிய வன்பினையுடைய களவென்று சொல்லப்படுவது, நான்காகிய வேதத்துட்சொல்லப்பட்ட வெட்டாகியமணத்துட் காந்தருவமணத்தோடொத்த வியல்பினையுடையதென்று சொல்லுவர் புலவரென்றவாறு.

என்னை? "இன்பமும்பொருளு மறனுமென்றாங் - கன்போடுபுணர்ந்த வைந்திணைமருங்கிற்-காமக்கூட்டங்காணுங்காலை - மறையோர்தேஎத்து மன்ற லெட்டினுட் - டுறையமை நல்யாழ்த்துணைமையோ ரியல்பே" என்றாராகலின். வேதம் நான்காவன, இருக்குமுதலாயின. மன்றலெட்டாவன, பிரமம், பிராசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், ஆசுரம், இராக்கதம், பைசாசம் எனவிவை. என்னை? "அறநிலையொப்பே பொருள்கோடெய்வம் - யாழோர் கூட்ட மரும்பொருள் வினையே-யிராக்கதம் பேய்நிலை யென்றிக்கூறிய - மறையோர் மன்றலெட்டிவையவற்றுட்-டுறையமைநல்யாழ்த்துணைமையோ ரியல்பிற் றன்-பொருண்மையென்மனார் புலமையோரே" என்றாராகலின். அவற்றுட் பிரமமாவது, பிரமசாரியாய்த் தக்கானுமாயிருப்பானுக்குக்கன்னியையலங்கரித்துத்தீமுன்னர்க்கொடுப்பது. பிராசாபத்தியமாவது, தலைமகன்குரவர்வேண்டத் தலைமகள் குரவருமுடன்பட்டுத் தலைமகளையலங்கரித்துத்தீமுன்னர்க் கொடுப்பது. ஆரிடமாவது, ஒன்றானுமிரண்டானு மாவுமானேறும் வாங்கிக் கொண்டு கன்னியையலங்கரித்துத் தீமுன்னர்க்கொடுப்பது. தெய்வமாவது, வேள்வியாசிரியனுக்குக் கன்னியையலங்கரித்துத் தீமுன்னர்க் கொடுப்பது. காந்தருவமாவது, கொடுப்பாருங்கேட்பாருமின்றித் தலைமகனுந்தலைமகளுந் தனியிடத்தெதிர்ப்பட்டுத் தாமேகூடுவது. ஆசுரமாவது, தலைமகட்குப்பொன்பூட்டிச் சுற்றத்தார்க்கும் வேண்டுவன கொடுத்துக்கொள்வது. இராக்கதமாவது, தலைமகடன்னினுந்தமரினும் பெறாதுவலிதிற்கொள்வது. பைசாசமாவது, துயின்

றோண்மாட்டுங் களித்தோண்மாட்டுஞ்சென்று சேர்வது. இவற்றுள், ஆசுர முதலாகிய மூன்றுங்கைக்கிளைக்குரியவாம். தெய்வமீறாகிய நான்கும் பெருந்திணைக்குரியவாம். என்னை? "முன்னையமூன்றுங் கைக்கிளைக்குறிப்பே-பின்னைய நான்கும் பெருந்திணைபெறுமே" (தொல்-பொரு-௧௦௫) என்றாராகலின். (௭)

௧௧௮. காட்சி யையந் துணிவுகுறிப் பறிவென
மாட்சி நான்கு வகைத்தே கைக்கிளை.

(இ-ம்.) மேற்சொல்லப்பட்ட வேழுதிணையுள்ளு முதலாகிய கைக்கிளைத்திணையின் பாகுபாடுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) கைக்கிளையாவது, காட்சிமுதலாகக்குறிப்பறிதலீறாகச் சொல்லப்பட்ட நான்குவகையினையுடைத்தாமென்றவாறு. (௨)

௧௧௯. புணர்ப்பதூஉம் பிரிப்பது மாகிய பால்களுட்
புணர்க்கும் பாலுட் பொருவிறந் தொத்த
கறைவேற் காளையுங் கன்னியுங் காண்ப
விறையோ னுயரினுங் குறைவின் றென்மனார்.

(இ-ம்.) நிறுத்தமுறையானே காட்சிக்கிலக்கணமுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) முற்பிறப்பினுங்காமநுகர்ந்தாரிருவரையு மறுபிறப்பினுங்கூட்டுவதும் பிரிப்பதுமாகிய நல்வினை தீவினையென்னு மிரண்டனு ணல்வினைவயத்தாற் றனியிடத்தெதிர்ப்படுவர், குலத்தானுஞ்செல்வத்தானுமறிவானும் பிறவாற்றானுந் தம்மோடொத்தாருமிக்காருமின்றித் தம்மிற்றாமே யொத்த தலைமகனுந்தலைமகளும். அவருட் டலைமகனுயர்ந்தனனாயினுங் குற்றமின்றென்றுசொல்லுவர் புலவரென்றவாறு. எனவே, தலைமகளுயர்தல் குற்றமென்பதாம். என்னை? "ஒன்றேவேறேயென்றிருபால்வயி - னொன்றியுயர்ந்தபாலதாணையி - னொத்த கிழவனுங்கிழத்தியுங்காண்ப-மிக்கோனாயினுங்கடிவரையின்றே" (தொல்-பொரு-௯௨) என்றாராகலின். ஈண்டுக் *காளையென்றது பருவங்குறித்துவந்ததோராகுபெயரெனக்கொள்க. அதற்குச் செய்யுள்:- "புயலேசுமந்துபிறையேயணிந்து பொருவிலுடன், கயலேமணந்தமலர்த்தொருதப்பகத்தி, னயலேபசும்பொற்கொடிநின்றதால்வெள்ளையன்னஞ்செந்நெல், வயலேதடம்பொய்கைசூழ்தஞ்சைவாணன்மலயத்திலே" (தஞ்சைவாணன்கோவை-௧.) எனவும், "கருந்தடங்கண்

* இதனைப் பருவங்குறித்துவருவதோரிருதிணையான்பாற் பொதுப்பெயரென்பர் சேனாவரையர்.

கண்டாகச்செவ்வாய்தளிரா, வரும்பியமென்முலைதோந்தாய் - பெரும்பணைத் தோட், பெண்டகைப்பொலிந்தபூங்கொடி, கண்டேன்காண்டற்களித்தமென் கண்ணே" (தெ-கைக்கிளை-ந.) எனவும் வரும். (க)

கஉ0 மடமா னோக்கி வடிவுங் கண்ட
விடமுஞ் சிறந்துழி யெய்துவ தையம்.

(இச் - ம்.) ஐயநிகழுமிட முணர்த்துதனுதலிற்று.

(இ-ள்) தலைமகள்வடிவும் அவளைத்தான்கண்டவிடமுஞ் சிறப்புடைய வாயகாலத்துத் தலைமகன்பாலையநிகழுமென்றவாறு. எனவே, அவை சிறப்புடையவல்லாதவழைத் தையநிகழாதென்பதாம். என்னை? "சிறந்துழியையஞ் சிறந்ததென்ப, விழிந்துழியிழிபேசுட்டலான" (தொல்-பொரு-கஅ) என்றாராக லின்; அதற்குச்செய்யுள்:— "பாரணங்கோதிருப்பாற்கடலீன்றபங்கேருகத்தி, னோரணங்கோவெற்புறையணங்கோவுயர்பாவலர்க்கு, வாரணங்கோடிதருந்தஞ் சைவாணன்றென்மாறைநலையை, நீரணங்கோநெஞ்சமேதனியேயிங்கு நின்ற வரே" (தஞ்சை-உ.) எனவும், "அணங்குகொல்ஆய்மயில்கொல்லோகனங்குழை மாதர்கொன்மாலுமென்னெஞ்சு" (குற-கO அக.) எனவும், "தாமரைமேல்வைகிய தையல்கொலாழ் † தளிர்க், காமருபூங்கணையான்காதலிகொ - றேமொழி, மைய மருண்கண்மடந்தைக, ணையமொழியாதாழுமென்னெஞ்சே" (புறப்-வெ-கைக் கிளை-உ.) எனவும்வரும். (உ)

கஉக. எழுதிய வல்லியுந் தொழில்புனை கலனும்
வாடிய மலருங் கூடிய வண்டு
நடைபயி லடியும் புடைபெயர் கண்ணு
மச்சமும் பிறவு மவன்பா னிகழுங்
கச்சமி லையங் கடிவன வாகும்.

(இச் - ம்.) துணிவுநிகழ்தற்கேதுவாவன விவையென்பதுணர்த்துதனுத லிற்று.

(இ-ள்.) எழுதியவல்லிமுதலாக வச்சமீறாகச்சொல்லப்பட்டவேழும் அவைபோல்வனபிறவும் தலைமகன்மாட்டுநிகழாநின்ற வென்னிலாவையுங்களைப் போக்குவனவாமென்றவாறு. பிறவுமென்றதனால் நிழல் வியர்வு முதலாயினவும்

---

இம்மேற்கோட் குறிப்புரை இந்நூலாசிரியர் கருத்துக்கிணங்கவில்லை வேறுரையுளதுபோலும்.

† தளிர்ந்-காமருவும்வானோர்கள் காதலிகொல்" என்பது, புறப்பொருள் வெண்பாமாலை உரையாசிரியர் பாடம்.

கொள்க. என்னை? "வண்டேயிழையேவள்ளிபூவே, கண்ணேயலமரலிமைப்பே யச்சமென், றன்னவைபிறவு *மாங்கணிகழ்நின்ற, வையங்களையுங்கருவியென்ப" (தொல்-பொரு-௪.) என்றாராகலின். அதற்குச்செய்யுள்:— "மையார்குவளை வயற்றஞ்சைவாணனைவாழ்த்தலர்போல், கையாதொழிமதிநன்னெஞ்சமேயினி நம்மினூந்தன், செய்யார்கருங்குழற்செம்மலர்வாடினநீலவுண்கண், கையாலமைப் பவர்போலிமையாநிற்குங்காரிகைக்கே" (தஞ்சை-௩.) எனவும், "திருநுதல்வே ரரும்புந்தேங்கோதைவாடு, மிருநிலஞ்சேவடியுந்தோயு—மரிபரந்த, போகிதழுண் கணுமிமைக்கு, மாகுமற்றிவளகலிடத்தணங்கே" (வெ-கைக்கிளை-௩.) எனவும் வரும். (௫)

௧௨௨. அரிவை நாட்ட மகத்துநிகழ் வேட்கை
தெரிய வுணர்த்துங் குரிசிற் கென்ப.

(இ-ம்.) குறிப்பறிதற்கேதுவுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) தலைமகளுள்ளத்துநிகழாநின்ற வேட்கையினைத் தலைமகற்கு விளங்கவறிவிக்குமவள்கண்ணென்றவாறு. என்னை? "நாட்டமிரண்டுமறிவுடம் படுத்தற்குக், கூட்டியுரைக்குங்குறிப்புரையாகும்" (தொல்-பொரு-௧௬) என்றா ராகலின். அதற்குச்செய்யுள்:— "மண்ணிற்சிறந்தபுகழ்த்தஞ்சைவாணன்மலய வெற்பிற், பெண்ணிற்சிறந்தவிப்பேதைதன்பார்வைபெருவினையே, னெண் ணிற்சிறந்தவிருந்துயர்நோய்தனக்கின்மருந்தாய்க், கண்ணிற்சிறந்தவுறுப்பில்லை யாவதுங்காட்டியதே" (தஞ்சை-௪.) எனவும், "இருநோக்கிவளுண்கணுள்ள தொருநோக்கு, நோய்நோக்கொன்றந்நோய்மருந்து" (குற-௧0௯௧) எனவும் வரும். (௬)

௧௨௩. இயற்கைப் புணர்ச்சி வன்புறை தெளிவே
பிரிவுழி மகிழ்ச்சி பிரிவுழிக் கலங்க
லிடந்தலைப் பாடு பாங்கற் கூட்டம்
பாங்கிமதி யுடம்பாடு பாங்கியிற் கூட்டம்
பாங்கமை பகற்குறி பகற்குறி யிடையீ
டிரவுக் குறியே யிரவுக் குறி யிடையீடு
வரைவு வேட்கை வரைவு கடாத
லொருவழித் தணத்தல் வரைவிடை வைத்துப்

---

* ஆங்கவணிகழ நின்றவைகளையுங்கருவியென்." என்பது தொல்காப்பிய உரையாசிரியர் பாடம்.

பொருள்வயிற் பிரிதலென் றோருபதி னேழுங்
களவிற் குரிய கிளவித் தொகையே.

(இச் - ம்.) களவிற்குரிய கிளவித்தொகையுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) இயற்கைப்புணர்ச்சிமுதலாக வரைவிடைவைத்துப் பொருள் வயிற்பிரிதலீறாகச்சொல்லப்பட்ட பதினேழுங் களவென்னுங் கைகோளிற்குரிய கிளவியின்றொகையாமென்றவாறு. (எ)

௬௨௪. தெய்வம் புணர்ப்பச் சிந்தை
யெய்துங் கிழத்தியை யிறையோ னென்ப.

(இச் - ம்.) இயற்கைப்புணர்ச்சியதிலக்கண முணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) தெய்வங்கூட்டத்தன்மனம்வேறாய்த் தலைமகளைக்கூடுந் தலைமக னென்றுசொல்லுவர் புலவரென்றவாறு. (அ)

௬௨௫. கலந்துழி மகிழ்தனு நலம்பா ராட்டலு
மேற்புற வணிதலு மென்னுமிம் மூன்றும்
போற்றிய தெய்வப் புணர்ச்சியின் விரியே.

(இச் - ம்.) இயற்கைப்புணர்ச்சியின் பாகுபாடாகிய விரண்டினுண் முன்னையதாகிய தெய்வப்புணர்ச்சியின் விரியுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) கலந்துழிமகிழ்தலு நலம்பாராட்டலு மேற்புறவணிதலுமென்னு மிம்மூன்றுகிளவியு மகத்திணையியலுட்போற்றப்பட்ட தெய்வப்புணர்ச்சியின் விரியாமென்றவாறு. (௯)

௬௨௬. வேட்கை யுணர்த்தன் மறுத்த லுடன்படல்
கூட்டமென் றிறைவயிற் கூட்டநால் வகைத்தே

(இச் - ம்.) தலைமகளாற்புணரும் புணர்ச்சியின்வகையுணர்த்து தனுத லிற்று.

(இ-ள்.) வேட்கையுணர்த்தன்முதலாகக் கூட்டமீறாகச் சொல்லப்பட்ட நான்குவகையினையுடைத்து தலைமகளாற்புணரும் புணர்ச்சியென்றவாறு. (௧௦)

௬௨௭ இரந்துபின் னிற்றற் கெண்ணலு மிரந்து
பின்னிலை நிற்றலு முன்னிலை யாக்கலு

மெய்தொட்டுப் பயிறலும் பொய்பா ராட்டலு
மிடம்பெற் றுத் தழாஅலும் வழிபாடு மறுத்தலு
மிடையூறு கிளத்தலு நீடுநினைந் திரங்கலு
மறுத்தெதிர் கோடலும் வறிதுநகை தோற்றலு
முறுவற் குறிப் புணர்தலு முயங்குத லுறுத்தலும்
புணர்ச்சியின் மகிழ்தலும் புகழ்தலும் பிறவு
முணர்த்திய தலைவியிற் புணர்ச்சியின் விரியே

(இச்-ம்.) தலைமகனாற்புணரும் புணர்ச்சியின்விரியுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) இரந்துபின்னிற்றற்கெண்ணன்முதலாகப் புகழ்தலீறாகச் சொல்லப்பட்ட பதினைந்தும் பிறவு மேற்சொல்லப்பட்ட தலைமகனாற்புணரும் புணர்ச்சியின்விரியாமென்றவாறு. அவற்றுள், இரந்துபின்னிற்றற்கெண்ணற்குச்செய்யுள்:—"தேங்கியகாதரவாதாஞ்செப்பித்தண்செப்பினைபோல், வீங்கிய மாமுலைமேவுதும்யாம்விசயக்கொடிமேல், வாங்கியசாபமுயர்த்தவன் போர்வென்றவாணன்வையர், தாங்கியமாலனையான்றஞ்சைசூழ்வரைத்தாழ்குழற்கே" (தஞ்சை-௯.) எனவும், "மருந்திற்றீராதுமணியினுகா, தருந்தவமுயற்சியினகற்றலுமரிதே, தான்செய்நோய்க்குத்தான்மருந்தாகிய, தேனிமிர்நறவின்றேறல் போல, நீதரவந்தநிறையழிதுயர, மாடுகொடிமருங்குனின்னருளினல்லது, பிறிதிற்றீராதென்பதுபின்னின், றறியக்கூறுதுமெழுமோநெஞ்சே, நாடுவிளங் கொண்புகழ்நடுதல்வேண்டித்தன், னொடுமழைத்தடக்கையறத்துறைநிறுத்த, பொற்கைநறுந்தார்ப்புனைதேர்ப்பாண்டியன், கொற்கையம்பெருந்துறைக்குனிதிரைதொகுத்த, விளங்குமுத்துறைக்கும்வெண்பற், பன்மாண்சாயற்பரதவர் மகட்கே" (இ-வி-உதாரணம்) எனவும்வரும்.

இரந்துபின்னிலைநிற்றற்குச்செய்யுள்:—"செறிவேழவெஞ்சிலைவேடஞ்சைவாணன்றிருந்தலர்மே, லெறிவேலைவென்றகண்ணென்னுயிர்க்கேவியிருண்டறல் போல், நெறிவேயலங்கன்முடித்தலைசாய்த்திங்ஙனிற்பதுதா, னறிவேயறிந்தவனக்கலர்மாளிகையாரணங்கே" (தஞ்சை-க.) எனவும், "ஓடுந்திமில்கொண்டுயிர் கொல்வர்நின்னையர், கோடும்புருவத்துயிர்கொல்வைமன்னீயும், பீடும்பிறரெவ்வம் பாராய்முலைசுமந்து, வாடுஞ்சிறுமென்மருங்கிழவல்கண்டாய்" (சில-கானல்-௧௧) எனவும்வரும்.

முன்னிலையாக்கற்குச் செய்யுள்:—"வழுதியர்காமம்வளர்க்கின்றவாணன் றென்மாறைநவண்டு, கொழுதியலார்செய்குழன்மடவீர்நுங்குற்றேவல்செய்து, தொழுதியலாயத்தொகுதியொடாடிச்சுனைகுடையா, தெழுதியபாவையைப்பொ

னின்றவாறென்னியம்புதியே" (தஞ்சை-எ.) எனவும், "ஒள்ளிழைமகளிரோ டோரையுமாடாய், வள்ளிதழ்நெய்தற்றொடலையும்புனையாய், விரிபூங்கானலொரு சிறைநின்றோய், யாரையோநிற்றொழுதனம்வினவுதும், கண்டோர்தண்டாநலத் தைதெண்டிரைப், பெருங்கடற்பரப்பிணமர்ந்துறையணங்கே, யிருங்கழிமருங்கி னிலைபெற்றனையோ, சொல்லுநீமடந்தையென்றனனெனதெதிர், முன்ன யிற்றுமுறுவலுந்திறந்தனள், பல்லிதழுண்கணும்பார்த்தவாற்பனியே" (நற்றி-கடுச) எனவும்வரும்.

மெய்தொட்டுப்பயிறற்குச்செய்யுள்:—"நல்லார்விழிபோலிருந்தமளியெனு மைம்பெய்து, மல்லார்குழலிலமர்ந்திருந்தாலமாசாரையெல்ல, வல்லான்வரோ தயன்வாணன்றென்மாறைமதுகரங்கா, ணில்லாதிடையுமக்கோபழிசால நிலைநிற் குமே" (தஞ்சை அ.) எனவும், "பிறைநுதலாள்கொங்கைப்பெருக்கத்தாற்றேய்ந்து, குறையுமிடைகண்டுங்கொண்டற்-பொறையளகத், தண்டேனசையாற்சனாரதன் றொண்டிபின்வாய், வண்டேமகிழ்ந்தேறல்வந்து" (...) எனவும்வரும்.

பொய்பாராட்டற்குச்செய்யுள்:-"பருங்தொன்றுகூரிலைவேற்படைவாணன் பரிமளப்பூஞ், செருந்தொன்றுசோலைத்தென்மாறையன்னீர்செழுந்திங்களுங் கண், முருந்தொன்றுசோதிமுகங்கண்டொணிமுயன்மறுத்தீர், மருந்தொன்றுநா டியன்றேவடமேருவலங்கொள்வதே" (தஞ்சை-க.) எனவும், "மாதர்முகம்போ லொளிவிடவல்லையேற், காதலைவாழிமதி" (குற-ககக௨) எனவும்வரும்.

இடம்பெற்றுத்தழாற்குச் செய்யுள்:—படம்பட்டவாளரவல்குலிலேதனை பட்டநெஞ்சம், விடம்பட்டவாள்பட்டவேதனைநீரவிண்டோய்பொழிலுந், தடம் பட்டவாவியுஞ்சூழ்தஞ்சைவாணன்றமிழ்க்கிரிநா, மிடம்பட்டவாரமூலைத்தடந் தோய்தற்கிடமிதுவே" (தஞ்சை-௫௦.) எனவரும்.

வழிபாடுமறுத்தற்குச்செய்யுள்:-தேறுதசெவ்வென்றவாணன்றென்மாறை ச்செந்தேனருவி' யூறுதகாலத்துமூழுதண்சாரலொதுக்கிடந்தந், தவறுதசோகமு மாற்றுதல்வேண்டுமசோகமெய்தி, மாறுதண்ணளிகூர்மலர் வாண்முகமாத வியே" (தஞ்சை-கக.) எனவரும்.

இடையூறுகிளத்தற்குச்செய்யுள்:— "சிதையாமுளரித்திருமாளிகையிற் சிறந்ததென்றெ, னிதயாரவிந்தத்தினிதிருப்பீருகோட்டொருகை, மதயானை வாணன்வருந்தஞ்சைசூழ்வையைகாட்டுறைவோர், புதையார்தனமென்பதோமதர் வேற்கண்புதைத்ததுவே" (தஞ்சை-க௨.) எனவும், "சொல்லிற்சொல்லெதிர்கொள் ளாயாழின், திருமுகமிறைஞ்சிநாணுதிகதுமெனக், காமஞ்கைமிகிற்றுஞ்சு

லெளிதோ, சொலிக்கெழிரும்புறாவிச்சக்குத்திப், புலிவிளையாடியபுலவுநாறவேழத்தின், றலைமருப்பேய்ப்பக்கடைமணிசிவந்தநின், கண்போகதுவவல்லாண்ணு, நாண்டலை * மதிலாரவுமுரண்கொண், டோம்பரண்கடந்தவடுவாழ்செழியன், பெரும்பெயர்க்கூடலன்னநின், கரும்புடைத்தோளுமுடையவாலணங்கே" (நற்-ருக,) எனவும் வரும்.

நீடுநினைந்திரங்கற்குச்செய்யுள்:— "தமிழ்தங்கியதஞ்சைகாவலன்வாணன் றடஞ்சிலம்பிற், குமிழ்தங்கியமதிக்கொம்பரன்னீர்குளிர்வெண்ணிலவூ, டுமிழ்தண்டாளப்பவளச்செவ்கேழ்வண்ணத்துள்ளிருக்கு, மமிழ்தந்தருவதென்றோபெருவேட்கையென்னாருயிர்க்கே" (தஞ்சை-கங.) எனவும், "நீண்டவுவிலையவுந் தொல்லோமாண்ட, வில்லுடையிளையர் ‡ கல்விடுபெடுத்த, கனக்கலைக்கானத் தினந்தலைப்பிரிந்த, புன்கண்மடமானேர்படத்தலைந்த, சிலைமாண்கடுவிசைக் கலைநிறத்தழுத்திக், குருதியொடுபறித்தசெங்கோல்வாளி, மாறுகொண்டன்ன வுண்கணு, ஞ்சிருங்கூந்தற்கொடிச்சிதோளே" (குறு-உஎஉ.) எனவும் வரும்.

மறுத்தெதிர்கோடற்குச்செய்யுள்:— "கறையாரிலங்கிலைவேலன்பர்காமக் கடற்கெதிர்ந்த, நிறையாம்வரம்பினிநிற்பதன்றானிறைநீருலகை, மறையாமல் வன்கலிமாற்றியவாணன்றென்மாறையினும், பொறையார்தவஞ்செய்திலேநெஞ்சமேயென்புகல்வதுவே" (தஞ்சை-கச.) எனவும், "பண்டொம், வேறல்லமென்பதொன்றுண்டாலவனொடு, மாறுண்டோநெஞ்சேநமக்கு" (கலி-குறி-உரு.) எனவும் வரும்.

வறிதுநகைதோற்றற்குச்செய்யுள்:- "எறிதேனலம்புஞ்சிலம்பினெப்போதுமிரந்திவன்பின், வெறிதேதிரிந்துமெலிந்தனநாமுள்ளமெல்லியற்குப், பிறிதேதொலென்னும்பெருந்தகைதேறப்பெரிதுயிர்த்து, வறிதேமுறுவல்செய்தாடஞ்சைவாணன்வரையணங்கே" (தஞ்சை-கரு.) எனவும், "அன்னையோ, மன்றத்துக்கண்டாங்கேசான்றார்மகளிரை, யின்றியமையலனென்றின்னவுஞ்சொல்லுவாய்" (கலி-முல்-கம.) எனவும் வரும்,

முறுவற்குறிப்புணர்தற்குச்செய்யுள்:- "வின்மலைவேலன்னநான்னுதல்வாட்கண்ணிவேட்கையென்னு. னென்மலைவேனென்னுமென்னுயிர்தாங்குமெதிர்ந்தவொன்னார், மன்மலைவேழந்திறைகொண்டசேய்தஞ்சைவாணன்மஞ்சார், தென்மலைவெய்யகரும்பெருந்தோளிசிறுநகையே" (தஞ்சை-கசு.) எனவும், "முகைமொக்குளுள்ளதுநாற்றம்போற்பேதை, நகைமொக்குளுள்ளதொன்றுண்டு" (குறள்-கஉஎச) எனவும் வரும்.

---

* மதிலாரவும் என்பது பிரதிபேதம்.

‡ கல்விடுபெடுத்த என்பது பிரதிபேதம்.

முயங்குதலுறுத்தற்குச்செய்யுள்:—"வானக்கதிரவன்மீண்ணகமாலைதமணைந்த தன்றே, நானக்குழலியையுகாணின்றுபெற்றதுகாவலர்க்குத், தானக்களிறுதரும் புயல்வாணன்றமிழ்த்தஞ்சைசூழ், கானக்கடிவரைவாய்விரைநாண்மலர்க்காவகத் தே" (தஞ்சை-கஎ.) எனவும், "கோடலெதிர்முகைப்பசுவீமுல்லை, நா றி த ழ்க் குவளையோடிடைப்படவிரைஇ, யைதுதொடைமாண்டகோதைபோல, நறியநல் லோண்மேனி, முறியினும்வாய்வதுமுயங்கற்கினிதே" (குறு-சுஉ.) எனவும் வரும்.

புணர்ச்சியின்மகிழ்தற்குச்செய்யுள்:— "மலைநாடுகொண்டவழுதிகண்போல் பவன்வாணனெண்ணெண், கலைநாடுதஞ்சையர்காவலன்மால் வ ரை க் க ன் னி பொன்னுண், முலைநாமுயன்றமுயங்கினமான்முயன்றாலினியைர், தலைநாகனன் மணியும்பெறலாமித்தரணியிலே" (தஞ்சை-கஅ.) எனவும், "கண்டுகேட்டுண் டுயிர்த்துற்றறியுமைம்புலனு, மொண்டொடிகண்ணேயுள"(குற-கக0க.) எனவும் வரும்.

புகழ்தற்குச்செய்யுள்:— "இரண்மாமரகதச்செய்குன்றுகாளென்றுஞ்செவ் வ ண நீ ர், முரண்மாதவங்கண்முயன்றுசெய்தாலுமுளரிமங்கை, சரண்மாறைவா ணன்றமிழ்த்தஞ்சைநாட்டென்றனியுயிர்க்கோ, ரரண்மானனையகண்ணாள்கொங் கைபோறலரிதுமக்கே" (தஞ்சை-ககூ.) என வரும்.

இவற்றுளிரந்து பின்னிற்றற்கென்னன்முதலாகநீடு நினைந்திரங்கலீறாகச் சொல்லப்பட்டவொன்பதனுள், வ ழி பா டு மறுத்தலொன்றுமொழித்தல்லாதன எட்டும் வேட்கையுணர்த்தற்குரியவாம். வழிபாடுமறுத்தலாயவொன்றுந் தலை மகண்மறுத்தற்குரித்தாம். மறுத்தெதிர்கோடலும் வறிதுநகைதோற்றலுமென் னுமிரண்டுந் தலைமகளுடன்பாட்டிற்குரியவாம். முறுவற்குறிப்புணர்தலு முயங் குதலுறுத்தலும் தலைமகனுடன்பாட்டிற்குரியவாம். பு ண ர் ச் சி யி ன் மகிழ்தலும் புகழ்தலுமென்னுமிரண்டுந் தலைமகன்கூட்டத்திற்குரியவாம். பிறவுமென்றதனு லணிதலுங் கொள்ளப்படும். இலக்கியமேலே காட்டப்படும், (கக)

கஉ-அ. ஐயந் தீர்த்தல் பிரிவறி வுறுத்தலென்
றெய்திய வன்புறை யிருவகைத் தாகும்.

(இச் - ம்.) வன்புறையின்வகையுணர்த்துதலுதலிற்று.

(இ-ள்.) மேற்சொல்லப்பட்ட வன்புறையையந்தீர்த்தலும் பிரிவறிவுறுத் தலுமெனவிரண்டுகூற்றினையுடைத்தாமென்றவாறு. இக்கிளவி "நாற்றத்தோற்ற" (தொல். பொரு-கஉஉ.) மென்பதனுற்கொள்ளப்படும், (கஉ)

உஉ. அணிந்துழி நாணிய துணர்ந்து தெளிவித்தலும்
பெருநயப் புரைத்தலுந் தெய்வத்திறம் பேசலும்
பிரியே னென்றலும் பிரிந்துவரு கென்றலு
மிடமணித் தென்றலு மென்றிவை யாறு
மடனறத் தெரிந்த வன்புறை விரியே.

(இச் - ம்.) வன்புறையின்விரியுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) அணிந்துழிநாணியதுணர்ந்துதெளிவித்தன்முதலாக விடமணித்தென்றலீருகச்சொல்லப்பட்டவாறுந் தலைமகன்றலைமகளது அறிவின்மைநீங்கவாராய்ந்துசொன்ன வன்புறையின்விரியாமென்றவாறு. வன்புறுத்தலான் வன்புறையென்று பெயராயிற்று. அவற்றுள், அணிந்துழிநாணியதுணர்ந்து தெளிவித்தற்குச்செய்யுள் :—“ நாவியுங்காரகிலாவியுந்தோய்குழனுணியஞ்சேல், வாவியுஞ்சோலையுஞ் சூழ்தஞ்சைவாணன்றென்மாறைவயற், காவியுஞ்சேலுங் கமலமுங்காட்டுநின்கண்மலரு, மாவியும்போலினியாரணியாகவணிந்தனனே ” (தஞ்சை-உ0.) எனவரும். அணிந்துழிநாணியதுணர்ந்துதெளிவித்தற்குவிதி யாதோவெனின்; “முன்புற்றறியாமுதற்புணர்ச்சிமொய்குழலை, யின்புற்றணிந்த வியலணியும்-வன்பணியு, நாணேனுந்தொலையணியென்னநன்னுதலை......... ......னந்து” என்னும் பரிபாட்டினுட்செய்யுளாமெனக்கொள்க.

பெருநயப்புரைத்தற்குச்செய்யுள்:—“மன்னுலகத்துமன்னியசீர்த்தஞ்சை வாணன்வெற்பி, லென்னுவியன்னவிவளிடைமேலிணைகொண்டெழுந்த, பொன்னுணணிகொங்கைபோலவண்டருங்கள் பொய்கையுண்டோ, நன்னுளரும் பொருதாளிரண்டனுநளினங்களே” (தஞ்சை-உக.)எனவும், “கொங்குதேர் வாழ்க்கையஞ்சிறைத்தும்பி, காமஞ்செப்பாது கண்டதுமொழிமோ, பயிலியது கெழீஇயநட்பின்மயிலியற், செறிஎயிற்றரிவைகூந்தலி, னறியவுமுளவோநீ யறியும்பூவே” (குறந்-உ.) எனவும்வரும்.

தெய்வத்திறம்பேசற்குச்செய்யுள்:—“மன்னியபார்புகழ் வாணன்றென்மாறையின்மார்தளிர்போன், மின்னியமாமை விளர்ப்பதென்னேவிரிகூட்டம்மிற், பின்னியகாதற் பிரிப்பவர் யாரினிப்போருவி, யின்னியமாக விளமயிலாடுமிரும் பொழிற்கே” (தஞ்சை-உஉ.) எனவரும்.

பிரியேனென்றற்குச்செய்யுள்:—“வண்கொடியேய்மதின்மாறைவசோதய ன்வாணனென்னு, மொண்கொடியேனெய்த விவ்வண்ணலியான் கேலிங்கே, னுண்கொடியேரிடை வண்டிமிர்பூங்குழலாபுரத்தாட்,பெண்கொடியேபிரியேன் றரியேனிற்பிரியினுமே” (தஞ்சை-உங.) எனவும், “யாயும்யாயும்யாராகியரோ,

முயங்குதலுறுத்தற்குச்செய்யுள்:—"வானக்கதிரவன்முன்னைகமாதைமணந்த தன்றே, கானக்குழலியையாளின்றுபெற்றதுகாவலர்க்குத், தானக்களிறுதரும் புயல்வாணன்றமிழ்த்தஞ்சைசூழ், கானக்கடிவரைவாய்விரைநாண்மலர்க்காவகத் தே" (தஞ்சை-௧௭.) எனவும், "கோடலெதிர்முகைப்பசுவீமுல்லை, நாறிதழ்க் குவளையோடிடைப்படவிரைஇ, யைதுதொடைமாண்டகோதைபோல, நறியநல் லோண்மேனி, முறியினும்வாய்வதுமுயங்கற்கினிதே" (குறு-௬௨) எனவும் வரும்.

புணர்ச்சியின்மகிழ்தற்குச்செய்யுள்:— "மலைநாடுகெண்டவழுதிகண்போல் பவன்வாணனென்னெண், கலைநாடுதஞ்சையர்காவலன்மால் வரைக்கன்னி பொன்னுண், முலைநாமுயன்றுமுயங்கினமான்முயன்றாலினியைந், தலைநாகன் மணியும்பெறலாமித்தாணியிலே" (தஞ்சை-௧௪.) எனவும், "கண்டுகேட்டுண் டுயிர்த்துற்றறியுமைம்புலனு, மொண்டொடிகண்ணேயுள" (குற-௧௧௦௧.) எனவும் வரும்.

புகழ்தற்குச்செய்யுள்:— "திரண்மாமரகதச்செய்குன்றுகாளென்றுஞ்செவ் வனநீர், முரண்மாதவங்கண்முயன்றுசெய்தாலுமுளரிமங்கை, சரண்மாறைவா ணன்றமிழ்த்தஞ்சைநாட்டென்றனியுயிர்க்கோ, ரரண்மானனையகண்ணுள்கொங் கைபோறலரிதுமக்கே" (தஞ்சை-௧௯.) என வரும்.

இவற்றுளிரந்து பின்னிற்றற்கெண்ணன்முதலாகவீடு நினைந்திரங்கலீறுகச் சொல்லப்பட்டவொன்பதனுள், வழிபாடுமறுத்தலொன்றுமொழித்தல்லாதன வெட்டும் வேட்கையுணர்த்தற்குரியவாம். வழிபாடுமறுத்தலாயவொன்றுந் தலை மகண்மறுத்தற்குரித்தாம். மறுத்தெதிர்கோடலும் வறிதுநகைதோற்றலுமென் னுமிரண்டுந் தலைமகளுடன்பாட்டிற்குரியவாம். முறுவற்குறிப்புணர்தலு முயங் குதலுறுத்தலும் தலைமகனுடன்பாட்டிற்குரியவாம். புணர்ச்சியின் மகிழ்தலும் புகழ்தலுமென்னுமிரண்டுந் தலைமகன்கூட்டத்திற்குரியவாம். பிறவுமென்றதனு லணிதலுங் கொள்ளப்படும். இலக்கியமேலே காட்டப்படும். (௧௧)

௧௨௪. ஐயந் தீர்த்தல் பிரிவறி வுறுத்தலென்
றெய்திய வன்புறை யிருவகைத் தாகும்.

(இ-ம்.) வன்புறையின்வகையுணர்த்துதலுதலிற்று.

(இ-ள்.) மேற்சொல்லப்பட்ட வன்புறையயந்தீர்த்தலும் பிரிவறிவுறுத் தலுமென விரண்டுகூற்றினையுடைத்தாமென்றவாறு. இக்கிளவி "தீரத்தேற்ற" (தொல். பொரு-௧௦௨.) மென்பதனுற்கொள்ளப்படும். (௧௨)

௨௨. அணிந்துழி நாணிய துணர்ந்து தெளிவித்தலும்
பெருநயப் புரைத்தலுந் தெய்வத்திறம் பேசலும்
பிரியே னென்றலும் பிரிந்துவரு கென்றலு
மிடமணித் தென்றலு மென்றிவை யாறு
மடனறத் தெரிந்த வன்புறை விரியே.

(இச் - ம்.) வன்புறையின்விரியுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) அணிந்துழிநாணியதுணர்ந்துதெளிவித்தன்முதலாக விடமணித் தென்றலீறாகச்சொல்லப்பட்டவாறுந் தலைமகன்றலைமகளது அறிவின்மைநீங்க வாராய்ந்துசொன்ன வன்புறையின்விரியாமென்றவாறு. வன்புறுத்தலான் வன்புறையென்று பெயராயிற்று. அவற்றுள், அணிந்துழிநாணியதுணர்ந்து தெளிவித்தற்குச்செய்யுள் :—"நாவியுங்காரகிலாவியுந்தோய்குழலுணியஞ்சேல், வாவியுஞ்சோலையுஞ் சூழ்தஞ்சைவாணன்றென்மாறைவயற், காவியுஞ்சேலுங் கமலமுங்காட்டுநின்கண்மலரு, மாவியும்போலினியாரணியாகவணிந்தனனே" (தஞ்சை-௨௦.) எனவரும். அணிந்துழிநாணியதுணர்ந்துதெளிவித்தற்குவிதி யாதோவெனின்; "முன்புற்றறியாமுதற்புணர்ச்சிமொய்குழலை, யின்புற்றணிந்த லியலணியும்-வன்பணியு, நாணேனுந்தொல்லையணியென்னநன்னுதலை......... ......னந்து" என்னும் பரிபாட்டினுட்செய்யுளாமெனக்கொள்க.

பெருநயப்புரைத்தற்குச்செய்யுள்:—"மன்னுலகத்துமன்னியசீர்த்தஞ்சை வாணன்வெற்பி, லென்னுயிரன்னவிவளிடைமேலிணைகொண்டெழுந்த, பொன்னுணணிகொங்கைபோலவண்டீருங்கள் பொய்கையுண்டோ, நன்னுளரும் பொருதாளிரண்டீனுநளினங்களே" (தஞ்சை-௨௧.)எனவும், "கொங்குதேர் வாழ்க்கையஞ்சிறைத்தும்பி, காமஞ்செப்பாது கண்டதுமொழிமோ, பயிலியது கெழீஇயநட்பின்மயிலியற், செறியெயிற்றரிவைகூந்தலி, னறியவுமுளவோநீ யறியும்பூவே" (குறுந்-௨.) எனவும்வரும்.

தெய்வத்திறம்பேசற்குச்செய்யுள்:—"மன்னியபார்புகழ் வாணன்றென்மா றையின்மார்தளிர்போன், மின்னியமாமை விளர்ப்பதென்னேவிதிகூட்டநம்மிற், பின்னியகாதற் பிரிப்பவர் யாரினிப்போருவி, யின்னியமாக விளமயிலாடுமிரும் பொழிற்கே" (தஞ்சை-௨௨.) எனவரும்.

பிரியேனென்றற்குச்செய்யுள் :—"வண்கொடியேய்மதின்மாறைவரோதய ன்வாணனென்னு, மொண்கொடியேனெய்த விவ்வண்ணணீயிரங் கேலிங்கே, நுண்கொடியேரிடை வண்டியிர்பூங்குழனூபுரத்தாட், பெண்கொடியேபிரியேன் றரியேனிற்பிரியினுமே" (தஞ்சை-௨௩.) எனவும், "யாயும்யாயும்யாராகியரோ,

வெண்டையுறுந்தையு மெய்முறைநக்கேளிர், யாறுமீயுமெவ்வழியறிதும், செம்புலப் பெய்நீர்போல, வன்புடைநெஞ்சந்தாங்கலந்தனவே" (குறுந்-௪0)எனவும்வரும்.

பிரிந்துவருகென்றற்குச்செய்யுள் :--"சென்றேபகைவென்றின்படைவா ளன் செழுந் தஞ்சை சூழ், கன்றேதருவையைபாடலையாய்மதாருயிர்போ, லொன்றேயெனநுரையூங்குயர்சோலையினுடொளித்து, நின் றே வருவலிங்கே விளையாடுகேர்சிறிதே"(தஞ்சை-உ௪.) எனவரும்.

இடமணித்தென்றற்குச்செய்யுள் :—"மணிபொன்சொரியுங்கை வாணன் றென்மாறைமருவினர்போற், றணிபொன்சொரியுந்தடமுலையாயுயர் சந்தமுந்தி, யணிபொன்சொரியுமருவிபெஞ்சாரலசந்தலர்தேம், கனிபொன்சொரியுநின்சா ரன்மென்காந்தளங்கையகத்தே" (தஞ்சை-உ௫.) எனவும், "நெடுவேறுடக்கிய நீர்நீக்குமதிகாதல், வடிவேறுடக்கியநீர்மாதோ-நெடுவேய்க், கணமாமழைக்குவட் டெங்கார்வரைப்பூஞ்சாரன், மணமாறுநங்குன்றின்வந்து" (......)எனவும்வரும். இவற்றுள், முன்னையமூன்றும் ஐயந்தீர்த்தற்குரிய, பின்னையமூன்றும் பிரிவறி வுறுத்தற்குரிய எனக்கொள்க. (கஅ)

கூ0. தலைவன் மாற்றந் தலைவி தேற்றந்
தெளிவா மென்பர் தெளிந்திசி னோரே.

(இ-ம்.) தெளிவுணர்த்துதனுதலிற்று.

இ-ள்.) தலைமகன்சொல்லைத்தலைமகடெளிதலைத் தெளிதலென்றுசொல் லுவர் புலவரென்றவாறு. அதற்குச்செய்யுள்:—" எத்துந்தமதுரைதேறி னின்றேனையிங்கேதனியே, வைத்தங்ககன்றமறந்துறையார்வறியோர்கவா, முத் துந்துதிருமிங்குந்தாங்குமுகக்தெறிந்து, தத்துங்கலாலவையுந்தஞ்சைவாணன் றமிழ்வெற்பரே" (தஞ்சை-உ௬) எனவும், "நின்றசொல்லர்நீடுதோறினிய, ரென்றுமென்றோள்பிரிவறியலரே, தாமரைத்தண்டாதுதிமீமிசைச்,சாந்திற்கொ ண்டநீர்த்தேன்போலப், புரையமன்றபுரையோர்கேண்மை, நீரின்றமையாதுலகம் போலத், தம்மின்றமையாநந்நயந்தருளி, நறுநுதல்பசத்தலஞ்சிச், சிறுமையுறுப செய்பறியலரே" (நற்-க.) எனவும்வரும். (க௯)

கூக. செல்லுங் கிழத்தி செலவுகண் டுளத்தொடு
சொல்லலும் பாகனொடு சொல்லலு மிரண்டும்
பிரிவுழி மகிழ்ச்சியின் விரியெனக் கொளலே.

(இ-ம்.) பிரிவுழிமகிழ்ச்சியின் விரியுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) அவ்வாறவ்விடத்துச்சென்று தலைமகடன்னைக்காணுமற்றுணைவனைக் காண்பதோராணிமைக்கணின்றதலைமகன்புணர்ச்சிக்களத்தினின்றும்போகாநின்றதலைமகளதுசெலவுகண்டுதன்னெஞ்சொடுகூறலும், பாகனொடுகூறலுமாகியவிரண்டும் பிரிவுழிமகிழ்ச்சியின்விரியாமென்றவாறு. இஃதுக்கிளவிப்பன்மையின்மையின் வகையின்றாயிற்று.

செல்லுங்கிழத்திசெலவுகண்டுளத்தொடுசொல்லற்குச்செய்யுள் :—"அகிலேந்துகூந்தலொருகையிலேந்தியசைந்தொருகை, துகிலேந்தியேந்துந்துணைச்சிலம்பார்ப்பத்துனிகலந்த, முகிலேந்தும்பொழில்சூழ்தஞ்சைவாணன்முந்நீர்த்துறைவாய், நகிலேந்துபூங்கொடிபோற்செல்லுமானெஞ்சநம்முயிரே" (தஞ்சை-உஎ.) எனவும், "காணுமாபிற்றாயிரெனமொழிவோர், நாணிலர்மன்றபொய்ம்மொழித்தனரே, யாஅங்காண்டுமெம்மரும்பெறலுயிரே, சொல்லுமாடுமென்மெலவியலுங், கணைக்காலுணுகியநுசுப்பின், மழைக்கண் மாதர்பணைப்பெருந்தோட்டே," (தொல்-பொரு-௧0௧.) எனவும்வரும்.

பாகனொடுசொல்லற்குச்செய்யுள் :—"தென்பாற்றிலகமன்னன்றஞ்சைவாணன்றென்மாறைமுந்நீர், வன்பாற்றிரண்முத்தவண்டலின்மேல்வருமேதமஞ்சி, முன்பார்த்தென்னெஞ்சம்வரும்வழிபார்த்துமுறைமுறையே, பின்பார்த்தொதுங்குதல்காண்வலவாவொருபெண்ணணங்கே" (தஞ்சை-உஅ) எனவரும். இவையிரண்டற்குமிலக்கணவிதி யிவையாகக்கொள்க. (௯௧)

௯௨. மருளுற் றுரைத்த றெருளுற் றுரைத்தலென்
றிருவகைத் தாகும் பிரிவுழிக் கலங்கல்.

(இச் - ம்.) பிரிவுழிக்கலங்கலின் வகையுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) மருளுற்றுரைத்தலுந் தெருளுற்றுரைத்தலுமென விரண்டுவகையினையுடைத்தாம் பிரிவுழிக்கலங்கலென்றவாறு. இக்கிளவி "பிரிந்தவழிக் கலங்க" (தொல்-பொரு-௧0௨.) லென்பதனாற்கொள்ளப்பட்டது. (௯௨)

௯௩. ஆய வெள்ளம் வழிபடக் கண்டிது
மாயமோ வென்றலும் வாயில்பெற் றுய்தலும்
பண்பு பாராட்டலும் பயந்தோர்ப் பழிச்சலுங்
கண்படை பெறாது கங்குனோ தலுமெனு
மைந்தும் பிரிவுழிக் * கலங்கல்விரி யாகும்.

(இச் - ம்.) பிரிவுழிக்கலங்கலின் விரியுணர்த்துதனுதலிற்று.

---

* கலங்கலின் விரியே என்றும் பிரதிபேதம்.

(இ-ள்.) தலைமகளை யாயவெள்ளம் வழிபடக்கண்டு நாணமயலோவென்றன் முதலைக் கண்படைபெறாது கங்குலேதலைவிகூறச்சொல்லப்பட்டவைந்தும் பிரிவழிக்கலங்கலின்விரியாமென்றவாறு. ஆயவெள்ளம் வழிபடக்கண்டு நாணமயலோவென்றற்குச்செய்யுள்:—"மேயங்கொலோவெனத்தெவ்வென்றவாணன்றென் மாறைநவைத், தோயங்கொலோவெனுநேயம்பால்வைத்துச்சோலைமஞ்ஞை, யயங்கொலோவெனுமாயத்துள்ளாளிவ்வரிவையென்ன, மாயங்கொலோவென்னெஞ்சமேழைமம்போலிக்குவந்துற்றதே" (தஞ்சை-உக.)எனவும், "மனவேலவர்குன்றைக் கைக்கட்டுல், கனவேதெரியினும்யாவது, நனவேதெரியினுநன்னலோவேவரிதே" (......)எனவும் வரும்.

வாயில்பெற்றுய்த்தற்குச்செய்யுள்:—"பெருமான்மருத்தொன்றுபெற்றனம் யாநெஞ்சம்பேதுறல்பார், மருமான்வரோதயன்வாணன்றென்மாறைமணங்கமழ் பூந், திருமான்முகமலர்ச்சேயரிபாய்கயல்சென்றுசென்றவ், வொருமானகைமுக மாமலரோடையுலாவருமே." (தஞ்சை-௩0.) எனவும், "நோக்கினும்பிறர்முக நோக்கான்சாரினும், பூக்குழன்மடந்தைதோள்சாரும்மே, யன்னதலையளி யுடைமையின், வின்னுயிர்த்தோழியேக்கிழையிலட்கே."(.........)எனவும் வரும்.

பண்புபாராட்டற்குச்செய்யுள்:—"மயலார்களிற்றன்னைக்கண்ணன்றெ ன் மாறையில்வாய்த்தவர்கண், கயலாமெனிற்கயல்கள்ளங்கொள்ளாகரும்பழனகம், புயலாமெனிற்புயல்போதுகொள்ளாவிப்புனையிழையா, ரியலாமனைத்தையும்வே றென்னபேரிட்டியம்புவதே." (தஞ்சை-௩க.) எனவும், "குன்றநாடன்குன்றத் துக்கவாஅற், பைஞ்சுனைபூத்தபகுவாய்க்குவளையு, மஞ்சிலோதி * யசைநடைக் கொடிச்சிகண்போன்மலர்தலரிதில, டன்போற்சாயன்மஞ்ஞைக் குமரிதே." (ஐங்குறு-உசக.) எனவும் வரும்.

பயந்தோர்ப்பழிச்சற்குச்செய்யுள்:—"அணியுஞ்சுடர்விரிசங்குபங்கேருகமோ டகமு, மணியுந்தாமன்னிவாழியரோதஞ்சைவாணன்வெற்பிற், றணியுந்தொழி லொழித்தின்பமுந்துன்பமுந்தன்பதமே, பணியும்பணியெனக்குப்பயந்தாளைப் பயந்தவரே." (தஞ்சை-௩உ.) எனவும், "அல்குபடுகுழந்தவரிமதர்மழைக்கட், பல்பூம்பகைத்தழைநுடங்குமல்குற், றிருமணிபுரையுமேனிமடவோள், யார்மகள் கொல்லிவடந்தைவாழியர், துயரமுற்றினனெம்மையகல்வய, லரியுநரிக்குந்தரு வனபோற்றுர், தண்சேறுதாயமதனுடைநோன்றாட், கண்போனெய்தல்போரிற் பூக்குந், திண்டேர்ப்பொறையன்றொண்டித், தன்றிறம்பெறுகவிவளீன்றதாயே" (நற்றிணை-அ.)எனவும்வரும்.

* அசையியற்கொடிச்சி என்றும் பிரதிபேதம்.

கண்படைபெறாது கங்குலொருதற்குச்செய்யுள்:— "யாமக்கியல்குல்வா ணுதலார்தஞ்சைவாணன்வெற்பின், யாமக்கலவிகலங்கவர்போதுமைக் களித்த, காமக்கனலவர்கையகல்லாவிலைக்கம்பணிகள், யாமக்கடலைத்துந்தனியாதினி யென்செய்துமே" (தஞ்சை-கூஉ.) எனவும், "ஓதமுமொலியோவின்றேயூதையும், தாதுளர்கானற்றவவோவின்றே, மணமலிமூதூரகநெடுந்தெருவிற், கூகைச்சே வல்குராலோடேறி, யாரிருஞ்சதுக்கத்தஞ்சவரக்குழறு, மணங்குகால்கிளருமயங் கிருணடுநாட், பாவையன்னபலராய்வனப்பிற், றடமென்பணைத்தோண்மணமிகு குறமகள், சுணங்கணிவனமுலைமுயங்குதலுள்ளி, மீன்கண்டுஞ்சும்பொழுதும், யான்கண்டுஞ்சேன்யாதுகொலினியே" (நற்றிணை-௩கக.) எனவும் வரும். இவற்றாயவெள்ளம் வழிபடக்கண்டிதுமாயமோவென்றலாகிய வொன்றும் மருளுற்றுரைத்தற்குரித்து. ஏனையவொன்றுந்தெருளுற்றுரைத்தற்குரியன. இவை யைந்துகிளவிக்கு மீண்டுக்காட்டியசெய்யுளே யிலக்கணமாகக்கொள்க. (கள)

கருச. தெய்வந் தெளிதல் கூடல் விடுத்தலென்
றிவ்வோர் மூவகைத் திடந்தலைப் பாடே.

(இச் - ம்.) இடந்தலைப்பாட்டினிலக்கணமுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) இடந்தலைப்பாடென்பது தெய்வந்தெளிதலுங் கூடலும்விடுத்தலு மென மூன்றுவகையினையுடைத்தென்றவாறு. ஓர் அசை. இக்கிளவி "பெற்ற வழிமகிழ்ச்சி" (தொல்-பொரு-க0உ.) யென்பதனாற் கொள்ளப்பட்டது. (கஅ)

கருரு. தந்த தெய்வந் தருமெனச் சேறலு
முந்துறக் காண்டலு முயங்கலும் புகழ்தலு
முடன்புண ராயத் துய்த்தலு மெனவைந்
திடந்தலைப் பாட்டி னிலக்கண விரியே.

(இச் - ம்.) இடந்தலைப்பாட்டினிலக்கண விரியுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) தந்ததெய்வந் தருமெனச்சேறன் முதலாகவுடன்புணராயத் துய்த்தலீறாகச் சொல்லப்பட்டவைந்து மிடந்தலைப்பாட்டினிலக்கணவிரியா மென்றவாறு. தந்ததெய்வந் தருமெனச்சேறற்குச் செய்யுள்:— "மன்றும்பொதி யினுமாமயில்சேர்தஞ்சைவாணன்வெற்பிற், றன்றும்புயலினஞ் சோலையின் வாய்ச்சுறவுக்குழையைச், சென்றுந்துசெல்விழிமின்னைமுன்னுட்டந்த தெய்வ நமக், கின்றுந்தருநெஞ்சமேயெழுவாழியிங்கென்னுடனே" (தஞ்சை-கச.) என வரும்.

மூக்குறக்காண்டற்குச்செய்யுள்:— "மருவாயகாப்பண்மயிலுருவாய்மென் னல்வாணன் றஞ்சைத், தருவாய்த்தழைகொய்துதண்புனங்காத்துத்தடங் குடைந்து, திருவாய்மலர்த்துசிலம்பெதிர்கூயின்றெரர்தெய்வதப்பெண், ணுருவா யொருதனியேநின்றதாலென்னுயிர்க்குயிரே." (தஞ்சை-௩௫.) எனவரும்.

முயங்கற்குச்செய்யுள்:— "மாறுகான்றஞ்சைவாணன்வரோதயன்மாறை யன்னாள், தாளுவிநின்றலர்தாமரையேயத்தடமலர்வா, யாளுதொழுகுசெந்தே னல்விமேவுமாசவன்னம், யாளுமிடைப்பதுவேயன்னபான்மையிருவர்க்குமே" (தஞ்சை-௩௬.) எனவரும்.

புகழ்தற்குச்செய்யுள்:— "அரும்பாமளவிற்றனத்தொடொவ்வாயலராமள விற், கரும்பாமொழிவதனத்தொடொவ்வாய்கனியாளைசெம்பொன், றரும்பாரி வாணன்றமிழ்த்தஞ்சையான்றரியாரின்முன்செய், பெரும்பாவமல்லதுநீர்கின்ற பேறல்லிபெற்றிலையே." (தஞ்சை-௩௭.) எனவரும்.

ஆயத்துய்த்தற்குச்செய்யுள்:-"மேவிக்கலைக்கடலென்புலன்மீனுண்டுமீண் டெங்கென், னாவிக்கமலத்தமாள்ளமேவின்னயில்விழிபோல், வாவிக்கயலுகளுந் தஞ்சைவாணன்வரைபினுடன், கூவிக்கயங்குடைகின்குயிலாயங்குறுகவே." (தஞ்சை-௩௮.) எனவரும்; இவற்றுட், டெய்வந்தருமெனச்சேறலாகிய வொன்றுந்தெய்வத்தெளிதற்குரித்தாம். காண்டலுமுயங்கலும்புகழ்தலுமாகிய மூன்றுங் கூடற்குரியவாம். ஆயத்துய்த்தலாகிய வொன்றும் விடுத்தற்குரித்தா மெனக்கொள்க. (௧௯)

௧௨௬. சார்தல் கேட்டல் சாற்ற லெதிர்மறை
நேர்தல் கூடல் பாங்கிற் கூட்டலென்
றாங்கெழு வகைத்தே பாங்கற் கூட்டம்.

(இச் - ம்.) பாங்கற்கூட்டத்தின் வகையுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) சார்தன்முதலாகப் பாங்கிற்கூட்டலீறாக வேழுவகையினையுடைத் தாம் பாங்கற்கூட்ட மென்றவாறு. ஆங்கு-அசை. (௨௦)

௧௨௭. தலைவன் பாங்கனைச் சார்தலும் பாங்கன்
றலைவனை யுற்ற துவினுதலுந் தலைவ
னுற்ற துரைத்தலுங் கற்றறி பாங்கன்
கழறலுங் கிழவோன் கழற்றெதிர் மறுத்தலுங்
கிழவோற் பழித்தலுங் கிழவோன் வேட்கை
தாங்கற் கருமை சாற்றலும் பாங்

தன்மனத் தழுங்கலுந் தலைவனோ டழுங்கலு
மெவ்விடத் தெவ்வியற் றென்றலு மவனை
இவ்விடத் திவ்வியற் றென்றலும் பாங்க
னிறைவனைத் தேற்றலுங் குறிவழிச் சேறலு
மிறைவியைக் காண்டலு மிகழ்ந்ததற் கிரங்கலுந்
தலைவனை வியத்தலுந் தலைவியை வியத்தலுந்
தலைவன் றனக்குத் தலைவிநிலை கூறலுந்
தலைவன்சேறலுந் தலைவியைக் காண்டலுங்
கலவியின் மகிழ்தலும் புகழ்தலுந் தலைவியைப்
பாங்கியொடு வருகெனப் பகர்தலும் பாங்கிற்
கூட்டலு மென்றீங் கிட்டுநா லாறுங்
காட்டிய பாங்கற் கூட்டத்து விரியே.

(இ-ம்.) பாங்கற்கூட்டத்து விரியுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) தலைவன்பாங்கனைச் சார்தன்முதலாகப்பாங்கிற் கூட்டலீறாக விவ்விடத்துத்தொகுத்தவிருபத்துநான்கும் மேற்காட்டியபாங்கற்கூட்டத்துவிரியாமென்றவாறு. அவற்றுள் தலைவன்பாங்கனைச் சார்தற்குச்செய்யுள்:—"புனையாழியங்கைப்புயல்வளர்பாற்கடற்பூக்கொடிவாழ், மனையாகியதஞ்சைவாணனொன்றொனமற்றிலனே, பிணையாதெழுமதிகன்னெஞ்சமேகமக் கின்றுயிரே, யனையானருட்புனலாலனங்கானலமாற்றுதற்கே."(தஞ்சை-௧௧.) வெனவரும்.

பாங்கன் றலைவனையுற்றறிவினாதற்குச்செய்யுள் :—"வலம்புரிபோற்கொடை வாணன்றென்மாறைநமழைவளர்பூஞ், சிலம்புறைநறுவந்துநீண்டினபோலொளி தேம்பியிவ்வா, றலம்புனைதோளுநின்னுள்ளமும்வாடியுருகின்று, புலம்புவ தென்னைகொல்லோசொல்லவேண்டும்புரவலனே." (தஞ்சை-௪௦.) எனவரும்,

நிலைவினுற்றுரைத்தற்குச்செய்யுள்:—"மலைமுழுதுங்கொற்றம்வைக்கின்ற வாணன்றென்மாறைநண்பா, நிலைமுழுதுங்கெற்றமுற்றமெய்யாகிப் பச்செக் கிறத்தே, கொலைமுழுதுங்கற்றகூரியவாளிகுளிப்பவின்றென், கலைமுழுதும்பட் டதாலொருமான்முடிக்கண்ணியிலே." (தஞ்சை-௪௧.) எனவும், "எலுவசிறாஅ ரேமுறுநண்ப, புலவர்தோழகேளாயத்தை, மாக்கடனடுவணெண்ணாட்பக்கத் துப், பசுவெண்டிங்கடோன்றியாங்குக், கதுப்பயல்விளங்குஞ்சிறுநுதல், புதுக் கோள்யானையிற்பிணித்தற்றாலெம்மே" (குறுந்-௧௨௯.)எனவும்வரும்.

பாங்கன் கழற்குச்செய்யுள்:—"தருகந்தமன்னசந்திரவாணன் றடஞ்சிலம்பின், முருகக்கடவுளையவெற்பாமுனிவும்பிறையுஞ், செருகச்சிவர்வரைவந்தவொர்பேதைக்குன்சிந்தையெல்லா, முருகக் கலங்கினைநீதருமோ மற்றனக் கிதுவே." (தஞ்சை-சஉ.) எனவும், "பெருவரைமிசையதுநெடுவெள்ளருவி, முதுவாய்க்கோடியர்முழவிற்றதும்பிச், சிலம்பினிழிதருமிலங்குமலைவெற்ப, நோதக்கன்றேகாமமியாவது, நன்றெனவுணரார் †மாட்டிச், சென்றேநிற்கும்பெரும்பேதைமைத்தே." (குறுந்-எஅ.) எனவும்வரும்.

இறைவோன் கழற்றெதிர் மறுத்தற்குச்செய்யுள்:— "மாலாய்மதம்பொழிமாதங்கவாணன்றென்மாறையன்னார், சேலார்கருங்கண்ணுஞ்செங்கனிவாயுஞ்சிறியநுண்ணேர், நூலார்மருங்கும்பெருந்தனபாரமுநும்மையன்றி, மேலானவருங்கண்டாலுரையாரிக்கவினிக்கனே." (தஞ்சை-சங.) எனவும், "அம்மவாழிகேளிர் முன்னின்று, கண்டனிராயிற்கழறலீர்மன்னோ, நுண்டாதுபொதிந்தசெங்காற்கொழுமுகை, முண்டகங்கெழீஇயமோட்டுமணலடைகரைப், பேஎய்த்தலையபிணரரைத்தாழை, யெயிறுடைநெடுந்தோடுகாப்பப்பலவுடன், வயிறுடைப்போதுவாலிதின்விரிந்து, புலவுப்பொருதழித்தபூநாறுபரப்பி, னிவர்திரைதந்தவீர்ங்கதிர்முத்தம், கவர்நடைப்புரவிகால்வடுத்தபுக்கு, நற்றேர்வழுதிகொற்கைமுன்றுறை, வண்டுவாய்திறந்தவாங்குகழிசெய்தற், போதுபுறங்கொடுத்தவுண்கண், மாதர்வாண்முகமதைஇயநோக்கே." (அகநா-கஙo.) எனவும் வரும்.

பாங்கன் இறைவோற் பழித்தற்குச்செய்யுள்:—"குரார்சிலம்பிற்சிலம்பியென்னூல்கொண்டேற்றவெற்றிப், போரார்களிறுபுலம்பிசைக்காங்கொருபூவையொண்கை, வாராலணைப்பவருந்தினைநீதஞ்சைவாணன்வெற்பா, வோராழிசூழுலகத்தெவரேயின்னேயொப்பவரே." (தஞ்சை-சச.) எனவும், "காமங்காமமென்ப காமம், மணங்கும்பிணியுமன்றேநினைப்பின், முதைச்சுவற்கலித்தமுற்றா விளம் புன், மூதாத்தைவந்தாங்கு, விருந்தேகாமம்பெருந்தோளுனக்கே," (குறுந்-உ0ச.) எனவும் வரும்.

இறைவோன்வேட்கை தாங்கற்கருமைசாற்றற்குச்செய்யுள்:— "பொருது கொண்டதாமரைப்போதன்னசெங்கையும்பொங்கரிசேர், கறைகொண்டவன்னகண்களுங்கொண்டொருகன்னிதெய்வத், திறைகொண்டவாணன் செழுந்தஞ்சைசூழுஞ்சிலம்பிலின்றென், னிறைகொண்டுபோனதறியாநிலையினிற்றீயின்றே" (தஞ்சை-சரு.) எனவரும்.

பாங்கன் றன்மனத்தழுங்கற்குச் செய்யுள்:—"தேனவாரங்கமழ் தஞ்சைவாணன்றென்மாறையன்னாள், காதலவாவெங்கவேளைவாவொளிர்காவியந்தன், போதனவாவிழிபென்னுமென்னுரைப்புறத்தனவே, தூதனவாமுலையென்னுமென்னுயிர்சொல்லுவதே." (தஞ்சை-சசு.) எனவரும்.

---

† மாட்டும் என்றும் பாடம்.

பாங்கன் றலைவனோடூடற்குச்செய்யுள்:— "என்மேலுறைநீயுரைகின்ற வின்செவிக்கின்சொல்லெல்லாம், வன்மேடர்கொங்கைகாரணமாய்த் தஞ்சை வாணன்வெற்பா, கன்மேலறைகின்றமென்றுழைபோலுங்கடல்வெதும்பிற், றன் மேல்விளாவவுண்டோதரைமேலொருதண்புனலே" (தஞ்சை-சஎ.) எனவரும்.

பாங்கனெவ்விடத் தெவ்வியற்றென் றற்குச்செய்யுள்:— "முகத்திற்பகழி யிரண்டுடையார்க்கிடமூரிமுன்னீ, ரகத்திற்பிறந்தவரவிந்தமோவுடையார்தமக்கு, மகத்திற்சனியன்னசந்திரவாணன்றென்மாறைவெற்போ, நகத்திற் பகலினை யாய்தன்மையேயதுவலெனக்கே." (தஞ்சை-சஅ.) எனவரும்.

தலைவனஃதிவ்விடத்திவ்வியற்றென் றற்குச்செய்யுள்:—"கனமேகுழல்செங் கயலேவிழிமொழிகார்க் குயிலே, தனமேமுகையென் றனிநெஞ்சமேயிடைதன் பகைக்கு, வனமேயருளியவாணன்றென்மாறைமணிவரைசூழ், புனமேயிடமிவ் வனையென்னைவாட்டியபூங்கொடிக்கே." (தஞ்சை-சக.) எனவும், "கடற்கோடு செறிந்தவளைவார்முன்கைக், கழிப்பூத்தொடர்ந்தவிரும்பல்கூந்தற், கானன் ஞாழற்கவின்பெறுதழையள், வரையாமகளிரினரியளென், னிறையருநெஞ்சங் கொண்டொளித்தோளே." (ஐங்குறு-ககஎ.) எனவும் வரும்.

பாங்க னிறைவனைத் தேற்றற்குச்செய்யுள்:—"மழைவளர்மாளிகைமாறை வரோதயன்வாணன் வெற்பி, னிழைவளர்வார்முலையேரிளந்தோகையையிக்க ணம்போய்க், கழைவளர்சாரலிற்கண்டனையான்வந்துகாண்பளவுந், தழைவளர் தாரண்ணலேதனிவாயின்றகவின்மையே." (தஞ்சை-ருo.) என வரும்.

பாங்கன் குறிவழிச்சேறற்குச் செய்யுள்:—"பாரித்தநின்மையெம்மன்னை லுண்ணிரைப்பருகினின்று, பூரித்தசெவ்விளநீர்களுந்தாங்கியபூங்கொடி தான், வாரித்தலம்புகழ்வாணன்றென்மாறைவனைப்புனஞ்சூழ், வேரித்தடம் பொழில் வாய்விளையாடிக்கொண்மேவிநின்றே" (தஞ்சை-ருக.) எனவரும்.

பாங்கனிறைவியைக் காண்டற்குச்செய்யுள்:—"காரேயனகக்கரும்புயலே யியல்கார்மயிலே, மானேவிழிமுகமாமதியேதஞ்சைவாணன்வெற்பிற், றேனேய் தொடையலத்தேயனையான்சொன்னதேயிழையாள், தானேயிவளிதுவேயிடமா மிதண்புனமே." (தஞ்சை-ருஉ.) எனவரும்.

பாங்கனிகழ்ந்ததற்கிரங்கற்குச் செய்யுள்:— "இகலைக்காலயிற்படைச் சேரியர்கோன் [illegible], [illegible] வாணன் றென் மாறைவெற்பின், முலைகால்கொளக்கண்டினைத்த [illegible], [illegible]" (தஞ்சை-ருங.) எனவும்

"இரவினுநின் றுயிலறியா, தரவுறுதுயரமெய்துபதேர்ண்டித், தன்னை றுசெய் தனுறும், பின்னிருங்கூந்தலணங்குற்றேனே. (ஐங்குறு-௧௭௨.) எனவும் வரும்.

பாங்கன்றலைவனைவியத்தற்குச்செய்யுள்:- "தலங்காவலன்றஞ்சைவாணன் முந்நீர்பொருந்தண்பொருந்தத், திலங்காரவல்வடக்கொங்கைவெற்பாலிணை நீல வுண்கண், பொலங்காமவல்லிகடைந்தவப்போதுபுடைபெயர்ந்து, கலங்காதிருந்த தெவ்வாறெம்பிரான்றன் கலைக்கடலே." (தஞ்சை-௫௪.)எனவும், "தாழைதவழ்ந் துலாம்வெண்மணற்றண்கானன், மாழைநுளையர்மடமக-ளேழை, யிணைநாடிலில் லாவிருந்தடங்கண்கண்டுந், துணைநாடினன்றேமிலன்." (திணைமா-௫௫.) எனவும் வரும்.

பாங்கன்றலைவியைவியத்தற்குச்செய்யுள்:— "வெங்கோன்மழைபொழிவா னவர்போர்வென்றமீனவர்தஞ், செங்கோன்முறைமைசெலுத்தியவாணன்றென் மாறைவெற்பில், நங்கோன்மெலியநலிகின்றகாமவெந்நஞ்சினையிப், பைங்கோன் மணிவளையார்தனியாரல்லர்பார்வைகொண்டே." (தஞ்சை-௫௫.) எனவும், "துறைமேய்வலம்புரிதோய்ந்துமணலுழுததோற்றமாய்வான், பொறைமலிபூம் புன்னைப்பூவுதிர்ந்துநுண்டாதுபோர்க்குங்கான, னிறைமதிவாண் முகத்து நேர் கயற்கண்செய்த, வுறைமலியுய்யாநோயூர்சுணங்கின்மென்முலையேதீர்க்கும்போ லும்." (சிலப்-கானல்-௮.) எனவும் வரும்.

பங்கன்றலைவன்றனக்குத்தலைவிநிலைகூறற்குச்செய்யுள்:— "வளங்கனிமா றைவரோதயன்வாணன்மலையவெற்பா, வுளங்கனிகாதலுடனின்றதானின்னுட லமெல்லாங், களங்கனிபோலக்கருகிவெண்கோட்டுக்களிறுண்டதோர், விளங் கனிபோல்வறிதாகிறைவாங்கியமென்கொடியே." (தஞ்சை-௫௬.) எனவரும்.

தலைவன்குறிவழிச்சேறற்குச்செய்யுள்:— "புறங்கூரிருட்கங்குல்போன்றக நண்பகல் போன்ற பொங்கர், நிறங்கூர்படைக்கண்ணிநின்றனளேநிழலைச் சுளித்து, மறங்கூர்களிற்றண்ணல்வாணன்றென்மாறையில்வாணுதலா, ளறங் கூர்மனத்தருளானின்றதாமெனதாருயிரே." (தஞ்சை-௫௭.) எனவரும்.

தலைவன்றலைவியைக் காண்டற்குச்செய்யுள்:-"பாகையுந்தேனையும்போன் மொழியார்தமிழ்ப்பைந்தொடையும், வாகையுஞ்சூடியவாணன்றென்மாறைவள ருமவ, னீகையும்போதுமெழில்லையைநோக்கியிரக்குபுள்ளூந், தோகையும் போ னின்றவாதனியேயிந்தச்சோலையிலே." (தஞ்சை-௫௮.) எனவரும்.

தலைவன்கலவியின்மகிழ்தற்குச் செய்யுள்:— "யாரும்பர்தம்பதமென்போல வெய்தினரிம்பரம்பொன், வாருந்துறைவையையூழ்தஞ்சைவாணன்மலயவெற்

பிற், றேருந்தொறுமினிதாந்தமிழ்போன்றிவள்செங்கனிவா, யாருந்தொறுமினி தாயமிழ்தாமெனதாருயிர்க்கே." (தஞ்சை-௫௧.) எனவரும்.

புகழ்தற்குச்செய்யுள்:- "தழல்கண்டதன்னகலிவெம்மையாறத்தன்றண்ண ளியால், நிழல்கண்டசந்திரவாணன்றென்மாறைநிழல்பொழியுங், கழல்கண்ட தன்னகதிர்முத்தமாலிகைக்காரிகைநின், குழல்கண்டபின்னல்லவோவறனீருட் குளித்ததுவே." (தஞ்சை-௬௦.) எனவரும்.

தலைவன்றலைவியைப் பாங்கியொடுவருகெனப்பகர்தற்குச் செய்யுள்:—"என் காதலினென்றியம்புகின்றேனிங்கினிவருங்கால், நின்காதலியொடுநீவரல்வேண் டுநிலமடந்தை, தன்காதலன்றஞ்சைவாணன்றென்மாறைத்தண்டாமரை வாழ், பொன்காதல்கொண்டுதொழுஞ்சிலம்பாரடிப்பூங்கொடியே." (தஞ்சை-௬௧)என வும், "எமக்குநயந்தருளினையாயிற்பணைத்தோ, ளொண்ணுதலரிவையொடுமென் மெலவியலி, வந்திசின்வாழியோமடந்தை, தொண்டியன்னநின்பண்புபலகொண் டே." (ஐங்குறு-௧௭௯.) எனவும் வரும்.

தலைவன்றலைவியைப்பாங்கிற் கூட்டற்குச்செய்யுள்:—"என்னொடுநின்ற விளங்கொடியேசங்கமேய்ந்துகுழாங், தன்னொடுசெல்லுஞ்சஞ்சலம்போற்றஞ்சை வாணன்வெற்பிற், பொன்னொடுசெல்லும்புகழ்மணிபோனின்புடையகலா, மின் னொடுநண்ணிடையாருடனீசென்றுமேவுகவே." (தஞ்சை-௬௨.) என வரும்.

இவற்றுள் முன்னையமூன்றுஞ்சார்தல்கேட்டல் சாற்றலென்னுமூன்றற்கு முரியவாம். பாங்கன்கழறன்முதலாகக் கிழவோன்வேட்கைதாங்கற் கருமைசாற் றலீறாகச்சொல்லபபட்ட நான்குமெதிர் மறுத்தற்குரியவாம். பாங்கன்றன்மனத் தழுங்கன்முதலாகத்தலைவன்றனக்குத் தலைவிநிலைகூறலீறாகச்சொல்லப் பட்ட பதினொன்று நேர்தற்குரியவாம். தலைவன்சேறன்முதலாகத் தலைவியைப்புகழ்த லீறாகச்சொல்லப்பட்ட நானகுங்கூடற்குரியவாம். தலைவன்தலைவியைப் பாங்கி யொடு வருகெனப்பகர்தலும் பாங்கிற்கூட்டலுமாகியவிரண்டும் பாங்கிற்கூட்டற் குறியவாம். இதனுட் பாங்கனொடு தலைவன்கூறினவெல்லாம் "நிற்பவைநினைஇ நிகழ்பவையுரைப்பினும்" (தொல்-பொரு-களவி. ௧௧.) மென்பதனாற்கொள்ளப் பட்டன. பாங்கன்கூற்றாயினவெல்லாம் "சுற்றங்காட்டியவாயில்பெட்பினும்" (தொல்-பொரு-ஷை., ஷெ.) மென்பதனாற் கொள்ளப்பட்டன. (௨௧)

௧௩௮. முன்னுற வுணர்தல் குறையுற வுணர்த
லிருவரு முளவழி யவன்வர வுணர்தலென்
றொரு *மூவகைத்தே பாங்கிமதி யுடன்பாடு.

---

* மூன்றுவகைத்தே-என்பது பிரதிபேதம்.

(இ-ம்.) பாங்கிமதியுடன்பாடுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்.) முன்னுறவுணர்தலுங் குறையுறவுணர்தலு மிருவருமுளவழி யவன் வரவுணர்தலுமென் மூன்றுவகையினையுடைத்தாம் பாங்கிமதியுடன்பாடென்றவாறு. அவற்றுள், முன்னுறவுணர்தலாவது பாங்கிதலைமகளது வடிவு வேறுபாடுகண்டு, அதனானே கூட்டமுண்மையறிதல். குறையுறவுணர்தலாவது தலைமகன்றழையுங் கண்ணியுங்கொண்டுதன்பாற் குறையுற்றுநிற்பது கண்டதனாலே கூட்டமுண்மையறிதல். இருவருமுளவழியவன்வரவுணர்தலாவது தலைமகளுந்தானுமொருங்கிருந் துழித்தலைமகனவ்வாறு வரக்கண்டதனாலே கூட்டமுண்மையறிதல். (௨௨)

க௨௩. நாற்றமுந் தோற்றமு மொழுக்கமு முண்டியுஞ்
செய்வினை மறைப்புஞ் செலவும் பயில்வுமென்
றிவ்வகை யேழினு மையமுற் றோர்தலு
மவ்வகை தம்மா லையந் தீர்தலு
மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது
பல்வேறு கவர்பொருட் சொல்லினா டலுமென
முன்னுற வுணர்தன் மூன்றா குமே.

(இச்-ம்.) முன்னுறவுணர்தலின் பாகுபாடுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்.) நாற்றமுதலாகப் பயில்வீறாகச் சொல்லப்பட்ட வவ்வகையுடைய வேழினும் பாங்கியையமுற்றாராய்தலும், அவற்றானையயந்தீர்தலும், மெய்யினும் பொய்யினும் *குற்றேவறப்பாமற்பலவாய் வேறுபட்டவிருபொருட்பட்ட சொற்களானாராய்தலுமென முன்னுறவுணர்தன்மூவகையாமென்றவாறு. என்னை? "நாற்றமுந்தோற்றமுமொழுக்கமுமுண்டியுஞ், செய்வினைமறைப்பினுஞ்செலவினும் பயில்வினும், புணர்ச்சியெதிர்ப்பாடுள்ளுறுத்துவரூஉ, முணர்ச்சியேழினு முணர்ந்தபின்றை, மெய்யினும்பொய்யினும்வழிநிலைபிழையாது, பல்வேறுகவர்பொருணாட்டத்தானும்"(தொல்.பொருள்.களவி.௨௩.)என்றாராகலின்; அவற்றுள் நாற்றமாவது, தான் பண்டுபயின்றறியாததோர் நாற்றம். தோற்றமாவது கூட்டத்தாற்பிறந்ததோரழகு. ஒழுக்கமாவது, தெய்வந்தொழாமை முதலியன. உண்டியாவது, பண்டையிற்குறைந்தவுண்டி. செய்வினைமறைத்தலாவது, தலைமகடான் செய்யுந்தொழிலைப்பாங்கிக்குமறைத்தல். செலவாவது, ஆயத்தை நீங்கித் தனியேபெயர்தல். பயில்வாவது, எம்பொழுதுமோரிடத்தே நிற்றல்.

* குற்றேவனிலைதப்பாமல் என்பது பிரதிபேதம்.

பாங்கியவற்றுணைய முற்றோர்தற்குச்செய்யுள்:— "வண்டலையாயத்துட னயர்ந்தோவன்றிவண்டியிர்பூந், தண்டலையார்த்தழைக்கொய்தோதஞ்சைவா ணன்வெற்பிற், புண்டலைவேலினுங்கண்சிவப்பாரப்பொலஞ்சுனைத்தேன் கொண்டலைநீர்குடைந்தோவிவண்மேனிகுழைந்ததுவே." (தஞ்சை-௬௩.) என வும், "கண்ணுஞ்சேயரியாந்தன்றுநுதலு, நுண்வெயர்பொறித்துவண்டார்க் கும்மே, வாங்கமைமென்றோண்மடந்தை, யாங்காயினள்கொலென்னுமென் னெஞ்சே." (தொல்-பொரு-களவு-௨௩-உரை.) எனவும்வரும். பிறவுமன்ன.

ஐயந்தீர்தற்குச்செய்யுள்:— "திளைக்குந்திரைமேலுனக்குமுன்றோன்றலிற் செம்பொன்வெற்பை, வளைக்கும்பிரான்முடிவைகுதலாற்றஞ்சைவாணன் மண் மேல், விளைக்கும்புகழ்போல்வினங்குதலாற்செக்கர்விண்பிறைகாள், தளைக்குங் குழற்றிருவேதொழவேதகுந்தன்மையதே." (தஞ்சை-௬௪.) எனவும் "முன்னுந் தொழத்தோன்றிமுன்னெயிற்றுயத்திசையே, யின்னுந்தொழத்தோன்றிற்றீதே கான் -மன்னும், பொருகளிமால்யானைப்புகார்க்கிள்ளிபூண்போற், பெருங்கொளி யாண்மிக்கபிறை." (தொல்-பொரு-களவு-௨௩-உரை.) எனவும்வரும். பிறவுமன்ன.

மெய்யினும்பொய்யினும் வழிநிலைபிழையாது பல்வேறுகவர்பொருட்சொல் விநாடலுட்சுனைநயப்புரைத்தற்குச்செய்யுள்:— "பூட்டியவார்சிலைவீரரைவென் றெப்பொருப்பினுஞ்சீர், நீட்டியவாணன்றென்மாறையன்னீரிதழ்ச்செம்மை யுமை, யூட்டியவாளின்கருமையுந்தான்கொண்டுமக்கிங்ஙனே, குட்டியவாறுகன் றன்முல்லைமாலைசுனைபபுனலே." (தஞ்சை-௬௫) எனவரும்.

சுனைவியந்துரைத்தற்குச்செய்யுள்:—"மறலாயெதிர்ந்தமறமன்னர்வேழமலை யெறிவேற், றிறலார்முருகன்செழுந்தஞ்சைவாணன்றென்மாறைவையை, யற லார்குழலாய்நுதற்குறுவேர்வுந்துகின்போற், பெறலாமென்னிற்குடைவேனடி யேனுமபெருஞ்சுனையே." (தஞ்சை-௬௬.) எனவும், "பையுண்மாலைப்பழுமரம் படரிய, நொவ்வுப்பறைவாவலேனன்சிறகேய்க்கு, மடிசெவிக்குழவிதழீஇப்பெ யர்தர், திருகவுண்மடப்பிடியெவ்வங்கூர, வெந்திறலாளிவெரீஇச்சந்தின், பொரியரைமிளிரக்குத்திவான்கே, முருவவெண்கோடெக்கொண்டுகெழியுங், கடுங் கண்யானைகாலுறவொற்றலிற், கோவாவாரம்வீழ்ந்தெனக்குளிர்கொண்டு, பேஎ நாறுந்தாழ்நீர்ப்பனிச்சுனை, தோளாரெல்வளைதளிர்ப்பநின்போல், யானுமாடிக் காண்போதோழி, வளைவிறுதெழித்தசடரிலைநெடுவேற், றிகழ்பூண்முருகன்றீம் புனலலைவாய்க், கமழ்பூம்புறவிற்காரெதிர்ந்துறக்கனித்த, வொண்பொறி மஞ்ஞை போலவதோர், கண்கவர்வரிவனப்பெறுதலுண்டெனினே." (தொல்-பொருளியல்-௨௩-உரை.) என்வும் வரும்.

*தகையணங்குறுத்தற்குச்செய்யுள்:*— "குவளைவிலங்குமுதம்வெளுத்த குறையல்லவே, லவளைமறைத்துன்னைக்காட்டலுமாமலர்த்தேன்குதிக்கத்,தவளை குதிக்குந்தடம்பொய்கைசூழ்தஞ்சைவாணன்வெற்பி, லிவளைவரக்கண்டுயேயணங் கேபின்னெழுந்தருளே." (தஞ்சை-௬௭.) எனவும், "அம்மவாழிவெம்முலை யணங்கே, நிலனோவிசும்போநீரோவரையோ, வலமருந்தனிக்கோலஞ்சிறைச் சேவ, லுளிவாய்ப்புட்கொடியினியன்றுண்டித, தண்கயத்தலர்ந்தசெந்தாமரை யோ, யாவதாகநின்னுறைபதிதானே, மாயிருஞ்சிலம்பின்மடமகண்மாவின், றண் டளிர்புரையுமேனிவண்டுகொளச், சொரிமதுவிழிந்தபின்னருங்கூழை, நின்னே போலுமின்னிசைத்தேமொழி, யென்னினைக்குறுமகட்பிரிந்தவென், னின்ன னெஞ்சத்தொன்றுதெரிவிலனே." (..........) எனவும் வரும்.

*நடுங்கநாட்டத்திற்குச்செய்யுள்:*— "பால்போன்மொழிவஞ்சியஞ்சிநின்றே னிந்தப்பார்முழுது, மால்போற்புரந்தவன்மாறைவரோதயன்வாணன் வென்றி, வேல்போற்சிவந்துநெறிமுறைகோடியவேந்தன்வெய்ய. கோல்போற்கொடியன வாங்கொலையானையின்கோடுகண்டே." (தஞ்சை-௬௮.) எனவும், "பண்டிப் புனத்துட்பகலிடத்தேனலுட், கண்டிக்களிற்றையறிவன்மற்—றிண்டிக், கதிரான் பழையனூர்க்கார்நீலக்கண்ணாய், யுதிரமுடைத்திதன்கோடு." (தொல்-பொரு- கள-௨௩-உரை.) எனவும் வரும்.

இவற்றுள், முன்னையமூன்றும் மெய்யினாற்சொல்லிப் பின்னையமூன்றும் பொய்யினாற்சொல்லியது. பிறவுமன்ன. இவற்றுள், நடுங்கநாட்டத்திற்குச்சான் றோர்செய்யுளில்லையாகலினஃதிலக்கணமன்று. (௨௩)

௧௪௦. பெட்ட வாயில்பெற் றிரவுவலி யுறுத்தோன்
கண்ணியுந் தழையு மேந்தி நண்ணி
யூர்பெயர் கெடுதியோ டொழிந்தவும் வினவுழி
யாரே யிவர்மனத் தெண்ணமி யாதெனத்
தேர்தலு மெண்ணந் தெளிதலு மெனவாங்
கோரிரண் டாகுங் குறையுற வுணர்தல்.

(இ-ம்.) குறையுறவுணர்தலின்பாகுபாடுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) இயற்கைப்புணர்ச்சிப்பின்னே தலைமகளாற்பேணப்பட்ட வாயி லைப்பெற்றுப் பின்னிரந்துகுறையுறுதலைவலியுறுத்த தலைமகன் கண்ணியுந் தழையுமேந்திச்சார்ந்துநின் றூரும்பெயருங்கெடுதியுமொழிந்தவும் வினவவிடத் திவர்யாரோனவு மனத்தின்கணுளதாகியவெண்ணம் யாதெனவும் புரந்தியாராய்

தலும் அவனகத்தென்னைத்தினைத் தெளிதலுமெனவிரண்டாங்குறையுறவுணர்த லென்றவாறு. அவற்றள், பாங்கியையிரவுவலியுறுத்தற்குச்செய்யுள்:— "பொருமணிவெண்டிரைப்பைங்கடல்வங்கம்பொருந்திமுன்பு, தருமணிபின்பெற்றணிபவர்போற்சென்றுசார்ந்திரந்து, பருமணி நன்கலப்பாங்கியைநீங்கியபாவையைநா, மருமணிவண்டுறைதார்வாணன்மாறைமருவுதுமே." (தஞ்சை-சுக.) எனவரும்.

ஊர்வினாதற்குச்செய்யுள்:— "பதியேன்மிகவிப்புனத்திற்கியான்றனிப்போந்தனனும், பதியேதுசெல்லும்படிசொல்லுவீர்படிமேற்படிந்த, மதியேய்சுதைமதில்சூழ்தஞ்சைவாணன்றென்மாறைநவையை, நதியேய்சுழிநிகரும்பழிதீருந்திகல்லவரோ." (தஞ்சை-எ௦.) எனவரும்.

பேர்வினாதற்குச்செய்யுள்:—"கரைத்தாவியுந்தியகாவிரிவைகியகாலத்தினுந், தரைத்தாருவன்னசெந்தண்ணளிவாணன்றமிழ்த்தஞ்சைசூழ், வரைத்தாழ்சிலம்பினும்வாழ்பதியீதென்றவஞ்சியன்னீ, ருரைத்தாலிழிவதுண்டேற்பெயரேனுமுரைமின்களே." (தஞ்சை-எக.) எனவரும்.

கெடுதிவினாதற்குச்செய்யுள்:—"தண்பட்டமேவும்வயற்றஞ்சைவாணன்றமிழ்ச்சிலம்பிற், பண்பட்டதேமொழிப்பாவையன்னீர்பனைபட்டகையும், மண்பட்டகோடுமதம்பட்டவாயும்வடிக்கணைதோய், புண்பட்டமேனியுமாய்வந்ததோவொருபோர்க்களிறே." (தஞ்சை-எ௨) எனவும், "சிதவிரைக்கனகச்செந்தாமரைப்பொருட்டு, மாதனையீரம்போடுவந்ததோ—சோதிப், பொருதாரைவேற்றண்டன்பூபாலதீபன், கருதாரிலிக்கோர்களிறு." (.,..........,) எனவும்வரும்.

ஒழிந்தது வினாதற்குச்செய்யுள்:— "வனமார்குடிஞைப்பகைக்குரலாமெனவாணன்றஞ்சைப், புனமார்குளிரிப்புடைப்பொலியாற்கின்னே போயினமீண், டினமாமெனவந்திவ்வேனலெல்லாம்வௌவுமென்பதற்கோ, கனமாநறுங்குழலீர்மொழியாதொழிகாரணமே." (தஞ்சை-எ௩.,) எனவரும். பிறவுமன்ன.

யாரேயிவர்மனத்தெண்ணமியாதெனத் தேர்தற்குச்செய்யுள்:—"தரையாரவண்புகழ்தேக்கியவாணன்றமிழ்த்தஞ்சைசூழ், வரையாதுறும்பதியாதுநம்பேரென்பர்வார்துளிக்கார், புரையாரினையம்பொடுபோந்ததுண்டோவென்பர்பூங்கொடியீ, ருரையாததென்னென்பராலென்கொலோவிவருட்கொண்டதே"(தஞ்சை-எச.) எனவும், "கையதுசெயலையர்தழையேவினுய, தையபுண்வாய்மாவேகைவிட், டகலானம்மவிவ்வகன்புனத், தகையோனுள்ளியதறிதலுமரிதே"(.........) எனவும் வரும்.

MAHAMAHOPADHYAYA
DR U.V. SWAMINATHA IYER LIBRARY

எண்ணுக்கொளிதற்குச்செய்யுள்:—"யாதேயவிழினுமெய்ம்மைவிளம்பிலிவ்வேலைநின்று, தரவேவேன்றவலீசெய்யழற்புலிவேலைவலைவன்றென்மலைமறைவுறைவி, குரோ தெனமுன்விலைவிப்பின்வேறென்றலைப்படுதலா, நேரேயிவன் பொருட்டா லென்றுதோன்றுமென்னெஞ்சினுக்கே." (தஞ்சை-எ௬.) எனவும், "பூத்த வேங்கைவியன்சினையேறி, மயிலினமகவுமாட, என்றுதற்றொடிக்கினைத்ததத் தோனே." (தொல்-பொரு-செய்-௧௦௦, உரை.) எனவும் வரும்,

இவையெல்லாம் "பெட்டவாயில்பெற்றிரவுவலியுறுப்பினும், ஞூரும்பெய ருங்கெழுதியும்பிறவு, சீரிற்குறிப்பினியம்புக்கூறித், தோழியைக்குறையுறும்பகுதி யுந்தோழி, குறையவட்சார்த்திமெய்யுறக்கூறலு." (தொல்-பொரு-[illegible]-[illegible].) மென்பதனுல்வந்தன. ([illegible])

கசக. கையுறை யேந்திவர் தவ்வகை வினவுழி
யெதிர்மொழி கொடுத்தலு மிறைவனை நகுதலு
மதியி னவரவர் மனக்கருத் துணர்வுமென்
றிருவரு முளவழி யவன்வர வுணர்த
லொருமூன் றாகுந் தெரியுங் காலே.

(இ-ம) இருவருமுளவழியவன் வரவுணர்தலின் பாகுபாடுணர்த்துத லுதலிற்று.

(இ-ள்.) இருவருமுளவழி யவன்வரவுணர்தலென்பது தலைமகன்றழை யுங் கண்ணியுமேந்திமுன்புபோலவூர்பெயர்முதலியனவினவினவிடத்துத் தோ ழியதற் கெதிர்மொழி கொடுத்தலுமிறைவனை நகுதலுமதியினவரவர் மனக் கருத்துணர்வுமென வொருமூன்றுகுமாராயுங்காலத்தென்றவாறு. கையுறை யேந்திவருதற்குச்செய்யுள்:—"தண்டாமரைமலர்ப்பொன்னையும்பார்மங்கைதன் னையும்போல், வண்டார்குழன்மடவார்மணந்தார்சென்றுவாணன்றஞ்சை, நண் டாதணிபொங்கர்நீழலின்கீழ்நடன்கிடையார்க், கண்டாதரவையெல்லாஞ்சொல் லவோவல்லகாலமிதே." (தஞ்சை-எக.) எனவரும்.

தலைவனவ்வகை வினவுதற்குச்செய்யுள்:—"வல்லாரினுக்கொய்யவழுவியன் னீர்தஞ்சைவாணனொக்கன், மெல்லார்களுக்கிறைவனுடைத்துபோலவெருகஞெறு போதும், விலைவுக்கனைவதப்படிமெய்ச்சோர்க்கிளம்பட்டுவெய்துயிர்த்துப், புல்வுக் வுதமின்றியெனுக்குதோரும்புனக்கயலே." (தஞ்சை-[illegible].) என வரும். பிறவு மன்ன.

பாங்கியெதிர்மொழிகொடுத்தற்குச்செய்யுள்:—"மிக்குந்திறனுமதனையொப் பீர்தஞ்சைவாணன்மஞ்சு, தேக்குங்குடுமிச்சிறுமலைக்கேதிரிகோட்டிரலை, கோக் குஞ்சரமுங்குருதியுஞ்சோரக்கொடிச்சியரேங், காக்கும்புனமருங்கேதனியேவரக் கண்டிலமே," (தஞ்சை-எஅ.) எனவும், "வேங்கைமலரவெறிகமழ்தண்சிலம் பின், வாங்கமைமென்றோட்குறவர்மகளிரேஞ், சோர்ந்தகுருதியொழுகமற்றிப் புனத்தே, போந்திலவையகளிறு." (திணைமொழி யைம்பது. க.) எனவும்வரும்.

பாங்கியிறைவனைநகுதற்குச்செய்யுள்:— "மைவாளிலங்குகண்மங்கைநல் லாய்தஞ்சைவாணன்வெற்பி, லிவ்வாளிமொய்ம்பரின்றெய்தமெய்ம்மானிளமாந் தளிரின், செவ்வாளியுங்கொண்டுசேட்சென்றதாலன்றுசிதைகொண்கன், கை வாளியுங்கொண்டுபோனபொய்ம்மானினுங்கள்ளத்ததே." (தஞ்சை-எக.) என வரும்.

பாங்கிமதியினவரவர்மனக்கருத்துணர்தற்குச்செய்யுள்:— "புனங்காவலன் றிவள்பூண்டதுமாண்டகைபோந்ததுமா, னினங்காவலின்கலையெய்யவன்றுவிக லாழிவிந்தை, தனங்காவலன்றஞ்சைவாணனன்னாட்டிவர்தங்களிற்று, மனங்கா வல்கொண்டதெல்லாங்கண்களேசொல்லும்வாய்திறந்தே." (தஞ்சை-அ0.) என வும், "ஏனல்காவலிவளுமல்லள், மான்வழிவருகுவனிவனுமல்ல, னரந்தங்கண் ணியிவனோடிவளிடைக், காந்தவுள்ளமொடுகருதியதுபிறதே, நம்முன்னுணினர் போலத்தம்முண், மதுமறைந்துண்டோர்மகிழ்ச்சிபோல, வுள்ளத்துள்ளேமகிழ்ப, சொல்லுமாடுபகண்ணினனே." (தொல்-பொரு-கள-உ௩0. உரை.) எனவும் வரும். இவையெல்லாந்தோழிகூற்றுள் "வந்தகிழவனைமாயஞ்செப்பிப், பொ றுத்தகாரணங்குறித்தகாலையும்." (தொல்-பொரு-கள-உ௩.) என்பதனுற்கொள் ளப்பட்டன. (உ௫.)

கசஉ. ஈங்ஙனமியம்பிய விருநான்கு கிளவியும்
பாங்கி மதியுடன் பாட்டது விரியே.

ம்.) பாங்கிமதியுடன்பாட்டின் விரியிவையெனவுணர்த்துத னுத லிற்று.

(இ-ள்.) ஐயமுற்றோர்தன்முதலாக மதியினவரவர் மனக்கருத்துணர்த லீறுகச் சொல்லப்பட்ட வெட்டுக்கிளவியும் பாங்கிமதியுடம்பாட்டதுவிரியா மென்றவாறு. (உகூ)

கசங. இரந்துபின் னிற்றல் சேட்படை மடற்கூற்று
மடல்விலக் குடன்படன் மடற்கூற் றொழிதல்

குறையயப் பித்த னயத்தல் கூட்டல்
கூட லாயங் கூட்டல் வேட்டலென்
றீரறு வகைத்தே யிருங்ளையிற் கூட்டம்.

(இச் - ம்.) 12 பாங்கியிற்கூட்ட முணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) இரந்துபின்னிற்றன் முதலாகவேட்டலீறாகச் சொல்லப்பட்ட பன்னிரண்டுவகையினையுடைத்துப் பாங்கியிற்கூட்ட மென்றவாறு. (உஎ)

கசஎ. தலைவ னுட்கோள் சாற்றலும் பாங்கி
குலமுறை கிளத்தலுந் தலைவன் றலைவி
தன்னை யுயர்த்தலு நன்னுதற் பாங்கி
யறியாள் போன்று வினாதலு மிறையோ
னிறைவி தன்மை யியம்பலும் பாங்கி
தலைவி யருமை சாற்றலுந் தலைவ
னின்றியமை யாமை யியம்பலும் பாங்கி
நின்குறை நீயே சென்றுரை யென்றலும்
பாங்கியைத் தலைவன் பழித்தலும் பாங்கி
பேதைமை யூட்டலுங் காதலன் றலைவி
மூதறி வுடைமை மொழிதலும் பாங்கி
முன்னுற புணர்ச்சி முறையுறக் கூறலுந்
தன்னிலை தலைவன் சாற்றலும் பாங்கி
யுலகிய லுரைத்தலுந் தலைமகன் மறுத்தலும்
பாங்கி யஞ்சியச் சுறுத்தலு மாங்கவன்
கையுறை புகழ்தலுந் தையன் மறுத்தலு
மாற்றா நெஞ்சினோ டவன்புலத் தலுமவ
ளாற்றுவித் தகற்றலு மாகுமா லிந்து
மிரந்துபின் னிற்றற்குஞ் சேட்படுத் தற்கும்
பொருந்தவ வென்மனார் தெரிந்திசி னோரே.

(இச் - ம்.) 20 பாங்கியிற்கூட்டத்தின் விரியுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) தலைவனுட்கோள்சாற்றன் முதலாகப்பாங்கி யாற்றுவித்தகற்ற லீறாகச் சொல்லப்பட்ட விருபது மிரந்துபின்னிற்றற்குஞ் சேட்படுத்தற்கும் பொருந்துங்கிளவியென்று சொல்லுவராய்ந்தோரென்றவாறு, அவற்றுள்

தலைவனுட் கோள்சாற்றற்குச்செய்யுள்:—"வாவுங்கலைவிக்கைதகாவலன்வாணன் றென்மாறையன்னீ, ரேவுந்தொழிலெனக்கேதியலாதநிங்கேறுமக்கோர், மேவுஞ் செய்குன்றமுஞ்சோலையுமாகப்பொன்வெற்பும்விண்ணோர், காவுந்தரவும்வல்லே னெனையாளுங்கடைக்கண்வைத்தே." (தஞ்சை-அக.) எனவரும்.

பாங்கி குலமுறை கிளத்தற்குச்செய்யுள்:—"நீவேறுரைக்கின்றதென்குற மாதெங்கணேரிழைபோர், மாவேழவன்படைவாணன்றென்மாறைமணியையன் றித், தாவேதுமில்லாத்தமனியமீதுதலம்புரக்குங், கோவேயழுத்துவரோவறி யோருங்குருவிந்தமே." (தஞ்சை-அஉ.) எனவும், "இவளே, கானநண்ணிய காமர்சிறுகுடி, நீனிறப்பெருங்கடல்கலங்கவுள்புக்கு, மீனெறிபரதவர்மகளே நீயே, நெடுங்கொடிநுடங்குநியமமூதூர்க், கடுந்தேர்ச்செம்மல்காதன்மகனே, நிணச்சுறுவறுத்தவுணங்கல்வேண்டி, யினப்புளோப்புமெமக்குநலனெவனோ, புலவுநாறுதுஞ்செலநின்றீமோ, பெருநீர்விளையுளெஞ்சிறுநல்வாழ்க்கை, நும் மோடுபுரைவதோவன்றே, யெம்மனோரிற்செம்மலுமுடைத்தே." (நற்றிணை-௪.) எனவும் வரும்.

தலைவன்றலைவியையுயர்த்திக்கூறற்குச் செய்யுள்:—"மிக்காருளரல்லர்மெல் லியன்மாதரின்மேதினிமேற், றக்கார்புகழ்தஞ்சைவாணர்பிரான்றமிழ்நாடனை யாய், மைக்கார்நிகர்குழல்வள்ளிசெவ்வேளுக்குவல்லவையா, மிக்காரணமுனா ரதென்கொலோநின்றியம்புவதே." (தஞ்சை-அ௩.) எனவும், "திங்களுள்வில் லெழுதித்தேராதுவேல்விளக்கித், தங்களுளாளென்னுந்தகவிறலிங்கட், புனங் காக்கவைத்தார்போற்பூங்குழலைப்போந்தென், மனங்காக்கவைத்தார்மருண்டு." (திணைமாலைநூ-௩0.) எனவும் வரும்.

பாங்கியறியாள் போன்று வினுதற்குச் செய்யுள்:— "பொன்னியலூசலும் பொய்தலுமாடியெப்போதுநன்னீர், மன்னியநீலமுநித்திலமுங்குற்றுவாணன் றஞ்சை, யின்னியலாருயிளமரக்காவினிடம்பிரியாக், கன்னியர்தாம்பலர்யார்நின் னைவாட்டியகாரிகையே".(தஞ்சை-அச.) எனவும், "வாங்கிருங்கானலுள்வண்ட லயருந், தேங்கமழ்கூந்தன்மகளிருள், யாங்காகியதோபாங்குநின்னருளே." (...) எனவும் வரும்.

இறையோனிறைவி தன்மை யியம்பற்குச்செய்யுள்:— "தாளிணைமாந்தளி ரல்குல்பொற்றேரிடைசங்கைகொங்கை, கோளிணைகோலக்கரும்பைபணைதோள் கொடிக்கரும்பார், தோளிணைவேய்முகந்திங்கள்செவ்வாயிதழ்தொண்டையுண் கண், வாளிணைவார்குழலாய்வாணன்மாறையெம்மன்னுயிர்க்கே." (தஞ்சை- அ௫.) எனவும், "முலையேமுகிழ்முகிழ்த்தனவேதலைஇய, இளையமென்குரல் கிழக்குவீழ்ந்தனவே, செறிநிறைவெண்பலும்பறிமுறைநிரம்பினசுணங்குஞ்சில

தொன்றிணையேயணங்குதற், கியான்றனனறிவலென்னறியலளே, யாங்காகுவன் கொல்றானே, பெருமுதுசெல்வனொருமடமகளே." (குறுந்தொ-௩௩௭.) எனவும் வரும்.

பாங்கி தலைவியருமைசாற்றற்குச் செய்யுள்:—"புகழார்வரையெம்புரவலன் மாதர்ப்புதல்வியையே, நிகழாவெளியளென்றெண்ணப்பெறீரெமக்கென்றும்வண் மை, திகழாபரணன்செழுந்தஞ்சைவாணன்சிலம்பினுள்ளீர், ரகழார்கலியுலகிற் புலனானவணங்கவளே." (தஞ்சை-அ௬.) எனவும், "நெருநலுமுன்னாளெல்லையு மொருசிறைப், புதுவையாதலிற்கிளத்தனாணி, நேரிழைவளைத்தோணின்றோழி செய்த, வாருயிர்வருத்தங்களையாயோவென, வெற்குறையுறுதிராயிற் சொற் குறை, யெம்பதத்தெளியளல்லளெமக்கோர், கட்காண்கடவுளல்லளோபெரும, வாய்கொன்மிளகின்மலையங்கொழுங்கொடி, துஞ்சுபுலிவரிப் புறந்தைவரு, மஞ்சு சூழ்மணிவரைமன்னவன்மகளே." (தொல்-பொரு-கள-௨௩-உரை.) எனவும் வரும்.

தலைமகனின்றியறியாமையியம்பற்குச் செய்யுள்:-"வளைந்தலானகொங்கை மாதருவாய்த்தஞ்சைவாணன்வெற்பிற், புனைந்தாலனையபுனத்தயல்வாய்வண்டு போதகத்தே, னனைந்தாலனையவென்னல்வினைதான்வந்துநண்ணிற்றென்று, நினைந்தாலணங்கனையாய்தமியேனுயிர்நிற்கின்றதே." (தஞ்சை-அஎ.) எனவரும்.

பாங்கி நின்குறைநீயே சென்றுரையென்றற்குச் செய்யுள்:—"மருப்பாவிய தொங்கல்வாணன்றென்மாறைவனசமலர்த், திருப்பாவையன்னவென்சேயிழை யாட்குன்றிருவுளத்து, விருப்பாகியகுறையுள்ளதெல்லாஞ்சொல்லிவேண்டுகநீ, பொருப்பாமொழியப்பெறுமொம்மனோரிவைபோல்வனவே." (தஞ்சை-அஅ.) எனவும், "தன்னையுந்தானாணுஞ்சாயலாட்கீதுரைப்பி, னென்னையுநாணப்படுங் கண்டாய்-மன்னிய, வேயேய்மென்றோளிக்குவேறுவிளியொருவ, னீயேயு ரைத்துவிடு." (தொல்-பொரு-கள-௨௩-உரை.) எனவும் வரும்.

பாங்கியைத் தலைவன் பழித்தற்குச் செய்யுள்:—"வில்லார்நுதல்வெய்ய வேலார்விழிக்கென்மெலிவுசொல்ல, வல்லார்பிறரில்லைசொல்லவல்லையென்றியான்றஞ் சைவாணன்றெவ்வி, னெல்லாதிருநுமக்கென்றனைமேனின்றுணங் கியிற்கா, ளெல்லாமிரக்கநின்குறையேயல்லவென்குறையே." (தஞ்சை-அகூ.) எனவும், "மாதர்க்குறைமுடிக்கவல்லாயைவல்லையெனக், காதல்சிறப்பக்கருதியது-மேத கையு, பாம்படுதோல்குல்பயம்படுசீர்மாறைமான், றேம்படுவெண்பேர்மேற்செ லவு." (இலக்-பொரு-அகத்-௧௩௯-உரை-சிற்றகத்திணை.)

பாங்கி பேதைமை யூட்டற்குச்செய்யுள்:— "தேனுஞ்சுரும்புஞ்சேர்[illegible] கல்வாணன்றென்மாறைவெற்பா, மானு[illegible]வெய்து மன் னுயிரு, மூனுங்கவர்கின்றதன்னையர்போலயிலொத்தகண்ணாள், தானும்பிற ருள்ளநோயறியாததகைமையளே." (தஞ்சை-௧௦) எனவும், "கறித்தண்டகாம் வகுளமிவற்றை, வெறும்புதல்போலவேண்டாதுவெட்டி—யெறிந்துழுது, செந் தினைவித்துவார்தங்கைபிறர்நோய்க்கு, நொந்தினையவல்லளோநோக்கு." (திணை மாலை நூ-௨௪.) எனவும் வரும்.

காதலன் றலைவிழுதறிவுடைமை மொழிதற்குச்செய்யுள்:—"வருநீர்வன முலைமங்கைநல்லாய்செங்கைவாணன்வையை, தருநீர்மலிவயற்றஞ்சையன்னு ளன்றுதஞ்சமிலே, ஞருநீர்நவையுறக்கண்மலர்நீர்தெளித்தாற்றினளக, விருநீர் நிலங்கொன்றுமோவறியாளென்னுமிவ்வுரையே." (தஞ்சை-௧௧.) எனவும், "அணங்குடைப்பனித்துறைத்தொண்டியன்ன மணங்கமழ்பொழிற்குறிநல்கின ளுணங்கிடைப், பொங்கரிபரந்தவுண்க, ணங்கலுழ்மேனியசை இயவெமக்கே." (ஐங்குறு-௧௭௪.) எனவும் வரும்.

பாங்கி முன்னுறுபுணர்ச்சி முறையுறக் கூறற்குச்செய்யுள்:—"செறிவளர் காவிவயற்றஞ்சைவாணன்சிறுமலைமேல், நெறிவளர்வார்குழனேரிழையாளன்ன நீர்மையளேற், குறிவளர்காவின்முன் கூடியவாறின்னுங்கூடுகநீ, கறிவளர்சாரல் வெற்பாபிறராலென்னகாரியமே." (தஞ்சை-௧௨) எனவரும்.

தன்னிலைதலைவன் சாற்றற்குச்செய்யுள்:— "உரைத்தென்பிறவாதப்பைம் தொடியாகமுருவிடில்வெண், டிரைத்தென்கடன்முத்தந்தென்மலைச் சந்துஞ் செழும்பனிநீ, ரரைத்தென்புருகமெய்யபினும்வெப்பமாறுதினிநின், வரைத் தென்கருமமெல்லாந்தஞ்சைவாணன்வரையணங்கே." (தஞ்சை-௧௩.) எனவும், "தோளுங்கூந்தலும்பலபாராட்டி, வாழ்தலொல்லுமோவண்கோற் குட்டுவன், றொண்டியன்னவெற், கண்டுநயந்துநீநல்காக்காலே." (ஐங்குறு-௧௭௮) எனவும் வரும்.

பாங்கியுலகியலுரைத்தற்குச் செய்யுள்:— "விரையகநாண்மலர்மெல்லியன் மாதைவிரும்பினையேல், வரையகடவரைந்துகொணீதஞ்சைவாணன்முந்நீர்த், தரையகநான்மறைக்கேள் வியர்வேள்வியர்சான்றவர்த, முரையகநாடிமுன்னிட் டனதாருமுலகியலே." (தஞ்சை-௧௪.) எனவும், "கோடீரெல்வளைக்கொழுமடற் கூந்த, லாய்தொடிமடவரல்வேண்டுதியாயிற், றெண்கழிச்சேயிறாப்படூஉந், தண் கடற்சேர்ப்பவரைந்தனைகொண்மோ" (ஐங்குறு-௧௧௧) எனவும் வரும்.

தலைமகன் மறுத்தற்குச்செய்யுள்:— "வெண்டாமரைமங்கை[illegible]ய வேதியன்பா, லுண்டாகியதொல்லுலகியலாலுங்காரணங்கை, வண்டார்குழலி

வரைந்துகொள்வேன் றஞ்சைவாணன்வண்மை, கண்டாலருளுள்ளரீயென நா ருயிர்காத்தபின்னே.” (தஞ்சை-௧௫.) எனவரும்.

பாங்கியஞ்சியச்சுறுத்தற்குச் செய்யுள்:— “மல்லார்புயன் றஞ்சைவாணன் வெற்பாவெமர்வந்தினியிக், கல்லார்ஙியன்புனங்காவல்விடாரவர்காணின்மிகப், பொல்லாரிருணடதுபோதுமற்றியாங்களுமபோதுமிங்கு, நில்லாதெழுந்தருணீயுமிப்போதுநெடுந்தகையே.” (தஞ்சை-௧௪.) எனவும், “விரைகமழ்சாரல்விளை புனங்காப்பார், வரைபிடைவாரனீயைய—வரைகடியர், வில்லினர்வேலர்விரை செறுமம்பினர், கல்லிடைவாழ்கொமர்.” (திணைமொழி-௩.) எனவும் வரும்.

தலைவன்வரவுரை புகழ்தற்குச்செய்யுள்:— “மையார்பொழிற்றமிழ்த்தஞ் சைவாணன்சிறுமலைமே, லையாவெபதடற்றோளண்ணலேயெனியற்றருமா, றுமை யாளிற்றவம்பயில்கயிலாயத்துறும்பர்தரு, மிமையாசலத்துமல்லாவில்லையானி கரித்தழைக்கே.” (தஞ்சை-௧௭.) எனவும், “கண்ணிதகைபெறத்தனவேதன் ணென், பூந்தழைசெவ்வியபோலும்வாங்கிருவ், கடந்தமல்குலும்பொலிய, வேர் திழைகொள்கயாம்விழைகுவம்பெரிதே.” (.........) எனவும் வரும்.

பாங்கிகையுறை மறுத்தற்குச்செய்யுள்:— மல்குற்றதண்புனல்சூழ்தஞ்சை வாணன்மலயவெற்பா, நல்குற்றவையிந்தாட்டுவன்மையினன்றுதலா, னல்குற் றடத்தெமர்கண்டாலயிர்ப்பாதுவுமன்றிப், பல்குற்றமும்வருமால்யாங்கள்வாங் கேம்பசுந்தழையே.” (தஞ்சை-௧௮.) எனவும், “கொடுமலர்கொள்ளாரி வையே, யெம்மொடுவந்துகடலாடுமகளிரு, நெய்தலம்பைந்தழைப்பாவைபுனையா, ருடலகங்கொள்வோரின்மையிற், றொடலைக்குற்றசிலப்பூவினரே.” (ஐங்குறு-௧௮௭) எனவும் வரும்.

ஆற்றுநெஞ்சினேடவன்புலத்தற்குச் செய்யுள்:—‘ உழையும்வெங்கானமும் போலுங்கண்ணொருகாலமுள்ளங், குழையுமெம்பாலென்றகொண்டநெஞ்சே கலிக்கோடைமண்மேன், மழையுமந்தாரமும்வந்தனவாணன்றென்மாறையின் மார், தழையுநம்போலிங்ஙனேகவின்வாடத்தவஞ்செய்ததே.” (தஞ்சை - ௧௧,) எனவரும்.

பாங்கியாற்றுவித்தகற்றற்குச் செய்யுள்:— “சோலையில்வாழிளந்தோகைய ன்னாளைத்தொழுதிரந்திம், மாலையில்வாழிவாங்கொள்வல்யான் றஞ்சைவாணன் வெற்பா, வேலையில்வார்துகிரன்னவெய்யோன்வெயில்வெற்பின்மல்குங், காலை யில்வாபின்னையென்கையதாகுநின்கையுறையே.” (தஞ்சை-௧௦௦.) எனவும், “கான்வேங்கைபொன்சொரியுநன்மலைநன்னாட, கோள்வேங்கைபோற்கொடிய

ரெம்மைமயர்— கோள்வேங்கை, யன்னையானீயுமருந்தலையாமேலாமைக், கென்னையோநானையெளிது" (திணைமாலைநூறு ௨0.) எனவும் வரும்.

இவற்றுள்:—தலைமகன் கூற்றாயினவெல்லாமிரந்து பின்னிற்றற்கும் பாங்கி கூற்றாயினவெல்லாஞ் சேட்படுத்தற்குமுரிய் வெனக்கொள்க. (௨அ)

௧௪௫. இரந்து குறைபெறாது வருந்திய கிழவோன்
மடலே பொருளென மதித்தலும் பாங்கிக்
குலகின் மேல்வைத் துரைத்தலு மதனைத்
தன்மேல் வைத்துச் சாற்றலும் பாங்கி
தலைமக ளவயவத் தருமை சாற்றலுந்
தலைமகன் றன்னைத் தானே புகழ்தலு
மலர்முலைப் பாங்கி யருளியல் கிளத்தலுங்
கொண்டுநிலை கூறலு மென்றிவை யேழு
மடற்கூற் றிற்கு மடல்விலக் கிற்குங்
கடவ வென்மனார் கற்றறிந் தோரே.

இதுவுமது.

(இ-ள்.) இரந்துகுறைபெறாது வருந்தியகிழவோன் மடலேபொருளென மதித்தன்முதலாகப் பாங்கிகொண்டு நிலைகூறலீறாகச்சொல்லப்பட்டவேழுந்தலைமகன் மடற்கூற்றிற்குந் தோழிமடல் விலக்கிற்குமுரிய களவியென்று சொல்லுவர் கற்றுணர்ந்தோரென்றவாறு. பாங்கியையிரந்து குறைபெறாதுவருந்திய கிழவோன்மடலே பொருளெனமதித்தற்குச் செய்யுள்:— "திருந்தார்தொழுங்கழற் சேயன்னவாணன்றென்மாறைவெற்பி, லருந்தாவமுதன்னவஞ்சொனல்லா ரழ கார்குழைதோய், பெருந்தாரைவேல்விழிதந்தவெங்காமப்பிணிதனக்கு, மருந்தா வது நெஞ்சமேயில்லைவேறுமடலன்றியே" (தஞ்சை-௧0௧.) எனவும் "காம முழந்துவருந்தினார்க்கேம, மடலல்லதில்லைவலி." (திருக்குற-௧௱௩௧.) எனவும் வரும்.

பாங்கிக்குத்தலைமகன் மடலேற்றினையுலகின்மேல்வைத்துரைத்தற்குச் செய்யுள்:— "விரையூர்குழலியர்தந்தசிந்தாகுலவெள்ளநிறைக், கரையூர்பொழு தினங்காளையர்தாங்கிழிகைப்பிடித்துத், தரையூர்தொறும்பெண்ணைமாமடலூர்வர் தவிர்ந்துபின்னும், வரையூர்வர்தஞ்சையர்கோன்வாணன்மாறைநயில்வர்துறைதலே." தஞ்சை-௧0௨) எனவும், "மாவெனமடலுமூர்ப பூவெனக், குவிமுகிழெருக்கங் கண்ணியுஞ்சூடுப, மறுக்கினார்க்கவும்படுப, பிறிதுமாகுபகாமங்காழ்கொளினே" (குறுந்-௧௭.) எனவும் வரும்.

அம்மடலேற்றினைத் தலைமகன் றன்மேல்வைத்துச் சாற்றற்குச்செய்யுள்:—வன்பணிபோனிலந்தாங்கியவாணன்றென்மாறைவெற்பின், மின்பணிபூண்முலை மெல்லியலீர்குறை வேண்டியுங்கண், முன்பணிவேனின்றுநாளைவெண்பூளைமுகி ழெருக்கோ, டென்பணிவேன்மடன்மேல்வருவேனிவையென்பணியே." (தஞ்சை-௧௦௩.) எனவும், "தொடலைக்குறுந்தொடிதந்தாண்மடலொடு, மாலையுழக்குந் துயர்." (திருக்குற-௧௧௩௫.) எனவும் வரும்.

பாங்கி தலைமகளவயத்தருமை சாற்றற்குச்செய்யுள்:–"தொடையேயெருக் கென்புநீயணிந்தாலென்னை சூழ்வளையூர், மடையேய்வயற்றஞ்சைவாணன்வெற் பாமலரோன்வகுத்த, படையேநயனம்படைத்தபொற்பாவைபடியெடுக்க, விடையேதெனத்தெரியாதுரையாணியிடவரிதே." (தஞ்சை-௧௦௪.) எனவும், "கம்ப மதயானைக்கண்டன்கடற்றெண்டிக், கொம்பர்விழிக்குவமைகூறுவதெ—னம்பு, கருநீலஞ்செங்குவளைகாலன்வேலாலம், பெருநீர்மைதோற்றழிந்தபின்." (......) எனவும்வரும்.

தலைமகன் றன்னைத்தானே புகழ்தற்குச்செய்யுள்:— "நாறையலராவிரைப் போதிசையாதிசைநான்முகத்து, மறையலராவந்தமான்மகன்யான் றஞ்சைவா ணன்வையைத், துறையலராவியங்காவியங்கண்ணிதுணிந்துசொல்லுங், குறை யலரார்குழலாட்கினித்தீரக்குறையில்லையே." (தஞ்சை-௧௦௫.) எனவரும்.

பாங்கியருளியல்கிளத்தற்குச்செய்யுள்:—"செயலார்குடம்மையிற்செந்தலை யன்றிற்சினையுளவைபங், கயலார்வனவெண்குருகின்வண்பார்ப்புளகைக்கடங்கா, மயலார்களிற்றண்ணல்வாணன்றென்மாறைவையைத்துறைவா, வியலாதரு ளுடையார்க்கென்றுமாமடலேறுவதே." (தஞ்சை-௧௦௬.) எனவும், "வெள்ளாங் குருகின்பிள்ளையும்பலவே, யவையினும்பலவேசிறுகருங்காக்கை, யவையினும் புலவேகுவிமடலோங்கிரும், பெண்ணைமீமிசைத்தொடுத்த, தூக்கணங்குரீஇக் ட்டுளசினையே." (தொல்-பொரு-கள-௨௦.) எனவும் வரும்.

பாங்கிகொண்டுநிலைகூறற்குச்செய்யுள்:—"வெண்டோடணிமுகப்பைங் குரும்பைக்கொங்கைவெய்யவுண்கட், கண்டோர்விரும்புங்கரும்பனையாரைக் கடற்றுறைவா, தொண்டோர்குறைமுடிகொம்பனையார்நின்குறைமறத்தால், வண்டோவிடுந்தொக்கலான்வாணன்மாறைவளநகர்க்கே." (தஞ்சை-௧௦௭.) என வும், "முனைவுமாவல்சியெயினர்தங்கை, யிளமாவெயிற்றிக்குமிந்நிலையறியச், சொல்லினனிரக்குமளவை, வெள்வேல்விடலைவிரையாதீமே." (ஐங்குறு-௩௧௪.) எனவும் வரும்.

இது தலைமகனிலையைத்தாங்கிக்கொண்டுநிற்றலாற் கொண்டுநிலையாயிற்று. இச் சூத்திரத்துட் டலைமகன்கூற்றாயினவெல்லா மடற்கூற்றிற்கும், பாங்கிகூற்றாயினவெல்லாம் மடல்விலக்கிற்குமுரியவெனக் கொள்க. இவ்விரண்டு சூத்திரத்துள்ளு மெடுத்தோதப்பட்ட கிளவிக ளிவ்வியலுட் பாங்கிகூற்றுள், "குறையுறற்கெதிரியகிழவனைமறையுறப், பெருமையிற்பெயர்ப்பினு மலகுரைத்தொழிப்பினு, மருமையினகற்சியுமவளறிவுறுத்துப், பின்வாவென்றலும்பேதைமையூட்டலு, முன்னுறுபுணர்ச்சிமுறைநிறுத்துரைத்தலு, மஞ்சியச்சுறுத்தலுமுரைத்துழிக்கூட்டமோ, டெஞ்சாதுகிளந்தவிருநான்கு கிளவியும்." (தொல்-பொரு-கள-உங.) என்பதனாலும், தலைமகன்கூற்றுள்:—"தண்டாதிரப்பினுமற்றையவழியுஞ், சொல்லவட்சார்த்தலிற்புல்லியவகையினு, மறிந்தோளியாப்பினவ்வழிமருங்கிற், கேடும்பீடுங்கூறலுந்தோழி, நீக்கலினாகியநிலைபுரோக்கி, மடன்மாகூறுமிடனுமாருண்டே." (தொல்-பொரு-கள. கக.) என்பதனாலும், "இரந்துகுறையுற்றகிழவனைத்தோழி, நிரம்பநீக்கிநிறுத்தலன்றியும், வாய்மைகூறலும்பொய்தலைப்பெய்தலு, நல்வகையுடையநயத்திற்கூறியும், பல்வகையானும்படைக்கவும்பெறுமே." (தொல். பொருளி. சஉ.) என்பதனானுங் கொள்ளப்பட்டன. (உசு)

கசசு. தலைவி யிளமைத் தன்மை பாங்கி
தலைவற் குணர்த்தலுந் தலைவன் றலைவி
வருத்திய வண்ண முரைத்தலும் பாங்கி
செவ்வி யருமை செப்பலுந் தலைவன்
செவ்வி யெளிமை செப்பலும் பாங்கி
யென்னை மறைப்பி னெளிதென நகுதலு
மந்நகை பொறாஅ தவன்புலம் பலுமவ
டேற்றலுங் கையுறை யேற்றலுங் கிழவோ
னாற்றலு மென்னு மவ்வொன் பானுங்
குறைநேர் தற்கு மடற்கூற் றொழிதற்கு
முறைமையி னுரிய மூன்னுங் காலே.

இதுவுமது.

(இ-ள்.) தலைவியிளமைத்தன்மை பாங்கி தலைவற்குணர்த்தன்முதலாகக் கிழவோனாற்றலீறாகச் சொல்லப்பட்டவொன்பதும் பாங்கி குறைநேர்தற்குத் தலைமகன் மடற்கூற்றொழிதற்கு முறையானேயுரியவாங் கருதுங்காலத் தென்ற

வாறு. தலைவியிளமைத்தன்மை பாங்கி தலைவற்குணர்த்தற்குச் செய்யுள்:—"களவரும்பாகருநீலநகைக்காமக்கடலுளுமால், கொளவரும்பாலைம்குரும்பைக்குலஞ்செங்குமுதத்து வெண், டளவரும்பாநண்பனேதஞ்சைவாணன்றமிழ்வையைநாட், டிளவரும்பாமிவண்மாட்டென்கொலோநின்றிரப்பதுவே." (தஞ்சை. கoஅ.) எனவும், "நெறிமருப்பெருமைநீலவிரும்போத்து, வெறிமலர்ப்பொய்கையாம்பன்மயக்குங், கழனியூரன்மகளிவள், பழனவெதிரின்கொடிப்பிணையலளே." (ஐங்குறு-கக.) எனவும் வரும்.

தலைவன் றலைவிவருத்தியவண்ணமுரைத்தற்குச்செய்யுள்:— "சிலைபயில்வாணுதன்மின்னேபிறந்தவச்செவ்வியிலே, கொலைபயிலுகக்குருளையைப்போற்குறியோனிருந்த, மலைபயில்வார்தமிழ்வாணன்றென்மாமறைமயிலனையா, ளலைபயிலால்விழியாலெனதாவியணங்கினளே." (தஞ்சை-கoகூ.) எனவும், "குன்றக்குறவன்காதன்மடமகள், வண்டுபயில்கூந்தற்றண்டழைக்கொடிச்சி, வளையண்முளைவாளெயிற்ற, ளிளையளாயினுமாரணங்கினளே." (ஐங்குறு-உருகூ.) எனவும் வரும்.

பாங்கி தலைமகள்செவ்வியருமை செப்பற்குச்செய்யுள்:—"ஏடாரலங்கலிலங்கிலைவேல்வெற்பவேழலகும், வாடாமல்வந்தருள்வாணன்றென்மாறையில்வல்லியன்னாள், சூடாள்குவளையுமுல்லையுஞ்சூட்டுஞ்சுனையும்பந்து, மாடாடனக்கென்கொலோவடியேன்சென்றறிவிப்பதே." (தஞ்சை-கக0.) எனவும், "நெறிநீரிருங்கழிநீலமுஞ்சூடாள், பொறிமாண்வரியலவனாட்டலுமாட்டாள், சிறுநுதல்வோரும்பசிந்தியாநின்றாட், கெறிநீர்த்தண்சேர்ப்பயாவெனச்சொல்லிச்செல்கோ." (தொல். பொரு. கள. உ௩. உரை) எனவும் வரும்.

தலைவன் றலைவிசெவ்வியெளிமை செப்பற்குச்செய்யுள்:—"தேன்வந்தவாயிதழ்ச்சேயிழையாயிளஞ்செவ்விநவ்வி, மான்வந்தவாள்விழிவஞ்சிக்குநீ தஞ்சைவாணன்வெற்பில், யான்வந்தவாசென்றியம்புதியேலவர்யாவரென்னாள், தான்வந்தவாவுடனேநின்னையாரத்தழீஇக்கொளுமே." (தஞ்சை-ககக.) எனவும், "நீர்வளராம்பற்றூம்புடைத்திரள்கா, ஞாரைத்தன்னமதனின் மாமைக், குவளையன்னவேங்கெழின்மழைக்கட், டலையல்குற்பெருந்தோட்குறுமகட், கெய்தச்சென்றுசெப்புநர்ப்பெறினே, யவர்யாரென்குவளல்லண்முறைஅ, தத்தக்குமிழின்கொழுமுக்குவிளைகனி, யேறிருமடமாற்குவல்சியாகும், வல்விலோரிகானவிரும்பலொலிவருங்கூந்தல், பெரும்பேதுறுவளியாம்வந்தனமெனவே." (நற்றிணை. எ.) எனவும் வரும்.

பாங்கி யென்னைமறைப்பி னெளிதெனநகுதற்குச்செய்யுள்:— "மண்ணும்பயில்வித்துமொன்றினுஞ்சந்திரவாணன்வெற்பா, நண்ணும்புனலின்றியங்குரியாதுங்கனல்வினையாற், கண்ணுங்கருத்துங்கலந்தவாயினுங்கண்ணினும்மு,

ளெண்ணுங்குறையென்னைநீர்மறைத்தாலிங்கியல்வதன்றே." (தஞ்சை. ௧௧௨.) எனவரும்.

அந்நகைபொறாஅதவன்புலம்பற்குச்செய்யுள்:— "வெவ்வேலெறிந்தவிழுப் புண்ணின்மீட்டும்வெதுப்பியதோர், செவ்வேனுழைப்பவர்சிலமன்றே திருவே மருவார், வைவேலமர்வென்றவாணன்றென்மாறைமயில்பொருட்டால், கைவேனையஞ்சலென்றுநின்னவாறுநகைக்கின்றதே." (தஞ்சை. ௧௧௩.) எனவும், "நயனின்மையிற்பயனிதுவென்னாது, பூம்பொறிபொலிந்தவழலுமிழகன்பைப், பாம்புயிரணங்கியாங்கத்தீங்கிது, தகாதுவாழியோகுறுமகணகாஅ, துறைமதியுடையுமென்னுள்ளஞ்சாரற், கொடுவிற்கானவன்கோட்டுமாதொலைச்சிப், பச்சூன்பெய்தபகழிபோலச், சேயரிபரந்தமாயிருமழைக்க, ணுறாஅநோக்கமுற்றவென், பையுணெஞ்சமுய்யுமாறே." (நற்றிணை. ௭௫.) எனவும் வரும்.

பாங்கி தலைமகனைத்தேற்றற்குச்செய்யுள்:—" தன்கண்ணனையதன்பாங்கியருள்ளுந்தனக்குயிரா, மென்கண்ணநள்பெரிதெம்பெருமாட்டிகசிகன்மலர்த்தார், வன்கண்ணமர்வென்றவாணன்றென்மாறையில்வந்தவளாற், புன்கண்ணடையலைநீயினிவாடல்புரவலனே." (தஞ்சை. ௧௧௪.) எனவரும்.

பாங்கி கையுறையேற்றற்குச் செய்யுள்:—" ஒலிதெண்கடல்புடைசூழுலகேழினுமேழ்வினைதான், வலிதென்பதனைவயக்கியதாற்றஞ்சைவாணன்வெற்பா, கலிதங்குமாவுங்கமுகும்பலாவுங்கதலிகளும், பொலிதென்பொதியிலின்மேற்சந்தனாடவிப்பூந்தழையே." (தஞ்சை. ௧௧௫.) எனவரும்.

கிழவோனாற்றற்குச்செய்யுள்:—"மைப்போதணிதொங்கல்வாணனென்னாரெனவல்வினையேற், கப்போதடைந்தவருந்துயர்நீங்கியரும்பியபொற், செப்போதிளமுலையாணகைவாண்முகத்திங்களைக்கண், டிப்போதிளகியதாலிந்துகாந்தங்கொலென்னெஞ்சமே." (தஞ்சை. ௧௧௬.) எனவும், "உறாஅதவர்போற்சொலினுஞ்செறாஅர்சொ, லொல்லையுணரப்படும்." (திருக். ௧௦௯௬.) எனவும்வரும்.

இதனுட் பாங்கிகூற்றாயினவெல்லாங் குறைநேர்தற்கும், தலைமகன் கூற்றாயினவெல்லா மடற்கூற்றொழிதற்கு முரியனவெனக்கொள்க. இதனுளெடுத்தோதப்பட்டகிளவிகள்; "பண்பிற்பெயர்ப்பினும்பரிவுற்றுமெலியினு, மன்புற்றுநகினுமவட்பெற்றுமலியினு, மாற்றிடையுறுதலுமவ்வினைக்கியல்பே. (தொல். பொரு. கள. சூத். ௧௨.) என்பதனாற் கொள்ளப்பட்டன. இவற்றுட் சான்றோர் செய்யுள் இல்லாதவற்றிற்குச் சூத்திரந்தன்னையே இலக்கியமாகக்கொள்க.(௩௦)

கசஎ. இறைவன் றனக்குக் குறைநேர் பாங்கி
யிறைவிக் கவன்குறை யுணர்த்தலு மிறைவி
யறியாள் போன்று குறியாள் கூறலும்
பாங்கி யிறையோற் கண்டமை பகர்தலும்
பாங்கியைத் தலைவி மறைத்தலும் பாங்கி
யென்னை மறைப்ப தென்னெனத் தழாலுங்
கையுறை புகழ்வுமென் றிவ்விரு மூன்று
மெலிதாகச் சொல்லிக் குறைநயப் பித்தற்கும்
வலிதாகச் சொல்லி மறுத்தற்கு முரிய.

இதுவுமது.

(இ-ள்.) இறைவன்றனக்குக் குறைநேர்பாங்கி யிறைவிக்கவன்குறை யுணர்த்தன்முதலாகப் பாங்கி கையுறைபுகழ்தலீறாகச் சொல்லப்பட்ட வாறும் பாங்கி மெலிதாகச்சொல்லிக்குறைநயப்பித்தற்கும், தலைமகன் வலிதாகச்சொல்லி மறுத்தற்குமுரிய கிளவியாமென்றவாறு. இறைவன்றனக்குக் குறைநேர்பாங்கி யிறைவிக் கவன்குறையுணர்த்தற்குச் செய்யுள்:—"இருவர்கண்டால்வருமேத மென்றெண்ணியெனக்கெதிரே, வருவர்வந்தாலுந்தன்வாய்திறவார்தஞ்சை வாணன்வெற்பி, னொருவர்நஞ்சாரலுழையகலார்தழையுள்ளதெல்லாந், தருவர்வம் பார்முலையாயென்கொலோசெயத்தக்கதுவே." (தஞ்சை ச-ககஎ.) எனவும், "தன்குறையீதென்றான்றழைகொணருந்தண்சிலம்ப, னின்குறையென்னு நினைப்பினனாய்ப்-பொன்குறையு, நாள்வேங்கைகீழலுநண்ணானவன்கொலோ, கோள்வேங்கையன்னான்குறிப்பு." (திணைமாலைநூ. நக.) எனவும்வரும்.

இறைவி யறியாள்போன்று குறியாள்கூறற்குச் செய்யுள்:—"கலைதொடக் கிண்டகருவியர்தேன்பலகால்கொடுமோ, மலைதொடுத்தூர்ந்துவருகின்றதாற் றஞ் சைவாணன்வென்றிச், சிலைத்தொடுத்தாங்கெழில்சேர்நுதலாய்பயில்செம்பழுக் காய்க், குலைதொடுத்தோங்குபைங்கேழ்ப்பூகமாகக்குழாங்கவர்ந்தே." (தஞ்சை ச-ககஅ.) எனவும், "தூய்மைசான்றதொல்குடித்தோன்றி, வாய்மைநாவின்மதி யான்போல, வுயர்தவமுனிவர்சார்வாப், பெயராநிலையதுபிறங்குதிருமலையே." (.........) எனவும் வரும்.

பாங்கி யிறையோற்கண்டமைபகர்தற்குச் செய்யுள்:—"திவாகரனேயன்ன பேரொளிவாணன்றென்மாறைநன்னாட், டுவாமதிபோலுமொளிர்முகத்தாயென் னொளிப்பதுன்மே, லவாவினனாகியொர்மானைவினவிவந்தானையின்றிக், கவா

னுயர்சோலையின்வாய்வண்டலாருழைக்கண்டனமே." (தஞ்சை-௧௧௧.) எனவும், 'வளையணிமுன்கைவாலெயிற்றமர்நகை, யிளையராடுந்தழையவிழ்கானற், குறுந்துறைவினவினின்ற, நெடுந்தோளண்ணற்கண்டிகும்யாமே." (ஐங்குறு. ௧௧௮.) எனவும் வரும்.

பாங்கியைத் தலைவி மறைத்தற்குச் செய்யுள்:—"செவ்வண்ணவேல்விழியாய்தஞ்சைவாணன்றென்மாறைநன்னாட், டிவ்வண்ணநீசொல்வதேற்பதன்றானின்னிடையெனத்தா, மெய்வண்ணம்வாடிவெறிதேவருந்திவிருந்தின ராய்க், கைவண்ணவார்தழைகொண்டுசென்றார்தமைக்கண்டிலனே." (தஞ்சை.௧௨௦.) எனவும், "தெருவின்கட், காரணமின்றிக்கலங்குவார்க்கண்டுநீ, வாரணவாசிப்பதம்பெயர்த்தலேதில, நீநின்மேற்கொள்வதெவன்." (கலித்-௬௦) எனவும்வரும்.

பாங்கி யென்னைமறைப்பதென்னெனத்தழாற்குச் செய்யுள்:—"பாக்கின்றசெவ்விதழ்ப்பங்கயப்பாதம்பணிந்துநின்னை, யிரக்கின்றதொன்றையு மெண்ணலையாலெழுபார்முழுதும், புரக்கின்றகோன்றஞ்சைவாணன்பொதியிலிற்பொய்த்தென்னைநீ, கரக்கின்றதென்னைகொலென்னுயிராகியகாரிகையே." (தஞ்சை-௧௨௧.) எனவும், "வான்போழ்வானத்துவயங்குகதிர்சிதறிக், கோள்சேர்ந்துகிடந்தகுழவிப்பிறையேய்ப்பப், பொறியணிதிலகநறுநுதல்வியர்ப்பப், பொற்பப்புனைந்தநற்போதவிழ்ந்து, நறியநாறுநின்கூந்தலுமன்றி, யருங்கடி மூதூர் மருங்கிற் போகி, விசும்புதொடநிவந்தவியன்பெருங்கோயில், பசும்பொனன்கலம்பரிசிலாக, வடையார்த்துறந்தவருந்திறலயிலவன், படைத்தலைபெயர்த்தகறையெஃகம்போலக், கடைசிவந்தனவேகருங்கயன்மழைக்கண், ணென்னெனுடுகுழாயாகினின்றே, டாடலஞ்சுவறேழினீடுறை, நிறைகடலுமிழ்ந்தநீணீர்ப்பவளவா, யோதத்துப்பனித்திரைபொருதகால்சாய், புன்னைக்காமர்புதுப்பூவுதிர, நூல்கான்முத்தினுண்ணிதினுறைய, நெடும்பணைப்பள்ளிவீழ, மிடுமணலெக்கர்க்கானல்யானே." (...............) எனவும் வரும்.

பாங்கிகையுறைபுகழ்தற்குச்செய்யுள்:—"சூடத்தகுவனவல்லவெல்லாம்படிசொல்லினுந்தாம், வாடத்தகுவனவல்லநல்லாய்தஞ்சைவாணன்வெற்பார், தேடத்தகுவனவல்லதல்லாதசிலம்பினுள்ளார், நாடத்தகுவனவல்லகல்லாநறுந் தழையே." (தஞ்சை-௧௨௨.) எனவும், "நெய்யொடுமயக்கியவுழுந்துநூற்றன்ன, வயலையஞ்சிலம்பின்றலையது, செயலையம்பகைத்தழைவாடுமன்னாய்." (ஐங்குறு. ௨௧௧.) எனவும் வரும்.

இதனுட் பாங்கிகூற்றாயினவெல்லாங்குறைநயப்பித்தற்குந் தலைமகள்கூற்றாயினவெல்லாங்குறைமறுத்தற்கு முரியவெனக்கொள்க. (௩௧.)

௧௪௮. தோழி கிழவோன் றுயர்நிலை கிளத்தலு
மறுத்தற் கருமை மாட்டலுந் தலைவன்
குறிப்புவே றாக நெறிப்படக் கூறலுந்
தலைவியை முனிதலுந் தலைவி பாங்கி
தன்னை முனிதலுந் தன்கைக் கையுறை
யேற்றலு மெனமுறை சாற்றிய வாறும்
வலிதாகச் சொல்லிக் குறைநயப் பித்தற்கு
மெலிதாகச் சொல்லி மேவற்கு முரிய.

இதுவுமது.

(இ-ள்.) தோழி கிழவோன்றுயர்நிலைகிளத்தன்முதலாகக் கையுறையேற்ற லீறாக முறையேசொல்லப்பட்டவாறும் வலிதாகச்சொல்லிக்குறைநயப்பித்தற்கு மெலிதாகச்சொல்லிமேவற்கு முரிய கிளவிகளாமென்றவாறு:—தோழி கிழவோன்றுயர்நிலைகிளத்தற்குச் செய்யுள்:— "வளையுங்குழல்வஞ்சிவாணன்றென் மாறைவரைக் களிறு, திளையுந்தழையும்பிடியொடுமேயந்துதெளிந்தவின் னீர், சுனையுண்டசோகநிழற்சோகநீங்கித்துயில்வதுகண், டனையுங்கடைக் கணியா வினையாதிற்பரேதிலரே." (தஞ்சை-௧௨௩.) எனவும், "பருவரனெஞ்சமேவற விராது, செருவேலுதியன்சேண்விளங்குமுசிறிக், கருங்கழிக்காவியொடுகலாங் கருதிய, பெருங்கண்மாயோனேனாங்கடிகொண்ட, செந்தினைகவர்ந்தபைங்கண் வேழங், கருவரைப்பிரசங்கையின்வாங்கி, யீயினமிரியவீசி, வயவுப்பிடியின்வா யுறக்கொடுத்த, செவ்விநோக்கி, யுருகுநெஞ்சமொடுநீடுநினைந், தருகுசென்றும வியுமென்னையுநோக்கிக், கழலொலிகாப்பவொதுங்கி, நிழலெனநிற்பனொருவனை நினைந்தே." (............) எனவும் வரும்.

தோழி தலைமகனை மறுத்தற்கருமைமாட்டற்குச்செய்யுள்:—"கையுந்தழையு முன்காண்டொறுங்காண்டொறுங்கட்டுரைத்த பொய்யுந்தொலைந்தன பூந்தழை போலரிபோர்த்துநஞ்சு, மையுங்கலந்துண்டவாள்விழியாய்தஞ்சைவாணன்வெற் பர், மெய்யுந்துவண்டதென்னுன்முடியாதுவெளிநிற்கவே." (தஞ்சை-௧௨௯.) எனவும், "தேர்சேணீக்கித்தமியனிவ்வந்து, நம்மூர்யாதென்றுன்னிநனியொ துங்கி, முன்னுட்போகியதுறைவனென்ன, லகலிலைநாவலுண்டுறையுதிர்ந்த, கனிகவின்சிதையவாங்கிக்கொண்டுதன், குழைவேரளைவீழ்துணைக்கிடூஉ,மலவற் காண்டிகநற்பாற்றிதுவென, நினைந்தநெஞ்சமொடுநெடிதுபெயர்ந்தோனே, யதுக் கண்டோன்றுந்தேரோயின்று, நாமெதிர்கொள்ளேமாகிற்றுனது, துணிகுவன் போலாநாணுமிகவுடையன், வெண்மணனெடுங்கோட்டுமறைகோ, வம்மவாழி கூறுமதியெமக்கே." (அகநா-௩௪0.) எனவும் வரும்.

தோழி தலைமகன்குறிப்புவேறாக நெறிப்படக்கூறற்குச்செய்யுள்:-"விடையான்மிசைவருமேருவில்லாளனுடைமேழிவென்றிப், படையாளனும்வெம்பகைகொள்வதோபகல்போலுமெய்ம்மை, யுடையானுயர்தஞ்சைவாணனென்னுமொன லொல்கியநுண், ணிடையாய்பிரிந்துகொலோவறியேன்வெறப்பெண்ணுவதே." (தஞ்சை-கஉ௫.)எனவும், "மறவல்வாழிதோழிதுறைவர், கடல்புரைபெருங்கிளை நாப்பண், மடல்புனைந்தேறிநிற்பாடும்பொழுதே." (தொல்-பொரு-கள-உ௩. உரை.) எனவும் வரும்.

தோழி தலைவியையுணர்தற்குச்செய்யுள்:-"தூற்றுதலரைமறைப்பவர்க்கே குறைசொல்லுகுற்ற,மேற்றுதொழியெனையெம்பெருமாட்டிசென்றேற்றவர்க்கு மாற்றுதருள்செங்கைவாணன்றென்மாறையில்வந்துநெஞ்சம், போற்றுதுநின்ற யலேன்சொன்னதீங்குபொறுத்தருளே." (தஞ்சை-கஉ௬) எனவும், "மாயோனன்னமால்வரைக்கவாஅன், வாலியோனன்னவயங்குவெள்ளருவி, யம்மலைக் கிழவோனின்னயந்தென்றும், வருந்தினனென்பதோர்வாய்ச்சொற்றேறாய், நீயுங்கண்டுநுமரொடுமெண்ணி, யறிவறிந்தளவல்வேண்டுமறுத்தற், கரியர்வாழி தோழிபெரியோர், நாடிநட்பினல்லது, நட்டுநாடார்தமொட்டியோர்திறத்தே." (தொல். பொரு. கள. உ௩. உரை.) எனவும்வரும்.

தலைவி பாங்கியையுணர்தற்குச்செய்யுள்:— "மற்றேதவர்நினைவார்தஞ்சை வாணன்வரையின்முந்நாட், பொற்றேரின்வந்துபுணர்ந்துசென்றார்தம்பொருட்டு நம்மைக், குற்றேவன்மங்கைகுறையிரந்தாளெனுங்குற்றமின்னா, ளற்றேதவறு நம்பாலில்லையாகவுமெய்தியதே." (தஞ்சை. கஉ௭.) எனவும், "விட்டகுதிரை வியப்பினன்ன, விசும்புதோய்பசுங்கழைக்குன்றநாடன், யாந்தற்படர்ந்தமையறி யான்றனும், வேனிலானேறுபோலச், சாயினனென்பநம்மாணலநயந்தே." (குறுந்தொ, எ௪.) எனவும் வரும்,

தலைவி பாங்கிதன்கைக்கையுறையேற்றற்குச்செய்யுள்:—"ஆற்றுந்தலைவ ரூந்துயராற்றினுமாற்றலனெண், மாற்றும்புனையின்மயிலனையாய்தஞ்சைவாணன் றெவ்விற், போற்றுங்கொடுவினையேன்புனையாவிடிற்போந்தலரோ, தூற்றுந்தழை யென்றுதொன்றெங்ஙனேவந்துதோன்றியதே." (தஞ்சை - கஉஅ.) எனவும், "சிலம்பின்மேய்ந்தசிறுகோட்டுச்சேதா, வலங்குகுலைக்காந்தளுண்டித்தாதுகக், கன்றுதாய்மருளுங்குன்றநாட, னுடுக்குந்தழைதந்தனனேயவையா, முடுப்பின்யா யஞ்சுதுமேகொடுப்பிற், கேளிடைபடுத்தலுமஞ்சுதுமாயிடை, வாடுவகொல்லோ தாமேயவர்மலைப், போருடைவருடையும்பாயாச், சூருடையடுக்கத்தகொயற்கருந் தழையே."(நற்றிணை, ௩௫௯.) எனவும் வரும்,

இதனுட் பாங்கிகூற்றுயினவெல்லாங் குறையைப்பித்தற்குந் தலைவிகூற்று யினவெல்லாங் குறைநேர்தற்குமுரியகிளவியெனக்கொள்க. (ந.உ)

கசசு. இறைவி கையுறை யேற்றமை பாங்கி
யிறைவற் குணர்த்தலுங் குறியிடங் கூறலுங்
குறியிடத் திறைவியைக் கொண்டு சேறலுங்
குறியிடத் துய்த்து நீங்கலு மிறையோ
னிடத்தெதிர்ப் படுதலு மியைதலும் புகழ்தலும்
விடுத்தலும் பாங்கி மெல்லியற் சார்ந்து
கையுறை காட்டலு மையுறை கண்ணியைப்
பாங்கிற் கூட்டலு நீங்கித் தலைவற்
கோம்படை சாற்றலு முலகியன் மேம்பட
விருந்து விலக்கலும் பெருந்தகை விருந்திறை
விரும்பலு மென்னத் தெரிந்த பன்மூன்றுங்
கூட்டன் முதலா வேட்ட வீறாப்
பாங்கிக்கு வகுத்த நான்கிற்கு முரிய.

இதுவுமது.

(இ-ள்.) இறைவி கையுறையேற்றமை பாங்கி யிறைவற்குணர்த்தன் முதலாகத் தலைமகன் விருந்திறைவிரும்பலீறாகவாராய்ந்த பதின்மூன்றுங் கூட்டலுங் கூடலும் பாங்கிற்கூட்டலும் வேட்டலுமென நான்கிற்குமுரியவாமென்றவாறு. இறைவி கையுறையேற்றமை பாங்கி யிறைவற்குணர்த்தற்குச்செய்யுள்:—“போயானளித்தலுங்கைகுவித்தேற்றபின்போற்றியன்பாற், சாயாதகொங்கையின்மேலணைத்தாடஞ்சைவாணன்வெற்பா, காயாமலரன்னமேனிமெய் யாக நின் கையுறையை, நீயாகவல்லதுமார்தழையாகநினைந்திலளே.” (தஞ்சை-கஉக.)எனவும், “தந்துநீயளித்ததண்டழைகாண்டலும், வந்தவெதிர்ந்தமடந்தைதன்னெஞ்ச, மண்மிசைவிளங்கியவழுத்திர்மதியா, னுண்ணியற்பனுவனுழைபொருளுனித்த, வாய்மொழியமுதமடுக்குவண்மன்னே, யானிஃறபெற்றதுமிலளே.” (.........) எனவும் வரும்.

பாங்கி தலைமகற்குக் குறியிடங்கூறற்குச்செய்யுள்:—“அணிமாமலர்மயிலைப் புயத்துணங்கொளாகமெனு, மணிமாளிகைவைத்தவாணன்வண்காவலன்மாறை வெற்பா, துணிமாமரகதப்பாசறைவேலைச்சுடரவன்போற், பணிமாமணிதிகழும்

கல்யாங்கன்பயிலிடமே." (தஞ்சை-கூ0.) எனவும், "கடும்புலால்புன்னைகடி ந்துறைவ, படும்புலாற்புட்கடிவான்புக்க—தடம்புலாந், தாழைமாஞாழற்றைத் யர்ந்ததாழ்பொழி, லேழைமானோக்கியிடம்." (திணைமாலை நூ. சச.) எனவும் வரும்.

பாங்கிகுறியிடத்திறைவியைக்கொண்டு சேறற்குச்செய்யுள்:— "நாமாவி ழ்கிநறுமலர்குற்றூநந்தாவனத்துத், தேமாவிளந்தளிர்செவ்வண்ணங் கொய்து லம்பெதிர்கூய், வாமானெடுங்கண்மடந்தைநல்லாய்தஞ்சைவாணன்வெற்பிற், மாதவிப்பந்தர்வாய்விளையாடுகம்போதுகவே." (தஞ்சை. கூக.) எனவரும்.

பாங்கிதலைமகளைக்குறியிடத்துய்த்து நீங்கற்குச்செய்யுள்:—"கண்சா ல்கையுருக்கொண்டுதன்வேன் மயில்காந்தள்வள்ளி, யெண்சாய வென்றனை யென்றுசெவ்வேளிவரும்பவளம், வண்சாயொசிக்கும்வயற்றஞ்சைவாணன்மல மராத், தண்சாயைநின்றணங்குந்தைபனிநிற்கசாரலிலே." (தஞ்சை. கூஉ.) எனவும், "செங்களம்படக்கொன்றவுணர்த்தேய்த்த, செங்கோலம்பின்செங் கோட்டியானைக், கழலொடிச்சேஎய்குன்றம், குருதிப்பூவின்குலைக்காந்தட்டே." (குறுந்தொகை. க.) எனவும் வரும்.

இறைவியிறையோனிடத்தெதிர்ப்படுதற்குச்செய்யுள்:—"முயங்கியநூபுரப் பங்கயத்தாளுமுலைசுமந்து, தயங்கியநூலிடைதானுமென்போலத்தளர்வுறவிங், கியங்கியவாறென்மனத்திருணீக்கவென்றேதுணிந்தோ, வயங்கியசீருடை யான் வாணன்மாறைமணிவிளக்கே." (தஞ்சை. கூக.) எனவரும்.

புணர்ச்சியின் மகிழ்தற்குச்செய்யுள்:— "தருந்தாருவஞ்சுங்கொடையுடை யான்றஞ்சைவாணனின்சொற், செருந்தார்பசுந்தமிழ்த்தென்வரைமேற் செம் பொன்மேருவெற்பாற், கருந்தாரைநஞ்சுமிழ்வாசுகியால்வெண்கடல்கடைந்து, வருந்தாவமுதளித்தாள்வல்லவாமிம்மடக்கொடியே." (தஞ்சை. கூச.) என வரும்.

புகழ்தற்குச்செய்யுள்:— "மயனூர்விதித்தன்னமாமதில்சூழ்தஞ்சைவாணன் வெற்பிற், பயனூர்பயோதரப்பாவையன்னீர்பசும்பொற்குழைதோய், நயனூர விந்தத்துஞ்சுநம்வாயிதழ்நல்லமுத, மயனூர்படைத்திலரேலடங்காதவ்வானுக் குமே." (தஞ்சை. கூரு.) எனவரும்.

தலைமகளைத்தலைமகன்விடுத்தற்குச் செய்யுள்:— "நேயம்புகலிடமின்றிநின் றால்வந்துநின்றதுபோ, லாயம்புகலவடைந்தருணியடையாதமன்னர், வாயம்புக

வில்வணக்கியவாணன்றென்மாறைநாடனனீர்த், தூயம்புகரினைவேல்விழி யாய் நின்றனையுடனே." (தஞ்சை. ௧௩௬.) என வரும்.

பாங்கிதலைவியைச்சார்ந்து கையுறைகாட்டற்குச்செய்யுள்:— "பொய்போலிடைநின்விழிபோற்குவளையம்போதிவைநின், மெய்போலசோகமினிர்பூந்தழையிவைமெல்லியனின், கைபோற்சவின்கொள்செங்காந்தளம்போதிவை கண்டருள் யான், மைபோற்குழலிதந்தேன்றஞ்சைவாணன்வரையினின்றே." (தஞ்சை. ௧௩௭.) எனவும், "நறுமபூங்கண்ணியும்பெருந்தண்கோதையு, நகைவாய்ப்பிணையலுமுகைவாய்ச்சூட்டும், புனைந்தனையருளல்வேண்டுஞ், சினைக்கொடானைச் செழுமடமானே," (...........) எனவும் வரும்.

பாங்கிதலைவியைப் பாங்கிற்கூட்டற்குச்செய்யுள்:— "குனிநாண்மதிநுதற்கோகிலமேநின்குழலிலெல்லாப், பனிநாண்மலரும்பறித்தணிந்தேனிந்தப் பார்மடந்தை, தனிநாயகன்றஞ்சைவாணன்றன்சாரற்றனித்துநில்லா, தினிநாமகன்றிளையார்விளையாடிடமெய்துதுமே." (தஞ்சை. ௧௩௮.) எனவரும்.

பாங்கிதலைவியைநீங்கித் தலைவற்கோம்படைசாற்றற்குச்செய்யுள்:—"சின்னுண்மலர்க்குழல்காரணமாச்செவ்விபார்த்துழன்று, பன்னுநுரைத்தபணிமொழிநோக்கிப்பழிநமக்கி, தென்னுநிடைப்பட்டவென்னிலைநீமறவேலிறைவா, தன்னுநமெய்ப்புகழான்றஞ்சைவாணன்றமிழ்வெற்பிலே."(தஞ்சை. ௧௩௯.) எனவும், "அவரைபொருந்தியபைங்குரலேனற், கவரிமடமாக்கதூஉம்படர்சாரற், கானகநாடமறவல்வயங்கிழைக், கியானிடைநின்றபுணே." (ஐந்திணையெழுபது. ௧.) எனவும் வரும்.

பாங்கிதலைமகனையுலகியன்மேம்படவிருந்து விலக்கற்குச்செய்யுள்:-"வலைப்பெய்தமான்றசைதேன்றோய்த்தருந்திமரைமுலைப்பா, லுலைப்பெய்தவார் தினைமூரலுமுண்டுளங்கூருவகை, தலைப்பெய்தநாளனையான்றஞ்சைவாணன்சயிலத்தெம்மூ, ரிலைப்பெய்ததாழ்குரம்பைத்தங்கினுலுமக்கென்வருமே." (தஞ்சை. ௧௪௦.) எனவும், "பன்னுளெவ்வந்தீரப்பகல்வந்து, புன்னையம்பொதும்பினின்னிழமழீஇ, மாலைமான்கொளநோக்கிப்பண்ணுய்ந்து, வலவன்வண்டேரியக்கநீயுஞ், செலவிருப்புறுதலொழிகதில்லமம, செல்லாநல்லிசைப்பொலம்பூட்டி ரையன், பல்பூங்கானற்பவத்திரியனவிவ, ணல்லெழிலின்னலந்தொலையவொல்லெனக், கழியேயோதமல்கின்றவழியே, வள்ளெயிற்றரவொடுவயமீன் கொட்குஞ், சென்றோர்மன்றமாறின்றபொழுதென, நின்றிறந்தவலம்வீடவின்றிவட், சேப்பினெவனோபூக்கேழ்புலம்ப, பசுமீனொடுத்தவெண்ணென்மாஅத்து, அயிர்மிதிமாவார்குவனக்கே, வடவர்தந்தவான்கேழ்வட்டங், குடபுலவுறப்பிற்கூட்டுபுநிதழ்த்திய, வண்டிமிர்நறுஞ்சாந்தணிகுவந்திண்டிமி, லெல்லுத்தொழின்மடுத்த

வல்வினைப்பாதவர், கூருளிக்கடுவிசைமாட்டலிற்பாய்புடன், கோட்சுறாக்கிழித்த கொடுமுடிநெடுவலை, தண்கடலசைவளியெறிதொறும்வினைவிட்டு, முன்றிற் றாழைதூங்கும், தெண்கடற்பரப்பினெம்முறைவினூர்க்கே." (அகநா. ௩௪௰.) எனவும் வரும்.

தலைமகன்விருந்திறைவிரும்பற்குச்செய்யுள்:-"மஞ்சூட்டியன்னசைதமதில் சூழ்தஞ்சைவாணன்வெற்பிற், பஞ்சூட்டியமென்பதயுகத்தீருங்கள்பாடியின்மான், வெஞ்சூட்டிழுதன்னவூனும்பைந்தேனும்விருந்தினர்க்குச், செஞ்சூட்டிளகு பொன்போற்றினைமூரலுந்தெள்ளமுதே." (தஞ்சை. ௧௪௧.) எனவும் வரும்.

இதனுட்பாங்கிகூற்றாயினவெல்லாங்கூட்டற்குமவேட்டற்குமுரியன; தலைமகன்கூற்றாயினவெல்லாங் கூடற்குங்கூட்டற்கு முரியவெனக்கொள்க. இம்மூன்றுசூத்திரத்துள்ளுமெடுத்தோதப்பட்டவிளவிகள், பாங்கிகூற்றுள் "நன்னயம்பெற்றுழிநயம்புரி." (தொல். பொருள். களவியல். ௨௩.) என்பதனானுந் தலைமகன்கூற்றுள்"வேளாணெதிரும்விருந்தின்"(தொல். பொருள். களவி. ௧௬.) என்பதனானுங்கொள்ளப்பட்டன. (௩௩.)

௧௫௰. அற்றமில் சிறப்பினிவ் வறுபத் தொன்றுங்
குற்றமில் பாங்கியிற் கூட்டத்து விரியே.

(இ-ம்.) பாங்கியிற்கூட்டத்துவிரியெல்லாந் தொகுத்துணர்த்துத லுதலிற்று.

(இ-ள்.) தலைமகனுட்கோள்சாற்றன்முதலாக விருந்திறைவிரும்ப லீறாகச்சொல்லப்பட்ட விவ்வறுபத்தொருகிளவியும் பாங்கியிற்கூட்டத்துவிரியா மென்றவாறு. (௩௪.)

௧௫௧. கூட்டல் கூடல் பாங்கிற் கூட்டல்
வேட்டலென் றொருநால் வகைத்தே பகற

(இ-ம்.) பகற்குறியின்வகையுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) கூட்டன்முதலாக வேட்டலீறாக நான்குவகையினையுடைத்துப் பகற்குறியென்றவாறு.

௧௫௨. குறியிடங் கூறன் முதலாப் பெறலரும்
விருந்திறை விரும்ப லீறாப் பொருந்தப்
பகர்ந்தபன் னிரண்டும் பகற்குறி விரியே.

(இ-ம்.) பகற்குறியின் விரியுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) குறியிடங்கூறன்முதலாக விருந்திறைவிரும்பலீறாக மேற்பாங்கியிற் கூட்டத்துளெடுத்தோதப்பட்ட பன்னிரண்டும் பகற்குறி விரியாமென்றவாறு. உதாரணமேற்காட்டினவெனக்கொள்க. (௩௬.)

௧௩௩. இரங்கல் வன்புறை யிற்செறிப் புணர்த்தலென்
றொருங்கிய மூவகைத் தொருசார் பகற்குறி.

(இச்-ம்.) ஒருசார்பகற்குறியின்வகையுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) இரங்கலும்வன்புறையுமிற்செறிப்புணர்த்தலுமென மூன்றுவகையினையுடைத்தொருகூற்றுப்பகற்குறியென்றவாறு. (௩௭.)

௧௩௪. கிழவோன் பிரிந்துழிக் கிழத்தி மாலையம்
பொழுதுகண் டிரங்கலும் பாங்கி புலம்பலுந்
தலைவ னீடத் தலைவி வருந்தலுந்
தலைவியைப் பாங்கி கழறலுந் தலைவி
முன்னிலைப் புறமொழி மொழிதலு மின்னுயிர்ப்
பாங்கியொடு பகர்தலும் பாங்கியச் சுறுத்தலு
நீங்கற் கருமை தலைவிநினைந் திரங்கலுந்
தலைவிக் கவன்வரல் பாங்கி சாற்றலுஞ்
சிறைப்புற மாகச் செறிப்பறி வுறுத்தலு
முன்னிலைப் புறமொழி மொழிந்தறி வுறுத்தலு
முன்னின் றுணர்த்தலு முன்னின் றுணர்த்தி
யோம்படை சாற்றலுமேம்படு கிழவோன்
றஞ்சம் பெறாது நெஞ்சொடு கிளத்தலு
மென்றயீ ரேழு மெல்லுக் குறி விரிய.

இச்-ம்.) ஒருசார்பகற்குறி விரியுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) கிழவோன்பிரிந்துழிக் கிழத்திமாலையம்பொழுதுகண்டிரங்கன் முதலாகக் கிழவோன்றஞ்சம்பெறாது நெஞ்சொடுகிளத்தலீறாகச் சொல்லப்பட்ட பதினான்குமொருசார் பகற்குறிவிரியாமென்றவாறு. ஒருசாரென்றததிகாரத்தால் விரித்துரைக்கப்பட்டது. அவற்றுள்;

கிழவோன்பிரிந்துழிக் கிழத்தி மாலையம் பொழுதுகண்டிரங்கற்குச்செய்யுள்:—"ஆழ்ந்தார்தமக்கருளாதவர்போலிவ்வளவிலன்பு, சூழ்ந்தார்செலத்தொங்கல்சூழ்குழலாய்சொற்பொருள்படைத்து, வாழ்ந்தார்புகழ் தஞ்சைவாணனைப் பேணலர்மானவெய்யோன், வீழ்ந்தார்கவிக்கரந்தானபனிமாலைவெளிப்படவே." (தஞ்சை. கசஉ.) எனவும், "நெய்தல்கூம்பநிழல்குணக்கொழுகக், கல்சேர்மண்டிலஞ்சிவந்துசினந்தணியப், பல்பூங்கானலுமல்கிற்றன்றே, யினமணியொலிப்ப வேர்படப்பூட்டி, மெய்ம்மலிகாமத்தியாங்தொழுதொழியத், தேரோ செல்புறமறையுமூரோ, டியாங்காவதுகொல்லோநோதேம்பட, ஆதுவண்டிமிருங்கோதைமார் பின், மின்னிவர்கொடும்பூட்கொண்கனொ, டின்னகைமேவநாமாடியபொழிலே." (நற்றிணை. கஅஎ.) எனவும் வரும்.

பாங்கிபுலம்பற்குச்செய்யுள்:—"காலையம்போருகவாண்முகத்தாளன்பர்கையகல, மாலையம்போதுவருவித்தநீர்தஞ்சைவாணன்றெவ்வ, ராலயம்போலுங்களாதவன்கோயிலழல்கொளுந்த, வேலையம்போடுழல்வீர்பரிகாவெனறும் வெய்துயிர்த்தே." (தஞ்சை. கசங.) எனவும, "பெருமுதுசெல்வர்பொன்னுடைப் புதல்வா, சிறுதோட்கோத்தசெவ்வரிப்பறையின், கண்ணகத்தெழுதியகுரீஇப் போலக், கோல்கொண்டலைப்பப்படீஇயர்மாதோ, வீரைவேண்மான்வெளியன்றித்தன், முரசுமுதற்கொளீஇயமாலைவிளக்கின், வெண்கோடியம்பநுண்பனியரும்பக், கையறவந்தபொழுதின்மெய்சோர்ந், தவலநெஞ்சினேம்பெயரவுயர்திரை, நீடுநீர்ப்பணித்துறைச்சேர்ப்ப, னோடுதேர்நுண்ணுகநுழைந்தமாவே." (நற்றிணை. ருஅ.) எனவும் வரும்.

தலைவனீடத்தலைவிவருந்தற்குச் செய்யுள்:— "ஆராதவின்பவிடந்தொறு நீங்கியவாயமென்டால், வாராதமுன்னம்வருகிலாற்றஞ்சைவாணன்வெற்பிற், கூராதரநல்கிவல்வினையேனலங்கொள்ளைகொண்டு, தேராதவனுடனேநென்னன் மாலையிற்சென்றவரே." (தஞ்சை. கசச.) எனவும், "இருடிணிந்தன்ன வீர்ந்தண்கொழுநிழல், நிலவுகுவித்தன்னவெண்மணலொருசிறைக், கருங்கோட்டுப்புன்னைப்பூம்பொழில்புலம்ப, வின்னும்வாரார்வரூஉம், பன்மீன்வேட்டத்தென்னையர்திமிலே." (குறுந்தொகை. கஉங.) எனவும் வரும்.

தலைவியைப்பாங்கிகழறற்குச்செய்யுள் :—"சிறந்தார்தெரிந்தசெழுந்தமிழ் வாணன்றென்மாறைவெற்பர், துறந்தாரெனையென்றுசோருவதேனிந்தத்தொல்லுலகிற், பிறந்தாரெவர்க்கும்பிரிவெய்துமால்வெய்யபோமர்க்கட், புறந்தாழ்கரிய குழற்செய்யவாயையபூங்கொடியே." (தஞ்சை. கசரு.) எனவும், "மகிழ்நன் மார்பேவெய்யையானீ, யழியல்வாழிதோழிநன்ன, னறுமாகொன்றனாட் பிற் போகிய, வொன்றுமொழிக்கோசர்போல, வன்கட்சூழ்ச்சியும்வேண்டுமாற்சிறிதே." (குறுந்தொகை. எங.) எனவும் வரும்.

தலைவிமுன்னிலைப்புறமொழி மொழிதற்குச்செய்யுள்:— "பூவலர் வாவியி னீரற்றபோதற்றபுன்மையல்லாற், காவலர்காமந்துறக்கிலென்னுங்கட்டம்பாய் மதுரை, மாவலவாணன்வயற்றஞ்சைவேந்தனைவாழ்த்தல்செய்யா, மேவலர்போலுங்கழற்றுரையாளர்வியனறிவே." (தஞ்சை. ௧௪௬.) எனவும், "யாவருமறிகிலர்கழறுவோரே, தாயின்முட்டைபோலவுட்கிடந்து, சாயினல்லதுபிறிதெவனுடைத்தோ, யாமைப்பார்ப்பினன்ன, காமங்காதலர்கையறவிடினே." (குறுந்தொகை. ௧௫௨.) எனவும் வரும்.

தலைவிபாங்கியொடுபகர்தற்குச்செய்யுள்:— "முலையார்முயக்கினுமல்லா விடத்தினுமுரிமுந்நீ, ரலையாரமுதமுநஞ்சமும்போலவணங்கனையாய், தொலையாதவின்பமுந்துன்பமுங்காட்டுவர்தூங்கருவி, மலையாசலத்தமிழ்தேர் வாணன் மாறைநம்மன்னவரே." (தஞ்சை. ௧௪௭.) எனவும், "நோமெனெஞ்சேநோமெனெஞ்சே, புன்புலத்தமன்றசிறியிலைநெருஞ்சி, கட்கின்புதுமலர்முட்பயந்தாஅங், கினியசெய்தநங்காதல, ரின்னாசெய்தனோமெனெஞ்சே." (குறுந்தொகை.௨௦௨.) எனவும், "என்கைகொண்டுதன்கண்ணொற்றியுந், தன்கைகொண்டென்னன்னுதனீவியு, மன்னைபோலவினியகூறியுங், கள்வர்போலக்கொடியன்மாதோ, மணியோடிழிதருமருவிபொன்னென. வேங்கைதாயவோங்குமலையடுக்கத், தாடுகழைநிவந்தபைங்கண்மூங்கி, லோடுமழைகிழிக்குஞ்சென்னிக், கோடுயர்பிறங்கன்மலைகிழவோனே." (நற்றிணை. ௨௮.) எனவும், "அசுணங்கொல்பவர்கையேபோன்று, மின்பமுந்துன்பமுமுடைத்தே, தண்கமழ்நறுந்தார்விறலோன் மார்பே." (நற்றிணை. ௩௦௪.) எனவும் வரும்.

தலைவியைப்பாங்கியச்சுறுத்தற்குச்செய்யுள்:— "பேணற்கரியநின்பெண்மையுநாணமும்பேணியவர், காணத்தகுமென்றுகாண்பதல்லாற்கழிகாதனெஞ்சு, பூணத்தருகினும்பொற்பல்லவாகுதல்கற்பல்லவால், யாணர்த்தமிழுடையான்வாணன்மாறையினின்னமுதே." (தஞ்சை. ௧௪௮.) எனவும், "மனங்காவலருழை வைத்துமென்கூர்வளைவாய்ப்பசும்பு, ளினங்காவன்மாற்றியவேனல்கண்டாலன்னையெய்ப்படியுங், கனங்காவல்கொண்டகழைபிருஞ்சாரற்கனங்குழைநின், புனங்காவன்மாற்றுமதன்பின்னர்க்காவலும்பூணும்வந்தே." (இலக்கண. அகத். ௧௪௦. உரை.) எனவும், "மெய்பிற்றீராமேவருகாமமோ, டெய்யாயாயினுமுரைப்பல்றோழி, கொய்யாமுன்னுகுங்குரல்வார்புதினையே, யருவியார்ந்தபைங்காருறு, மிருவிதோன்றினபலவேநீயே, முருகுமுரண்கொள்ளுந்தேம்பாய்கண்ணிப், பரியுடைநன்மான்பொங்குளையன்ன, ... வேட்டுவப்பெறலோடமைந்தனையாழநின், பூக்கெழுதொடலைநுடங்கவெழுந்து, கிள்ளைத்தெள்விளியிடையிடைபயிற்றி, யாங்கானங்கொழுகாயாயினன்னை, சிறுகிளிகடிதனேற்றாளிவளெனப், பிறர்த்தந்து நிறுக்குவளாயி, னுறற்கரிதாகுமவன்மணந்தமார்பே." (அகநா. ௨௮.) எனவும் வரும்.

நீங்கற்கருமைதலைவிநினைந்திரங்கற்குச்செய்யுள்:—"குன்றாகியபொன்னும் வேழக்குழாமுங்கொடைபுகழ்ந்து, சென்றூர்முகக்குஞ்செழுந்தஞ்சைவாணன் றென்மாறைவெற்பி, னென்றுமிறைவர்க்குநன்றியிலேற்றுமுன்னான்முகத்தோ, னென்றுவிதித்திலனேயுயிர்போலவுடம்பையுமே." (தஞ்சை. ௧௪௧.) எனவரும்.

தலைவிக்கவன்வரல்பாங்கிசாற்றற்குச்செய்யுள்:—"நெஞ்சுகவாய்மலரன்ன கண்ணீர்மல்கநின்றவஞ்சொற், கிஞ்சுகவாய்வஞ்சிகேட்டருணீயுங்கிளைத்தமிழோர், தஞ்சுகவாய்மொழிநெஞ்சுடையான்றஞ்சைவாணன்வெற்பின் மஞ்சுகவார்த்தனவாலவர்தேரின்மணிக்குரலே." (தஞ்சை. ௧௫௦.) எனவும், "கவர்பரி நெடுந்தேர்மணியுமிசைக்கும், பெயர்படவிளங்கியவிளைஞருமொலிப்பர், கடலாடு வியலிடைப்பேரணிப்பொலிந்த, திதலையல்குனலம்பாராட்டிய, வருமேதோழி வார்மணற்சேர்ப்ப, னிழல்படவாங்கியமுழவுமுதற்புன்னை, மாவரைமறைகம்வம் மதிபானாட், பூவிரிகானற்புணர்குறிவந்துநம், மெல்லிணர்நறும்பொழிற்கானு, வல்லலரும்படர்காண்கநாஞ்சிறிதே." (நற்றிணை. ௩௦௭.) எனவும் வரும்.

தோழிசிறைப்புறமாகத்தலைமகற்குச்செறிப்பறிவுறுத்தற்குச்செய்யுள்:—"தொடைக்கணியார்தடந்தோளவர்கேளலர்தோகையன்னா, ருடைக்கணியாந்தழைகொய்யாருழவருடைத்ததெண்ணீர், மடைக்கணியாரமிடுந்தஞ்சைவாணன் வரையின்முன்போற், கடைக்கணியார்கணியார்நமைநாளைக்கருங் கணியே." (தஞ்சை. ௧௫௧.) எனவும், "வினைவிளையச்செல்வம்விளைவதுபோ னீடாப், பனைவிளைவுநாமெண்ணப்பாத்தித்-தினைவிளைய, மையார்தடங்கண்மயி லன்னாய்தீத்தீண்டு, கையார்பிரிவித்தல்காண்." (திணைமாலை. ௫.) எனவும்வரும்.

தோழிதலைமகற்குமுன்னிலைப்புறமொழிமொழிந்திற்செறிப்புணர்த்தற்குச் செய்யுள்:—"பயில்காளபந்திப்புயலன்னவோதியைப்பைங்கிள்ளைகாண், மயில் காள்சிறிதுமறக்கப்பெறீர்தஞ்சைவாணன்வெற்பிற், குயில்காளமெங்குமியம்பு தண்சோலையிற்கூடியின்ப, மயில்காளவெங்கதிர்வேலன்பர்சாலவயர்ப்பினுமே." (தஞ்சை. ௧௫௨.) எனவும், "முறஞ்செவியானைத்தடக்கையிற்றடைஇ, யிறைஞ்சியகுரலபைந்தாட்செந்தினை, வரையோன்வண்மைபாடினர்போலக், கிளையோடுண்ணும்வளைவாய்ப்பாசினங், குல்லைகுளவிகூதளங்குவளை, யில்லமொடுமிடைந்தவீர்ந்தண்கண்ணியன், சுற்றமையில்லன்சோலைத்தோன்று, நற்றார்மார்ப காண்குறிற்சிறிய, மற்றவற்கறியவுரையின்பிற்றை, யணங்குமணங்கும்போ வணங்கிய, வறம்புனங்காவல்விடாமை, யறிந்தனிரல்லீரோவறனில்யாயே." (நற்றிணை. ௩௭௬.) எனவும் வரும்,

பாங்கிதலைமகன்முன்னின்றுசெறிப்பறிவுறுத்தற்குச்செய்யுள்:—“கானலங்கான்மலர்க்கள்வாய்க்கருங்கணிகட்டுரையாற், கூனலஞ்சாய்பொற்குழலுங்கொய்தாரெமர்கொற்றவயா, மேனலங்காவலுமின்றேயொழிந்தனமேழ்புவிக்குந், தானலங்காரமன்னன்றஞ்சைவாணன்றமிழ்வெற்பிலே.” (தஞ்சை. கருஅ.)எனவும், “மால்வரைவெற்பவணங்குரலேனல், காவலியற்கையொழிந்தேம்யாந்-தூவருவி, பூக்கண்கழூஉம்புறவிற்றாய்ப்பொன்விளையும், பாக்கமுதுவெம்மிடம்.” (ஐந்திணையைம்பது. கஉ.) எனவும் வரும்.

---

பாங்கிதலைமகன்முன்னின்றுசெறிப்புணர்த்தியோம்படைசாற்றற்குச்செய்யுள்:—“கனஞ்சாயநல்கியகையுடையானெதிர்கன்றினர்தம், மனஞ்சாயவென்றருள்வாணன்வரோதயன்மாறைவெற்பிற், சினஞ்சாலும்வேலண்ணலேமறவேலெம்மைச்செவ்வியிரு, தனஞ்சாயினுமினிநின்னையல்லாதில்லைத்தாழ்குழற்கே.” (தஞ்சை. கருச.) எனவும், “எறிந்தெமர்தாமுழுதவீர்ங்குரலேனன், மறந்துகிளியினமும்வாரா-கறங்கருவி, மாமலைநாடமடமொழிதன்கேண்மை, நீமறவனெஞ்சத்துக்கொண்டு.” (ஐந்திணைபம்பது. கஅ.) எனவும் வரும்.

தலைமகன்றஞ்சம்பெறுதுநெஞ்சொடுகிளத்தற்குச்செய்யுள்:—“வேலரேய்விழிமாந்தளிர்மேனியரேனலினிக், காவலரேமனங்காத்தனம்யாங்கவியானைசெம்பொன், னுவலரேபெறநல்குங்கைமேகநறுங்குவளை, மாவலரேய்தொடையான்றஞ்சைவாணன்வரையில்வந்தே.” (தஞ்சை கருகு.) எனவும், “பெறுவதியையாதாயினுமுறுவதொன், றுண்டுமன்வாழிநெஞ்சேதிண்டேர், கைவளோரிகானந்தீண்டி, யெறிவளிகமழுநெறிபடுகூந்தன், மையீரோதிமாஅயோள்வயி, னின்றையன்னநட்பினின்றே, யிறுமுறையெனவொன்றின்றி, மறுமையுலகத்துமன்னுதல்பெறுமே.” (குறுந்தொ. ககக.) எனவும் வரும்.

இவற்றுள், கிழவோன்பிரிந்துழிக்கிழத்திமாலையம்பொழுதுகண்டிரங்கலும், பாங்கிபுலம்பலும், தலைவனீடத்தலைவிவருந்தலும், முன்னிலைப்புறமொழிமொழிதலும், பாங்கியோடுபகர்தலும், நீங்கற்கருமைதலைவிநினைந்திரங்கலும், கிழவோன்றஞ்சம்பெறுதுநெஞ்சொடுகிளத்தலும் ஆகியவேழுமிரங்கற்குரிய. இவற்றுள், கிழவோன்றஞ்சம்பெறுதுநெஞ்சொடுகிளத்தலொன்றுமொழித்து ஏனையவாறும் வரைதல் வேட்கைக்குரியவாம். தலைவியைப்பாங்கிகழறலும், தலைவியைப்பாங்கியச்சுறுத்தலும், தலைவிக்கவன்வரல்பாங்கிசாற்றலுமாகியமூன்றும்வன்பொறைக்குரிய. சிறைப்புறமாகச்செறிப்பறிவுறுத்தலும், முன்னிலைப்புறமொழிமொழிந்தறிவுறுத்தலும், முன்னின்றுணர்த்தலும, முன்னின்றுணர்த்தியோம்படைசாற்றலுமாகியநான்கும்இற்செறிபுணர்த்தற்குரியவெனக்கொள்க. இந்நான்கும் வரைவுகடாதற்குமுரியவாம. (கூஎ)

கரு௫. விலக்கல் சேறல் கலக்க மென்றாங்
கிகப்பின்மூ வகைத்தே பகற்குறி யிடையீடு.

(இச் - ம்.) பகற்குறியிடையீடு தொகுத்துணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) விலக்கலுஞ்சேறலுங்கலக்கமுமென மூன்றுவகையினையுடைத்தாம் பகற்குறியிடையீடென்றவாறு. (உக)

கரு௬. இறைவனைப் பாங்கி குறிவரல் விலக்கலு
மிறைவியைக் குறிவரல் விலக்கலு மிறைமக
ளாடிட நோக்கி யழிதலும் பாங்கி
யாடிடம் விடுத்துக்கொண் டகறலும் பின்று
ணைந்தகை குறிவயி னீடுசென் றிரங்கலும்
வறுங்களா நாடி மறுகலுங் குறுந்தொடி
வாழூஉர் நோக்கி மதிமயங் கலுமென
வேழும் பகற்குறி யிடையீட்டு விரியே.

(இச் - ம்.) பகற்குறியிடையீட்டுவிரித்தொகை யுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) இறைவனைப்பாங்கி குறிவரல்விலக்கன்முதலாகக் குறுந்தொடி வாழூஉர்நோக்கி மதிமயங்கலீறாகச்சொல்லப்பட்டவேழும் பகற்குறியிடையீட்டின் விரியாமென்றவாறு.

இறைவனைப்பாங்கிகுறிவரல் விலக்கற்குச்செய்யுள்:—"புனமும்பசுந்தினைச் செங்குரலேந்தும்புகன்றகிள்ளை, யினமுங்குழீஇவந்திறைகொள்ளு மா லி றை யார்வளையு, மனமுங்கவர்வெற்பவாணன்றென்மாறைமடப்பிடியு, மணமுங்தொழு நடைபாற்பலகால்வருமன்னையுமே." (தஞ்சை. கூசு.) எனவரும்.

பாங்கியிறைவியைக்குறிவரல் விலக்கற்குச்செய்யுள்:—"நந்துசுற்றுங்கடன் ஞாலமெல்லாம்புகழ்வாமன்வனர், சந்தசுற்றுங்கொங்கைமங்கையர்வேள்சஞ்சரீக நறை, வந்துசுற்றுந்தொங்கல்வாணன்றென்மாறைவரையின்மலர்க், கொந்துசுற்றுங்குழலாய்செல்லனீயக்குளிர்பொழிற்கே." (த ஞ் சை. கூள.) எ ன வு ம், "யாஅங்கொன்றமரஞ்சுட்டியவிற், கரும்புமருண்முதலவைபந்தாட் செ ந் தி னை, மடப்பிடித்தடக்கையன்னபால்வார்பு, கரிக்குறட்டிறைஞ்சியசெறிகோற் பை ங் குறற், படுகிளிகடிகஞ்சேறுமடுபோ, செலிக்குவளைக்குதடக்கைமலையன்கானத், தாராறுமார்பினை, வாரற்கதில்லவருகுவள்யாயே." (குறுந் தொ கை. கசஅ.) எனவும் வரும்.

இறைமகளாடிடநோக்கியழிதற்குச்செய்யுள்:—"அருவித்தடமுமணிமுத்த யாறுமவனிமெங்குந், திருவித்தியதஞ்சைவாணன் சிலம்புமிச்சிற்றிலும்பே, ரிருவிப்புனமுமின்றென்னினைக்கின்றனவென்னையின்னே, மருவிப்பிரிபவர் போவில்லையேமண்ணினில்வன்கண்ணரே." (தஞ்சை-கஇஅ.) எனவும், "அரியதாமே செவ்வாய்ப்பைங்கிளி, குன்றக்குறவர்கொய்தினைப்பைங்கா, லிருவிசீர் புனங் கண்டும், பிரிதறேற்றாப்பேரன்பினவே." (ஐங்குறு-உஅச.) எனவும் வரும்.

பாங்கியாடிடம் விடுத்துக்கொண்டகறற்குச் செய்யுள்:—"உன்னையராவல்கு னல்லவரேயென்றுசாவினெங்கண், மன்னயராமல்வகுத்துரைநீதஞ்சைவாணன் வெற்பி, னென்னையாரணைகொண்டேகுகின்றேனிவையித்தனையும், பின்னையரா தொழிவாயிதனையிதுபெற்றனமே." (தஞ்சை-கடுக.) எனவும், "வரியணர் வேங்கைவண்டுபடுகண்ணியன், றெரியிதழ்க்குவளைத்தேம்பாய்தார, னஞ்சிலை யிடவதாகவெஞ்செலற், கணைவலந்தெரிந்துதுணைபடர்ந்துள்ளி, வருதல்வாய் வதுவான்றேய்வெற்பன், வந்தனனாயினந்தளிர்ச்செயலைத், தாழ்விலோங்கு சினைதொடுத்தவீழ்கயிற், றூசன்மாறியமருங்கும்பாய்புடனாடாமையிற்கலுழ்பில தேறி, நீடிதழ்த்தலையியகவின்பெறுநீலங், கண்ணெனமலர்ந்தசுனையும்வண் பறை, மடக்கிளியெடுத்தல்செல்லாத்தடக்குரற், குலவுப்பொறையிறுத்தகோற் றலையருவி, கொய்தொழிபுனமுநோக்கிநெடிதுநினைந்து, பைதலன்போகுவன் கொல்லோவைதேய், கயவெள்ளருவிசூடியவுயர்வரைக், கூஉங்கண்ணஃதெம்மூ ரென, வாங்கதையறிவுறன்மறந்திசின்யானே" (அகநானூறு-நஅ.) எனவும் வரும்.

பின்னுணெடுந்தகைகுறிவயினீடுசென்றிரங்கற்குச்செய்யுள்:—"மான்காணி கரின்மடமயில்காடஞ்சைவாணன்வெற்பிற், றேன்காணிரைமென்சிறைக்கின்னை காளென்றெருமாறேய், தான்காணியகொலிச்சந்தனச்சோலையததன்னை யின்றி, யான்காணியகொலெழுந்தருளாதின்றெனனுயிரே." (தஞ்சை-கசுo.) எனவும், "உள்ளிக்காண்பென்போல்வன்முள்ளெயிற், றமுதமூறுஞ்செவ்வாய்க் கமழகி, லாரநாறுமறல்போற்கூந்தல், பேரமர்மழைக்கண்மடந்தை, மூரன்முறுவ லொடுமதைஇயநோக்கே." குறுந்தொகை-உஅசு.) எனவும் வரும்.

தலைமகன் வறுங்களநாடிமறுகற்குச்செய்யுள்:— "செங்கேழ்விழிக்குமொ ழிக்கும்பகைதிருப்பாற்கடலும், பங்கேருகமும்பயந்தவாயினும்பைங் கின்னை காள், சங்கேய்தடந்துறைசூழ்தஞ்சைவாணன்றரியலர்போ, லெங்கேயினித்தங்கு வாரோனல்காத்திங்கிருந்தவரே." (தஞ்சை-ககக.) எனவும், "கன்னாவிநாறுங் கமழ்கூந்தற்காரிகையென், னுள்ளாவிசென்றவழியறியேன்—றள்ளாத, மல்ல

லருவிமலைநாடிவாய்திறந்து, சொல்லவ்புரியாய்துணிந்து." (.. ..............)
எனவும் வரும்.

தலைமகன்றலைமகள்வாழுமூர்நோக்கி மதிமயங்கற்குச்செய்யுள்:—"பெறவரி தாலவள்பின்சென்றநெஞ்சமும்பேணலர்க்கு, மறவரிதானன்னவாணன் றென் மாறைறவரைப்புனஞ்சூழ், நறவரிதாழ்முல்லைநாண்மரோதிநகருரெனக், குறவரி தாமென்செய்வேனென்றுசோருமென்னுருயிரே." (தஞ்சை-௩௬௨.) எனவும், "ஆடமைபுரையும்வனபிற்பனைத்தோட், பேரமர்க்கண்ணியிருந்தவூரே, நெடுஞ் சேணாரிடையதுவேநெஞ்சே, யீரம்பட்டசெவ்விப்பைம்புனத், தோரேருழவன் போலப்.பெருவிதுப்புற்றன்றேகோயானே." குறுந்தொகை-௧௩௧. எனவும்வரும்.

இவற்றுள், முன்னையவிரண்டும் விலக்கற்குரிய ; பாங்கியாடிடம் விடுத்துக் கொண்டகறலாகியவொன்றுஞ் சேறற்குரித்து ; ஏனையநான்கும் கலக்கத்திற் குரிய. (சo)

கருஎ. வேண்டன் மறுத்த லுடன்படல் கூட்டல்
கூடல்பா ராட்டல் பாங்கிற் கூட்ட
லுயங்க னீங்கலென் றென்பது வகைத்தே
யியம்பிப் போந்த விரவுக் குறியே.

(இச் - ம்.) இரவுக்குறியின்வகை யுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) வேண்டன்முதலாகநீங்கலீறாகவொன்பதுவகைத்து மேற்சொல் லிப்போந்த விரவுக்குறியென்றவாறு. (சக)

கருஅ. இறையோ னிருட்குறி வேண்டலும் பாங்கி
நெறியின தருமை கூறலு மிறையோ
னெறியின தெளிமை கூறலும் பாங்கி
யவனாட் டணியியல் வினாதலுங் கிழவோ
னவணாட் டணியியல் வினாதலு மவற்குத்
தன்னாட் டணியியல் பாங்கி சாற்றலு
மிறைவிக் கிறையோன் குறையறி வுறுத்தலு
நேரா திறைவி நெஞ்சொடு கிளத்தலு
நேரிழை பாங்கி யொடுநேர்ந் துரைத்தலு
நேர்ந்தமை பாங்கி நெடுந்தகைக் குரைத்தலுங்
குறியிடை நிறீஇத் தாய்துயி லறிதலு

மிறைவிக் கிறைவன் வரவறி வுறுத்தலு
மவட்கொண்டு சேறலுங் குறியுய்த் தகறலும்
வண்டுறை தாரோன் வந்தெதிர்ப் படுதலும்
பெருமக ளாற்றின தருமைநினைந் திரங்கலும்
புரவலன் றேற்றலும் புணர்தலும் புகழ்தலு
மிறைமக ளிறைவனைக் குறிவிலக் கலுமவ
னிறைவியை யில்வயின் விடுத்தலு மிறைவியை
யெய்திய பாங்கி கையுறை காட்டலு
மிற்கொண் டேகலும் பிற்சென் றிறைவனை
வரவு விலக்கலும் பெருமகன் மயங்கலுந்
தோழி தலைமக டுயர்கிளந்து விடுத்தலுந்
திருமகட் புணர்ந்தவன் சேறலு மென்றாங்
கிருபத் தேழு மிரவுக்குறி விரியே.

(இச் - ம்.) இரவுக்குறியின்விரியுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) இறையோனிருட்குறிவேண்டன் முதலாகத் திருமகட்புணர்ந்தவன் சேறலீறாகச் சொல்லப்பட்ட விருபத்தேழுமிரவுக்குறியின் விரியென்றவாறு. இறையோனிருட்குறிவேண்டற்குச்செய்யுள்:— "கருவிருந்தெண்டிசையுங்கனமாமழைகான்றதுள்ளம், வெருவிருந்தெம்பதிக்கேகவொண்ணாது விதம்விதமாய், வருவிருந்தென்றும்புரந்தருள்வாணன்றென்மாறையன்னீ, ரொருவிருந்தெங்களைப்போலெய்துமோகங்குலுங்களுக்கே." (தஞ்சை-௧௬௩.) என வரும்.

பாங்கிநெறியின தருமைகூறற்குச்செய்யுள்:— "மலைமாதுவல்லவன்வாணன்வரோதயன்மாறைவெற்பிற், சிலைமாலுருமெங்குந்தீயுமிழாநிற்குஞ்சிங்கமெங்குங், கொலைமாகரியிரைதேர்ந்துழலாநிற்குங்கொற்றவபொற், கலைமானுறைபதிநீவருமாறென்கொல்கங்குலிலே." (தஞ்சை-௧௬௪.) எனவும், "ஒருவரைபோலெங்கும் பல்வரையுஞ்சூழ்ந்த, வருவரையுள்ளதாஞ்சீறூர் – வருவரையு, ளைவாயநாகம்புறமெல்லாமாயுங்காற், கைவாயநாகஞ்சேர்காடு." (திணைமாலைநூற்-௧௨.) எனவும் வரும்.

தலைமக னெறியினதெளிமைகூறற்குச்செய்யுள்:— "வடுவரிநீள்கண்ணியஞ்சலம்யாந்தஞ்சைவாணன்வெற்பிற், கொடுவரிகேழற்குழாம்பொருகொல்லையுங்குஞ்சரந்தேர்ந், தடுவரிதாவுமடுக்கமுஞ்சூர்வழங்காறுமைவாய்க், கடுவரிநாகந்தவாமல்குகல்லளைக்கானமுமே." (தஞ்சை. ௧௬௫.) என வரும்.

பாங்கியவனாட்டணியியல்வினாதற்குச்செய்யுள்:—"பூந்தழையாதுமலைமலர் யாதுபுனையிழையுஞ், சாந்தமும்யாதுதடம்பொழில்யாதுதாணியின்மேன், மாந்தரில்வேளன்னவாணன்றென்மாறைவளநகர்சூழ், தேந்தருசோலைவெற்பா வுங் கணாட்டுறைசெல்வியர்க்கே." (தஞ்சை-கஅக.) எனவரும்.

தலைமகனவனாட்டணியியல் வினாதற்குச்செய்யுள்:—"எந்நாட்டவரணி கூறியென்பேறிங்கிகல்வடிவேன், மைந்நாட்டவெண் முத்தவாணகையாய் தஞ்சைவாணன் மண்மே, லுன்னாட்டரிவையராடிடஞ்சாந்தமொளியிழைபூ, மொய்ந்நாட்டழையொடெல்லாமொளியாமன்மொழியெனக்கே." (தஞ்சை-கஅஉ.) எனவரும்.

தலைமகற்குப்பாங்கிதன்னாட்டணியியல்சாற்றறகுச் செய்யுள்:—"வகைகொண்டமாந்தழைகாந்தளம்போதுமருப்பின்முத்தந், தகைகொண்டசந்தனச்சாந்தணிந்தாரெவர்தஞ்சையர்கோன், மிகைகொண்டதெவ்வரைவெங்கண்டவாணன் வெற்பாவெமதூர், நகைகொண்டவல்லியன்னாரெல்லிநாகநறுங்குழலே." (தஞ்சை-கஅ௩.) எனவும், "ஆம்பலணித்தழையாரந்துயல்வருந், தீம்புனலூரன்மகளிவ—ளாய்ந்தநறுந், தேமலர்நீலம்பிணையல்செறிமலர்த், தாமரைதன்னையர்பூ." (திணைமொழியைம்பது-௪௧.) எனவும் வரும்.

பாங்கிதலைமகட்குத்தலைமகன் குறையறிவுறுத்தற்குச்செய்யுள்:—"புயலேறதிர்தொறும்பொங்குளைமீதெழப்போதகந்தேர்ந், தியலேறதிருமிருங்கங்குல்வாய்முத்தமீன்றுசங்கம், வயலேறணைவளருந்தஞ்சைவாணன்வரையிலுங்கண், கயலேறனையநின்பால்வரவேண்டினர்காதலரே." (தஞ்சை-௩அக) எனவும், "ஒலிவெள்ளருவியோங்குமலைநாடன், சிறுகட்பெருங்களிறுவயப்புலிதாக்கித், *தொன்முரண்சேருந்துன்னருஞ்சோலை, நடுநாள்வருதலும்வரூஉம், வடுநாணலமேதோழிநாமே." (குறுந்தொ-அஅ.) எனவும் வரும்.

தலைமகணோராதுநெஞ்சொடுகிளத்தற்குச்செய்யுள்:— "விடவார்கணைவிழி மெல்லியன்மாதரைமேதினியோர், மடவாரொனுமுரைவாய்மைநெஞ்சே தஞ்சைவாணன்றெவ்விற், கடவாரணந்திரிகங்குனங்கண்ணன்னகாதலர்முட், பிடவார்சிறுநெறிவாய்வரல்வேண்டினள்பெண்ணணங்கே." (தஞ்சை-கஎ0.) எனவரும்.

தலைமகணோர்ந்துபாங்கியொடுமொழிதற்குச் செய்யுள்:—"வெங்குலவாரணமேற்றவர்க்குத்தந்துவேற்றரசர், தங்குலவாழ்வுதவிர்த்தருள்வாணன்றமிழ்ச்சிலம்பிற், கங்குலவாவினர்காதலராயிற்களிபயந்த, கொங்குலவாவலர்சூழ்குழலாயென்சொல்கூறுவதே." (தஞ்சை-கஎக.) எனவும், "சேணோன்மாட்டியநறும்புகைஞெகிழி, வானமீனின்வயின்வயினிமைக்கு, மோங்குமலைநாடன்சாந்துபுலராகல,

---

* தொன்முரண்செல்லுமெனவும் பாடம்.

முள்ளினுண்ணேனுய்மல்கும், புல்லின்மாய்வதெவன் கொலன்னாய்." (குறுந்தொகை-கூ௦) எனவும் வரும்.

தலைமகனோர்ந்தமைபாங்கிதலைமகற் குரைத்தற்குச்செய்யுள் :— 'பாவாத வண்ணம்பரவியும்பாகம்பணிந்தும்நெஞ்சங், கரவாதபொன்னைநின்காரணமாகக் கயிலையென்றே, வரவாதவனஞ்சம்வெண்மாளிகைத்தஞ்சைவாணன்வெற்பா, விரவாதவண்ணமெல்லாமிரந்தேனிவ்விரவிடையே." (தஞ்சை-களஉ) எனவரும்.

பாங்கிதலைமகளைக்குறியிடத்துநிறுத்திவந்துதாய்துயிலறிதற்குச்செய்யுள் :- "மாகந்தரியலர்க்கீந்தருள்வாணன்றென்மாறைவெற்பின், மேகந்தருமின்னிடையன்னமேவிரைநாண்மலர்வேய், நாகந்தழுவுங்குடம்பையின்வாய்நடுநாளிரவிற், சோகந்தவிர்விலவாய்த்துயிலாதென்றோகைகளே." (தஞ்சை-களங) எனவரும்.

பாங்கிதலைமகட்குத்தலைவன் வரவறிவித்தற்குச்செய்யுள்:—"கந்தார நாணுங்கனிந்தசொல்லாய்நங்கடிமனைக்கே, வந்தாரவாவின்பெருமையினுற்றஞ் சைவாணன்வெற்பிற், கொந்தாரசோகந்தருஞ்செழும்போதுங்கொழுந்தழையுந், தந்தாரகலந்தழீஇயகலாதுதணந்தவரே." (தஞ்சை-களச.) எனவும், "அன்னாய் வாழிவேண்டன்னைநம்படப்பைத், தண்ணயத்தமன்றகூதளங்குழைய, வின்னிசையருவிப்பாடுமென்னதூஉங், கேட்டியோவாழிவேண்டன்னைநம்படப்பை, யூட்டியன்னவொண்டளிர்ச்செயலை, யோங்குசினைதொடுத்தவூசல்பாம்பெனு, முழுமுதறுமியவுருமெறிந்தன்றே, யின்னுங்கேட்டியோவெனவுமஃதறியா, ளன்னையுங்கனைதுயின்மடிந்தனளதன்றலை, மன்னுயிர்மடிந்தன்றாற்பொழுதே காதலர்,வருவராயிற்பருவமீதுவெனச், சுடர்ந்திலங்கெல்வளைநெகிழ்ந்தநம்வயிற் படர்ந்தவுள்ளம்பழுதின்றாக, வந்தனர்வாழிதோழியந்தரத், திமிழ்பெயறலைஇய வினப்பலகொண்மூத், தவிர்வில்வெள்ளந்தலைத்தலைசிறப்பக், கன்றுகாலொய்யுங் கடுஞ்சுழிநீத்தம், புன்றலைமடப்பிடிப்பூசல்பலவுடன், வெண்கோட்டியானைவிளி படத்துழவு, மகல்வாய்ப்பார்தட்படாஅர்ப், பகலுமஞ்சும்பனிக்கடுஞ்சுரனே." (அகநா. சுஅ.) எனவும் வரும்.

பாங்கிதலைமகளைக்குறியிடத்துக்கொண்டுசேறற்குச்செய்யுள்:—"மின்னேயயிலொடுமின்விளக்காவந்தவெற்பரைநாம், பொன்னேயெதிர்கொளப்போதுகம் வாபுவியேழினுக்குந், தன்னேயம்வைத்தருள்சந்திரவாணன்றமிழ்ச்சிலம்பி, னின்னேரியன்மயில்கண்டுபிறகிழலகத்தே." (தஞ்சை-களரு.) எனவரும்.

பாங்கி தலைமகனைக் குறியிடத்துய்த்து நீங்கற்குச்செய்யுள்:—"மந்தாரமன்ன
கைவாணன்றென்மாறைநமயிலனையாய், நந்தாவனப்பொய்கைநான்கொய்குவேன்
குழறுனுங்கற்குற், கொந்தார்தெரியனின்செங்கனி வாயொடுங்கொங்கையொடும்
பைந்தாமரையையுஞ்சேதாம்பலையும்பகைப்பித்ததே." (தஞ்சை-கஎசு) எனவரும்.

• தலைமகன் றலைமகளைக்குறியிடத்தெதிர்ப்படுதற்குச்செய்யுள்:—"மு தி ர
முலையிப்பணியத்தகாரமுணியவல்ல, கதிராயிரமில்லையேழ்பரித் தே ரி ல் லை க்
கா வ ல் வெ ய்யோற், கெதிராதல்சோமற்கியல்வதன்றேநும்மில்யார்திறந்தார்,
மதுராபுரித்தமிழ்தேர்வாணன்மாறைவனத்துவந்தே." (தஞ்சை-கஎஎ) எனவரும்.

தலைமகளாற்றினதருமை நினைந்திரங்கற்குச்செய்யுள்:—"செழியன்கயலைத்
திசைவைத்தவாணன்றென்மாறையென்மேற், கழியன்புடையநின்கால்கண்களா
கச்சராம்பயிலுங். குழியன்றியும்வெஞ்சுழியொன்றும்யாறுங்குழீஇக்கொடிதாம்,
வழியன் பரிவெங்ஙனேவந்தவாறிம்மழையிருளே." (தஞ்சை-கஎஅ.) எனவும்,
"பெயல்கண்மறைத்தலின்விசும்பு*காணலையே, நீர்பரந்தொழுகலினிலங்*காண
லையே, யெல்லைசேறலினிருள்பெரிதுபட்டன்று, பல்லோர்துஞ்சும்பானாட்கங்
குல், யாங்குவந்தனையோவோங்கல்வெற்ப, வேங்கைகமழுமெஞ்சிறுகுடி, யாங்
கறிந்தனையோநோகோயானே." (குறுந்தொகை-௩௫௫.) எனவும் வரும்.

தலைமகன்றலைவியைத் தேற்றற்குச்செய்யுள்:—"வெயிலுந்தரவிந்தமென்
மலரன்னமும்விந்தைவெற்றி, மயிலும்பயில்புயன்வாணன்றென்மாறைநின்வாள்
விழிபோ, லயிலுங்குயின்மொழிநின்னிடைபோன்மின்னுமாடளிகள், பயிலுந்
தொடைநின்குழல்போலிருளைப்பருகினவே." (தஞ்சை-கஎகூ.) எனவும், "குருதி
வேட்கையுருகெழுவயமான், வலிமிகுமுன்பின்மழகளிறுபார்க்கு, ம ர ம் ப யி ல்
சோலைமலியப்பூழிய, ருருவத்துருவினாண்மேயல்பார்க்கு, மாரியெண்கினமலிதரு
நீளிடை, நீயந்துவருதலெவனெனப்பலபுலந், தழுதனையுறையுமம்மாவரிவை,
பயங்கெழுபலவின்கொல்லிக்குடவரைப், பூதம்புணர்த்தபுதிதியல்பாவை, விரிக
திரிளவெயிற்றோன்றியன்னநின், மாணலமுள்ளிவரினெமக், கேமமாகுமலைமுத
லாறே." (நற்றிணை-ககஉ.) எனவும் வரும்,

புணர்தற்குச்செய்யுள்:—"சுழிநீரலைகடற்றொல்லுலகேழினுந் தோ ற் ற ம்
வண்மைக், கழிநீடுமோடகமேருவின்மீதினுங்காவல்கொண்டு, வழிநின்புகழ்கொண்
டவாணன்றென்மாறைவரையின்மலர்ப், பொழினீழலும்பாமுதனையாரைப்புண
ர்ந்தனமே." (தஞ்சை-கஅ0.) எனவும், "தம்மிலிருந்துதமதுபாத்துண்டற்றா,
லம்மாவரிவைமுயக்கு." (திருக்குறள்-கக0எ.) எனவும் வரும்.

---

* காணலரே என்றும் பாடம்.

புகழ்தற்குச்செய்யுள்:—“மண்ணார்பெரும்புகழ்மாறன்றென்மாறைவரைபயி லுங், தண்ணாரமுங்கமழ்சார்வருஞ்சாரலிற்சார்ந்துறையும், பெண்ணாரணங்கன்ன நின்முகந்தான்கண்டபின்னுமுண்டோ, கண்ணார்தடங்களின்வாயொடுங்காதகம லங்களே.” (தஞ்சை-௧௮௧.) எனவரும்.

தலைமகனைத்தலைமகள்குறிவிலக்கற்குச்செய்யுள்:—“ஊரற்கதிர்முத்தவார் முலையாவியின்மூழ்கத்தனி, வாரற்கநீதஞ்சைவாணன்வெற்பாவயமாவழங்கும், வேரற்கடியகவலையினூடுவெயிலவற்குஞ், சாரற்கருமையதாலிருள்கூருமெஞ் சாரலிலே.” (தஞ்சை-௧௮௨) எனவும், “இருள்பேருலகின்வாரலான்றகோட்டு மாவழங்குங்காட்டகநெறியே.” (.........) எனவும் வரும்.

தலைமகன்றலைமகளையில்வயின் விடுத்தற்குச்செய்யுள்:—“மல்லையம்போர் வென்றவாணன்றென்மாறைநின்மாளிகையாங், தொல்லையம்போருகந்தேடவுங் கூடுந்தொடித்தளிரான், முல்லையம்போதுமுகையுங்கொய்யாதுமுகிழ்முலையாய், செல்லையம்பொற்பளிங்கிற்றலம்பாதஞ்சிவப்பிக்கவே.” (தஞ்சை-௧௮௩.) எனவரும்.

பாங்கிதலைமகளையெய்திக் கையுறைகாட்டற்குச்செய்யுள்:—“முகையாயல ராய்முலைக்குநின்வாய்க்குமுறைமுறையே, பகையாமுளரியுஞ்சேதாம்பலுமிவை பைங்கழுநீர், வகையார்தொடைபுனைவாணன்றென்மாறையின்மௌவலன்ன, நகையாயவையிவைநின்குழற்காமுல்லைநாண்மலரே.” (தஞ்சை-௧௮௪)எனவரும்.

பாங்கிதலைமகளையிற்கொண்டேகற்குச்செய்யுள்:—“ஒல்காவிருண்மணந் தொல்கரும்போழ்தினுணர்ந்துநம்மை, நல்காவியல்பன்னைநாடினுநாடுகடந் தருணீ, மல்காவிசூழ்தஞ்சைவாணன்றென்மாறையின்வள்ளையின்மேற், செல்கா வியன்னவிழித்திருவேநின்றிருமனைக்கே.” (தஞ்சை-௧௮௫) எனவரும்.

பிற்சென்றுதலைமகனைப்பாங்கிவரவுவிலக்கற்குச்செய்யுள்:—“வெம்போர் முருகென்னவேல்வலனேந்திவெறிதிங்ஙனே, வம்போர்நகொல்லிவாரல்வெற்பா மருவாவரசர், தம்போர்கடந்ததடம்புயவாணன்றமிழ்த்தஞ்சைநாட், டம்போருக மல்லவோதிருக்கோயிலணங்கினுக்கே.” (தஞ்சை-௧௮௬ ) எனவும், “தாமரைக் கண்ணியைத்தண்ணறுஞ்சாந்தினை, நேரிதழ்க்கோதையாள்செய்குறிநீவரின், மணங்கமழ்நாற்றத்தமலைநின்றுபலிபெறூஉ, மணங்கெனவஞ்சுவர்சிறுகுடி யோரே, யீர்ந்தண்ணாடையையெல்லிமாலையை, சோர்ந்துவீழ்கதுப்பினள்செய்குறி நீவரி, னொளிதிகழ்ஞெகிழியர்கவணையர்வில்லர், களிறெனவார்ப்பவரேனல்காவ லரே.” (கலித். குறிஞ்-௧௧) எனவும் வரும்:

தலைமகன் மயங்கற்குச்செய்யுள்:— "வஞ்சங்கலந்தகலிவென்றவாணன் றென்மாறைவெற்பிற், றஞ்சங்கலந்தசொற்றையலும்யானுந் தனித்தனியே, நெஞ்சங்கலந்தநிலைமையெல்லாங்கண்டுநீயமுதி, னஞ்சங்கலந்தனையோநனைவார் குழனன்னுதலே." (தஞ்சை-கஅஎ.) எனவரும்.

தோழிதலைமகடுயர்நிலைகிளந்து விடுத்தற்குச்செய்யுள்:— "முன்னூராவுந் தெரியாவிருணெறிமுன்னிநையு, மின்னூர்புனைமழைமின்னனையாளுய்ய வேலின்வெம்போர், மன்னூர்களிறுதிறைகொண்டவாணன்றென்மாறையன்ன, நின்னூரகம்புகுந்தாற்குறிகாட்டுநெடுந்தகையே." (தஞ்சை-கஅஅ.) எனவும், "கானமானதர்யானையும்வழங்கும், வானமீமிசையுருமுநனியுரறு, மாவும்புலியு மஞ்சுதகவுடைய, விரவுவழங்குஞ்சிறுநெறிதமியைவருதி, வரையிழியருவிப்பா டொடுபிரச, முழவுச்சேர்நரம்பினிம்மெனவிமிரும், பழவிறனனந்தலைப்பயமலை நாட, மன்றல்வேண்டினும்பெறுகுவையொன்றோ, வின்றுதலையாகவாரல் வரினே, யேமுறுதுயரமோடியாமிவணொழிய, வெற்கண்டுபெயருங்காலையாழ நின், கற்கெழுசிறுகுடியெய்தியபின்றை, யூதல்வேண்டுமாற்சிறிதேவேட்டொடு, வேய்பயிலழுவத்துப்பிரிந்தநி, னாய்பயில்குறிநிலைக்கொண்டகோடே." (அகம்-ருகஅ.) எனவும் வரும்.

திருமகட்புணர்ந்தவன் சேறற்குச்செய்யுள்:— "இருங்குன்றனமதிலெம் பதிக்கேகவெளிதுசெம்மை, தருங்குங்குமமுலைத்தையனல்லாய்தஞ்சைவாணன் வெற்பிற், கருங்குஞ்சரவினம்வெண்சிங்கவேறஞ்சுங்கங்குலினம், மருங்குஞ் சுடர்விளக்காமடவார்குழைமாணிக்கமே." (தஞ்சை-கஅகூ.) எனவும், "நெஞ்ச நடுங்கரும்படர்தீரவந்து, குன்றுழைநண்ணியசீறூராங்கட், செலீஇயபெயர் வோள்வணர்சுரியைம்பா, லுண்கோலகவுநர்ப்புரந்தபேரிசைச், சினங்கெழுதா னைத்தித்தன்வெளிய, னிரங்குநீர்ப்பரப்பிற்கானலம்பெருந்துறைக், கனந்தரு நன்கலஞ்சிதையத்தாக்குஞ், சிறுவெள்ளிறவின்குப்பையன்ன, வுறுபகைதரூஉ மொய்ம்மூசுபிண்டன், முனைமுரணுடையக்கடந்தவென்வேல், விசைநல்லீகைக் களிறுவீசுவண்மகிழ்ப், பாரத்துத்தலைவனாரன்ன, னேழில்நெடுவரைப்பாழிச் சிலம்பிற், களிமயிற்கலவத்தன்னதோளே, வல்வில்லிளையர்பெருமகனள்ளி சோலையடுக்கத்துச்சுரும்புணவிரிந்த, கடவுட்காந்தளுள்ளும்பலவுட, னிறும்பூது கஞலியவாய்மலர்நாறி, வல்லினும்வல்லாராயினுஞ்சென்றோர்க்குச், சாலவிழ் நெடுங்குழிநிறையவீசு, மாஅல்யானையாஅய்கானத்துத், தலையாற்றுநிலைஇய சேயுயர்பிறங்கல், வேயமைக்கண்ணிடைகடுப்பச், சேயவாயினுநடுங்குதுயர் தருமே." (அகம்-கஉஉ.) எனவும் வரும்.

இவற்றுள், இறையோனிருட்குறிவேண்டலு, நெறியினதெளிமைகூறலு, மவனூட்டணியியல்வினுதலும், பாங்கியிறைவிக்கிறையோன்குறையறிவுறுத்தலு

மாகியநான்கும்வேண்டற்குரிய; பாங்கிநெறியினதருமைகூறலும், இறைமகளிறைவனைக்குறிவிலக்கலும், பாங்கியிறைவனைவரவுவிலக்கலு மாகியமூன்றுமறுத்தற்குரிய; பாங்கியவனுட் டணியியல் வினுதலு, மவற்குத் தன்னுட் டணியியல் சாற்றலுந்; தலைமகனோர்ந்து பாங்கியொடு சாற்றலு, மாகிய மூன்றுமுடன்படற்குரிய; தலைமகனோர்ந்ததும் பாங்கி தலைமகற்குணர்த்தலுங், குறியிடைநிறீஇத்தாய்துயிலறிதலு, மிறைவிக்கிறைவன் வரவறிவுறுத்தலும்,,அவட்கொண்டுசேறலுமாகியநான்குங் கூட்டற்குரிய; தலைமகளையெதிர்ப்படுதலும், தேற்றலும், புணர்தலு மாகியமூன் றுங்கூடற்குரிய; தலைமகனலம்பாராட்டலும், கையுறைகாட்டலு மாகியவிரண்டும் பாராட்டற்குரிய; தலைமகனிறைவியையில்வயின்விடுத்தலும், பாங்கிதலைமகளைக்கொண்டேகலுமாகிய விரண்டும் பாங்கி கூட்டற்குரிய; நேராதிறைவிநெஞ்சொடுகிளத்தலும், தலைமகனாற்றினதருமைநினைந்திரங்கலும், பெருமகன் மயங்கலும், தோழிதலைமகடுயர்நிலைகிளந்து விடுத்தலுமாகிய நான்குமயங்கற்குரிய; பாங்கிகுறியுய்த் தகறலுந்திருமகட், புணர்ந்தவன்சேறலுமாகிய விரண்டு, நீங்கற்குரியவாமெனக்கொள்க. இவற்றுள், நேராதிறைவிநெஞ்சொடுகிளத்தலும், பெருமகனாற்றின தருமைநினைந்திரங்கலு, மிறைமகளிறைவனைக் குறிவிலக்கலுமாகியமூன்றும் வரைதல்வேட்கைக்குரிய; பாங்கிநெறியினதருமைகூறலு, மிறைவனைவரவுவிலக்கலுந், தலைமகடுயர்நிலைகிளந்து விடுத்தலுமாகியமூன்றும்வரைவுகடாதற்குரியவாகும். (௪௨)

௧௫௯. அல்லகுறி வருந்தொழிற் கருமை யென்றுங்
கெல்லிக்குறி யிடையீ டிருவகைத்தாகும்.

(இ-ள்) அல்லகுறியும் வருந்தொழிற்கருமையுமென விரண்டு வகையினையுடைத்திரவுக்குறியிடையீடென்றவாறு.

அல்லகுறியென்பது குறியல்ல வென்றவாறு. அதனைமுன்றிலென்பது போலக்கொள்க. அல்லகுறியாவது தலைமகனானிகழ்த்தப்படுவனவாகிய புள்ளெழுப்பன் முதலியன பிறிதொன்றினானிகழ்தல். வருந்தொழிற்கருமையாவது தலைமகன்வருகின்றதொழிற் கருமையாம். என்றென்பதெண்ணிடைச்சொல். ஆங்கென்பதசை. (௪௩)

௧௬0. இறைவிக் கிருளை யிறைவர வுணர்த்துழித்
தான்குறி மருண்டமை தலைவியவட் குணர்த்தலும்
பாங்கி தலைவன் றீங்கெடுத் தியம்பலும்
புலந்தவன் போதலும் புலர்ந்தபின் வறுங்களந்
தலைவிகண் டிரங்கலுந் தன்றுணைக் குரைத்தலுந்

தலைமக ளவலம் பாங்கி தணித்தலு
மிறைவன்மேற் பாங்கி குறிபிழைப் பேற்றலு
மிறைவிமே லிறைவன் குறிபிழைப் பேற்றலு
மவள்குறி மருண்டமை யவள்வற் கியம்பலு
மவன்மொழிக் கொடுமைசென் றவளவட் கியம்பலு
மென்பிழைப் பன்றென் றிறைவிநேர் தலுமென
வொன் றுபன் னொன் று மல்லகுறிக் குரிய.

(இ-ள்.) இறைவிக்கு இகுளை யிறைவரவுணர்த்துழித் தான் குறிமருண் டமை தலைவி யவட்குணர்த்தன்முதலாக வென்பிழைப்பன்றென்றிறைவி நேர்த லீறாகச் சொல்லப்பட்ட பன்னிரண்டும் அல்லகுறிக் குரியவாகுமென்றவாறு.

இறைவிக்கிகுளை யிறைவரவுணர்த்தற்குச் செயயுள்:—"கயல்வென்றவுண் கண்ணீகாரணமேதுகொல்கைதையங்கா, னயனின்றபுன்னையினன்மெலாமட லாழியங்கைச், சயமங்கைதன்பெருமான்றஞ்சைவாணன்றரியலர்போற், றுயரம் பெருகியிராவொருபோதுந்துயின்றிலவே." (தஞ்சை-௧௧௦) எனவும். "அம்ம வாழியோவன்னைநம்படப்பை, பொமமலோதிபமமென்சாயன், பின்னெனதுட ங்கிடைகளின்னிழலாகிய, புன்னைமென்காய்போகுசினையிரிய, வாடுவளிதூக்கிய வசைவிற்கொல்லோ, தெண்ணீர்ப்பொய்கையில்வீழ்ந்தன, வெண்ணினையுமை மோவுணர்குவல்யானே." (தொல்-பொருள்: பக்கம்-௩௩௧) எனவும் வரும். இது தோழி தாய்க்குரைப்பாள்போற் றலைமகட்குணர்த்தியவாறும்.

தான் குறிமருண்டமை தலைவி பாங்கிக்குணர்த்தற்குச்செய்யுள்:—"பேசத் தகுவதொனறனறுகண்டாய்பிற்தோர்குறியை, மேசத்தவர்குறியென்றுசென்றி யான்குறிகினறுவந்தேன், வாசத்தமிழ்புனைதாளுடையானறஞ்சைவாணனென் னார், தேசத்தவருமெய்தாவெயயநோயெய்திச்சேயிழையே." (தஞ்சை-௧௧௫) எனவும், "அணிகடற்றண்சேர்ப்பன்றேர்பபரிமாபபூண்ட, மணியரவமென்மற ழுந்துபோந்தேன்-கனிவிரும்பு, புள்ளரவங்கேட்டுப்பெயர்ந்தேனெளியிழா, யுள் ளுருகுநெஞ்சினேனாய்." (ஐந்திணை-௫௦) எனவும் வரும்.

பாங்கி தலைமகன்றீங்கெடுத் தியம்பற்குச் செய்யுள்:—"வடியோவெனுங் கண்மடந்தைநல்லாய்தஞ்சைவாணனைவந், தடியோமெனச்சென்றடையலர்போ லயர்கின்றநின்கைத். தொடியோடமென்பணைத்தோளிணைவாடுந்தொழில்புரிந்த, கொடியோர்துணிந்துசெய்தார்குறியாதகுறிநமக்கே." (தஞ்சை-௧௧௨) எனவும், "கொடுமுண்மடற்றாழைக்கூம்பவிழ்ந்தவொண்பூ, விடையுளிழுதொபபத்தோன்

றிப்—புடையெலாந், தெய்வங்கமழுந்தெளிகடற்றண்சேர்ப்பன், செய்தான் றெளியாக்குறி." (ஐந்திணை-சக.) எனவும் வரும்.

தலைமகன் புலந்துபோதற்குச் செய்யுள்:—"தேனுற்றவாகையந்தார்த்தஞ் சைவாணனைச்சேரலர்போன், மானுற்றபார்வைமயில்பொருட்டாகவழி தெரியாக், கானுற்றகானற்கனையிருள்வாய்வரக்கற்பித்தநீ, யானுற்றநோய்களெல்லாம்படுவாயினியென்னெஞ்சமே." (தஞ்சை-ககரு) எனவும், "குணகடற்றிரையதுபறைதபுநாரை, திண்டேர்ப்பொறையனாரெருண்டிமுன்றுறை, யயிரையாரிரைக்கண்வந்தாங்குச்,சேயளரியோட்படர்தி,நோயநெஞ்சேநோய்ப்பாலோயே." (குறுந்தொகை-கஉஅ.) எனவும் வரும்.

புலந்தபின்வறுங்களந்தலைவிகண்டிரங்கற்குச்செய்யுள்:—"தாதகைதண்டலைசூழ்தஞ்சைவாணன்றடந்துறைவாய், நீதகைகொண்டென்முன்னின்றனையே செந்திறக்கனிவாய், மேதகுமுள்ளெயிற்றெருண்முகைக்கொங்கைவெண்கோட்டுமென்பூந், கேதகையென்னுநல்லாய்கொண்கர்மாலை கிடைத்ததென்றே." (தஞ்சை-ககச) எனவரும்.

தலைமகள்பாங்கியோடுரைத்தற்குச்செய்யுள்:—* "தேனேரலங்கற்புனைபுகழ் வாணன் செழுந்தஞ்சைசூழ், கானேர்குறியிற்கனையிருள்வாய்வந்துகாலுழத்தி, யானேகியபினபுதாம்வந்துபோனதியம்புதற்கோ, மானேயிறைவர்வைத்தார்பங்கசாதம்வலம்புரிக்கே." (தஞ்சை-ககரு.) எனவும, "நெய்தற்†படுவினிறைகழித்தண்சேர்ப்பன், கைதைசூழ்கானலிற்கண்டநாட்போலானுற், செய்தகுறியும்பொய்யாயினவாற்சேயிழா, யையகொலான்றூர்தொடர்பு." (திணைமொழியைம்பது-சஉ) எனவும் வரும்.

தலைமகளவலம் பாங்கி தணித்தற்குச்செய்யுள்:—"பொய்யாதவர்தங்குறிபிழையாரவர்பூண்டவன்பு, மெய்யாதறேறியமுங்கனமின்னேபுயவெற்பிரண்டான், மையாழிவையங்கையிட்டவாணன்றெனமாறைவெற்பி, னுய்யானமென்கழுநீர்நறுமாலையுடைத்தல்லவே." (தஞ்சை-ககசு.) எனவரும்.

இறைவன்மேற் பாங்கி குறிபிழைப்பேற்றற்குச் செய்யுள்:—"விம்மூர்துயர்க்கடல்வெள்ளத்துள்ளேயெம்மைவீழ்வித்துநீ, ரெம்மூரகத்துவரலொழிந்திரெதிரேற்றதெவ்வர், தம்மூரைமுப்புரமாக்கியவாணன்றமிழ்த்தஞ்சைபோ, லும்மூர்வரத்துணிந்தோமன்பர்கூறுமவ்வூரெமக்கே." (தஞ்சை-ககஎ) எனவும், "காமங்கடவவுள்ளமினைப்ப, யாம்வந்துகாண்பதோர்பருவமாயி, னோங்கித்

---

*இச்செய்யுள் தஞ்சைவாணன்கோவை அச்சுப்புத்தகத்தில் விடப்பட்டுள்ளது.

†படப்பையென்றும் பாடம்.

தோன்றுமுயர்வரைக், கியாங்கெனப்படுவதுநம்மூர்தெய்யோ" (ஐங்குறுநூறு-௨௩௭) எனவும் வரும்.

இறைவிமேலின்றவன்குறிபிழைப்பேற்றற்குச்செய்யுள் :— " துறந்தனளாகியம்போருகந்தலைனையித்தொல்வரைமேற், பிறந்தனளாகும் பெருந்திருமாதெனப்பேதையரிற், சிறந்தனளாதலிற்செந்தமிழ்வாணன்றென்மாறையன்னாள், மறந்தனளாயினும்யாமொருபோதுமறவலமே." (தஞ்சை-௧௯௮) எனவும், "மழைவரவறியாமஞ்ஞையாலு, மடுக்கனல்லூரசைநடைக்கொடிச்சி, தாமெனம்மருளாளாயினும், யாந்தன்னுள்ளுபுமறந்தறியேமே." (ஐங்குறுநூறு-௨௯௮) எனவும் வரும்.

தலைமகள்குறிமருண்டமைதோழிதலைவற்குரைத்தற்குச் செய்யுள் —" தனையாவரும்புகழ்த்தரும்வாணன்றமிழ்த்தஞ்சைமா, னனையாளவள்குறியாமிதென்றேநினைந்தல்லதொன்று, நினையாவருங்கங்குனின்குறியாவந்து நின்றதுகம், வினையால்விளைந்ததென்றேவெறிதேயன்பமீண்டனளே." (தஞ்சை-௧௯௯) என வரும்.

தலைமகன்சொல்லிய கொடுமையைத் தலைமகட்குத்தோழிசொல்லியதற்குச் செய்யுள்:—" பல்லியம்போலுருமேறெங்குமார்ப்பதும்பார்ப்பதின்றி, வல்லியம்போதகமபோர்பயில்கான்வந்துவாணன்றஞ்சை, யல்லியம்போருகையன்னநின்கேளருளாசையினின்,றெல்லியம்போதுசெனறேனென்றுகேள்வரியம்பினரே" (தஞ்சை-௨௦௦) எனவரும்.

என்பிழைப்பன்றென்றிறைவிநேர்தற்குச்செய்யுள்:— " வியலூரெயிற்புறநொச்சியினூழ்மலர்வீழ்தொறெண்ணி, மயலூர்மனத்தொடுவைகினன் யான்றஞ்சைவாணன்வெற்பர், புயலூரிருட்கங்குல்வந்தவமேநின்றுபோயினரென், றயலூர்நகைக்குமென்னேயென்னபாவங்கொலாக்கினவே." ( தஞ்சை—௨௦௧ ) எனவும், " கொன்னூர்துஞ்சினும்யாந்துஞ்சலமே, யெம்மிலயலதேழிலும்பர், மயிலடியிலையமாக்குரனொச்சி, யணிகுமென்கொம்பூழ்த்த, மணிமருள்பூவின் பாடுநனிகேட்டே." (குறுந்தொகை-௧௩௮) எனவும்வரும்.

முன்னைஞான்று நிகழ்ந்தவையறிந்திருந்து மற்றைஞான்றுதலைமகளிவ்வாறு சொல்லியாற்றுதல் காரணமாகவும், பாங்கிசொல்லியாற்றுவித்தல் காரணமாகவும் வந்தன. (௬௬)

௧௬௧. தாயு நாயுமூ ருந்துஞ் சாமை
காவலர் கடுகுத னிலவுவெளிப் படுதல்
கூகை குழறுதல் கோழிகுரற் காட்டுத

லாகிய வேழு மல்லுகுறித் தலைவன்
வருந்தொழிற் கருமை பொருந்துத லுரிய.

(இ-ள்) தாய்துஞ்சாமைமுதலாகக்கோழிகுரற்காட்டுதலீறாகச் சொல்லப்பட்டவேழு மிரவுக்குறிக்கட் டலைமக்ன்வருந்தொழிலருமைக்குப் பொருந்துதலுடையவா மென்றவாறு.

தாய்துஞ்சாமைக்குச்செய்யுள்:— "ஆழிய கன்புவியுள்ளனயாவுமடங்கிநள்ளென், றூழிமுடிந்தன்னவோங்கிருள்யாமத்துமோடையினுந், தாழியினும்போதலர்தஞ்சைவாணன் றரியலர்போற், றோழிநம்மன்னைகண்ணேதுயில்கோடலுறந்தனவே." (தஞ்சை-உ0உ) எனவும், "மண்ணியசென்றவொண்ணுதலரிவை, புனறருபசுங்காய்தின்றதன் றப்பற், கொலைபுரிந்தனனே நன்னன்போல, வரையாநிரயத்துச்செலீஇயரோவன்னை, யொருநாணகைமுக விருந்தினன்வந்தெனப், பகைமுகவூரிற்றுஞ்சலோவிலளே." (குறுந்தொகை-உகஉ) எனவும் வரும்.

நாய்துஞ்சாமைக்குச் செய்யுள்:— "தண்ணென்புனல்வையைசூழ்தஞ்சைவாணன் றரியலர்போற், பெண்ணென்பிறவியும்பெருடைத்தலிப்பெரும்பதிநங், கண்ணென்பவர்வரக்கங்குலின்ஞாளிக்கணங்குரைத்துத், துண்ணென்கடுங்குரல்வாயன்னை துஞ்சினுந்துஞ்சிலவே." (தஞ்சை-உ0ங) எனவரும்.

ஊர்துஞ்சாமைக்குச்செய்யுள்:— "ஓங்கண்ணல்வெம்பகடுந்திவந்தோரை யுடன்றுதும்பைத், தேங்கண்ணிசூடிச்செருவென்றவாணன்றென்மாறைமின்னே, தாங்கண்ணனையர்தமைப்பிரிந்தோநந்தனிமைகண்டோ, நாங்கண்ணுறங்கினுமோவுறங்கார்கண்ணகரவரே." (தஞ்சை-உ0ச) எனவும், "குறுகைகயிரும் புலிக்கோள்வல்லேற்றை, பூநுதலிரும்பிடிபுலம்பத்தாக்கித், தாழ்நீர்நனந்தலைப் பெருங்களிறடூஉங், கல்லகவெற்பன்சொல்லிற்தேறி, யாமேநலனிழந்தனமே யாமத், தலர்வாய்ப்பெண்டிரம்பலோடொன்றிப், * புரையப்நீமொழிபயிற்றியுரை யெடுத், தாணுக்கொளவைத்தாகத், தாவென்னிழந்ததிவ்வழுங்கலூரே." (நற்றிணை-நச) எனவும் வரும்.

காவலர்கடுகுதற்குச்செய்யுள் :— "புயற்கண்ணியதலைப்பூகமென்பாளைப் புதுமதுநீர், வயற்கண்ணிறைதஞ்சைவாணன்றென்மாறையில்வஞ்சியன்னாள், கயற்கண்ணிணையஞ்சிநீமல்கக்காவலர்கைப்பறையின், செயற்கண்ணிணையல்லவோபடுகின்றனதிண்கடிப்பே." (தஞ்சை-உ0ரு) எனவரும்.

புரைப்பஃநீமொழி. என்றும் பாடம்.

நிலவுவெளிப்படுதற்குச் செய்யுள்:—"தென்பாற்கதிர்முத்தவெண்ணகை
யாய்திகிரிக்கிரிசூழ்,மண்பாற்புகழ்வைத்தவாணன்றென்மாறைநம்மன்னர்பொற்
றேர், பண்பாற்பரிக்கும்பரிவருமாறென்பாந்தநிலா, வெண்பாற்கடலில்வையம்
பதிஞலுமிதக்கின்றவே." (தஞ்சை-௨௦௬) எனவும், "கருங்கால்வேங்கைவீயுகு
துறுக, விரும்புலிக்குருளையிற்றோன்றுங்காட்டிடை, யெல்லிவருநர்களவிற்கு,
நல்லையல்லைநெடுவெண்ணிலவே." (குறுந்தொகை-௪௭) எனவும் வரும்.

கூகை குழறுதற்குச் செய்யுள்:—"நம்பேறுடைமையிருக்கின்றவாகடன்
ஞாலத்துள்ளோர், தம்பேறெனவந்தசந்திரவாணன்றரியலர்போல், வம்பேறு
கொங்கைமயிலியலுமஞ்சமன்றமராங், கொம்பேறிகள்ளிருள்வாய்க்குழறுகின்ற
கூகைகளே." (தஞ்சை-௨௦௭) எனவும், "எம்மூர்வாயிலுண்டுறைத்தடைஇய,
கடவுண்முதுமரத்துடனுறைவுபழகிய, தேயாவளைவாய்த்தெண்கட் கூருகிர்,
வாய்ப்பறையசாவாவலிமுந்துகூகை, மையூன்றெரிந்தநெய்வெண்புழுக்க, லெலி
வான்சூட்டொடுமலியப்பேணுது,மெஞ்சாக்கொள்கையெங்காதலர்வரனசைஇத்,
துஞ்சாதலமரும்பொழுதி, லஞ்சுவரக்கடுங்குரல்பயிற்றாதீமே." (நற்றிணை-௮௩)
எனவும் வரும்.

கோழிகுரற்காட்டுதற்குச் செய்யுள்:— "மன்பதையுய்யவருந்தஞ்சைவா
ணன்றென்மாறைவெற்பர், கொன்பதிவேல்வலங்கொண்டுவந்தாற்றங்கள்கோ
ணடந்தா,னென்பதுதேறியிடையிருளூரையெழுப்பும்வெம்மூள், பொன்பதிதாள்
வளைவாய்ச்செய்யசூட்டுவன்புள்ளினமே." (தஞ்சை-௨௦௮) எனவும், "கள்வரைக்
கண்காட்டுவர்போலக், கொள்ளுங்குரல்கூவுங்கோழி." (......) எனவும்வரும்.
இவையேழும் வரைவுகடாதற்கு முரியவாம். (௪௫)

௧௬௨ திரட்டியிவ் வாறு செப்பிய வொன்பதிற்
றிரட்டியு மிரவுக்குறி யிடையீட்டு விரியே.

(இ-ள்.) கூட்டியிப்படியாற் சொல்லப்பட்ட பதினெட்டுமிரவுக்குறி
யிடையீட்டுவிரியா மென்றவாறு. (௪௬)

௧௬௩. அச்ச முவர்த்த லாற்று மையென
மெய்ச்சிய வரைதல் வேட்கைமூ வகைத்தே.

(இ-ள்.) அச்சமு முவர்த்தலு மாற்றுமையுமென மூன்றுவகையினையுடை
த்தாம் விதிக்கப்பட்ட வரைதல் வேட்கை யென்றவாறு. (௪௭)

௧௬௪. பருவரல் வினவிய பாங்கிக் கிறைவி
யருமறை செவிலி யறிந்தமை கூறலுங்

தலைமகன் வருந்தொழிற் கருமை சாற்றலுந்
தலைமக ளூர்க்குச் செலவொருப் படுதலும்
பாங்கி யிறைவனைப் பழித்தலும் பூங்கொடி
யிறையோன் றன்னைநேர்ந் தியற்பட மொழிதலுங்
கனவுநலி புரைத்தலுங் கவினழி புரைத்தலுந்
தன்றுயர் தலைமகற் குரைத்தல் வேண்டலுந்
துன்புறு பாங்கி சொல்லெனச் சொல்லலு
மலர்பார்த் தற்ற வச்சக் கிளவியு
மாறுபார்த் துற்ற வச்சக் கிளவியுங்
காம மிக்க கழிபடர் கிளவியுந்
தனனுட் கையா றெய்திடு கிளவியு
நெறிவிலக்கு வித்தலுங் குறிவிலக்கு வித்தலும்
வெறிவிலக்கு வித்தலும் பிறவிலக்கு வித்தலுங்
குரவரை வரைவெதிர் கொள்ளுவித் தலுமென
வுரைபெற வகுத்த வொன்பதிற் றிரட்டியும்
வரைதல் வேட்கை விரியெனப் படுமே.

(இ-ள்.) பருவரல்வினவியபாங்கிக்கிறைவி யருமறைசெவிலியறிந்தமை கூறல்முதலாகக்குரவரைவரைவெதிர்கொள்ளுவித்தலீறாகச் சொற்பெறவகுத்த பதினெட்டும் வரைதல் வேட்கை விரியாமென்றவாறு.

அவற்றுட்டலைமகளைப்பாங்கி பருவரல் வினவுதற்குச்செய்யுள்:— "விண்டார்பதிகொண்டவேற்படைவாணனவிரைகமழ்பூந், தண்டாமரைமங்கைதங்கியதஞ்சைநின்றுயர்தம்மோ, வுண்டாகியமுனிவோவன்றியாயத்தொடுற்றதுண்டோ, வண்டார்குழலிசொல்லாய்செல்லலேதுன்மனத்திடையே." (தஞ்சை-உ0கூ) எனவரும்.

தலைமகளருமறை செவிலியறிந்தமை கூறற்குச் செய்யுள்:—"மாணிக்க மென்கொம்பரன்சொல்லுகேன் றஞ்சைவாணன்வெற்பர், பேணிப்புணர்ந்து பிரிந்தபின்றோன் றலும்பேதைமுகம், பாணித்தலின்றிமதிகண்டுநாணியபங்கயம் போ, லணிக்கவிழ்ந்ததனாலறிந்தாளன்னைநங்களவே." (தஞ்சை-உகo) எனவும்; "யாங்காகுவமோவணிநுதற்குறமக, டேம்படுசாரற்சிறுதினைப்பெருங் குரல், செவ்வாய்ப்*பாசினங்கவரீமற், றெவ்வாய்ச்சென்றனையிவணெனக்கூறி, யன்னையர்ஞுன்கழறமுன்னின், றருவியார்க்கும்†பயமலைநா

* பைங்கிளி—பிரதிபேதம்.

† பெருவரைநாடனை—பிரதிபேதம்.

ன, யறிதலுமறியேன்கண்டதுமில்லெனை, வெதிர்புனைதட்டையென்மலைப்பூக்
ாய்து, சுனைபாய்ந்தாடின் றுமிலனெனநினைவில், பொய்யவணர்தோவுரைத்
னயதுகேட்டுத், தலையிறைஞ்சினளேயன்னை, செலவொழிந்தனமாலளியஙின்
ாத்தே." (நற்றிணை. கஎஎ) எனவும் வரும்.

தலைமகடலைமகன்வருந்தொழிற்கருமைசாற்றற்குச் செய்யுள்:—"ஒவலில்
யன்னைஞாளியிவ்வூர்கணுறங்கினுமூர்க், காவலர்காய்வர்நிலாமதிகாலுங் கடுங்
டினைச், சேவலும்வாரணமுந்தஞ்சைவாணனைச்சென்றிறைஞ்சா, மேவலர்
ரால்வெய்யவாயடையாவென்மெலிவறிந்தே." (தஞ்சை-உகக.) எனவும்,
இரும்பிழிமகாஅரிவ்வழுங்கன்மூதூர், விழவின்றாயினுந்துஞ்சாதாகு, மல்லலா
ணமறுகுடன்மடியின், வல்லுரைக்கடுஞ்சொலன்னைதுஞ்சான், பிணிகொளருஞ்
றையன்னைதுஞ்சிற், றுஞ்சாக்கண்ணர்காவலர்கடுகுவ, ரிலங்குவேலிளைஞர்
ஞ்சின் வைவெயிற்று, வலஞ்சுரித்தொகையஞமலிமகிழ, மாவவாய்ஞமலி*
ரையாதுமடியிற், பகலுறழ்நிலவுக்கான்றுவிசும்பி, னகல்வாய்மண்டிலநின்று
ரியும்மே, திங்கள்கல்சேர்புகனையிருள்மடியி, னில்லெலிவல்சிவல்வாய்க்கூகை,
ழுதுவழங்கியாமத்தழிதகக்குழறும், வளைக்கட்சேவல்வாளாதுமடியின், மனைச்
சறிகோழிமாண்குரலியம்பு, மெல்லாமடிந்தகாலையொருநா, ணில்லாநெஞ்சத்த
ர்வாரலரே—அதனால், அரிபெய்புட்டிலார்ப்பப்பரிசிறந், தாதிபோகியபாய்பரி
ன்மா, ஞெச்சிவேலித்தித்தனுறந்தைக், கன்மூதிர்புறங்காட்டன்ன, பன்முட்
ன்ருற்றோழிநங்களவே." (அகநானூறு-கஉஉ.) எனவும் வரும்.

தலைமகனூர்க்குச்செலவொருப்படுதற்குச்செய்யுள்:—"நம்பானலனுண்ட
ம்பாதகர்தந்நகர்வினவித், தம்பாலுடன்சென்றுசார்குவமோதரியாரைவென்று,
பம்பார்கழல்புனைவாணன்றென்மாறைவளரும்வஞ்சிக், கொம்பாகியமருங்குற்
ரும்பாமொழிக்கோமளமே." (தஞ்சை. உகஉ.) எனவும், "படுதிரைகொழீஇய
ரானிறவெக்கர்த், தொடியோர்மடிந்தெனத்துறைபுலம்பின்றே, முடிவலைமுகந்த
மூடங்கிறுப்படப்பைப், படுபுள்ளோப்பலிற்பாக்கமும்வறிதே, கோட்டுமீனெ
றிந்தவுவகையர்வேட்டமடிந், தெமருமல்கினரேமாந்தனமெனச், சென்றுநாமறியி
னெவனோதோழி, மன்றப்புன்னைமாச்சினைநறவீ, முன்றிற்றாழையொடுகமழுந்,
தெண்கடற்சேர்ப்பன்சிறுநல்லூர்க்கே." (நற்றிணை. சக.) எனவும் வரும்.

பாங்கியிறைவனைப்பழித்தற்குச்செய்யுள்:— "வறியார்புகழ்தஞ்சைவாணன்
தென்மாறைமடந்தையன்ன, வறியாடியர்முன்னறிந்தவர்தாமதனுலழலின்,
பொறியாருயிர்வெம்பணிமாமணியும்புதையிருள்கூர், நெறியாரருள்பெறநாமோ

* மகிழாது எனவும் பிரதிபேதம்.

ளிடைநீந்துநமே." (தஞ்சை. உகஉ.) எனவும், "ஈயற்புற்றத்தீர்ம்புறத்திறுத்த, குரும்பிவல்சிப்பெருங்கையேற்றை, தூங்குதோற்றுதியவள்ளுகிர்கதுவலிற், பாம்புமதனழியும்பானாட்கங்குலு, மரியவல்லமனிகுளைபெரிய, கேழலட்டபேழ்வாயேற்றை, பலாவமலடுக்கம்புலரவீர்க்குங், கழைநரல்சிலம்பினுங்கண்வழையொடு, வாழையோங்கியதாழ்கண்ணசும்பிற், படுகடுங்களிற்றின்வருத்தஞ்சொலியப், பிடிபடிமுறுக்கியபெருமரப்பூசல், விண்டோய்விடரகத்தியம்புமவர்நாட்டெண்ணரும்பிறங்கன்மானதர்மயங்காது, மின்னுவிடச்சிறியவொதுங்கி மென்மெலத், துளிதலைத்தலைஇயமண்ணியேரைம்பால், சிறுபுறம்புதையவாரிக்குரல்பிழியூஉ, நெறிகெடவிலங்கியநீரிச்சுர, மறிதலுமறிதிரோவென்னுநர்ப்பெறினே." (அகநானூறு. அ.) எனவும் வரும்.

தலைமகளியற்பட மொழிதற்குச்செய்யுள்:—"புணராவிரகமும்போகாவிரவும் புணர்முலையே, விணரார்பசப்பும்பிறவுமெல்லாமிருள்கூர்ந்தறல்போல், வணரார் குழற்பிறைவாணுதலாய்தஞ்சைவாணன்வெற்ப, ருணராதிருப்பதுவேயொன்று மல்லநம்மூழ்வினையே." (தஞ்சை. உகச.) எனவும், "இப்பியீனுகுத்தநித்தில, மிருளறவிமைக்குமல்கிருந்துறைவ, னருளாதுறைவானாகவு, மிறையிறந்தனவாற் றோழியென்வளையே." (............) எனவும் வரும்.

தலைமகள்கனவுநலிபுரைத்தற்குச்செய்யுள்:—*"சினவாகைசூடிச்செரு வென்றவாணன்றென்மாறையினம், மனைவாழ்மனையவர்வந்துநல்லியாமமணைந்த தெல்லா, நனவாமெனவேமகிழ்ந்தேவிழித்தொன்றுநான்கண்டிலேன், கனவாய் முடிந்ததுபின்னையென்னேயென்னைகதவமே." (தஞ்சை. உகரு.) எனவும், "கேட்டிசின்வாழிதோழியல்கற், பொய்வலாளன்மெய்யுறமரீஇ, வாய்த்தரு பொய்க்கனாமருட்டவேற்றெழூஉ, தமளிதைவந்தனனேகுவளை, வண்டுபடுமலரிற் சாஅய்ச், தமியென்மன்றவளியேன்யானே." (குறுந்தொகை. ௩௦) எனவும் வரும்.

தலைமகள் கவினழிபுரைத்தற்குச்செய்யுள்:—"வாளினுநீள்விழிவாணுதலாய் தஞ்சைவாணன்றெவ்வி, னாளினுநாணுநலந்தொலைவேனகையாரயில்வேல், வேளினுமோர்நல்லவெற்பனுநீயுமென்மேனியினுந், தோளினுநோயறியீரறியாத தென்றொல்வினையே." (தஞ்சை. உகக.) எனவும், "முடக்காலிறவின்முடங்கு புறப்பெருங்கிளை, †புணரிமிகுதிரைதரூஉந்துறைவன், புணரியவிந்தனானன்று, மின்னதுமன்றோநன்னுதற்கவினே." (குறுந்தொகை. சoக) எனவும் வரும்.

---

* இத்துறைக்குத் தஞ்சைவாணன்கோவை யுரைகாரரால் வேறுசெய்யுள் காட்டப்பட்டுள்ளது.

† புணரியிடைதிரை, என்றும் பாடம்.

தலைமகடன் றுயர் தலைமகற்குரைத்தல்வேண்டற்குச்செய்யுள் :—" ரைப் ர்மதுரைத்தமிழ்தெரிவாணன்றென்மாறைறவையை, நுரைப்பான்முகந்தன்ன ர்டுகிலாயிந்தநோயவர்கவின், நுரைப்பாருளரோவுயிரெய்தலாநமக்கூர் தி ை ர ),நுரைப்பால்வளருமபுகழெய்தலாமவர்தங்களுக்கே."(தஞ்சை. உகஎ.)எனவும், ள்ளும்புலம்பினபூவுங்கூம்பின, கானலுமபுலம்புநனியுடைத்தேவானமு, நம்மே ாலும்மார்த்தாகி, யெல்லைகழியப்புல்லென்றன்றே, யின்னுமூனேனேதோழி ிலை, தண்ணியகமழும்ஞாழற், றண்ணந்துறைவர்க் குரைக்குநர்ப்பெறினே." றுந்தொகை. நகo.) எனவும வரும.

பாங்கி நின்குறைநீயேசொல்லெனத்தலைமகட்குச்சொல்லற்குச் செய்யுள்:— ால்லெனவேயென்னுறதுயர்தாமுமுண நம்வண்ணஞ், சொல்லெனநீயிதுசொ ிியென்பேறுன்றுயரமெல்லாம், வல்லெனவேகொண்டகொங்கையர்வேடஞ் சவாணன்வெற்பி, லல்லெனவார்குழலாயறியாரல்லரன்ப நமே." (த ஞ் ை ச. கஅ.) எனவும்,"ஊ நறுகோழிச்சிறு பாப்பேபடை, சேவறசெய்குறிநீடி, ஞாட லு ணர்தலுங்கூடுமாற்பெரிதே." (......) எனவும் வரும.

தலைமகளலர்பார்த்துற்றவச்சக்கிளவிக்குச்செய்யுள்:—"மலருந்தொடைவஞ் வஞ்சகமாதருமாறனும்வா, யலருந்தடங்கையலருந்தொடாகிற்பவஞ்சிநெஞ்சம், லரும்புகழ்தஞ்சைவாணா ...ப்பணியலாபோற், புலரும்பெயருங்கண்ணீர் லராதுபுலரினுமே." (தஞ்சை. உகக.) எனவும், "அலரியாங்கொல்லதோ."(...) னவும் வரும்.

தலைமகளாறுபார்த்துற்றவச்சக்கிளவிக்குச்செய்யுள்:—"அ ரி யு ங் க ரி யு ம் பொருநெறிக்கோர்துணையாயவாமேற்,சொரியுந்திவலைதுடைக்கவென்றோகுழை தாய்ந்துநஞ்சும, வரியுமபயில்கண்ணியாணனறை மாறைநம்மன் ன ர் வ ந் து, ரியும்பொழுதெலலிவாயயனை யமைனமபின்செல்வதே." (தஞ்சை. உ௨o) னவும், "குன்றக்கூகைகுழறினுமுன்றிற, பலவினிருஞ்சினைக்கலைபாயந்துக ரினு, மஞ்சுமனனித்தெனெஞ்சமினியே, யாரிருட்கங்குலவர்வரிற், சாரனீளி டைச்செலவானுதே." (குறுந்தொகை. கஙஅ.) எனவும் வரும்.

காமமிக்ககழிபடர்கிளவிக்குச்செய்யுள் :—* " ஓதக்கயலையுண்டண்ணுந்து விக்கியுடல்குலுக்கிப, பாதத்துணைபிமிர்கருந்தருகிர்வெண்பணிலபங்க, சாதத் திருநிதியன்ஞன்குலோத்துங்கனறஞ்சைபிலென, காதற்சிறைபுகுறையுங்கண் டாரிலைக்கனனெஞ்சமே." (தஞ்சை. உஉக.) எனவும, "புனகண்கூமாலைப் புலம்புமென்கண்ணேபோற், றுன்பமுழவாய்துயிலப்பெறுதியா, லின்கள்வாய்

* இச்செய்யுள் தஞ்சைவாணன்கோவை அச்சுப்புஸ்தகத்தில் விடப்பட் டுள்ளது.

மஞ்சமஞ்சூர்ந்துறைவீசுகின்ற, சாற்காலம்வந்தடைந்தார் தஞ்சைவாணன் றமிழ் வெற்பரே." (தஞ்சை-சகங.) எனவரும்.

தூதிற்குப்பிரிவு தலைமகனுணர்ந்ததோழி தலைமகட்குணர்த்தற்குச் செய்யுள்:—" தூதாகவன்பர்செலத்துணிந்தாரென் றுஞ்சொற்புலவோர், மாதாகவன் பசிதீர்த்தருள்வாணன்றென்மாறையிந்து, மீதாகவம்புகிடந்தன போலுங்கண் மெல்லியலிப், போதாகவம்புகல்வோரிகலார்தம்புரம்புகவே." (தஞ்சை-சகச) எனவரும்.

தலைமகன் றூதிற்குப் பிரிந்துழித் தலைமகள் முன்பனிப்பருவங்கண்டு வருந் தியதற்குச் செய்யுள்:—"மலிகின் றவண்புகழ்வாணன்றென்மாறையைவாழ்த்த லர்போன், மெலிகின் றசிந்தையுமேனியுங்கொண்டுவிளர்ப்பெனும்பேர், பொலி கின் றகஞ்சுகம்போர்த்திருந்தேனைப்புரந்தருளார், நலிகின் றமுன்பனிநாளினண் ணார்முனைநண்ணினரே." (தஞ்சை-சகரு.) என வரும்.

தூதிற்குப்பிரிந்துழி முன்பனிப்பருவங்கண்டுவருந்தியதலைமகளைத் தோழி யாற்றுவித்தற்குச் செய்யுள்:—"சுற்றுங்குழனின்பிணிவிடுப்பான்வந்துதோன்றி னர்பார், முற்றும்பொழிகின் றமுன்பனிகாண்முகிலுங்கடலும், வற்றும்பருவத்து மண்புரப்பான் றஞ்சைவாணனென்னார்ச், செற்றும்படையின்வெம்போர்தணிப் பானன்றுசென் றவரே." (தஞ்சை-சகசு ) எனவரும் பிறவுமன்ன.

வேந்தர்க்குற்றுழி யுதவியிற்பிரிவு தலைமகனுணர்ந்ததோழி தலைமகட்கு ணர்த்தற்குச் செய்யுள் :—" நண்பானமன்னர்க்கிடர்தணிப்பானெண்ணிநல்லுத விப், பண்பானமன்னர்படர்தனுற்றூர்பனிநீர்பொழியுந், தண்பானலந்தொடையம் புயவாணன் றமிழ்த்தஞ்சைவாழ், வெண்பானலங்கொள்செவ்வாயன்னமேயன்ன மென்னடையே." (தஞ்சை-சகஎ.) எனவரும்.

தலைமகன்வேந்தர்க்குற்றுழி யுதவியிற்பிரிந்துழித் தலைமகள் பின்பனிப்பரு வங்கண்டு வருந்தியதற்குச் செய்யுள்:—" இன்னற்படுகின் றவென்னையெண்ணார் தமக்கின் றுணையாம், மன்னற்குதவிப்பிரிந்தங்காதலர்வாணன் றஞ்சைக் கன் னற்கடிகையறிவதல்லாற்பகல்காண்பரிதாம், பின்னற்கனையிருள்கூர்துன்பமேவி யபின்பனியே." (தஞ்சை-சகஅ.) எனவரும்.

வேந்தர்க்குற்றுழி யுதவியிற் பிரிந்துழிப் பின்பனிப்பருவங்கண்டு வருந்திய தலைமகளைத் தோழியாற்றுவித்தற்குச்செய்யுள்:—"வடுக்கண்டனையகண்மங்கை நல்லாய்தஞ்சைவாணன்வெற்பி, னடுக்கங்குளிர வசைகின் றவாடையகன் ற வர்க்கு, நடுக்கஞ்செய்பின்பனிநாளின்வந்தாரமர்கண்பனுற்ற, விடுக்கண்களையு மென்றேயகன்றானமிகந்தவரே." (தஞ்சை-சகக.) எனவரும்.

னுங்கொண்டெறிந்தாலொத்ததென்செவிக்கே." (தஞ்சை. உஉக.) எனவும், "காணினிவாழிதோழியாணர்க், கடும்புனலடைகரைநெடுங்கயத்திட்ட, மீன்வலை மாப்பட்டாஅங், கிதுமற்றெவனோநொதுமலர் தலையே." (குறுந்தொகை. கஎக.) எனவும்வரும்.

குரவரைவரைவெதிர்கொள்ளுவித்தற்குச்செய்யுள் :— "தற்பழியாமலுஞ் சந்திரவாணன்றமிழ்த்தஞ்சைநங், கற்பழியாமலுங்காரணமாகக்கயல்விழிநின், சொற்பழியார்நமர்சொல்லுவல்லேசென்றுசொலலலையே, விற்பழியாம்வழியா நமதாருயிர்க்கேதமுமே" (தஞ்சை-உஉஎ.) எனவும், "எந்தையும், யாயுமறிய வுரைத்தீயின்யானுற்ற, நோயுங்களைகுவைமன்." (கலித்தொகை. முல்லை-கக.) எனவும்வரும்.

"பருவரல்வினவியபாங்கிக்கிறைவி, யருமறைசெவிலியறிந்தமைகூறலும், தலைமகன்வருந்தொழிற்கருமைசாற்றலும்" ஆகவிரண்டும், "அலர்பார்த்துற்றவச் சக்கிளவியு, மாறுபாரத்துறறவச்சக்கிளவியும" ஆகவிரண்டும், நெறிவிலக்குவித் தன்முதலியநான்குமாகியவெட்டுமெச்சத்திற்குரியன; பாங்கியிறைவனைப்பழித் தலும், தன்புறுபாங்கிசொல்லெனச்சொல்லலுமாகியவிரண்டுமுவர்த்தற்குரி யன; தலைமகனூர்க்குச்செலவொருப்படுதலும், பூங்கொடியிறையோன்றன்னை நேர்ந்தியற்படமொழிதலும், கனவுநலிபுரைததலும், கவினழிபுரைத்தலும், தன் றுயர்தலைவர்க்குணாத்தலவேணடலும், காமமிக்ககழிபடர்கிளவியும், தன்னுட்கை யாறெய்திடுகிளவியும், குரவரைவரைவெதிர்கொள்ளுவித்தலுமாகியவெட்டு மாற்றாமைக்குரியன. (சுஅ)

ககரு. பொய்த்தன் மறுத்தல் கழறன் மெய்த்தலென் றொருநால் வகைத்தே வரைவு கடாதல்.

(இ-ள்.) பொய்த்தன்முதலாகமெய்த்தலீறாக நான்குவகையினையுடைத்து வரைவுகடாதலென்றவாறு. (சுக)

கசுசு. வினவிய செவிலிக்கு மறைத்தமை விளம்பலு
மலரறி வுறுத்தலுந் தாயறி வுணர்த்தலும்
வெறியச் சுறுத்தலும் பிறர்வரை வுணர்த்தலும்
வரைவெதிர் வுணர்த்தலும் வரையுநா ளுணர்த்தலு
மறிவறி வுறுத்தலுங் குறிபெயர்த் திடுதலும்
பகல்வரு வானை யிரவுவரு கென்றலு
மிரவுவரு வானைப் பகல்வரு கென்றலும்
பகலினு மிரவினும் பயின்றுவரு கென்றலும்

பகலினு மிரவினு மகலிவ ணென்றலு
மூரவோ டூடு மூருங் குலனு
மாபும் புகழும் வாய்மையுங் கூறலு
மாறுபார்த் துற்ற வச்சங் கூறலு
மாற்றுத் தன்மை யாற்றக் கூறலுங்
காவன்மிக வுரைத்தலுங் காமமிக வுரைத்தலுங்
கனவுநலி புரைத்தலுங் கவினழி புரைத்தலு
மெனமுறை நாடி யியம்பிய விருபதும்
வரைவு கடாதல் விரியெனப் படுமே.

(இ-ள்.) வினவியசெவிலிக்கு மறைத்தமைவிளம்பன் முதலாகக் கவினழி புணர்த்தலீறாகச் சொல்லப்பட்ட விருபதும் வரைவுகடாதல் விரியெனப்படு மென்றவாறு. அவற்றுள், வினவிய செவிலிக்கு மறைத்தமை தலைவர்க்குத் தோழிவிளம்பற்குச் செய்யுள்:—"தளராவிளமுலைதாங்குகில்லாதுதளரிடைகண், வளாதவெதன்கங்குல்வாராமயனதஞ்சைவாணனவெற்பா, விளாரர்திருநுத லன்னைக்கொர்மாற்றமவிளம்பியுபகீத, னுளாராமவர்வலைபுட்பட்டுவாழ்வதுணாங் கருளே." (தஞ்சை-உஉஅ.) எனவரும்.

அலரறிவுறுத்தற்குச்செய்யுள்:—"மணிவரைமாளிகைமாறைவரோதயன் வாணன்வெற்பா, பணிமொழியாளென்னுங்கொள்கொம்புமூடிப்படர்ந் தயலா, ரணிமனைதோறுங்கொழுந்துவிட்டம்பலரும்பிமண்மேற், றணிவிலதாகவிபபோ தலர்பூத்ததுன் றண்ணளியே." (தஞ்சை-உஉகூ.) எனவும், "அறிந்தோரறிவில ரென்றலர்சிறந்த, வின்னுயிர்கழியினுநனியின்றோதே,புன்னையங்கானற்புணர்குறி வாய்த்த, பின்னலோதியென்றோழியன்றே, படுமணியானைப்பசும்பூட்சோழர், கொடிநுடங்குமறுகினார்க்காட்டாங்கட், கள்ளுடைத்தடவிற்புளவொலித தோ வாத், தேர்வழங்குதெருவினன்ன, கௌவையாகின்றதையநின்னருளே." (நற்றிணை-உஉஎ.) எனவும் வரும்.

தாயறிவுணர்த்தற்குச்செய்யுள்:—"திரையிற்பவளம்வடவாமுகத்தெழுந்தீக் கொழுந்தின், கரையிற்படருங்கடற்றுறைநாடசயற்கொடிபொன், வரையிற் றிகழ்வித்தவாணன்றென்மாறைமலர்ந்தமென்மயல், விரையிற்களவையெல்லா மறிந்தாளன்னைமெய்யுறவே." (தஞ்சை-உங0.) எனவும், 'நாரைநல்லினங்கடுப்ப மகளிர், நீர்வார்கூந்தலுளருந்துறைவ, பொலங்குகழ்நெய்தலுரைப்பவித்துறைப், பல்கால்வரூஉந்தேரெனச், செல்லாதீமோவென்றனள்யாயே." (ஐங்குறுநூறு-கஅகூ.) எனவும வரும்.

வெறியச்சுறுத்தற்குச் செய்யுள்:—"மையுற்றநீலக்கண்மாமங்கைகோன் றஞ்சைவாணன்வெற்பி, னெய்யுற்றவேலன்பசீதணியாமையி னெஞ்சினுள்ளே, யையுற்றயர்வுற்றெம்மன்னையுமாயுமென்றாணங்கின், மெய்யுற்றநோய்தணிப் பான்வெறியாடல்விரும்பினரே." (தஞ்சை-௨௩௧.) எனவரும்.

பிறர்வரைவுணர்த்தற்குச்செய்யுள்:-"வெடிக்கின்றவிப்பியுணித்திலம்பைத் தலைவெம்பகுவாய்த், துடிக்கின்றதிவகளிற்றொடுந்துறைவசெஞ்சொற்புல வோர், வடிக்கின்றமுத்தமிழ்வாணன்றென்மாறையெம்மான்மருங்கை, யொடிக் கின்றகொங்கைகண்டாலெவர்நெஞ்சுருகாதவரே."(தஞ்சை-௨௩௨.) எனவும், "சிறுகட்பன்றிப்பெருஞ்சினவொருத்தலொடு. குறுக்கையிரும்புலிபொரூஉநாட, னனிநாணுடைமையமன்ற,பனிப்பயந்தனநீயயந்தோள்கண்ணே." ஐங்குறுநூறு- ௨௩௩.) எனவும் வரும்.

வரைவெதிர்வுணர்த்தற்குச்செய்யுள் :—" குருதிகண்டாலன்னகாந்தளஞ் சாரற்குறிவெறிதே, வருதிகண்டாய்தஞ்சைவாணன்வெற்பாவெங்கண்மாநகர்நீ, சுருதிகண்டாரொடுந்தோன்றிலெங்கேளிரினைசொல்லிகவார், பருதி கண்டான் மலராதொழியாகயப்பங்கயமே."(தஞ்சை-௨௩௩.)எனவும், 'மாத்தொலம்பி'(...) எனவும வரும்.

வரையுநாளுணர்த்தற்குச் செய்யுள்:—" அலகமபணகண்ணிவள்கொங்கை மென்சுணங்காவெணவி, பலகம்பலசெய்பபூக்கனமேயங்கைபணிவரைமேற், றிலகம்பதித்தெனச்செல்வைகதவாணன்றென்மாறைமன்ன, னுலகம்பயில்புகழ் போற்சிலம்பாமதியூர்கொண்டதே."(தஞ்சை-௨௩௪.)எனவும்,"சோழிலைவாழைக் கோண்மிகுபெருங்குலை, யூழுறுதீங்கனியுண்ணுநர்த்தடுத்த, சாரற்பலவின்கனி யொடேழ்படு, பாறைநெடுஞ்சுனைவிளைந்ததேற, லறியாதுண்டகடுவனயலது, கறி வளர்சாந்தமேறல்செல்லாது, நறுவீயடுக்கத்துமகிழ்ந்துகண்படுக்குங், குறியா வின்பமெளிதினின்மலைப், பல்வேறுவிலங்குமெய்துநாட, குறித்தவின்பநினைக் கெவனரிய,வெறுத்தவேஎர்வேய்புரைபணைத்தோ,ணிறுப்பநில்லாநெஞ்சமொடு நின்மாட், டிவளுமினையளாயிற்றந்தை, யருங்கடிக்காவலர்சோர்பதனொற்றிக், கங்குல்வருதலுமுரியைபைம்புதல், வேங்கையுமொள்ளிணர்விரிந்தன, நெடுவெ ண்டிங்களுமூர்கொண்டன்றே." (அகநானூறு-௨.) எனவும் வரும்.

தலைமகளறிவுதலைமகற்கறிவுறுத்தற்குச்செய்யுள் :-"வனநாண்முளரிமுலை வென்றவாணன்றென்மாறைவெற்பிற், கனநாணணிந்துபொற்கச்சறவீசிக்கதித் தெழுந்த, தனநாணுநுண்ணிடைத்தையனல்லாள்பழிசாற்றுவல்யா, னெனநா ணிநின்பழிதான்மறைத்தாளன்பவென்னையுமே." (தஞ்சை-௨௩௫.) எனவும்,

“தன்னெவ்வங்கூறினுநீசெய்தவருளின்மை, யென்னையுமறைத்தாளென்றொழியதுகேட்டு, நின்னையான்பிறர்முன்னர்ப்பழிகூறருஞணி.” (கலித்தொகை. ௪௪.) எனவும் வரும்.

குறிபெயர்த்திடுதற்குச்செய்யுள்:—“ஊரோர்பவரிங்குலாவவுங்கூடும்வந்தொண்சிலம்பா, வேறோர்பொதும்பரிற்போய்விளையாடுகவேற்படையான், மாறோர்பகைவென்றவாணன்றென்மாறையெம்மன்னுதவப், பேறோர்வடிவுகொண்டாலன்னநீயுமென்பேதையுமே.”(தஞ்சை ௨௩௪)எனவும், “விளையாட்டாயமொடுவெண்மணலழுத்தி, மறந்தனந்துறந்தகாழ்முளையகைய, நெய்பெய்தீம்பால்பெய்தினிதுவளர்ப்ப, நும்மினுஞ்சிறந்தது நுவ்வையாகுமென், றன்னைகூறினள்புன்னையதுசிறப்பே, யம்மநாணுதும் நும்மொடுநகையே, விருந்திற்பாணருளரிசைகடுப்ப, வலம்புரிவான்கோடுநரலுமிலங்குநீர்த், துறைகெழுகொண்கநீநல்கி, னிறைபடுநீழல்பிறவுமாருளவே.” (நற்றிணை-௧௭௨.) எனவும்வரும். குறிபெயர்த்திடுதற்கு மேற்காட்டிய செய்யுள் பகற்குறிக்கு மிரவுக்குறிக்கு மேற்குமாறறிந்துகொள்க.

பகல்வருவானையிரவுவருகென்றற்குச்செய்யுள்:—“முத்தணிநீலமணித்தகட்டுள்ளெங்குமொய்கொளவே, வைத்தணிசேரவகுத்ததுபோற்றஞ்சைவாணன்வையைப், பைத்தணிவார்திரைதோய்கருந்தாட்புன்னைப்பாசிலைவெண், டொத்தணிபூந்துறைவாவருவாயிருடேங்கிடையே.”(தஞ்சை-௨௩௭.) எனவும், “பனைத்திரளன்னபரேரெறழ்த்தடக்கைக், கொலைச்சினந்தவிராமதனுடைமுன்பின், வண்டுபடுகடாஅத்துயர்மருப்பியானை, தண்கமழ்சிலம்பின்மரம்படத்தொலைச்சி, யுறுபுலியுரறக்குத்திவிறல்கடிந்து, சிறுதினைப்பெரும்புனம்வௌவுநாட, கடும்பரிக்குதிரையாஅயெயினை, னெடுந்தேர்மிஞிலியொடுபொருதுகளம்பட்டெனக், காணியசெல்லாக்கூகைநாணிக், கடும்பகல்வழங்காதாஅங்கிடும்பை, பெரிதாலம்மவிவட்கேயதனான், மாலைவருதல்வேண்டுஞ்சோலை, முளைமேய்பெருங்களிறுவழங்கு, மலைமுதலடுக்கத்தசிறுகல்லாறே.”(அகநானூறு. ௧௪௮.) எனவும்வரும்.

இரவுவருவானைப் பகல்வருகென்றற்குச்செய்யுள்:—“இழைவிளையாடுமினமுலைசாயற்கிடைந்தமஞ்ஞை, கழைவிளையாடுங்கடிப்புனங்காத்துங்கலையகலாத், தழைவிளையாடுமயர்சிலம்பாவின்னுமன்பொருட்டான், மழைவிளையாடுமதிற்றஞ்சைவாணன்மலயத்திலே.” (தஞ்சை-௨௩௮.) எனவும், “நெடுமலையடுக்கங்கண்கெடமின்னிப், படுமழைபொழிந்தபானாட்கங்குற், குஞ்சரநுங்கத்தாக்கிக், கொடுவரிச், செங்கணிநம்புலிகுழுமுஞ்சாரல், வாரல்வாழியவையநேரிறை, நெடுமென்பணைத்தோளிவளும்யானுங், காவல்கண்ணினந்தினையேயானெ, மந்தியுமறியாமரம்பயிலிறும்பி, னுண்செங்காந்தளவிழ்ந்தவாங்கட், டண்பலருவித்

தாழ்நீரொருசிறை, யுருமுச்சிவப்பெறிந்த நஞ்சுடைப்பாம்பின், றிருமணிவிளக்கிற் பெறுகுவைபல, விருண்மென்கூந்தலேழுறுதுயிலே." (அகநானூறு-கஉ.) எனவும் வரும்.

பகலினுமிரவினும் பயின்றுவருகென்றற்குச்செய்யுள்:— "குரவுங்கணியும் விரவும்வெற்பாவெய்யகுஞ்சரமேல், வரவுந்திபதெவ்வைமாற்றியவாணன்றென் மாலிறமின்னு, மரவும்பணியுநுடங்கிடையாற்றலளாற்பகலு, மிரவுங்குறிவயினீ வரல்வேண்டுமிவள்பொருட்டே." (தஞ்சை-உ௩௯.) எனவரும்.

பகலினுமிரவினுமகலிவனென்றற்குச்செய்யுள்:— "தாவாதசெல்வந்தருந் தஞ்சைவாணன்றடஞ்சிலம்பா, நீவாரல்சாரனிலவலராம்பகனீடிருளார், மாவா ணிலவுநிலமங்கைவார்குழன்மல்லிகைபோ, லோவாதிரவெறிக்குஞ்சோலை நீழலி னூடுவந்தே." (தஞ்சை-உ௪0.) எனவரும்.

தலைமகளுடைமூருங்குலனுமரபும்புகழும்வாய்மையுங் கூறற்குச்செய்யுள்:— "தலத்திற்குமாறைக்குமன்னவன்வாணன்றமிழ்த்தஞ்சைசூழ், நிலத்திற்குமா மணியாகுநின்னூட்டிற்குநின்பதிக்குங், குலத்திற்குமாசில்குடிமைக்குஞ்சீர்மைக் குங்கோதின்மெய்ம்மை, நலத்திற்குமாவதன்றால்வரையாதுநடப்பதுவே." (தஞ்சை. உ௪க.) எனவும், "பிரசங்கொளவீழ்ந்ததீந்தேனிறாஅன், மரையான்குழவி குளம்பிற்றுகைக்கும்,வரையகநாடவரையாவரினெந், நிரைதொடிவாழ்தலிலள்." (ஐந்திணையெழுபது-க0.) எனவும், பழனக்கம்புள்பயிற்பெடையசவுங், கழனியூர நின்மொழிவலென்றுந், துஞ்சுமனைநெடுநகர்வருதி, யஞ்சாயோவிவடந்தைகை வேலே." (ஐங்குறுநூறு. ௬0.) எனவும், "தாமரைக்கண்ணியைதண்ணறுஞ் சாந்தினை, நேரிதழ்க்கோதையாள்செய்குறிநீவரின், மணங்கமழ்நாற்றத்தமலை நின்றுபலிபெறூஉ, மணங்கெனவஞ்சுவர்சிறுகுடியோரே." (கலித்தொகை-௫உ.) எனவும், "கடிமலர்ப்புன்னைக்கீழ்க்காரிகைதோற்றாளைத், தொடிநெகிழ்ந்த தோளளாத்துறப்பாயான்மற்றுநின், குடிமைக்கீழ்ப்பெரியதோர்குற்றமாய்க்கிட வாதோ" எனவும், "ஆய்மலர்ப்புன்னைக்கீழணிநலந்தோற்றாளை, நோய்மலிநிலை யளாத்துறப்பாயான்மற்றுநின், வாய்மைக்கட்பெரியதோர்வஞ்சமாய்க் கிடவா தோ" எனவும், "திகழ்மலர்ப்புன்னைக்கீழ்த்திருநலந்தோற்றாளை, யிகழ்மலர்க் கண்ணளாத்துறப்பாயான்மற்றுநின், புகழ்மைக்கட்பெரியதோர்புகரகிக்கிடவா தோ." (நெய்தற்கலி-௧அ.) எனவும் வரும். இவை நாடுமுதலியனவற்றிற்குரிய சான்றோர்செய்யுளாம்.

ஆறுபார்த்துற்ற வச்சங்கூறற்குச்செய்யுள்:— "புராந்தகர்செஞ்சடைவெண் பிறைபோலுதற்புள்ளிமிழ்பூங், குராந்தொடைமென்குழற்கொம்பினைவேண்டிக் கொடிமுல்லைநீண், மராந்தழுவுந்தஞ்சைவாணன்வெற்பாவல்சிதேர்ந்திலஞ்சிக், கராந்திரிகல்லதர்வாயெல்லிநீவரல்கற்பலவே." (தஞ்சை-உ௪உ.) எனவும்,

"கரைபொருகானியாற்றங்கல்லதரெம்முள்ளிவருவிராயி, னரையிருள்யாமத்தடு புலியேறஞ்சியகன்றுபோக, நரையுருமேறுநுங்கைவேலஞ்சுகமை, வரையர மங்கையர்வௌவுதலஞ்சுதும்வாரலையோ." (யாப்-காரிகை. செய்யுள்-௩. உரை மேற்கோள்.) எனவும் வரும்.

ஆற்றாத்தன்மையாற்றக்கூறற்குச்செய்யுள்:- "கலங்குந்தெளியுங்கனூலெழ மூச்செறியுங்கண்கணீர், மலருகும்பொலந்தொடிசோரமெய்சோருமறஞ்செய் கொலை, விலங்கும்படிறுசெய்யாக்குன்றாடவிரைந்தளிப்பா, யலங்குங்கடும் பரித்தேர்வாணன்மாறையணங்கினையே." (தஞ்சை. உசங.) எனவரும்.

காவன் மிகவுரைத்தற்குச்செய்யுள்:-"நஞ்சாரரவந்திரிதருகானநெறிவரவி, லஞ்சாதுசெங்கையயில்விளக்காவணங்கின்பொருட்டான், மஞ்சார்மதிற்றஞ்சை வாணன்வெற்பாவரல்வன்சொலன்னை, துஞ்சாள்கடுந்துடிக்கைநகர்காவலர்துஞ் சினுமே." (தஞ்சை. உசச.) எனவரும்.

காமமிகவுரைத்தற்குச்செய்யுள்:- "தென்னுகவண்டமிழ்வாணன்றென் மாறைச்செருந்தியுடன், புன்னுகமுங்கமழ்பூந்துறைவாசுரர்போற்றமிர்தம், பின் னுகமுன்வந்தபேதைதன்காமப்பெருங்கடற்கு, நின்னுகமன்றியுண்டோபுணையா வதுநீந்துதற்கே." (தஞ்சை. உசரு.) எனவும். "வேரல்வேலிவேர்க்கோட்பல வின், சாரனாடசெவ்வியையாகுமதி, யாரஃதறிந்திசினோரேசாரற்,சிறுகோட்டுப் பெரும்பழந்தூங்கியாங்கிவ, ளுயிர்தவச்சிறிதுகாமமோபெரிதே." (குறுந்தொகை-௧௮.) எனவும் வரும்.

கனவுநலிபுரைத்தற்குச்செய்யுள்:— "மானுதவெவ்வென்றவாணன்றென் மாறைவளநகர்போற், பூணுகமெல்லியற்புல்லினையாகவப்பொய்யைமெய்யாப், பேணுமகிழ்ந்துபெருந்துயிலேற்றவள்பின்னைநின்னைக், காணுள்கலங்கினளாற் கலங்காமனக்காவலனே." (தஞ்சை. உசசு.) எனவும், "மின்னவிர்வயங்கிழை ஞெகிழச்சாஅய், நன்னுதல்பசத்தல்யாவதுதுன்னிக், கனவிற்காணுமிவனே, நனவிற்காணுணின்மார்பேதெய்யோ." (ஐங்குறுநூறு. உ௩ச.) எனவும் வரும்,

கவினழிபுரைத்தற்குச்செய்யுள்:—"ஏரேற்றகொங்கையிளங்கொடிமாந் தளிரேய்ந்தவண்ணங், காரேற்றகங்குலிற்பீரலர்போன்றதுகாவியுங்கண், வா ரேற்றபைங்கழல்வாணன்றென்மாறையில்வாவியின்கண், ணீரேற்றசெங்கழுநீர் மலர்போன்றதுநின்பொருட்டே." (தஞ்சை. உசஎ.) எனவும், "தொடிபழி மறைத்தலிற்றோளுய்ந்தனவே, வடுக்கொள்கூழையாயமொடாடலி, னிடிப்பு மெய்யதொன்றுடைத்தேகடிக்கொள, வன்னைகாக்குந்தொன்னலஞ்சிதையக், காண்டொறுங்கலுழ்தலன்றியு மீண்டுநீர், முத்தப்படுபொய்யிற்கொற்கைமுன்

றுறைச், சிறுபாசடையசெம்பூநெய்தற், றெண்ணீர்மலரிற்றொலைந்த, கண்ணே காமங்காப்பரியவ்வே." (நற்றிணை. ௨௩.) எனவும் வரும்.

இவற்றுள், வினவிய செவிலிக்கு மறைத்தமைவிளம்பன்முதலாகப் பிறர் வரைவுணர்த்தலீறாகச்சொல்லப்பட்டவைந்தும் பொய்த்தற்குரிய; குறிபெயர்த் திடுதன்முதலாகப்பகலினுமிரவினுமகலிவணென்றலீறாகச்சொல்லப்பட்டவைந்து மறுத்தற்குரிய; உரவோனூர்பேருங்குலமுமாயும்புகழும்வாய்மையுங் கூறலாகியவொன்று கழறற்குரியது; வரைவெதிர்வுணர்த்தலும், வரையுநாளுணர்த்தலும், அறிவறிவுறுத்தலும், ஆறுபார்த்துற்றவச்சங்கூறலும், ஆற்றாத்தன்மையாற்றக்கூறலும், காவன்மிகவுரைத்தலும், காமமிகவுரைத்தலும், கனவினலிவுரைத்தலும், கவினழிவுரைத்தலுமாகியவொன்பதுமெய்த்தற்குரிய. (௯௦)

௧௬௭. செலவறி வுறுத்தல் செலவுடன் படாமை
செலவுடன் படுத்தல் செலவுடன் படுதல்
சென்றுழிக் கலங்க றேற்றியாற் றுவித்தல்
வந்துழி நொந்துரை யென்றெழு வகைத்தே
யொன்றக் கூறிய வொருவழித் தணத்தல்.

(இ-ள்.) செலவறிவுறுத்தன்முதலாக வந்துழிநோதலீறாகவேழுவகையினையுடைத்து மேற்சொல்லிய வொருவழித்தணத்தலென்றவாறு. (௯௧)

௧௬௮. தனைபதிக் ககற்சி தலைவன் சாற்றலு
மென்சொற் பாங்கி விலக்கலுந் தலைவ
னீங்கல் வேண்டலும் பாங்கி விடுத்தலுந்
தலைவிக் கவன்செல வுணர்த்தலுந் தலைவி
நெஞ்சொடு புலத்தலுஞ் சென்றோ னீடலிற்
காம மிக்க கழிபடர் கிளவியுந்
தோற்றொடிப் பாங்கி யாற்றுவித் தலுமவன்
வந்தமை யுணர்த்தலும் வந்தோன் றன்னொடு
நொந்து வினாதலும் வெந்திறல் வேலோன்
பாங்கியொடு நொந்து வினாதலும் பாங்கி
யிறைவியை யாற்றுவித் திருந்த வருமை
கூறலு மென்னு மாறிரு கிளவியு
மொருவழித் தணத்தலின் விரியெனப் படுமே.

(இச்-ம்.) ஒருவழித்தணத்தலின் விரியுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) தன்பதிக்ககற்சி தலைவன் சாற்றன்முதலாகத் தலைவியைப்பாங்கி யாற்றுவித்திருந்தவருமைகூறலீறாகச்சொல்லப்பட்ட பன்னிரண்டு கிளவியு மொருவழித்தணத்தலின் விரியென்றுசொல்லுவர் புலவரென்றவாறு. அவற் றுள், தன்பதிக்ககற்சி தலைவன்சாற்றற்குச் செய்யுள்:—"திரைகேதகைமண்ணங் கூடுமெம்பாடியிற்சென்றுவந்தியான், வரைகேள்வருந்துணைவல்லியைநீதஞ்சை வாணன்செவ்வேல், புரைகேழ்மதர்விழிக்கோங்கரும்போர்முலைப் பூசல்வண்டு, நிரைகேசவஞ்சியஞ்சேலென்றுதேற்றுதனின்கடனே." (தஞ்சை. உசஅ.) எனவரும்.

பாங்கி தலைமகனைச் செலவுவிலக்கற்குச்செய்யுள்:— "பறந்தாங்கிவர்பரித் தேர்கடவேலுனபதியடைந்தான், மறந்தாங்கமையவும் வல்லையன்பா தஞ்சை வாணனென்னூர், நிறந்தாங்கிவர்கணைபோலுங்கண்மாமுகினீர்மைகொண்டு, புறந்தாழ்கருங்குழலவ்வணமுததவாணனைப்பொன்னினையே." (தஞ்சை. உசக.) எனவும், "வருவையல்லைவாடைநனிகொடிதே, யருவரைமருங்கிலாய்மணிவ ரன்றி, யொல்லெனவிழிதருமருவியின், கல்லுடைநாட்டுச்செல்லலெய்யோ." (ஐங்குறுநூறு. உருரு.) எனவும் வரும்.

தலைமகனீங்கல்வேண்டற்குச்செய்யுள்:-"அறையும்பொறையுமணந்தவெங் கானத்தணங்கையில்லைத், திறையும்பிரிவதற்கெண்ணுகிலேனெண்ணலார் வரைமேன், மறையும்படிவென்றசந்திரவாணன்றென்மாறையில்வண், டுறையுங் குழலிசென்றேவரல்வேண்டுமெம்மூரகத்தே." (தஞ்சை. உருo.) எனவரும்.

தலைமகனைப்பாங்கிவிடுத்தற்குச்செய்யுள்:-"இல்லத்துறையுமிவள்பொருட் டாலுமக்கியானுமொன்று, சொல்லத்தவிர்கிலன்சூழ்கழலீர்சுடர்தோய்புரிசை, வல்லத்தமர்வென்ற வாணன்றென்மாறையில்வந்துவந்து, செல்லத்திருவுளம் வைத்தகல்வீர்நுந்திருநகர்க்கே." (தஞ்சை. உருக.) எனவரும்.

பாங்கி தலைவிக்கவன்செலவுணர்த்தற்குச்செய்யுள்:-"நிலவேய்தாளநிரைத் தன்னவாணைகைநீலநிறக், குலவேய்நிகர்பொற்றொடிநெடுந்தோளிகுறுகிவரச், செலவேகருதினர் செந்தமிழ்வாணன்செழுங்கமலத், தலவேதியன்பெறுநாள் பெற்றுவாழ்பவன்றஞ்சையிலே." (தஞ்சை. உருஉ.) எனவும், "சாரற்பலவின் கொழுந்துணர்நறும்பழ, மிருங்கல்விடரளைவீழ்ந்தெனவெற்பிற், பெருந்தேனிறா அல்கீறுநாடன், பேரமர்மழைக்கண்கலிழத்தன், சீருடைநன்னாட்டுச்செல்லுமன் னாய்." (ஐங்குறுநூறு. உகச.) எனவும் வரும்.

தலைவிநெஞ்சொடுபுலத்தற்குச்செய்யுள்:— "குளித்தாரிணங்கொங்கையாவி யிலாவிகுளிர்ப்பநம்மை, யளித்தாரளித்தகலத்தணைத்தாரன் றணங்கின்முன்னே, தெளித்தார்செழுந்தஞ்சைவாணனென்ஞரினஞ்சிந்தைநைய, வொளித்தாரவரின்னனேநன் றுநன் றிவ்வுலகியலே." (தஞ்சை. உ௫௩.) எனவும், "அளித்தஞ்ச லென்றவர்நீப்பிற்றெளித்தசொற், றேறியார்க்குண்டோதவறு." (திருக்குறள்- ௧௧௫௪.) எனவும் வரும்.

சென்றோனீடலிற்காமமிக்ககழிபடர்கிளவிக்குச்செய்யுள் :—" மயிலாடு தண்டலைமாறைவரோதயன்வாணனென்ஞர்க், கெயிலாகியகடற்கானலஞ்சேர்ப் பற்கிடையிருள்யான், றுயிலாநிலையொன் றுஞ்சொல்லாய்துணையுடன்சூழ்திரைத் தேன், பயிலாமலரணைமேற்றுயிலாநிற்றிபாலன்னமே." (தஞ்சை. உ௫௪.) எனவும், "சிறுவெள்ளாங்குருகேசிறுவெள்ளாங்குருகே, துறைபோகறுவைத்தூமடி யன்ன, நிறங்கிளர்தூவிச்சிறுவெள்ளாங்குருகே, யெம்மூர்வந்தெம்முண்டுறைத் துழைஇச், சினைக்கெடிற்றார்கையையவரூர்ப்பெயர்தி, மனவன்பினையோபெரு மறவியையோ, வாங்கட்டீம்புனலீங்கட்பரக்குங், கழனிநல்லூர்மகிழ்நர்க்கென், னிழைநெகிழ்பருவரல்செப்பாதோயே." (நற்றிணை. எ௦.) எனவும் வரும்.

தலைவியைப்பாங்கி யாற்றுவித்தற்குச்செய்யுள் :— "ஆடுகம்வாநம்மகன் றவரூரகலாப்புதுநீர், பாடுகம்வாபொற்பசலைதந் தார்திறம்பாங்கினெல்லாந், தேடு கம்வாதஞ்சைவாணனன்னூட்டன்பர்தேர்வழிநாஞ், சூடுகம்வாகவலாதவர்கானற் றுறைமலரே." (தஞ்சை. உ௫௫.) எனவும், "கானலம்பெருந்துறைக்கலிதிரை திளைக்கும், வானுயர்நெடுமணலேறியானுது, காண்கம்வம்மோதோழி, செறிவளை நெகிழ்த்தோனெறிகடனுடே." (ஐங்குறுநூறு. ௧௧௧.) எனவும் வரும்.

பாங்கி தலைமகட்குத் தலைமகன்வந்தமை யுணர்த்தற்குச்செய்யுள்:— "பண் ணுங்குழலும்பழித்தசொற்பாவைபரியலெல்லாம், மண்ணும்புகழ்தஞ்சைவாண னென்ஞரெனமைக்குவளைக், கண்ணுங்கனையிருட்கங்குலுமாரன்கணைகள்பட்ட, புண்ணும்புலரவந்தார்தமதூர்வயிற்போனவரே." (தஞ்சை. உ௫௬.) எனவும், "அம்மவாழிதோழிநம்மலை, நறுந்தண்சிலம்பினறுங்குலைக்காந்தட், கொங்குண் வண்டிற்பெயர்ந்துபுறமாறிநின், வன்புடைவிறற்கவின்கொண்ட, வன்பிலாளன வந்தனனினியே." (ஐங்குறுநூறு. உ௨௬.) எனவும் வரும்.

வந்தோன்றன்னெடுபொங்கிநொந்தவினதற்குச்செய்யுள்:— "ஒருதலைக் கெய்தியகல்லதர்க்குச்செல்லவோருயிர்த்தா, யிருதலைப்புள்ளினியைந்தநங் கேண்மையையெண்ணியெம்மூர், வருதலைக்கொண்கநினைந்திலைவாணன்றென்

மாறைவண்டு, பொருதலைக்குக்குழலாளழுகண்டுபோயபின்னே." (தஞ்சை. உருஅ.) எனவும், "யாங்குவல்லுநையோவோங்கல்வெற்ப, விரும்பல்கூந்தற் றிருந்திழையரிவை, திதலைமாமைதேயப், பசலைபாயப்பிரிவுதெய்யோ." (ஐங்குறுநூறு. உகூக.) எனவும் வரும்.

தலைவன் பாங்கியொடு நொந்து வினாதற்குச்செய்யுள்:— "ஐவாயரவுற்ற தன்னவினாஞ்யிடராற் ம்மெய்ந்துபோ, லெவ்வாறிருந்தினீசெல்வனாயெதிர்ந்தா ரைவென்று, மைவாரணங்கொண்டு ... ணன் மறன்மாறைமருவலர்போ, லொவ் வாவலமையுங்கேட் ... " (தஞ்சை-உகூஅ.) எனவரும்.

பாங்கி தலைவியை பாற ... நமைதலைமகற்குச்சொல்லற்குச்செய் யுள்:— "இவளாருயிர் ... கைசெகரிக்குவென்னப், பவளாடவி ற்பயினித்திலம்பக்கயத ... தவஞ்சொரிதண்டுறைவாதஞ்சைவா ணன்றெவ்வின், றுவளாமலா ... றன்றுநீசொன்னசொன்னினைந்தே." (தஞ்சை. உகூக.) எனவும், "போ ... தலியலணியழுங்க, வேதிலாட்டியைநீ பிரிந்ததற்கே,யழலவிர்மணிப்பூண ... பெயலாஞுவென்கண்ணேதெய்யோ." (ஐங்குறுநூறு. உகூஉ.) எனவும் வரும்.

இவற்றுள், தன்பதிக்ககற்சி தலைவன்சாற்றலும், பாங்கி தலைவிக்கவன் செலவுணர்த்தலுமாகியவிரண்டுஞ்செலவறிவுறுத்தற்குரிய; தலைமகனைப்பாங்கி விலக்கலாகியவொன்றுஞ்செலவுடன் படாமைக்குரித்து; தலைவனை நீங்கல்வேண் டலாகியவொன்றுஞ்செலவுடன்படுத்தற்குரித்து; தலைமகனைப்பாங்கிவிடுத்தலா கியவொன்றுஞ்செலவுடன்படுதற்குரித்து; தலைமகளெண்ஞ்சொடுபுலத்தலும், காம மிக்ககழிபடர்கிளவியுமாகியவிரண்டுஞ்சென்றுழிக்கலங்கற்குரிய; தலைமகளைப் பாங்கி யாற்றுவித்தலும், தலைமகன்வரத்தமை தலைமகட்குணர்த்தலுமாகியவிரண் டுந்தேற்றியாற்றுவித்தற்குரிய; பாங்கிவந்தோன் றன்னொடுநொந்துவினாதன்முத லாகியமூன்றும்வந்துழிநொந்துரைத்தற்குரிய. (௩௨)

௧௯௯. பிரிவறி வுறுத்தல் பிரிவுடன் படாமை
பிரிவுடன் படுத்தல் பிரிவுடன் படுதல்
பிரிவுழிக் கலங்கல் வன்புறை வன்பொறை
வருவழிக் கலங்கல் வந்துழி மகிழ்ச்சியென்
றொருமையிற் கூறிய வொன்பது வகைத்தே
வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவே.

(இ-ள்.) வரைவிடைவைத்துப் பொருள்வயிற்பிரிவாமாறுணர்த்துதலுத

(இ-ள்.) பிரிவறிவுறுத்தன்முதலாக வந்தழிமகிழ்ச்சியீறாகவொன்பது வகையினையுடைத்தாம் வரைவிடைவைத்துப பொருள்வயிற்பிரிதலென்ற வாறு. (௪௩)

கள0. என்பொருட் பிரிவுணர்த் தேந்திழைக் கென்றலு
நின்பொருட் பிரிவுரை நீயவட் கென்றலு
நீடே னென்றவ னீங்கலும் பாங்கி
யொடரிக் கண்ணிக் கவன்செல வுணர்த்தலும்
பூங்குழை யிரங்கலும் பாங்கி கொடுஞ்சொற்
சொல்லலுந் தலைவி கொடுஞ்சொற் சொல்லலும்
வருகுவர் மீண்டெனப் பாங்கி வலித்தலும்
பருவங் கண்டு பெருமகள் புலம்பலு
மிருளைவம் பென்றலு மிறைமகண் மறுத்தலு
மவர்தூ தாகிவந் தடைந்ததிப் பொழுதெனத்
துணைவி சாற்றலும் பிணைவிழி யாற்றலு
மவனவட் புலம்பலு மவனவ ருங்காலைப்
பாகன் றன்னொடு மேகந் தன்னொடுஞ்
சோகங் கொண்டவன் சொல்லலும் பாங்கி
வலம்புரி கேட்டவன் வரவறி வுறுத்தலும்
வலம்புரி கிழத்தி வாழ்த்தலும் வந்தழி
நினைத்தமை *வினாதலு நினைத்தமை செப்பலு
மனைத்தகை யவளை [illegible] கிளந்தமை
பாங்கிகூ றலுமென [illegible] றும்
வரைவிடை வைத்து [illegible] பிரிவின்
விரியென விளம்பினர் [illegible] புலவர்.

இச் ௬ம். வரைவிடைவைத் [illegible] பிரிவின் விரியாமாறுணர்த் துதலுதலிற்று.

(இ-ள்) என்பொருட்பிரிவுணர்த்தேந்திழைக்கென்றன்முதலாகத் தலைமகளையாற்றுவித்திருந்தமைபாங்கிகூறலீறாகச்சொல்லப்பட்டவிருபத்தொன்றும் வரைவிடைவைத்துப் பொருள்வயிற்பிரிவின் விரியெனமொழிந்தனராயந் தறிந்தோரென்றவாறு. அவற்றுள், என்பொருட்பிரிவுணர்த்தேந்திழைக்கென் றற்குச்செய்யுள்:—"கழைபோல்வளர்நெற்கவின்பெறவாரிகவர்ந்துவரும், மழை

*வினாவலும் என்றும் பாடபேதம்.

போல்வருகுவன்வன்சுரம்போய்த்தஞ்சைவாணன்வெற்பில், விழைபேடைபாலிடை யாண்முலைவிலைக்காவனயாவையுங்கொண், டுழைபோலரிநெடுங்கண்மயிலே நுசென்றுணர்த்திதுவே." (தஞ்சை. உ௬௦.) என வரும்.

பாங்கியின்பொருட்பிரிவுணர்த்தியவட்கென்றற்குச்செய்யுள்:—"வசையும் புகழுநின்மேலனவார்தஞ்சைவாணன்வெற்பா, மிசையுங்கரும்பினில்வேம்பு வைத்தாலன்னவேட்கையெல்லாத், திசையும்பரவுந்திருவனையாடன்றிருவுளத் துக், கிசையும்படிவல்லையேற்சொல்லிநீபின்னெழுந்தருளே." (தஞ்சை. உ௬௧.) எனவும், "இறவுப்புறத்தன்னபிணர்படுதடவுமுதற், சுறவுக்கோட்டன்னமுள்ளி லைத்தாழை, பெருங்களிற்றுமருப்பினன்னவரும்புமுதிர்பு, நன்மானுளையின்வேறு படத்தோன்றி, விழவுக்களங்கமழுமுரவுநீர்ச்சேர்ப்ப, வினைமணிநெடுந்தேர்பாக னியக்கச், செலீஇயசேறியாயினிவளே, வருவையாகியசின்னாள், வாழாளாதனற் கறிந்தனைசென்மே." (நற்றிணை. ௧௯.) எனவும வரும்.

நீடேனென்றவனீங்கற்குச்செய்யுள்:—"காலைப்பொழுதுகடும்பரித்தேர் பண்ணிக்கானகம்போய்,மாலைப்பொழுதுவருகுவல்யான்றஞ்சைவாணனன்னாட், டாலைப்பழனமணிந்தவெமமூர்தம்மகன்குளிரச், சோலைப்பயில்குயில்போன்மொ ழியாயென்றுணிவிதுவே." (தஞ்சை-உ௬உ) எனவும், "இன்றேசென்றுவரு வதுநாளைக், குன்றிழியருவியின்வெண்டேர்முடுக, விளம்பிறையன்னவிளங்கு சுடர்நேமி, விசும்புவீழ்கொள்ளிபைம்பயிர்துமிப்பக், காலியற்செலவின்மாலை யெய்திச், சின்னிரைவால்வளைக்குறுமகள், பன்மாணாகமடைந்துவக்குதுமே," (குறுந்தொகை-௧௮௯.) எனவும் வரும்.

பாங்கிதலைமகட்குத்தலைமகன் செலவுணர்த்தற்குச்செய்யுள்:—"வில்லேய் குறும்புபுறம்புமெவ்வாயும்விராயவெவ்வாய்க், கல்லேய்கவலைக்கடங்கடந்தார் நமர்காய்ந்தெதிர்ந்தார், செல்லேய்முரசச்செருவென்றவாணன்றென் மாறையறி னின், வல்லேய்முலைவிலைதான்றந்துநாளைமணம்பெறவே." (தஞ்சை-உ௬௩.) என வரும்.

தலைமகளிரங்கற்குச்செய்யுள்:— "இப்பெருவரையினிப்பிரியேனென்று மென்முன்சொன்னவப்பெருரைபழுதாமென்னவேயாவஞ்சமந்த, மைப்போலை கடல்வையகந்தாங்கியவாணன்றஞ்சைச், செப்பேரிளங்கொங்கைமங்கைசெப்பா தன்பர்சென்றதுவே." (தஞ்சை. உ௬௪.) எனவும், "செல்வாரல்லரென்றியா னிகழ்ந்தனனே, விடுவாளல்லளென்றவரிகழ்ந்தனரே, யாயிடையிருபேராண் மைசெய்தபூசல், னல்லராக்கதுவியாங்கெ, னல்லனெஞ்சமலமலக்குறுமே."(குறுந் தொகை. ௪௩.) எனவும் வரும்.

பாங்கிகொடுஞ்சொற்சொல்லற்குச்செய்யுள்:– "ஆரணத்தானருள்பாரளித் தானடைகாதவரை, வாரணத்தால்வென்றவாணன்றென்மாறையுயங்கொளிசேர்,

பூரணத்தார்மதிபோன்முகத்தாயென்புலம்புதிநின், காரணத்தாலல்லவோபிரிந்தாரின்றுகாதலரே." (தஞ்சை-௨௬௫.) என வரும்.

தலைவிகொடுஞ்சொற்சொல்லற்குச்செய்யுள்:—"மண்டுந்திரைவையைசூழ் தஞ்சைவாணற்குவன்புலியுஞ், செண்டுங்கொடுத்தகல்செம்பியர்போலன்பர்சென்றுழிமூ, ளிண்டுங்கழையும்பயிலும்வெங்கானியல்கேட்டுமிந்நோய், கண்டுங்கலங்கல்செல்லாதிருந்தவூரொற்கழறனன்றே." (தஞ்சை-௨௬௬.) எனவும், "எறும்பியளையிற்குறும்பல்சுனைய, வுலைக்கலன்னபாறையேறிக், கொடுவிலெயினர்பகழிமாய்க்குங், கவலைத்தென்பவவர்தேர்சென்றவாறே, யதுமற்றவலங்கொள்ளாது, நொதுமலர்க்கழறுமிவ்வழுங்கலூரே." (குறுந்தொகை. ௧௨.) எனவும் வரும்.

வருகுவர்மீண்டெனப்பாங்கிவலித்தற்குச்செய்யுள்:-"தேர்த்தானைவாணன்றென்மாறைமின்னேயஞ்சல்செம்புருக்கி, வார்த்தாலனையவழிநெடும்பாலைடைப்பெடைநோய், பார்த்தாதவந்தணிபாதவமின்மையிற்பைஞ்சிறகாற், போர்த்தாலுமஞ்ஞைகண்டும்போவரோநம்புரவலரே" (தஞ்சை-௨௬௭.) எனவும், "நசைபெரிதுடையர்நல்கினுநல்குவர், பிடிபசிகளைஇயபெருங்கைவேழ, மென்சினையாஅம்பிளக்கு, மன்பினதோழியவர்சென்றவாறே." (குறுந்தொகை. ௩௭.) எனவும் வரும்.

பருவங்கண்டுபெருமகன்புலம்பற்குச்செய்யுள்:— "மிகவும்பரந்தகரியகண்ணீர்செங்கைவெள்வளைபோ, லுகவுந்துறந்தவருன்னலராலுறைகார்பொழிய, மகவுந்துணையுங்கலைதழுவுந்தஞ்சைவாணன்வெற்பி, னகவும்பெடைமயிலுந்தமியேனெங்ஙனாற்றுவலே." (தஞ்சை-௨௬௮.) எனவும், "அணிநிறமஞ்ஞையகவவிரங்கி, மணிநிறமாமலைமேற்றாழ்ந்து—பணிமொழி, கார்நீர்மைகொண்டகலிவானங்காண்டொறும், பீர்நீர்மைகொண்டனதோள்." (ஐந்திணையம்பது. ௨) எனவும் வரும்.

இகுளைவம்பென்றற்குச்செய்யுள்:— "தனஞ்சேர்ந்தவஞ்சிநின்சாயல்கண்டஞ்சித்தனித்தனிபோய், வனஞ்சேர்ந்தயர்ந்தமயில்களெல்லாந்தஞ்சைவாணன்வெற்பிற், கனஞ்சேர்ந்தலர்துளிகாலுமுன்னேவம்புகாலுமென்று, வினஞ்சேர்ந்தகவினநாந்தனிவாடியிருத்தல்கண்டே." (தஞ்சை-௨௬௯.) எனவும், "மடவவாழிமஞ்ஞைமாயினங், காலமாரிபெய்தெனவதனெதி, ராலுமாலினபிடவும்பூத்தன, காரன்றிகுளைதீர்கநின்படரே, கழிந்தமாரிக்கொழிந்தபழநீர், புதுநீர்கொளீஇயவுகுத்தரு, நொதுமல்வானத்துமுழங்குகுரற்கேட்டே." (குறுந்தொகை. ௨௫௧.) எனவும் வரும்.

இறைமகன்மறுத்தற்குச்செய்யுள்:— "வாவித்தகையன்னமேதஞ்சைவாணன்வரையகத்தென், பாவித்தனிநெஞ்சபார்த்தஞ்சமேகண்பயின்றகண்ணார்,

தூவித்தளைமயில்கே[illegible]ங்கொள்ளாைரத்தோன்றியைச்சேர்ந், தாவித்தகாந்தள ரும்மணிகாலுமாவென்ல[illegible]." (தஞ்சை-உ௬௦.) எனவும், "செல்வச்சிறாஅர் சீரடிப்பொலிந்த, தவளைவாயபொலஞ்செய்கிங்கிணிக், காசினன்னபோதீன் கொன்றை, குருந்தோடலம்வருமபெருந்தண்காலையுங், காரன்றென்றியாயிற், கனவோமற்றிதுவினவுவல்யானே." (குறுந்தொகை-௧௪௮.) எனவும் வரும்.

அவர் தூதாகிவந்தடைந்ததிப்பொழுதெனத்துணைவிசாற்றற்குச் செய்யுள்:- "இன்னேவருவர்நின்காதலரேதிலரேங்கவினிக், கொன்னேயிரங்கிவருந்தலைகண் டாய்கொற்றநேமிவிந்தை,மணனேமெனவந்தவாணன்றெனமாறைவரவுணர்த்த, முன்னேநடந்தனகாண்கொடுங்காலமுகிலினமே." (தஞ்சை-உ௭௧.) எனவும், "கடுங்கதிர்நல்கூரக்கார்செல்வமெய்த, நெடுங்காடுநேர்சினையீனக்-கொடுங்குழா, யின்னேவருவர்நமரென்றெழில்வான, மின்னுமவர்தூதுரைத்து." (கார்நாற்பது-உ.) எனவும் வரும்.

தலைமகளாற்றற்குச்செய்யுள்:— "இன்புற்றகாலத்திருவர்க்குமொன்றாயி ரென்றுசொன்ன, வன்புற்றகாதலராதலினாலகன்றாரெனநாந், துன்புற்றகாலத் தவருமுறாரல்லர்தோழிசொல்லும், வன்புற்றகாரளிக்குந்தஞ்சைவாணன்றென் மாறையிலே." (தஞ்சை-உ௭௨.) எனவரும்.

அவனவட்புலம்பற்குச்செய்யுள்:— *"விழிதுழியும்படிதேர்வழிபார்த்தனை வீழ்ந்துவண்டு, கொழுதிமிருங்குழல்சோரக்கிடந்துகுடங்கையின்மே, லொழுகிய வஞ்சனவெள்ளத்துணங்குமணங்கைமுன்சென், றெழுகெனுநெஞ்சமென்னே யவரோவெனிலென்சொலுமே." (அம்பிகாபதிக்கோவை [illegible].) எனவும், "வளைபடுமுத்தம்பரதவர்பகருங், கடல்கெழுகொண்கனகாதனமடமகள், கெடலருந்துயரநல்கிப், படலின்பாயல்வெளவியோளே." (ஐங்குறுநூறு. ௧௯௫.) எனவும் வரும்.

மீண்டுவருகின்றகாலத்துத்தலைமகன் பாகனொடுசொல்லற்குச் செய்யுள்:— "வன்மாமுடுகவலவதிண்டேரினிவாணன்றஞ்சைக், கென்மாலுறுநெஞ்சின் முன்செலநாகிளவேறுபுல்லிப், பொன்மாமணியும்பிரிந்திருந்தாரும்புலம்பமன் றிற், சென்மாலையந்திகண்டாற்றரியாளென்றிருந்திழையே." (தஞ்சை-உ௭௪.) எனவும், "பெரும்புன்மாலையானுதுவினை இ, யரும்படாழுத்தல்யாவதென்றும், புல்லியாற்றுப்புரையோட்காண, வள்புதெரிந்தூர்மதிவலவநின், புள்ளியற்கலிமாபூண்டதேரே." (ஐங்குறுநூறு. ௪௮௬.) எனவும் வரும்.

---

* இத்துறைக்குத் தஞ்சைவாணன்கோவைச்செய்யுள் காணப்படவில்லை.

தலைமகன்மேகத்தொடுசொல்லற்குச்செய்யுள்:—"வேண்டும்பொருளைத்தரும் பொருட்போய்முற்றிமீண்டவெவ்வண்டேர், தூண்டும்பரிமுன்றுணைமுகில்காள் சென்றுசொல்லுமிந்த, நீண்டுங்கொடிமதில்சூழ்தஞ்சைவாணனைச்சேரலர்போ, லீண்டும்பசலைமெய்போர்த்திருப்பார்தமக்கென்வரவே." (தஞ்சை-உஎ௫.) என வரும்.

பாங்கிவலம்புரிகேட்டவன் வரவறிவுறுத்தற்குச்செய்யுள்:—"பொருகின்ற செங்கயல்போல்விழியாய்பண்டுபோயநின்கைக். குருகினையணிந்திறைகொள் வதுகாண்கரங்கொண்கர்பொற்றேரா, தமன்றசங்கந்தவ ணவாணன்றமிழ்த் தஞ்சைவாய், வருநிறைதெரியாமலைபோலைக்கூறும்வலம்புரியே."(தஞ்சை-உஎ௬.) எனவும், "ஈயலின்மூதாய்பரப்பவினமரீஇக், கோவலரூதுங்குழலிரங்கக் கோபந், தவழக்கார்செய்தனமுதையலாய்வந்தா. ரிமிழ்ப்படுஞ்சங்கொலி." (...) எனவும் வரும்.

வலம்புரிகிழத்திவாழ்த்தற்குச்செய்யுள்:-"மால்வண்டெனமன்னிவாணன் றென்மாறைமன்னன்புகழ், ...ல்வண்டமிழ்ம...னர்...றவிளங்குகபொன் கொழிக்குவ, கால்வண்டலவைபைக... ...றைகயில..., ...ல் வண்டிருந்ததுபோற்கநமமுகவலைசங்க..." (...-உ...) ... "புரிவளைவான்கொடேபுத்தேதளா...த்தி, திருவமர்மாபனும்மந்திறை னறம்மு, னுருவம்புனையுநின்கேழ்." (.........) எனவும் வ...ம.

தலைமகன்வந்துழிபபாங்கிநினைத்தமையு...தற்...செய்யுள்:—"நினையீர் பொருட்குப்பிரிந்தயனுட்டுழிநின்றுழிவே, னினையீரநினைந்துமறந்திலகொல்லோ வஞ்சொலாலறிவோர், வினையீரிதழ்க்கண்ணிவாணன்றென்மாறைநலயவாழ்த்த லர்போ, னனையீரிதழ்க்கண்ணவகாவெவ்வநோயுறறங்விமையயே" (தஞ்சை-உஎஅ.) எனவரும்.

தலைமகனினைத்தமைசெப்பற்குசசெய்யுள்:— "கானெடுங்குன்றங்கடந்து சென்றேனொருகாலுமை தோய், மானெடுங்கண்ணிமறந்தறியேன் வண்மை வாணன் றஞ்சை, நீனெடும்பெண்ணைக்குநமமையுஞ்சூதுநெருங்குகொங்கைத், தேனெடுங்கண்ணிமென்பூங்குழலமாதர்திருமுகமே." (தஞ்சை-உஎகூ.) என வரும்.

தலைமகளையாற்றுவித்திருந்தவருமைபாங்கிகூறற்குச்செய்யுள்:—"உயராம லகத்தருங்கனிநீர்நசைக்குண்சுரம்போய், வியாமலிலலின்விடுத்தகன்றனை மென்பூஞ்சிலம்பா, வயராமலஞ்சலென்றாற்றுவிகதேனிவ்வவனியெல்லா, மய ராமவந்தபிரான்றஞ்சைவாணன்மறைமாமை...பிலே." (தஞ்சை-உஅ0.) என வரும்.

வேற்றன், என்பொருட்பிரிவுணர்த்தேந்திழைக்கென்றலும், பாங்கி தலைவிக்கவன்செலவுணர்த்தலுமாகியவிரண்டும் பிரிவறிவுறுத்தற்குரிய; பாங்கியின் பொருட்பிரிவுரை நீயவட்கென்றலாகியவொன்றும பிரிவுடன்படாமைக் குறித்து; தலைமகனீடேனென்றவனீக்கலாகியவொன்றும் பிரிவுடன்படுத்தற்கும் பிரிவுடன்படுதற்குமுரித்து; தலைமகளிரங்கலும், பாங்கி கொடுஞ்சொற்சொல்லலும், பருவங்கண்டுபெருமகள்புலம்பலும், இறைமகன்மறுத்தலும, அவனவட்புலம்பலுமாகிய வைந்தும் பிரிவுழிக்கலங்கற்குரிய; தலைவிகொடுஞ்சொற்சொல்லலும, வருகுவர்மீண்டெனப்பாங்கிவலித்தலும், இகுளைவம்பென்றலும், அவர்தூதாகிவந்தடைந்ததிப்பொழுதென்றலுமாகிய நான்கும் வன்புறைக்குரிய; தலைமகளாற்றலாகியவொன்றும வன்பொறைக்குரித்து; தலைமகன் மீண்டுவருங்காலைப் பாகன்றன்னொடுசொல்லலும், மேகந்தன்னொடு சோகங்கொண்டவன்சொல்லலுமாகிய விரண்டும் வரும்வழிக்கலங்கற்குரிய; பாங்கி வலம்புரி கேட்டவன்வரவறிவுறுத்தன் முதலாகிய வைந்தும் வந்துழி மகிழ்ச்சிக்குரியவெனக் கொள்க. (௩௪)

இரண்டாவது களவியன் முற்றும்.

உ

# மூன்றாவது வரைவியல்.

௧௭௧. வரைவெனப் படுவ துரவோன் கிழத்தியைக்
குரவர் முதலோர் கொடுப்பவுங் கொடாமையுங்
கரணமொடு புணரக் கடியயர்ந்து கொளலே.

இவ்வோத்தென்னபெயர்த்தோவெனின் வரைவியலென்னும்பெயர்த்து.

(இ-ள்.) வரைவென்றுசொல்லப்படுவது தலைமகன்றலைமகளைக் குரவர் முதலாயினோர் கொடுப்பவுங் கொடாதொழியவும் வதுவைச்சடங்கொடு பொருந்த மணஞ்செய்து கோடலென்றவாறு. (௧)

௧௭௨. வரைவு மலிவே யறத்தொடு நிற்றலென்
றுரையமை யிரண்டும் வரைவிற் குரிய
கிளவித் தொகையெனக் கிளந்தனர் புலவர்.

(இச் - ம்) வரைவிற்குரிய கிளவித்தொகை யுணர்த்துதலுதலிற்று.

(இ-ள்.) வரைவுமலிவுமறத்தொடுநிலையு மென்னின்றவிரண்டும்வரைவிற் (௨)
குரிய கிளவியின்றொகை யென்று கூறினாரறிவோ ரென்றவாறு.

௧௭௩. வரைவுமுயல் வுணர்த்தல் வரைவெதிர் வுணர்த்தல்
வரைவறிந்து மகிழ்தல் பராவல்கண் டுவத்தலென்
றொருநால் வகைத்தே வரைவு மலிதல்.

(இச்-ம்.) வரைவுமலிதலின் வகையுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) வரைவுமுயல்வுணர்த்தன் முதலாகப் பராவல்கண்டுவத்த லீறாக நான்கு வகையினையுடைத்தாம் வரைவுமலித லென்றவாறு. (௩)

௧௭௪. காதலன் முலைவிலை விடுத்தமை பாங்கி
காதலிக் குணர்த்தலுங் காதலி நற்றா
யுள்ள மகிழ்ச்சி யுள்ளலும் பாங்கி
தமர்வரை வெதிர்ந்தமை தலைவிக் குணர்த்தலு
மவளுவகை யாற்று துளத்தொடு கிளத்தலுந்
தலைவனைப் பாங்கி வாழ்த்தலுந் தலைவி
மணம்பொருட் டாக வணங்கைப் பராநிலை
காட்டலுங் கண்டோன் மகிழ்வுமென் றீட்டிய
விருமூன் றுமொன் றும் வரைவு மலிதற்காம்
விரியென விளம்பினர் மெய்யுணர்ந் தோரே.

(இச்-ம்.) வரைவுமலிதலின் விரியுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) காதலன் முலைவிலைவிடுத்தமை பாங்கி காதலிக்குணர்த்தன் முதலாகக் கண்டோன் மகிழ்தலீறாகச் சொல்லப்பட்டவேழும் வரைவுமலிதலின் விரியென விளம்பினர் மெய்யுணர்ந்தோ ரென்றவாறு, அவற்றுள், காதலன்முலை விலைவிடுத்தமை பாங்கி காதலிக்குணர்த்தற்குச் செய்யுள்:-"தொலைவிலையாகிய பல்பொருள்காதலர்சூதமர்கின், முலைவிலையாகமுகந்தளித்தார் முனை வேந்தர் தம்மைத், தலைவிலையாகத்திறைகொண்டவாணன்றமிழ்த்தஞ்சைசூீ, யுலைவிலையா குகபொன்வண்ணமாறுகவொண்ணுதலே." (தஞ்சை-உ௮௧.) எனவும், "எக்கர் ஞாழன்மலரின்மகளி, ரொண்டழையயருந்துறைவன், றண்டழைவிலையென நல்கினனாடே." (ஐங்குறுநூறு. ௧௪௭ ) எனவும் வரும்.

காதலிநற்றாயுள்ளமகிழ்ச்சியுள்ளற்குச் செய்யுள்:-"கயமாமலரொனுங் கன்னியைவண்டெனுங்காளைபல்பு,ளியமாமணம்புணரீர்ந்துறைநாடரெதிர்ந்தவர் மேல், வயமாநடத்தியவாணன்றென்மாறைவருகுவரோ, னயமாமணவணிகண்டி

யாயுமின்புறுகயமினுமே." (தஞ்சை-உ அஉ.) எனவும், "குன்றக்குறவன்சாந்த நறும்புகை, தேங்கமழ்சிலம்பினவரையகங்கமழுங், கானகநாடன்வரையின், *மன்றலுமுடையள்கொறேழியாயே." (ஐங்குறுநூறு. உரு௩.) எனவும் வரும்.

பாங்கி தமர்வரைவெதிர்ந்தமை தலைமகட்குணர்த்தற்குச் செய்யுள்:—"மணிப்பாலிகைமுத்தம்வைத்தாங்கடம்பலர்வார்திரைது, யணிப்பாய்துவலையரும்புந்துறைவர்க்கணியெதிர்ந்து, பணிப்பாசிழையல்குல்வெண்ணகையாய்நமர் பாரின்ஞெய், தணிப்பான்முரசறைந்தாரதஞ்சைவாணன்றமிழ்நிலத்தே." (தஞ்சை-உ அ௩.)எனவும், "அம்மவாழிதோழிநம்மொடு, சிறுதினைக்காவலனாகிப் பெரிதுநின், மென்றோண்ஞெகிழவுந்திருநுதல்பசப்பவும், பொனபோல்விறற் கவின்றொலைத்த, குன்றநாடற்கயர்வர்நன்மணனே." (ஐங்குறுநூறு. உ௩௦.) எனவும் வரும்.

தலைமகளுவகையாற்றுதளத்தொடுகிளத்தற்குச்செய்யுள்:—"சோகாகுலமெய்தல்காண்டுநெஞ்சேகந்துறைவனொனு, நீகானுடன்பள்ளிநீள்வங்கமேறிநிலம் புரக்கும், மாகாவிரியன்னவாணன்றென்மாறைமன்னன்பகையு, மேகாவிருட்கங் குலாங்கடற்கானலையெனுங்கரையே." (தஞ்சை-உ அச.) எனவும், "இலையமர்தண் குளவியேய்ந்தபொதும்பிற், குலையுடைக்காந்தளினவண்டிமிரும், வரையகநாடனும்வந்தான்மற்றன்னை, யலையுமலைபோயிற்றின்று." (ஐந்திணையெழுபது. ௩.) எனவும் வரும்.

தலைவனைப்பாங்கிவாழ்த்தற்குச்செய்யுள்:—"மாரியஞ்சுங்கொடைவாணன் றென்மாறையில்வாழிவண்டார்,வேரியந்தொங்கல்விரைகமழ்மார்பவிடாதவம்பல் சேரியம்பொய்கைத்துறையலர்வாடநுஞ்செவ்விமணந், தூரியஞ்சங்கதிரக்காட்டு நீயன்றருட்டலரோ." (தஞ்சை-உ அரு.)எனவும், "எரிமருள்வேங்கையிருந்த தோகை, யிழையணிமடந்தையிற்றோன்றுநாட, வினிதுசெய்தனையானுந்தை வாழியர், நன்மனைவ்துவையயரவிவள், பின்னிருங்கூந்தன்மலரணிந்தோயே." (ஐங்குறுநூறு. உகச.) எனவும் வரும்.

தலைவிமணம்பொருட்டாக வணங்கைப்பாநிலை பாங்கி தலைமகற்குக்காட்டற்குச் செய்யுள்:—"உர பயபருகநவித்துணைபங்கள் மேபாயமுதலூழியின்பம், வாவிப்படிதன்னைவாழ்வித்தய ணக்கொறவமாறையன்ளுள், புரவப்புனைநெடுந் தோண்ணலேநின்பொருட்டணங்கைப, பாவிப்பாவிநின்றேவரம்வேண்டுதல் பார்த்தருளே." (தஞ்சை-உஅகூ.) எனவரும்.

தலைமகளணங்கைப்பாநிலைகண்டதலைமகன்மகிழ்தற்குச்செய்யுள்:— "இவ் வித்தகம்விட்கெய்தியதெவ்வணமெவ்வுலகும், வவ்வித்திகழ்புகழ்வாணன்றென்

* மாணலமுடையர்கொறேழீஇயாயே என்றும் பாடம்.

மாறைமணப்பொருட்டால், நவ்வித்தொகையினைாணுமென்றேக்கி நறைபுகையாச், செவ்வித்தகைமலர்தூய்த்தெய்வம்வாழ்த்தநிற்குமக்ய்வ." (நற்றிணை-உஅஎ.) எனவும், "குன்றக்குறவன்காதன்மடமகள், மாறவேங்கைமலர்சிலகொண்டு, மலையுறைகடவுள்குலமுதல்வழுத்தித, தேம்பலிச்செய்தவீர்நறுங்கையள், மலர்ந்தகாந்தணுறிக், கவிழ்ந்தகண்ணளெமமணங்கியோளே." (ஐங்குறுநூறு-உ௫௯.) எனவும் வரும்.

இவற்றான், காதலன் முலைவிலை விடுத்தகை மகிழ்காதலிக்குணர்த்தலும், தலைவி மணம்பொருட்டாக வணங்கைப்பாரா நிலை நகிதலைமகற்குக்காட்டலுமாகியவிரண்டும் வரைவுமுடிபல்வுணர்த்தற்குரிய; நமதமரவரைவெதிர்ந்தமை தலைமகட்குணர்த்தலாகியவொன்றும் வரைவெதிர்வுணர்த்தற்குரித்து; தலைவி நற்றாய் உள்ளமகிழ்ச்சியுள்ளலும, அவளுவகையாற்றாதளத்தொடுநினைத்தலும், தலைமகனைப் பாங்கி வாழ்த்தலுமாகியமூன்றும் வரைவறிந்துமகிழ்தற்குரிய; தலைமகளணங்கைப் பாராநிலைகண்டோன் மகிழ்தலாகியவொன்றும் பராவல் கண்டுவத்தற்குரித்து. (௪)

௧௭௫. முன்னிலை முன்னிலைப் புறமொழி யென்றாங்
கன்ன விருவகைத் தறத்தொடு நிலையே.

(இச் - ம்.) அறத்தொடுநிலையின்வகையுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) முன்னிலைமொழியு முன்னிலைப்புறமொழியுமெனவிருவகையினையுடைத்தா மறத்தொடு நிலையென்றவாறு. மொழியென்பதனை முன்னும் பின்னுங் கூட்டுக. (௫)

௧௭௬. கையறு தோழி கண்ணீர் துடைத்தழிக்
கலுழ்தற் காரணங் கூறலுந் தலைவன்
றெய்வங் காட்டித் தெளிப்பத் தெளிந்தமை
யெய்தக் கூறலு மிகந்தமை யியம்பலு
மியற்பழித் துரைத்துழி யியற்பட மொழிதலுந்
தெய்வம் பொறைகொளச் செல்குவ மென்றலு
மில்வயிற் செறித்தமை சொல்லலுஞ் செவிலி
கனையிரு ளவன்வரக் கண்டமை கூறலு
மெனமுறை யியம்பிய வேழும் புனையிழைத்
தலைவியறத்தொடு நிலைதனக் குரிய.

(இச் - ம்.) தலைவியறத்தொடுநிற்றற்குரியகிளவிகளையுணர்த்துதனுதலிற்று.

(இ - ள்.) கையறுதோழிகண்ணீர்துடைத்துழிக்கலுழ்தற்காரணங்கூறன் முதலாகச்செவிலிகனையிருளவன்வரக்கண்டமைகூறலீறாகச்சொல்லப்பட்ட வேழுந் தலைமகளறத்தொடுநிற்றற்குரியகிளவியாமென்றவாறு. அவற்றுள், கையறுதோழி கண்ணீர்துடைத்தற்குச் செய்யுள்:— "அயிரார்திரைவந்துண் டலம்பாவையழித்தனவோ, செயிராதவனைச்செயிர்த்தனளோசெறிநாளை யண்போர், வயிராநரலும்வயற்றஞ்சைவாணன்றென்மாறையிலெ, னுயிராகி யமைதையனீகலுழ்வாளென்னுளங்குழைந்தே." (தஞ்சை—உஅஅ.) எனவும், "வெழாஅவாகலினெழினலந்தொலைய, வழாஅதீமோநொதுமலர்தலையே, யேனல் காவலர்மாவீழ்த்துப்பறித்த, பகழியன்னசேயரிமழைக்க, ணல்லபெருந்தோளோ யோகொல்ல, னெறிபொற்பிதிர்விற்சிலபலதாஅய், வேங்கைவீயுகுமோங்குமலைக் கட்சி, மயிலறிபறியாமன்னோ. பயில்குரல்கவரும்பைம்புறக்கிளியே." (நற்றிணை-௧௩.) எனவும வரும்.

தலைமகள்கலுழ்தற்காரணங்கூறற்குச் செய்யுள்:— "தாரணிகொண்ட விருதோளொருவர்தனித்துழியென், வாரணிகொங்கைமணந்துசென்றார் தஞ்சை வாணனென்னார், தோரணிவென்றசெழும்புகர்வேலவிழித்தேனினஞ்சூழ், காரணி மென்குழலாயதுவேகலுழ்காரணமே." (தஞ்சை-உஅ௯.) எனவும், "யாமெங் காமந்தாங்கவுந்தாந்தங், கெழுதகைமையினழுதனதோழி, கன்றாற்றுப்படுத்தபுன் றலைச்சிறாஅர், மன்றவேங்கைமலர்பதநோக்கி, யேறாதிட்டவேமப்பூசல், விண் டோய்விடரகத்தியம்புங், குன்றநாடற்கண்டவெங்கண்ணே." (குறுந்தொகை-உ௪௧.) எனவும் வரும்.

தலைமகன்றெய்வங்காட்டித்தெளிப்பத்தெளிந்தமைமெய்தக்கூறற்குச்செய் யுள்:—"துதித்தேனணங்கொடுசூளுமுற்றேனென்றசொல்லைமெய்யா, மதித்தே னயர்ந்துமதியிலியேன்றஞ்சைவாணன்வையை, நதித்தேனினம்புணர்மாதர்கண் போலநகைக்குநெய்தற், பொதித்தேனுகர்ந்தகலுங்கழிக்கானற்புலம்பர்வந்தே." (தஞ்சை-உ௯௦.) எனவும், "கண்டிரண்முத்தம்பயக்குமிருமுந்நீர்ப், பண்டங் கொணாவாய்வழங்குந்துறைவனை, முண்டகக்கானலுட்கண்டேனெனத்தெளிந் தே, னின்றவுணர்விலாதேன்." (ஐந்திணையெழுபது-௬௧.) எனவும் வரும்.

தலைமகனிகந்தமை தலைமகள் பாங்கிக்கியம்புதற்குச் செய்யுள்:— "வரி யோலவண்டலைதண்டலைசூழ்தஞ்சைவாணன்வண்மைக், குரியோனுயர்வையை யொண்டுறைவாயுரவோர்தெளித்துங், கரியோர்பிறரில்லையென்றகன்றாரினிக் காரிகையாய், பெரியோர்மொழிபிறழாரென்றுதேறுதல்பேதைமையே." (தஞ் சை-உ௯௧.) எனவும், "யாருமில்லைத்தானேகள்வன், றானதுபொய்ப்பின்யானெ வன்செய்கோ, தினைத்தாளன்னசிறுபசுங்கால, வொழுகுநீராரல்பார்க்குங், குருகு முண்டாமணந்தஞான்றே." (குறுந்தொகை-உ௫.) எனவும்வரும். இது தெளி விடைவிலங்கல்.

அதுகேட்டபாங்கி யியற்பழித்துரைத்தற்குச் செய்யுள்:—"மழவேதுறந்து மறந்தவர்போற்றஞ்சைவாணன்வென்றி, முழவேயமுந்நீர்முழங்கிருங் கானன் முழுதுலகுந், தொழவேதகுந்தெய்வநோக்கிச்செல்லேனென்று சொல்லியுநீ, யழவேதுறந்தனரானல்லர்நல்லரவ்வாடவரே." (தஞ்சை-உகஉ.) எனவரும்.

தலைமகளியற்படமொழிதற்குச்செய்யுள்:— "மாகப்புயன்மண்ணில்வந்தனவாணன்றென்மாறைமுந்நீர், நாகப்புகர்ச்செய்யபுள்ளிபைங்கானெண்டுநாகிளந்தண், பூகக்குளிர்நிழற்பேடையோடாடும்புலம்பரின்று, ராகக்கருநிறனல்லாயினியாரினியாருளரே." (தஞ்சை-உகங.) எனவும், "அடம்பமனெடுங்கொடியுள்புதைந்தொளிப்ப, வெண்மணல்விரிக்குந்தண்ணந்துறைவன், கொடியனுயினுமாக, வவனேதோழியென்னுயிர்காவலனே." (தொல்-பொருள். பக்கம்-உஅச.) எனவும் வரும்.

தெய்வம்பொறைகொளச்செல்குவமென்றற்குச்செய்யுள்:—"மாதங்கநல்குங்கைவாணன்றென்மாறைவையைத்துறைவ, ரேதம்பயந்திலரெங்கட்குநீயெம்மிகந்ததனாற், சோதம்படாதிகொடுந்தெய்வமேயென்றுகூர்பலிதூய்ப், பாதம்பரவநல்லாயிருவேமும்படர்குவமே." (தஞ்சை-உகச.) எனவும், "பெருந்தோணெகிழவவ்வரிவாடச், சிறுமெல்லாகம்பெரும்பசப்பூர, வின்னேமாகவெற்கண்டுநாணி, நின்னொடுதெளிந்தனராயினுமென்னதூஉ, மணங்கலோம்புமதி வாழியநீயெனக், கணங்கெழுகடவுட்குயர்பலிதூஉய்ப், பரவினம்வருகஞ்சென்மோதோழி, பெருஞ்சேயிறவின்றுய்த்தலையுணங்கல், சிறுவெண்காக்கைநாளிரைபெறூஉம், பசும்பூண்வழுதிமருங்கையன்னவெ, னரும்பெறலாய்கவினொருலையப், பிரிந்தாண்டுறைதல்வல்லியோரே." (நற்றிணை-நருஅ.) எனவும் வரும்.

இல்வயிற்செறித்தமை சொல்லற்குச்செய்யுள்:— "தன்போலுலகம்புரக்கின்றவாணன்றமிழ்த்தஞ்சையார், மன்போலெவர்க்கும்வழங்கியுண்ணுந்தவர்வைத்திழக்கும், பொன்போலிறுகப்பொதிந்துகொண்டாளன்னைபூவையன்மேல், வன்போதியமடவாரலர்தூற்றியவாறுகண்டே." (தஞ்சை-உகரு) எனவும், "பெருநீரழுவத்தெந்தைதந்த, கொழுமீனுணங்கற்படுபுள்ளோப்பி, யெக்கர்ப்புன்னையின்னிழலசைஇச், செக்கர்ஞெண்டின்குண்டளைகெண்டி, ஞாழலோங்குசினைத்தொடுத்தகொடுங்கழித், தாழைவீழ்கயிற்றூசறூங்கிக், கொண்டல்விடுமணற்குரவைமுனையின், வெண்டலைப்புணரியாயமொடாடி, மணிப்பூம் பைந்தழைதைஇயணித்தகப், பல்பூங்கானலல்கினம்வருதல், கவ்வைநல்லணங்குற்றவிவ்வூர்க், கொடிதறிபெண்டிர்சொற்கொண்டன்னை, கடிகொண்டனளே தோழிபெருந்துறை, யெல்லையுமிரவுமென்றுமகல்லலென, வலவனுய்த்தவண்பரி, நிலவுமணற்கொட்குமோர்தேருண்டெனவே. (அகநானூறு-உ0.) எனவும் வரும்,

செவிலிகனையிருளவன்வரக்கண்டமை கூறற்குச்செய்யுள்:— "வொ முகவெம்புருவமின்னேயன்னேமேலொருநா, ளெங்காதலரிருளெய்தல் கண்டா ளிந்தவேழுலகு, மங்காமல்வந்தருள்வாணன்றென்மாறைவண்டானமஞ்சச், சங்காழிகொண்டெறியுங்கண்டல்வேலியந்தண்டுறைக்கே." (தஞ்சை-உகக.) எனவும், "நுழையுண்மடமகள்யார்கொலென்றென்னே, யுழையுமடைத்தாள்கதவு." (.........) எனவும் வரும்.

இவற்றுள், கலுழ்தற்காரணங்கூறலாகிய வொன்றுமொழித்தேனையவெல்லாம் பாங்கி வினவாதொழியவுந் தலைமகளறத்தொடு நிற்றற்குரியவாமாறறிந்து கொள்க. (ரு)

கஎஎ. எறிவனை வேற்றுமைக் கேதுவி னவினும்
வெறிவிலக் கியவழி வினவினும் பாங்கி
பூவே புனலே களிறே யென்றிவை
யேது வாகத் தலைப்பா டியம்பும்.

(இச் - ம்.) பாங்கியறத்தொடு நிற்றற்குரிய கிளவிகளை யுணர்த்துதனுத

(இ-ள்.) செவிலி தலைமகள்வேற்றுமைக்குக் காரணங்கேட்பினுந் தான் வெறிவிலக்கியவிடத்துக் காரணங்கேட்பினும் பாங்கி பூவும் புனலுங்களிறுமாகிய விவைகாரணமாகப்புணர்ச்சியினை யறிவிக்குமவட்கென்றவாறு. அவற்றுள், செவிலிதலைமகள் வேற்றுமைகண்டு பாங்கியைவினைதற்குச்செய்யுள்:—"பொன்னுற்றகொங்கையுமுத்துற்றகண்ணுமிப்போதுகண்டேன், பன்னுற்றசொல்லுமின்பாலுங்கொள்ளாள்பதினுலகும், மன்னுற்றவண் புகழ்வாணன்றென் மாறையென்மானனையாட், கென்னுற்றதென்றறியேன்புனங்காவ*லிருந்தபின்னே." (தஞ்சை-உகஎ.) என வரும்.

வெறிவிலக்கற்குச்செய்யுள்:— "அறியாமையினென்றகேட்கலுற்றேனும் மையாவதொன்றுங், குறியாமறியுயிர்கொள்ளவென்றோகுருதிப்பலிகூர், வெறியாலிவளுயிர்மீட்கவென்றோவென்றிவேல்வலத்தீர், சிறியார்மனையில் வந்தீர் தஞ்சைவாணன்சிலம்பினின்றே." (தஞ்சை-உகஅ.) எனவும், "கடவுட்கற்சுனையடையிறந்தவிழ்ந்த, பறியாக்குவளைமலரொடுகாந்தட்,குருதியொண்பூவுருகெழுக்

* "விசுந்தபின்னே" யென்றும் பிரதிபேதம்,

கட்டிப், பெருவரையடுக்கம்பொற்பச்சூர்மக, ளருவியின்னியத்தாடுநாடன், மார்புதரவந்தபடர்மலியருநோய், நின்னணங்கன்மையறிந்துமண்ணூந்து, கார் நறுங்கடம்பின்கண்ணிசூடி, வேலன்வேண்டவெறிமனைவந்தோய், கடவுளாயினு மாக, மடவைமன்றவாழியமுருகே." (நற்றிணை. ௩௪.) எனவும்வரும்.

செவிலிதோழியைவினாதற்குச்செய்யுள் :—"மண்குன்றவந்தகலியினைமாற் றியவாணன்றஞ்சை, யொண்குன்றமங்கையர்முன்னர்மின்னேயுமையாண்மக னைப், பண்குன்றவென்றசொல்வள்ளிதன்கோனைப்பைந்தாரயிலால், வெண்குன் றெறிந்தசெவ்வேளையிவ்வாறென்விளம்பியதே." (தஞ்சை-௨௯௯) எனவரும்.

தோழி பூத்தருபுணர்ச்சியாலறத்தொடுநிற்றற்குச் செய்யுள்:—"போருறை தீக்கணைபோலுமின்கண்கண்டுபோதவஞ்சி, நீருறைநீலமுநீயுநண்பாகென்றுநின் மகட்கோர், தாருறைதோளவர்தந்தனர்வாணன்றமிழ்த்தஞ்சைசூழ், காருறை சோலையில்யாம்விளையாடியகாலையிலே." (தஞ்சை-௩00.) எனவும், "தந்தார்க் கேயாமாற்றடமென்றோளின்னநாள், வந்தார்க்கேயாமென்பார்வாய்காண்பாம்— வந்தார்க்கே, காவாவிளமணற்றண்கழிக்கானல்வாய்ப், பூவாவிளஞாழற்போது." (திணைமாலைநூற்றைம்பது. ௩௯.) எனவும்வரும். இது நொதுமலர்வரைவின்கண் ணறத்தொடு நின்றதாம்.

புனறருபுணர்ச்சியாலறத்தொடு நிற்றற்குச்செய்யுள்:—"ஒழிதோற்றிய சொல்லலுன்மகளோதிக்குடைந்தகொண்டல், பொழிதோற்றிரளுந்திவந்தசெந் நீருந்திப்பொற்பினுக்கோர், சுழிதோற்றிடும்பகைதீர்க்கின்றபோதொருதோன்ற லுமவ், வழிதோற்றிவந்தெடுத்தான்றஞ்சைவாணன்றென்வையையிலே." (தஞ் சை-௩0௧.) எனவும், "காமர்கடும்புனல்கலந்தெம்மோடாடுவா, டாமரைக்கண் புதைத்தஞ்சித்தளர்ந்ததனோடொழுகலா, னீணாகநறுந்தண்டார்தயங்கப்பாய்ந் தருளினாற், பூணாகமுறத்தழீஇப்போதந்தானகனகலம், வருமுலைபுணர்ந்தன வென்பதனாலென்றோழி, யருமழைதரல்வேண்டிற்றருகிற்கும்பெருமைடோ." (கலித்தொகை. ௩௯.) எனவும் வரும்.

களிறுதருபுணர்ச்சியாலறத்தொடுநிற்றற்குச் செய்யுள்:—"மண்ணலையாமல் வளர்க்கின்றவாணன்றென்மாறைவெற்பி, லண்ணலையாயிழைபாகனென்றஞ்சி னமஞ்சனந்தோய், கண்ணலைநீரிடப்பாகமுமேல்வந்தகைக்களிற்றின், புண்ணலை நீர்வலப்பாகமுந்தோயப்பொருதவன்றே." (தஞ்சை-௩0௨.) எனவும், "சுள்ளி சுனைநீலஞ்சோபாலிகைசெயலை, யள்ளியளகத்தின்மேலாய்ந்து—தெள்ளி, யித ணூற்கடியொடுங்காவீர்ங்கடாயானை, யுதணாற்கடிந்தானுளன்." (திணைமாலை

நூற்றைம்பது. உ.) எனவும் வரும். இம்மூன்றனுளொன்றுளதறத்தொடுநிற்க வமையுமெனக்கொள்க. (எ)

௧௭௮. பின்னிடை வேற்றுமை கண்டுதாய் வினவுழி
முன்னிலை மொழியான் மொழியுஞ் செவிலி.

(இ-ம்.) செவிலியறத்தொடுநிற்றற்குரிய கிளவிகளையுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) தலைமகள் வேறுபாடுகண்டு நற்றாய் செவிலியை வினவியவிடத்து முன்னிலைமொழியானேசொல்லுஞ் செவிலி யென்றவாறு. அவற்றுள், தலைமகள்வேற்றுமைகண்டு நற்றாய்செவிலியை வினாதற்குச்செய்யுள்:—"தண்டார்தழுவியவேலண்ணல்வாணன்றென்றஞ்சைவெற்பில், வண்டார்குழலிதன் வண்ணமுங்கண்ணும்வடிவுமன்றாள், கண்டாரறியும்படியன்றுவேயல்லகாரணமொன், றுண்டாலுயிரனையாயயிராமலுரையெனக்கே." (தஞ்சை - ௩௦௩.) எனவும், "கண்ணுந்தேயரிபரந்தன்று நுதலும், நுண்வெயர்பொடித்துவண்டார்க் குமமே, வாயலைமைமயலெழுண்மடந்தை, யாங்காயினள்கொலென்னுமென்னெஞ்சே," (தொல்-பொருள். பக்கம். ௨௩௬.) எனவும் வரும்.

செவிலி நற்றாய்க்கு முன்னிலைமொழியானறத்தொடுநிற்றற்குச்செய்யுள்:- "மலைவந்ததோவெனும்வாரணவாணன்றென்மாறைமதிச், சிலைவந்ததோவெனு நன்னுதலாயொருசெல்வரிங்கோர், கலைவந்ததோவெனவந்துவினவிநங்காரிகைக்கு, முலைவந்ததோவில்லையோவென்னுநாளின்முயங்கினரே." (தஞ்சை - ௩௦௪.) எனவரும். நற்றாய் குறிப்பினன்றியறத்தொடுநிற்கப்பெறுளென்றமையாற்செய்யுளில்லை. (அ)

௧௭௯. என்றுட னியம்பிய வெல்லாங் களவிய
னின்றுழி யறத்தொடு நிற்றலின் விரியே.

(இ-ம்.) அறத்தொடுநிற்றலின்விரியிவையென்பதுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) கையறுதோழி கண்ணீர்துடைத்துழித் தலைமகன்கலுழ்தற்காரணங் கூறன்முதலாகத் தலைமகள் வேறுபாடுகண்டு நற்றாய் வினவியவழிச் செவிலி முன்னிலைமொழியான் மொழிதலீறாகச் சொல்லப்பட்டனவெல்லாங் களவொழுக்கம் வெளிப்படாது நின்றவிடத்து அறத்தொடுநிற்றலின் விரியாமென்றவாறு. (௯)

௧௮௦. போக்கே கற்பொடு புணர்ந்த கவ்வை
மீட்சியென் றங்கு விளம்பிய மூன்றும
வெளிப்படைக் கிளவி வெளிப்படு தொகையே.

(இச் - ம்.) களவு வெளிப்பாட்டிற்குரிய கிளவித்தொகை யுணர்த்துத

(இ-ள்.) போக்குமுதலாக மீட்சியீறாகச் சொல்லப்பட்டமூன்றுங் களவு வெளிப்பாட்டிற்குரிய கிளவித்தொகை யென்றவாறு. (க0)

கஅக. போக்கறி வுறுத்தல் போக்குடன் படாமை
போக்குடன் படுத்தல் போக்குடன் படுதல்
போக்கல் விலக்கல் புகழ்தல் தேற்றலென்
றியாப்பமை யுடன்போக் கிருநான்கு வகைத்தே.

(இச் - ம்.) நிறுத்தமுறையானே உடன்போக்கின்வகை யுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்.) போக்கறிவுறுத்தன்முதலாகத் தேற்றலீறாக வெட்டுவகையினை யுடைத்தாமன்பமைந்தவுடன்போக் கென்றவாறு. (கக)

கஅஉ. பாங்கி தலைவற் குடன்போக் குணர்த்தலு
மாங்கவன் மறுத்தலு மவளுடன் படுத்தலுந்
தலைவன் போக்குடன் படுதலும் பாங்கி
தலைவிக் குடன்போக் குணர்த்தலுந் தலைவி
நாணழி விரங்கலுங் கற்புமேம் பாடு
பூண்முலைப் பாங்கி புகறலுந் தலைவி
யொருப்பட் டெழுதலும் விருப்புடைப் பாங்கி
சுரத்திய லுரைத்துழிச் சொல்லலும் பாங்கி
கையடை கொடுத்தலும் வைகிருள் விடுத்தலு
மவன்சுரத் துய்த்தலு மசைவறிந் திருத்தலு
முவந்தலர் சூட்டி யுண்மகிழ்ந் துரைத்தலுங்
கண்டோ ரயிர்த்தலுங் காதலின் விலக்கலுந்
தன்பதி யணிமை சாற்றலுந் தலைவன்
றன்பதி யடைந்தமை தலைவிக் குணர்த்தலு
மென்றிவை யொன்பதிற் றிருவகைக் கிளவியு
மொன்றிய வன்பி னுடன்போக்கு விரியே.

(இச் -ம்.) உடன்போக்கின் விரியுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) பாங்கி தலைவற்குடன்போக்குணர்த்தன் முதலாகத் தலைவன் றன்பதி யடைந்தமை தலைவிக்குணர்த்தலீறாகச் சொல்லப்பட்ட பதினெட்டும் பொருந்தியவன்பினையுடைய வுடன்போக்கு விரியாமென்றவாறு. அவற்றுள், பாங்கிதலைவற்குடன் போக்குணர்த்தற்குச்செய்யுள்:- "மைந்நீர்நெடுங்கண்மடந் தையுடன்றஞ்சைவாணன் வெற்பா, செந்நீர்விழவணிநின்னகர்க்கேகொண்டு சேர்ந்தருண்மற், றிந்நீர்மையல்லதொராறின்றாலிங்கெம்மையென்றான்,மூந்நீ ருலகுங்கொள்ளார்விலையாகமுலைபினுக்கே." (தஞ்சை-௨0௫) எனவும், "மூத் தோரன்னவெண்டலைப்புணரி, யிளையோராடும்வரிமனைசிதைக்குந், தளையவிழ் தாழைக்கானலம்பெருந்துறை, சிலர்செவித்தாக்கியபுணர்ச்சியலரெழ, வில்வயிற் செறித்தமையறியாய்பன்னாள், வருமுலைவருத்தாவம்பகட்டுமார்பிற், றெருமர லுள்ளமொடுவருந்துநின்வயி, னீங்குகென்னியான்யாங்ஙனமொழிகோ, வருந் திறற்கடவுட்செல்லூர்க்குணாது, பெருங்கடன்முழக்கிற்றாகியாணர், இரும்பிடம் படுத்தவடுவுடைமுகத்தர், கருங்கட்கோசர்நியமமாயினு, முறுமெனக்கொள்ளு நரல்லர், நறுநுதலரிவைபாசிழைவிலையே." (அகநானூறு. ௯0) எனவும் வரும்.

தலைவனுடன்போக்குமறுத்தற்குச்செய்யுள்.—"பாரோமுலை விலையென்பர் நின்கேளிரென்பல்கிளைவர், ஓரோவணியதன்றெண்டொடியாய்விந்தையுண் கண்களோ, தாரோவளரும்புயன்றஞ்சைவாணன்றரியலர்போல், யாரோதனி நடப்பாரருங்கானமிவளுடனே." (தஞ்சை-௨0௬.) எனவும், "இரும்புலிக்கிரிந்த கருங்கட்செந்நாகு, நாட்டயிர்கடைகுரல்கேட்டொறும்வெரூஉ, மாநிலைப்பள்ளி யல்கநம்மொடு, மானுண்கண்ணியும்வருமெனின், வாரார்யாரோபெருங்க லாறே." (தொல்-பொருள். பக்கம். ௭௫.) எனவும் வரும்.

பாங்கிதலைமகளை யுடன்படுத்தற்குச்செய்யுள்:—"சுருளேய்குழலுஞ்சுணங் கேய்முலையுஞ்சுமந்துகற்பும், பொருளேயெனச்சுரம்போதுமப்போதுபுகழ்வெயி லான், மருளேய்கலியிருண்மாற்றியவாணன்றென்மாறைபினி, யருளேயொழிய வுண்டோநிழலாவதணங்கினுக்கே." (தஞ்சை-௨0௭.) எனவும், "நீர்கால்யாத்த நிரையிதழ்க் குவளை, கோடையொற்றினும்வாடாதாகுங், கவணையன்னபூட்டுப் பொருசாஅ, வுமணொழுகைத்தோடுநிரைத்த, முரிசினைபிளக்குமுன்பின்மை யின், யானைகைம்மடித்துயவுங், கானமுமினியவாநம்மொடுவரினே." (குறுந் தொகை-௨௮௮.) என்வும் வரும்.

தலைவன் போக்குடன்படுதற்குச்செய்யுள்:— "நஞ்சோவழலோவெனுஞ் சுரமோசெல்லநாடியவென், னெஞ்சோகொடியதுநேரிழையாய்நிழன்மாமதி யோ, மஞ்சோதவழ்மதில்சூழ்தஞ்சைவாணன்வரையிலவம், பஞ்சோவனிச்சங் கொலோவெனுஞ்சீறடிப்பைந்தொடிக்கே." (தஞ்சை-௨0௮.) எனவும்,

"ஆறுசெல்வருத்தத்துச்சீறடிசிவப்பவுஞ், சினைநீங்குதளிரின்வண்ணம்வாடவுந், தான்வருந்துணிந்தவிவளினுமிவளுடன், வேய்பயிலழுவமுவக்கும், பேதைநெஞ்சம்பெருந்தகவுடைத்தே." (தொல்-பொருள். பக்கம். ௭௪.) எனவும் வரும்.

பாங்கி தலைவிக்குடன்போக்குணர்த்தற்குச்செய்யுள்:—"பாலன்னபாயற் பழுகையென்னுஞ்சீறடிபட்டுருவும், வேலன்னகூர்ங்கண்மிதிக்குங்கொலென்றனர் மேதினிக்கு, மாலன்னவாணன்றென்மாறைநன்னாட்டுவயலுகளுஞ், சேலன்ன நீள்விழியாய்தெரியாதன்பர்சிந்தனையே." (தஞ்சை-௩௱௦௧.) எனவும், "குன்றக் குறவனாரமறுத்தென, நறும்புகைசூழ்ந்துகாந்தளூறும், வண்டிமிர்சுடர்நுதற்குறு மகள், கொண்டனர்செல்வர்தங்குன்றுகெழுநாட்டே." (ஐங்குறுநூறு. ௨௫௪.) எனவும் வரும்.

தலைவி நாணழிவிரங்கற்குச் செய்யுள்:—"மறவாதகைவேலங்கைவாணனை மாறையர்மன்னனைத்தம், முறவாகவெண்ணியுறுதவர்போலுயிரோம்பியென்றுந், துறவாதநாணந்துறப்பதுவேண்டலிற்றொல்லுலகிற், பிறவாதொழிகை நன்றே யொரு காலமும் பெண்பிறப்பே." (தஞ்சை-௩௱௧௦.) எனவும், "அளிதோதானே நாணேநம்மொடு, நனிநீடுழந்தன்றுமன்னேயினியே, வான்பூங்கரும்பினூங்குமணற்சிறுசிறை, தீம்புனனெரிதரவீந்துக்காங்குத், தாங்குமளவைத்தாங்கிக், காமநெரிதரக்கைநில்லாதே." (குறுந்தொகை. ௧௪௧.) எனவும் வரும்.

கற்புமேம்பாடு பூண்முலைப்பாங்கி புகறற்குச்செய்யுள்:—"செந்நாண்மலரிற்றிருவன்னகோலத்தெரிவையர்க்கு,மெய்ந்நாணுயிரினுமிக்கதன்றொல்விரவாவரசர், தந்நாண்முறைமைதவிர்த்தருள்வாணன்றமிழ்த்தஞ்சைநாட், டந்நாணமுமுடைவாய்கற்புநோக்கவழிந்தன்றே." (தஞ்சை-௩௱௧௧.) எனவரும்.

தலைவியொருப்பட்டெழுதற்குச்செய்யுள்:—"பலரேசுமந்தவுரைகளுந்தாயர் தம்பார்வைகளுட், சிலரேசுமந்துதிரியவல்லார்செய்யசெண்பகநாண், மலரேசுமந்தவயற்றஞ்சைவாணனைவாழ்த்தலர்போ, லலரேசுமந்துசுமந்திந்தவூர்நின்றழுங்குகவே." (தஞ்சை-௩௱௧௨) எனவும், "சிலரும்பலருங்கடைக்கணோக்கி, மூக்கினுச்சிச்சுட்டுவிரல்சேர்த்தி, மறுகிற்பெண்டிரம்பறூற்றச், சிறுகோல்வலந்தளன்னையலைப்ப, வலந்தேன்வாழிதோழிகானற், புதுமலர்தீண்டியபூநாறுகுரூஉச்சுவற், கடுமான்பூண்டநெடுந்தேர்கடைஇ, நடுநாள்வரூஉமியறேர்க்கொண்கனொடு, செலவயர்ந்திசினால்யானே, யலர்சுமந்தொழிகவிவ்வழுங்கலூரே." (நற்றிணை. ௧௪௧.) எனவும் வரும்.

பாங்கி சுரத்தியலுரைத்தழித் தலைமகள் சொல்லற்குச்செய்யுள்:—"செல்லிற்கொடிய களிற்றண்ணல்வாணன் றென்மாறைமன்னன், வில்லிற்கொடியு

புருவமின்னேயென்விளம்புதிசீ, சொல்லிற்கொடியகம்மன்னேயைப்போல்பவர் சூழ்ந்திருக்கு, மில்லிற்கொடியகொல்லோசெல்லுநாட்டவ்விருஞ்சுரமே." (தஞ்சை-நகந.) எனவும், 'கடக்கருங்கானத்துக்காளேபின்னுளே, நடக்கவும் வல்லேயோவென்றி—சுடர்த்தொடீஇ, பெற்றுளொருவன்பெருங்குதிரையந்நிலே யே, கற்றுணைந்தாருமாறு." (நாலடியார். நகஅ.) எனவும் வரும்.

பாங்கி தலைமகளைத் தலைமகற்குக்கையடை கொடுத்தற்குச் செய்யுள்.— 'பறந்திருந்தும்பர்பதைப்பப்படரும்புரங்காரப்பச், சிறந்தெரியாடிதென்றில்லே யன்னுடிறத்துச்சிலம்பா, வறந்திருந்துன்னருளும்பிறிதாயினருமறையின், றிறந் திரிந்தார்கலியும்முற்றும்வற்றுமிச்சேணிலத்தே." (திருக்கோவையார்-உகந.) எனவும், நீற்கடலுண்டபுயல்போற்கருகிநிறைந்ததிருப், பாற்கடலுண்டபுயல் போலுநாளும்பரிந்தருள்வாய், சேற்கடனஞ்சுண்டவாரூர்த்தியாகர்செழுங்கயிலே, போற்கடநாகமன்றுவெங்கள்மாதின்புரிகுழலே." (திருவாரூர்க்கோவை-டசுஉ.) எனவும், "நனைமுதிர்ஞாழற்சினைமருடிரள்வீ, நெய்தன்மாமலர்ப்பெய்தல்போல, ஆதைதூற்றுமுரவுநீர்ச்சேர்ப்ப, தாயுடன்றலைக்குங்காலையும்வாய்விட், டன்னு யென்னுங்குழவிபோல, வின்னுசெயினுமினிதுதலையளிப்பினு, † நின்வரைப் பினளென்றேழி, ‡ தன்னுறுவிழுமங்களைஞரோவிலளே." (குறுந்தொகை-நகஎ.) எனவும், "இவளேநின்னலதிலளேயாயுங், குவளையுண்கணிவளல திலனே, யானுமாயிடையேனே, மாமலைநாடமறவாதீமே" (தொல்-பொருள். பக்கம் சுகூ.) எனவும் வரும்.

பாங்கிவைகிருள்விடுத்தற்குச் செய்யுள்:— "பொழிநாளமன்றலம்பூங்குழ ளீங்கள்புணர்ந்துசெல்லும், வழிநாடிநம்பின்வருகுவல்யான்றஞ்சைவாணன் வையைச், சுழிநாணுமுந்திநின்றோல்கிளைக்கேற்பனசொல்லியின்று, மொழிநா வடங்கமொழிந்தயலாரைமுகங்கவிழ்த்தே." (தஞ்சை-நகசு.) எனவும், "வேலும் விளங்கினவினையருமியன்றனர், தாருந்தைஇத்தழைபுந்தொடுத்தன, நிலனீரற்ற வெம்மைநீங்கப், பெயனீர்தலைஇயுலவைபிலேநீத்துக், குறுமுறியீன்றனமரனே நறுமலர், வேய்ந்தனபோலத்தோன்றிப்பலவுடன், றேம்படப்பொதுளினபொழி லேகானமு, நனிநன்முகியபனிநீங்குவழிநாட், பாலெனப்பரத்தருநிலவின்மாலைப் போதுவந்தன்றுற்றுதேநீயுங்,' கலங்காமனத்தையாகியென்சொ, னயந்தனைகொ ண்மோநெஞ்சமர்தகுவி, தெற்றியுலறினும்வயலைவாடினு, நொச்சிமென்சினைவ ணர்குரல்சாயினு, நின்னினுமடவணனிநின்னயந்த, வன்னைபல்லுறுங்கினினை யர், புலிமருள்செம்மனேக்கி, வலியாவின்னுந்தோய்கநின்முலையே." (அகநா னூறு. உருக.) எனவும் வரும்.

---

* இத்துறைக்குத் தஞ்சைவாணன்கோவைச்செய்யுள் காணப்படவில்லை.

† நின்னலதிலளென்றேழி எனவும் பாதிபேதம்.

‡ தன்னுடையின்னல் எனவும் பாதிபேதம்.

தலைமகளைத்தலைமகன்சுரத்துய்த்தற்குச்செய்யுள் :—" தளிபோற்கொடை பயில்சந்திரவாணன் றமிழ்த்தஞ்சையா, னளிபோற்குளிர்ந்தவிளமாக்காவுமவன் புகழ், றெளிபோல்விளங்கியவெண்மணல்யாறுமுவந்துகண்டு, நளிபோதவிழ் குழலாய்மெல்லமெல்லநடந்தருளே," (தஞ்சை-௩௪௪.) எனவும், "அழிவிலர்முய லுமார்வமாக்கள், வழிபடுதெய்வங்கட்கண்டாஅங், கலமரல்வருத்தந்தீரயாழநின், னலமென்பணைத்தோளெய்தினமாகப், பொரிப்பூம்புன்கினெழிற்றகையொண் முறி, சுணங்கணிவனமுலையணங்குகொளத்திமிரி, நிழல்காண்டோறுநெடிது வைகி, மணல்காண்டோறும்வண்டறைஇ, வருந்தாதேகுமதிவாலெயிற்றோயே, மாநனைகொழுதிமகிழ்குயிலாலு, நறுந்தண்பொழிலகானங், குறும்பல்லூரநாஞ் செல்லுமாறே." (நற்றிணை. ௯.) எனவும் வரும்.

தலைமகன்றலைமகளைசைவறிந்திருத்தற்குச்செய்யுள்:—" * வரமாமைவேற் படைவாணன்றென்மாறைவணங்கலர்கள் புரமானவல்லழல்பொங்குவெங்கானிற்பொருந்தியகூ, ரரமானகல்லுன்னடிமலராற்றலவாதலினுஞ், சுரமாறுமெல்லை நல்லாயிருப்பாமிந்தச்சோலையிலே." (தஞ்சை-௩௪௭.) எனவரும்.

தலைமகன் றலைமகளையுவந்தலர்சூட்டி யுண்மகிழ்ந்துரைத்தற்குச்செய்யுள்:— "அடிமலர்போற்றவும்போற்றியன்பாலிவளாய்முடிக்கியான், கடிமலர்சூட்டவுங் காட்டியதாற்கள்வர்காய்ந்தெதிரும், துடிமலர்சீர்க்கெதிர்கூகையிரட்டுஞ்சுரத் திடையோர்,வடிமலர்வேற்படையான்வாணன்மாறையென்மாதவமே."(தஞ்சை-௩௪௮.) எனவும், "புன்புறப்புறவின்செங்காற்சேவல், களரிபோகியகவைமுட் கள்ளி, முளரியங்குரம்பையீனிற்றிளைப்பட்ட—வுயவுநடைப்பேடையுணீயமன் னர்முனைகவர்முதுபாழுகுநெற்பெறூஉ, மாளில்சேய்நாட்டதரிடையலர்ந்த, நன் னுன்வேங்கைப்பொன்மருள்புதுப்பூ, யாந்தனக்கணியவுங்கண்டனமாதோ, காணி னிவாழியென்னெஞ்சேநாணிட், டருந்துயருழந்தகாலை, மருந்தெனப்பெறூஉமட வோளையே." (நற்றிணை. ௩அ௪.) என்வும் வரும்.

கண்டோரயிர்த்தற்குச் செய்யுள்:—"சையத்திரள்புயன்சந்திரவாணன் றனி புரக்கும், வையத்துறைகின்றமானிடரோவன்றிவானவரோ, நையப்படுமழல் வெஞ்சுரத்தூடுநடந்தவரென், றையப்படுவதல்லாலுண்மைசாலவறிவரிதே." (தஞ்சை-௩௪௯.) எனவும், "வில்லோன்காலனகழலேதொடியோண், மெல்லடி மேலனசிலம்பேநல்லோர், யார்கொலளியர்தாமேயாரியர், கயிறாடுபறையிற்கால் பொரக்கலங்கி,வாகைவெண்ணெற்றொலிக்கும்,வேய்பயிலழுவமுன்னியோரே" (குறுந்தொகை. ௭) எனவும் வரும்.

---

* வரமாவைவேற்படையெனவும் பிரதிபேதம்.

கண்டோர்காதலின்விலக்கற்குச்செய்யுள்:—"மாலுந்திருவுமெனவருவீர் தஞ்சைவாணன்றெவ்வூர், போலுஞ்சுரமினிப்போகவொண்ணுதுபொருப்படைந்தா, லூம்புரவியருக்கனிக்கங்குலடற்கடமான், பாலுந்தசையுமுண்டேடதங்குவீரெங்கள்பாடியிலே." (தஞ்சை-௩௨௦) எனவும், "எம்மூரல்லதூர்நணித்தில்லை, வெம்முரட்செல்வன்கதிருமூழ்த்தனன், சேர்ந்தனைசென்மோபூந்தார் மார்ப, விளையண்மெல்லியண்மடந்தை,யரியசேயபெருங்கான்யாறே."(தொல்பொருள்-பக்கம் ௬௭) எனவும் வரும்.

கண்டோர்தன்பதியணிமைசாற்றற்குச்செய்யுள்:-"தொடங்கும்பிறைநுதற்றேரைகையுநீயுமுன்றேன்றுகின்ற,நடங்குன்றிரண்டுங்கடந்துசென்றூற்கமலத்தடமுங், கிடங்கும்புரிசையுஞ்சூழ்ந்தெதிர்தோன்றுங்கிளைத்தபைந்தார்த், தடங்குவமெநெடுந்தோள்வாணன்மாறையுந்தஞ்சையுமே." (தஞ்சை-௩௨௧) எனவரும்.

தலைமகன் றன்பதியடைந்தமை தலைவிக்குணர்த்தற்குச்செய்யுள்:—"சங்னங்தோய்ந்துதயங்குமுத்தாரந்தரித்துவிம்மு, நந்தனந்தாங்கிநடுங்கிடைபோலநதிங்கனே, நொந்தனங்காலென்றுநோவல்பொன்னேயொருநோயுமின்றி, வந்னங்காணிதுகாண்வாணன்மாறைவளநகரே." (தஞ்சை-௩௨௨) எனவரும்.

இவற்றுள், பாங்கிதலைமகற்குடன்போக்குணர்த்தலுந், தலைவிக்குடன்போக்குணர்த்தலுமாகியவிரண்டும்போக்கறிவுறுத்தற்குரிய; தலைமகன்மறுத்தலுந் தலைவிநாணழிபிரங்கலுமாகியவிரண்டும்போக்குடம்படாமைக்குரிய; பாங்கிதலையுடம்படுத்தலுந், தலைவிக்குக்கற்புமேம்பாடுகூறலுமாகியவிரண்டும்போக்குடன்படுத்தற்குரிய; தலைவன்போக்குடன்படுதலுந், தலைவியொருப்பட்டெழுதலும், பாங்கிசுரத்தியலுரைத்துழிச்சொல்லலுமாகியமூன்றும்போக்குடன்படுதற்குரிய; பாங்கிகையடைகொடுத்தலும், வைகிருள்விடுத்தலுந், தலைமகன்றலைவிளைச்சுரத்துய்த்தலுமாகியமூன்றும்போக்கற்குரிய; தலைவன்றலைவியையசைவுந்திருத்தலுங், கண்டோர்காதலின்விலக்கலுமாகியவிரண்டும்விலக்கற்குரிய; தலைவன்றலைவியையுவந்தலர்சூட்டியுண்மகிழ்ந்துரைத்தலுங், கண்டோரயிர்த்தலுமாகியவிரண்டும்புகழ்தற்குரிய; கண்டோர்தன்பதியணிமைசாற்றலுந்,தலைவன்பதியடைந்தமைதலைவிக்குணர்த்தலுமாகியவிரண்டுந்தேற்றற்குரிய.

கஅ௩. செவிலி புலம்ப னற்றாய் புலம்பல்
கவர்மனை மருட்சி கண்டோ ரிரக்கஞ்
செவிலிபின் றேடிச் சேறலென் றாங்குக்
கற்பொடு புணர்ந்த கௌவையை வகைத்தே.

(இ-ம்.) கற்பொடுபுணர்ந்தகௌவையின் வகையுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) செவிலிபுலம்பன்முதலாகச் செவிலிபின்றேடிச்சேறலீருகவைந் துவகையினையுடைத்தாங் கற்பொடுபுணர்ந்தகௌவையென்றவாறு. (கரு)

கஅச. வினவிய பாங்கியி னுணர்ந்த காலை
யினைய லென்போர்க் கெதிரழிந்து மொழிதலுந்
தன்னறி வின்மை தன்னொடொந் துரைத்தலுந்
தெய்வம் வாழ்த்தலு மிவ்வொரு மூன்று
மிலங்கிழைச் செவிலி புலம்புதற் குரிய.

(இ-ம்.) செவிலிபுலம்பலின்விரியுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) வினவியபாங்கியினுணர்ந்தகாலையினையலென் போர்க்கெதி ரழிந்துமொழிதன்முதலாகத் தெய்வம்வாழ்த்தலீருகச் சொல்லப்பட்டவிவ்வொரு மூன்றுந்தலைமகள்செவிலித்தாய்புலம்பற்குரியவாமென்றவாறு. அவற்றுள், செவிலிபாங்கியைவினவற்குச்செய்யுள்:— "நலம்புனையாயமுநீயுநற்றாயொடுநா னுநன்பொன், சிலம்புயர்சோலையுஞ்சிற்றிலும்பேரிலுந்தெண்டிரைமேல், வலம் புரியூர்வயல்சூழ்தஞ்சைவாணனைவாழ்த்தலர்போற், புலம்புறமாதரெங்கேமகளே தனிப்போயினளே." (தஞ்சை-நஉந.) எனவரும்.

பாங்கிசெவிலிக்குணர்த்தற்குச்செய்யுள்:— "வெறுத்தாரொறுத்துறைமேலு நங்கேளிர்விழைதலின்றி, மறுத்தாரவற்குமணமதனுற்றஞ்சைவாணர்பிரான், கறுத்தார்புரத்துநடந்தனள்காளைபின்காமர்கற்பாற், பொறுத்தாளழற்சுரந்தன்னை யன்னுய்நின்பொலங்கொடியே." (தஞ்சை-நஉச.) எனவும், "செவ்வாய்க்கரிய கட்சிறிறுற்கேளாதுங், கவ்வையாற்காணுதுமாற்றாது—மவ்வாயந், தார்த்தத்தை வாய்மொழியுந்தண்கயத்துநீலமு, மோர்த்தொழிந்தாளென்பேதையூர்ந்து." (திணைமாலைநூற்றைம்பது. எ௩.) எனவும் வரும்.

பாங்கியினுணர்ந்த செவிலித்தேற்றுவார்க்கெதிரழிந்துமொழிதற்குச் செய் யுள்:—"மாருவளவயல்சூழ்தஞ்சைவாணன்றென்மாறையென்க, ணூருவருந்துய ராற்றுகின்றீரறிவேகொளுத்தி, யூருவனகடிந்தென்முலையூறமிர்துாட்டியின் சொல், கூருவளத்தற்கோவெண்ணைநீத்ததென்கோல்வளையே." (தஞ்சை-நஉரு.) எனவும், "அத்தநீளிடையவனொடுபோகிய, முத்தேர்வெண்பன்முகிழ் நகைமடவர, ரூயரென்னும்பெயரேவல்லா, தெடுத்தேன்மன்றயானே, கொடுத் தோர்மன்றவவளாயத்தோரே." ஐங்குறுநூறு-ந அ०.) எனவும் வரும்.

செவிலிதன்னறிவின்மைதன்னொடொந்துரைத்தற்குச்செய்யுள்:— "வழி யாவரும்பெருநீர்த்தஞ்சைவாணனைவாழ்த்தலர்போற், கழியாதவன்புடைக்காளை

பின்ஞளைக்கலந்துகொண்டல், பொழியாதவெஞ்சுரம்போகுவல்யாமென்று போங்குறிப்பா, லொழியாதென்முன்புசொன்ஞள்பேதையேஞென்றையோர்ந் திலனே." (தஞ்சை-கூஉசு.) எனவும், "முலைக்கண்ணுமுத்துமுழுமெய்யும் புலலு, மிலக்கணம்யாதுமறியேன்–கலைக்கணம், வேங்கைவெரூஉநெறிசெலிய போலுமென், பூம்பாவைசெய்தகுறி" (நாலடியார்-கூகக.) எனவும் வரும்.

செவிலிதெய்வம்வாழ்த்தற்குச்செய்யுள்:–"இணங்கிப்புவனத்தெவருமில்லா வெனனிளங்கொடியா, ளுணங்கிககழிதலொழியவென்பால்வரவுன்னையன்பால், வணங்கிபபலமுறைவாழ்த்துகின்றேன்றஞ்சைவாணன்றெவ்வை, யணங்கித் திரளபுயததாமமலயாசலததாரணங்கே." (தஞ்சை-கூஉஎ.) எனவும், "ஞாயிறு காயுமதமாலன் றூறப உழிய, மலைமுதற்சிறுநெறிமணன்மிகத்தாஅய்த், தண்மழை தலையன்றாகதணணெரிச், சுடர்படுநெடுவேற்காளையொடு, மடவாலரிவைபோகிய சுரமே." (குறுநதொகை-கூஎஅ.) எனவும் வரும். (கசூ)

கஅரு. செவிலி யறத்தொடு நிற்றலிற் கவலையிற்
பாங்கி தன்னொடும் பாங்கியர் தம்மொடு
மயலார் தம்மொடும் பயிலிடந் தம்மொடுந்
தாஙகல ளாகிச் சாற்றிய வெல்லாம்
பூங்கொடி நற்றாய் புலம்பற் குரிய.

(இச் - ம்.) நற்றாய்புலம்பலின்விரியுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) செவிலியறத்தொடு நிற்றலிற்கவலையிற் பாங்கி தன்னொடு புலமபன்முதலாகபபயிலிடந் தன்னொடுபுலம்பலீறாகச் சொல்லபபட்டனவெல் லாந்தலைமகணறறாய்புலமபற்குரியவாமெனறவாறு. அவற்றுள், செவிலிநற் றாய்க்கறத்தொடுநிற்றற்குச்செய்யுள்:— "சகநல்கவந்தருள்சந்திரவாணன்றென் றஞ்சைநல்லாய், முகநல்கிநல்கமுலைகொடுத்தாரின்முத்தங்கொடுத்தார், மிகநல்ல ரென்பதுமன்பலைதேரவிடலைபின்னே, மகநல்குமந்தியங்கானடந்தாளுன்மடந் தையின்றே." (தஞ்சை-கூஉஅ.) எனவும, "பறைபடப்பணிலமார்ப்பவிறை கொள்பு, தொன்மூதாலத்துப்பொதியிற்றேன்றிய, நாலூர்க்கோசர்நன்மொழி போல, வாயாகின்றேதோழியாய்கழற், சேயிலைவெள்வேல்விடலையொடு, தொகு வளைமுன்கைமடந்தைநட்பே." (குறுந்தொகை-கரு.) எனவும் வரும்.

நற்றாய்பாங்கிதன்னொடுபுலம்பற்குச்செய்யுள்:— "முன்னேயிதனைமொழிந் தனையேனுந்தைமுந்தைமணம், பின்னேய்குழலிபெறுனல்லளேபிறழாதெவர்க் குந், தன்னேயம்வைத்தருளுந்தஞ்சைவாணன்றமிழ்ச்சிலம்பிற், பொன்னே

யனையநல்லாயவமேசுரம்போக்கினையே.,, (தஞ்சை-௩௨௧) எனவும், "தன்னம ராயமொடுநன்மணநுகர்ச்சியி, னினிதாங்கொல்லோதனக்கேபனிவரை, யினக் களிறுவழங்குஞ்சோலை, வயக்குறுவெள்வேலவற்புணர்ந்துசெலவே." (ஐங்குறு நூறு. ௩௭௩) எனவும் வரும்.

அதுகேட்டதோழியழுங்கல்கண்டுநற்றாய்புலம்பற்குச்செய்யுள்:—இல்லுங் கழுங்காடிடங்களுநோக்கியிரங்கல்வம்பும், வல்லும்பொருங்கொங்கைமங்கைநல் லாய்தஞ்சைவாணனென்னார், புல்லுந்துணைவியர்போல்வினையேன்பெற்றபூவை யன்னாள், செல்லுஞ்சுரத்தழலன்றுன்கண்ணீரொற்றெறுகின்றதே." (தஞ்சை-௩௩௦.) என்வும், "செல்லியமுயலிப்பாஅயசிறகர், வாவலுகக்குமாலையாம்புலம் பப், போகியவவட்கோநோவேன்றேமொழித், துணையிலள்கலுழுநெஞ்சி, னிணை யேருண்கணிவட்குநோவதுவே." (ஐங்குறுநூறு. ௩௭௮.) எனவும் வரும்.

நற்றாய்பாங்கியர்தம்மொடுபுலம்பற்குச்செய்யுள்:—"நேயம்புணைதுணையாக வெங்கானகநீந்தவெண்ணி, யாயம்புலம்பவகன்றனளோகல்லகக்குறைய, மாயம் புகலொருகாளைபின்வாணன்றெனமாறையன்னீர், சேயம்புயமலர்போலடிநோவ வென்சில்வளையே." (தஞ்சை-௩௩௧.) எனவும், "இதுவென்பாவைபாவையிது வென், னலமருநோக்கினலம்வருசுடர்நுதற், பைங்கிளியெடுத்தபைங்கிளியென் றிவை, காண்டொறுங்காண்டொறுங்கலங்க, நீங்கினளோவென்பூங்கணோளே." (ஐங்குறுநூறு. ௩௭௫) எனவும் வரும்.

நற்றாயயலார்தம்மொடுபுலம்பற்குச்செய்யுள்:—மேனாள்வாங்கி டந் தென் போல்வருந்திமிகவுமெய்ந்நொந், தீனுதவர்துன்பமெய்துவரோசிமையோருலகந், தானுணநீடெதிற்றஞ்சைவாணன்றமிழ்ச்சிலம்பின், மானார்விழியனையாள்விளை யாடியவண்டல்கண்டே." (தஞ்சை-௩௩௨.) எனவும், "ஒருமகளுடையேன்மன் னேயவளுஞ், செருமிகுமுன்பிற்கூர்வேற்காளையொடு, பெருமலையருஞ்சுரநெரு நற்சென்றனள், ளினியே, தாங்குநின்னவலமென்றீர்துமற், றியாங்கனமொல்லு மோவறிவுடையீரே, யுள்ளினுள்ளம்வேமேயுண்கண், மணிவாழ்பாவைநடைகற் றன்னவென், னணியியற்குறுமகளாடிய, மணியேர்நொச்சியுந்தெற்றியுங் கண்டே." நற்றிணை-௧௮௪.) எனவும் வரும்.

நற்றாய் தலைமகள்பயிலிடந்தம்மொடு புலம்பற்குச் செய்யுள்:—"செயலைத் தருவின்றிருநிழலேபெருஞ் சிற் றி ல மே, வயலைக்கொடிநொச்சிமண்டபமேதஞ் சைவாணனென்னு, ரியலைத்தனித்தனிதந்தனளேநமக்கின்றிதன்றோ, கயலைப் பொருதகண்ணாண்மேலும்வாழ்விக்குக்கட்டளையே.' (தஞ்சை-௩௩௩.) எனவும், "கொன்றாய்குருந்தேகொடிமுல்லலாய்வாடினீர், நின்றேனறிந்தே னெடுங்கண்

றன்-என்றாளுக், கென்னுரைத்தீர்க்கென்னுரைத்தாட்கென்னுரைத்தீர்க் கென்னுரைத்தான், மின்னிரைத்தபூண்மிளிரவிட்டு." (திணைமாலைநூற்றைம் பது-அக.) எனவும் வரும். (௧௫)

௧அசு. நிமித்தம் போற்றலுஞ் சுரந்தணி வித்தலுந்
தன்மகள் மென்மைத் தன்மைக் கிரங்கலு
மிளமைத் தன்மைக் குளமெலிந் திரங்கலு
மச்சத் தன்மைக் கச்சமுற் றிரங்கலு
மெனவிவை யைந்து மனைமருட்சிக் குரிய.

(இச் - ம்.) அனைமருட்சியின் விரியுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) நிமித்தம்போற்றன்முதலாக வச்சத்தன்மைக்கச்சமுற் றிரங்க லீறாகச்சொல்லப்பட்டவைந்து மனைமருட்சிக்குரியவாமென்றவாறு. அனைநற் றாய். அவற்றுள், நிமித்தம்போற்றற்குச்செய்யுள்:—"வடியேய்புகர்முகவாள்வல வாணன்றென்மாறையுள்யா, னடியேதொழுந்தெய்வமாகநிற்பேணி யரும்பலி யிப், படியேதருகுவலென்றுமின்னேயிப்பதியுவகைக், கொடியேவரக்கரைநீகொ டியேன்பெற்றகொம்பினையே." (தஞ்சை-௩௩௪.) எனவும், மறுவில்றாவிச்சிறு கருங்காக்கை, யன்புடைமரபினின்கிளையோடாரப், பச்சூன்பெய்தபைந்தினை வல்சி, பொலம்புனைகலத்திற்றருகுவென்மாதோ, வெஞ்சினவிறல்வேற்காளை யொ, டஞ்சிலோதியைவரக்கரைந்தீமே." (ஐங்குறுநூறு-௩௯௧.) எனவும் வரும்.

நற்றாய் சுரந்தணிவித்தற்குச்செய்யுள்:—"வெஞ்சுரநாடுவியன்சுரலோகமும் வெங்கடுங்கா, னெஞ்சுரதாருவனங்களுமாகவகிற்புகைபோன், மஞ்சுறவாடகமா மதில்சூழ்தஞ்சைவாணன்வெற்பிற், பஞ்சுரமாகுமொழிச்சுருளோதியென்பைந் தொடிக்கே." (தஞ்சை-௩௩௫.) எனவும், "மள்ளர்கொட்டின் மஞ்ஞையாலு, முயர்நெடுங்குன்றம்படுமழைதலைஇச், சுரநனியினியவாகுகதில்ல, வறநெறியிது வெனத்தெளிந்தவென், பிறைநுதற்குறுமகள்போகியசுரனே." (ஐங்குறுநூறு-௩௭௧.) எனவும் வரும்.

*நற்றாய் தன்மகள் மென்மைத்தன்மைக் கிரங்கற்குச்செய்யுள்:— "தாமே தமக்கொப்புமற்றில்லவர்தில்லைத்தண்ணனிச்சப், பூமேன்மிதிக்கிற்பதைத்தடி பொங்குநங்காயெரியுந், தீமேலயில்போற்செறிபரற்கானிற்சிலம்படிப்பா, யாமே நடக்கவருவினையேன்பெற்றவம்மனைக்கே." (திருக்கோவையார்-௨௨அ.) என வும், "உவக்கின்றவல்லிமலர்த்தாளென்கண்களிலொற்றிக்கண்கள், சிவக்கின்ற

* இத்துறைக்குத் தஞ்சைவாணன்கோவைச்செய்யுள் காணப்படவில்லை.

தற்குமுன்னேசிவந்தேறுஞ்செயல தன் றே, பவக்குன்றிடிப்பவராரூர்த்தியாகர் பனிவரைமே, னிவக்கின்றவெஞ்சுரத்தேசென்றவாறென்னினைப்பதுவே.(திருவாரூர்க்கோவை.) எனவும், "அரக்காம்பஞறும்வாயம்மருங்கிற்கன்ஞே, பாற்கானமாற்றினகொல்லோ—வரக்கார்ந்த, பஞ்சிகொண்டூட்டினும்பையெனப்பையெனவென், றஞ்சிப்பின்வாங்குமடி." (நாலடியார். ௩கக.) எனவும் வரும்.

நற்றாய்தன்மகளிளமைத்தன்மைக்குளமெலிந்திரங்கற்குச்செய்யுள்:—"இரும்பாமனங்கொண்டவாறென்னைநீதன்னையேத்தியென்றும், வரும்பாவலர்க்கருள்வாணன்றென்மாறைவளவயலிற், கரும்பார்மொழியாயழலென்று கண்ணீர்துடைத்தணைத்துன், னரும்பாமுலைசெய்யவாய்ப்பசும்பாவைக்களிக்குமின்னே." (தஞ்சை-௩௩௭.) எனவும், "பல்லூழ்நினைப்பினுநல்லென்றாழ, மீளிமுன்பிற்காளைகாப்ப, முடியகம்புகாஅக்கூந்தலள், கடுவனுமறியாக்காடிறந்தோளே." (ஐங்குறுநூறு-௩௭௪.) எனவும் வரும்.

நற்றாய்தன்மகளச்சத்தன்மைக் கச்சமுற்றிரங்கற்குச்செய்யுள்:—"நாண்மாதவிமலர்நாறிருங்கூந்தனடந்தவழிக், கோண்மாகுமிறுங்கொடுங்குரல்கேட்டொறுங்கூர்ங்கணையால், வாண்மாறுனைவென்றவாணன்றென்மாறைமணிவரைவேய்த், தோண்மாவெருவுங்கொல்லோவென்றனுருயிர்சோர்கின்றதே." (தஞ்சை. ௩௩௮.) எனவும், "கேளாய்வாழியோமகளைநின்றோழி, திருநகர்வரைப்பகம்புலம்பவவனொடு, பெருமலையிறந்ததுநோவனோவல், கடுங்கண்யானைநெடுங்கைசேர்த்தி, முடங்குதாளுகைத்தபொலங்கெழுபூழி, பெரும்புலர்விடியல்விரிந்துவெயிலெறிப்பக், கருந்தார்மிடற்றசெம்பூழ்ச்சேவல், சிறுபுன்பெடையொடுகுடையுமாங்க, ணஞ்சுவரத்தகுநகானநீந்திக், கன்றுகாணுதுபுன்கண்ணசெவிசாய்த்து, மன்றுநிறைபைதல்கூரப்பலவுடன், கறவைதந்தகடுங்கண்மறவர், கல்லென்சீறூரெல்லியினசைஇ, முதுவாய்ப்பெண்டிர்செதுகாற்குரம்பை, மடமயிலன்னவென்னடைமலிபேதை, தோட்டுணையாகத்துயிற்றத்துஞ்சாள், வேட்டக்கள்வர்விசியுறுகடுங்கட், சேக்கோளறையுந்தண்ணுமை, கேட்குவள்கொல்லெனக்கலுழுமென்னெஞ்சே." (அகநானூறு. சுந.) எனவும் வரும். (கசு)

கசுஎ. ஆயமுந் தாயு மழுங்கக் கண்டோர்
காதலி னிரங்கல் கண்டோ ரிரக்கம்.

(இச் - ம்.) கண்டோரிரக்கமுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) தலைமகளாயத்தாரு நற்றாயுமிரங்குமாறுகண்டன்பினாலிரங்குதல் கண்டோரிரக்கமென்றவாறு. அதற்குச்செய்யுள்:—"நொந்துங்கலுழ்ந்துந்துணை

வியாற்றலர்நோக்கொடின்சொற், றந்துங்கவையுந்தணந்துசென்றனெனத்தாள் பணியார், மைந்துங்கதமுங்கடிந்தருள்வாணன்றென்மாறையன்னுள், பந்துங் கழங்குமெல்லாங்கண்டுவாடும்பயந்தவளே." (தஞ்சை-௩௩௧.) எனவும், "தயங் தலைமடப்பிடிபயம்பிற்பட்டெனக், களிறுவிளிப்படுத்தகம்பலைவெரீஇ, யொய் யெனவெழுந்தசெவ்வாய்க்குழவி, தாதெருமறுகின்மூதூராங்க, ணெருமைநல் லான்பெருமுலைமாந்து, நாடுபலவிறந்தநன்னராட்டிச், காயமுமணியிழந்தழூஉ நின்றதாயு, மின்றோடாயிநீயரென்னுயிரெனக், கண்ணுறுதலுநீவித்தண் ணெனத், தடவுநிலைநொச்சிவரிநிழலசைஇத், தாழிக்குவளைவாடுமலர்சூடித், தரு மணற்கிடந்தபாவையெ, னருமகளேயெனமுயங்கினளழூஉமே." (அகநானூறு. கககூ.) எனவும் வரும். (கஎ)

கஅஅ. ஆற்றுத் தாயைத் தேற்றலு மாற்றிடை
முக்கோற் பகவரை வினுதலு மிக்கோ
ரேதுக் காட்டலு மெயிற்றியொடு புலம்பலுங்
குரவொடு புலம்பலுஞ் சுவடுகண் டிரங்கலுங்
கலந்துடன் வருவோர்க் கண்டுகேட் டலுமவர்
புலம்ப றேற்றலும் புதல்வியைக் காணுது
கவலைகூர் தலுமென விவையொன் பானுஞ்
செவிலிபின் றேடிச் சேறற் குரிய.

(இச் - ம்.) செவிலிபின்றேடலின் விரியுணர்த்துதலுதலிற்று.

(இ-ள்.) ஆற்றுத்தாயைத்தேற்றன்முதலாகப்புதல்வியைக்காணுதுகவலை கூர்தலீறுகச் சொல்லப்பட்டவொன்பதுஞ் செவிலிபின்றேடிச் சேறற்குரியவா மென்றவாறு. அவற்றுள், செவிலியாற்றுத்தாயைத்தேற்றற்குச்செய்யுள்:— "நன்றேயிதென்றுமுகமுகநோக்கிநகைநகையா, மன்றேயலர்சொல்லுமாதர்முன் னேதஞ்சைவாணன்றேல்சீர், சென்றேபரந்ததிசைகளெல்லாஞ்சென்றுதேர்த் தணங்கை, யின்றேதருவனன்னேவருந்தாதிங்கிருந்தருளே." (தஞ்சை-௩௪௦.) எனவரும்.

ஆற்றிடைமுக்கோற்பகவரைவினுதற்குச்செய்யுள்:—"ஒருவெண்குடையிரு நீழன்முக்கோல்கொண்டொழுக்கத்தினு, லருவெங்களரியைந்தாறுசெல்வீரருளி ரொழுபார், மருவெண்டிசைபுகழ்வாணன்றென்மாறையெவ்வஞ்சியன்னுள், பொருவெஞ்சுடரிலைவேலொருகாளைபின்போயினளே." (தஞ்சை-௩௪க.) என வும், "சேயினவரூஉமதவலியாவுயர்ந், தோமைநீடியகானிடையத்த, முன்னுளும் பார்க்கழிந்தவென்மகட், கண்டனிராயிற்றெழுவேனுண்பற், கோடேந்தல்குல ரும்பியதிதலை, வாஅர்ந்திலங்குவாலெயிற்றுப்பொலிந்ததார்ச், இல்வளைப்பல்கூட

தழீஇயவனே, ஞழையணலெருத்தின்முன்பிற்றடக்கை, வல்விலம்பினெய்யா வண்மகிழ்த், தந்தைதன்னூரிதுவே, யீன்றேன்யானேபொலிகநும்பெயரே." (நற்றிணை-ககஅ.) எனவும் வரும்.

மிக்கோரேதுக்காட்டற்குச்செய்யுள்:— "இயங்காவனமென்மகளொருகாளை பின்னேகினளென், றியங்காதொழியஃதுலகியல்பாலுலவும்புயறோய், வயங்கா டகமதில்சூழ்தஞ்சைவாணன்மணங்கமழ்தார்ப், புயங்காதல்கொண்டணைந்தாளய னோர்தந்தபூமகளே." (தஞ்சை-நசஉ.) எனவும், சீர்கெழுவெண்முத்தமணிபவர்க் கல்லதை, நீருளேபிறப்பினுநீர்க்கவைதாமென்செய்யும், தேருங்கானும்மகணு மக்குமாங்கனையளே." (கலித்தொகை-க.) எனவும் வரும்.

செவிலியெயிற்றியொடுபுலம்பற்குச்செய்யுள்:— "செருமகளேயும்புயத்தய லான்பின்செலவிடுத்தென், னொருமகளேயென்றுனையயிர்த்தேன்புனையோவியம் போல், வருமகளேதஞ்சைவாணனொன்னார்துன்னும்வன்சுரத்தோ, ரருமகளே யுரையாயவள்போனவதெனக்கே." (தஞ்சை-உசந.) எனவும், "முலைமுகஞ் செய்தனமுள்ளெயிறிலங்கின, தலைமுடிசான்றதண்டழையுடையை, யலமரலாய மொடியாங்கணும்படாஅன், மூப்புடைமுதுபதிதாக்கணங்குடைய, காப்பும்பூண் டிசிற்கடையும்போகலை, பேதையல்லைமேதையங்குறுமகள், பெதும்பைப்பருவத் தொதுங்கினைபுறத்தென, வொண்சுடர்நல்விலருங்கடிநீவித், தன்சிதைவறிதலஞ் சியின் சிலை, யேறுடையினத்தநாறுயிர்நவ்வி, வலைகாண்பிணையிற்போகியீங் கோர், தொலைவில்வெள்வேல்விடலையொடென்மக, ளிச்சுரம்படர்தந்தோளேயா யிடை, யத்தக்கள்வராதொழுவறுத்தெனப், பிற்படுபூசலின்வழிவழி யோடி, மெய்த்தலைப்படுதல்செய்யே னித்தலை, நின்னொடுவினவுவல்கேளாய்பொன் னொடு, புலிப்பற்கோத்தபுலம்புமணித்தாலி, யொலிக்குழைச்செயலையுடைமா ணல்கு, லாய்சுளைப்பலவின்மேய்கலையுதிர்த்த, துய்த்தலைவெண்காழ்பெறூஉங், கற்கெழுசிறுகுடிக்கானவன்மகளே." (அகநானூறு-எ.) எனவும் வரும்.

செவிலிகுரவொடுபுலம்பற்குச்செய்யுள்:— "இரவேய்குழலியிவ்வேதிலன் பின்செல்லலென்றுசொல்லாக், குரவேயறவுங்கொடியைகண்டாய்கொடிக்கோ கனகந், தரவேயெனவந்தசந்திரவாணன்றரியலர்போஞ், சுரவேயழல்வழியே தனிப்போயவென்றோகையையே." (தஞ்சை-நசச.) எனவும், "தான்றுயாக் கோங்கந்தளர்ந்துமுலைகொடுப்ப, வீன்றாய்நீபாவையிருங்குரவே—யீன்றாண், மொ ழிகாட்டாயாயினுமுள்ளெயிற்றாள்சென்ற, வழிகாட்டாயீதென்றுவந்து."(திணை மாலைநூற்றைம்பது-சுரு.) எனவும் வரும்.

செவிலிசுவடுகண்டிரங்கற்குச்செய்யுள்:— "தொடுசிலைக்கானவ ரோடிய வேற்றுச்சுவடுவையே, யடுசிலைக்காளையடியவையேயறிந்தோரறிய, விடுசிலைப்

டார்புரக்குந்தஞ்சைவாணனிசைக்குருகப், பயிலேப்பாலைபதமிலையேவன்டு பாடேகவே." (தஞ்சை-௩௪௫.) எனவரும்.

செவிலிகலந்துடன்வருவோர்க்கண்டுகேட்டற்குச்செய்யுள்:— "யானகம் போதவருந்தநும்போல்வனப்பெய்தி வெய்ய, கானகம்போயினர்கண்டனிரோ கற்பகாடவிசூழ், வானகம்போர்பயில்வானவற்கீந்தருள்வாணன்றஞ்சைத், தேனகம்போருகமாதனையாளுமொர்செல்வனுமே." (தஞ்சை-௩௪௬.) எனவரும்.

கலந்துடன்வருவோர்புலம்பதேற்றற்குச் செய்யுள்:— "யான்கண்டவண்ணனுமெண்ணருங்காதலினேகியவென், மான்கண்டனகண்மயில்கண்டமாதருமாதருமங், தான்கண்டதண்ணளிச்சந்திரவாணன்றரியலர்போங், கான்கண்டமெய்குளிரப்பொய்கைசூழ்தஞ்சைகாண்பர்களே." (தஞ்சை-௩௪௭.) எனவும், "கண்ணிநீர்சென்மினமரவாரபவே, லெண்ணியவெண்ணமெளிதரோ—வெண்ணிய, வெஞ்சுடரன்னானையான்கண்டேன்கண்டாளாங், தண்சுடரன்னானைத் தான்." (திணைமாலை நூற்றைம்பது. அக.) எனவும் வரும்.

செவிலிபுதல்வியைக்காணாதுகவலைகூர்தற்குச்செய்யுள்:— "நாணினுந்தாரணிகற்புநன்றென்றுநயந்துமுத்தம், பூணினும்பாரமிதென்னுமென்பொன்னையிப்போதெனக்குச், சேணினுஞ்சார்புகழ்வாணன்றென்மாறைமன்சேரலரைக், காணினுங்காணவுந்தோவரிதாலிந்தக்கானிடையே." (தஞ்சை-௩௪௮.) எனவும், "காலேபரிதப்பினவேகண்ணே, நோக்கிநோக்கிவாளிழந்தனவே, யகலிருவிசும்பின்மீனினும், பலரேமன்றவிவ்வுலகத்துப்பிறரே." (குறுந்தொகை. ௪௪.) எனவும் வரும். (கஅ)

கஅகூ. முற்பட மொழிந்த முறையெழு மூன்றுங்
கற்பொடு புணர்ந்த கௌவையின் விரியே.

(இ - ம்.) கற்பொடுபுணர்ந்தகௌவையின் விரியுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) செவிலிதேற்றுவார்க் கெதிரழிந்துமொழிதன் முதலாகச் செவிலிபுதல்வியைக்காணாது கவலைகூர்தலீறாகச்சொன்ன விருபத்தொன்றுங் கற்பொடுபுணர்ந்த கௌவையின் விரியாமென்றவாறு. (ககூ)

ககூ0. தெளித்தன் மகிழ்ச்சி வினாதல் செப்பலென
வெளிப்பட வுரைத்த மீட்சிசால் வகைத்தே.

(இ - ம்.) நிறுத்தமுறையானே மீட்சியின்வகையுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) தெளித்தன்முதலாகச்செப்புலீருக நான்குவகையினையுடைத்தா மீட்சியென்றவாறு. (உ0)

கஉக. தலைவிசே ணகன்றமை செவிலிதாய்க் குணர்த்தலுந்
தலைவன் றம்மூர் சார்ந்தமை சாற்றலுந்
தலைவிமுன் செல்வோர் தம்மொடு தன்வரல்
பாங்கியர்க் குணர்த்தி விடுத்தலு மாங்கவர்
பாங்கியர்க் குணர்த்தலும் பாங்கியர் கேட்டு
நற்றாய்க் குணர்த்தலு நற்றாய் கேட்டவ
னுளங்கோள் வேலனை வினுதலு மெனவுடன்
விளம்பிரு மூன்று மீட்சியின் விரியே.

(இ-ம்.) மீட்சியின் விரியுணர்த்துதலுதலிற்று.

(இ-ள்.) தலைவிசேணகன்றமை செவிலிதாய்க்குணாத்தன்.முதலாகநற்றாய் கேட்டவனுளங்கோள்வேலனை வினுதலீருகச்சொல்லப்பட்டவாறு மீட்சியின் விரியாமென்றவாறு. அவற்றுள், தலைவிசேணகன்றமைசெவிலிதாய்க்குணர்த்தற்குச்செய்யுள்:— *எடார்மலர்க்குழல்வல்லியையன்னையித்தீவினையே, ஞடாவிடமில்லைஞாலத்தகல்வயினன்கமலக், காடார்பழனக்கழனிநன்னுடுகடந்துதன்னூர், வாடாவனமனைகொண்டுசென்றுனொருவன்னலின்றே." (அம்பிகாபதிகோவை-௬0அ.) எனவும், "தெறுவதம்மநும்மகள்விருப்பே, யுறுதுயரவலமொடுயிர்செலச்சாஅய்ப், பாழ்படுநெஞ்சம்படாடக்கலங்க, நாடிடைவிலங்கியவைப்பிற், காடிறந்தனணங்காதலோனே." ஐங்குறுநூறு. ௩௧௩.) எனவும் வரும்.

தலைவன்றம்மூர்சார்ந்தமைசாற்றற்குச்செய்யுள்:- "கிளையாளெனதிர்ப்பட்டகீடிருங்குன்றிதுகீகுடைந்த, சுனையாமதுமலர்ச்சோலைகளாமுலைதுயவண்டன், மனையாமிவையினிவாணன்றென்மாறையைவாழ்த்தலர்போ, லினையாதெழுந்தருண்மானனையாய்கம்மெழினகர்க்கே.".(தஞ்சை-௩௭0.)எனவும், "மூங்கில்வயிர்ப்பிறந்தவளிவளர்கூரொரிச், சுடர்விடுநெடுங்கொடிவிடர்முகைமுழங்கு, மின்னுவருஞ்சுரந்தீர்ந்தனமென்மெல, வேகுமதிவாழியோகுறுமகள்போதுகலந்து,கறங்கிசையருவிவீழும், பிறங்கிருஞ்சோலைநம்மலைகெழுநாட்டே." (ஐங்குறு-௩௭௯.) எனவும் வரும்.

* இத்துறைக்குத் தஞ்சைவாணன்கோவைச்செய்யுள் காணப்படவில்லை.

தலைவிமுன்செல்வோர்தம்மொடு தன்வரல்பாங்கியர்க் குணர்த்திவிடுத்தற்குச்செய்யுள்:—"புனையலரேதிலர்காதலர்தாயர்பொருமையிற்போ, யினைதுயர்யா தொன்றுமின்றிவெங்கானிகந்தியானுமம்பொன், வனைகழலானும் வருவதெல்லாஞ்சென்றுவாணன் றஞ்சை, தினைவுடனேகுகின்றீர்சொல்லுவீரொன்றுனை வியர்க்கே." (தஞ்சை-நகூக.) எனவும், "கவிழ்மயிரெருத்திற்செந்நாயேற்றை, குருளைப்பன்றிகொள்ளாதுகழியுஞ், சுரநனிவாராநின்றனளென்பது, முன்னுற விரைந்தநீருரைமி, னின்னகைமுறுவலென்னையர்க்கே." (ஐங்குறு-நகஎ.) எனவும் வரும்.

முன்சென்றோர்பாங்கியர்க்குணர்த்தற்குச்செய்யுள்:— "போதலர்ந்தலை முனியுமெல்லோதிபபுனையிழைதன், காதலன்பின்வரக்கண்டனம்யாங்கண்டல் வேலிமுந்நீர், மாதலந்தன்னிருதோள்வைத்தவாணன்றென்மாறைவண்ணச் சூதலர்ந்தொல்கவிம்மித்திரண்மாமுலைத்தோகையரே." (தஞ்சை-நகூஉ.) என வரும்.

பாங்கியர்கேட்டு நற்றாய்க்குணர்த்தற்குச்செய்யுள்:— "வாளேய்விழிநின் மயிலனையாடஞ்சைவாணனவெறபில், வேளேயனையவிடலைபின்னேசுரமீண்டி னிநங், கேளேய்பதிவருமென்னநல்லோர்சொல்லக்கேட்டனமிந், நாளேயனைய நின்னுளவோசென்றநாள்களிலே." (தஞ்சை-நகூந.) எனவும், "மானதர்மயங் கியமலைமுதற்சிறுநெறி, தான்வருமென்பதடமென்றோளி, *யஞ்சினளொதுங் கியவஞெடு, பஞ்சின்மெல்லடிப்பரல்வடுக்கொளவே." (தொல்-பொருள். பக்கம்-அக.) எனவும் வரும்.

நற்றாய்தலைமகனுளங்கோள்வேலனைவினாதற்குச்செய்யுள்:— "தென்மாறை நன்னகர்மன்னவன்வாணன்செழுந்தஞ்சைசூழ், பொன்மாதிரத்துப்புலனுணர் வீர்சுரம்போய்வருவோ, னென்மானையென்மனையிற்றருமோதன்னை யீன்றநற் றாய், தன்மாநகருய்க்குமோசொல்லுவீரொன்றுதானெனக்கே." (தஞ்சை-நகூச) எனவும், "வேறுகநின்னைவினவுவேன்றெய்வத்தாற், கூறுயோகூறுங்குணத்தினை ஞய்—வேறுக, வென்மனைக்கேறக்கொணருமோவெல்வளையைத், தன்மனைக்கே யுய்க்குமோதான்." (திணைமாலைநூற்றைம்பது-கூ0) எனவும் வரும்.

இவற்றுட், டலைவிசேணகன்றமைசெவிலிதாய்க்குணர்த்தலுந், தலைவன் றம்மூர்சார்ந்தமைசாற்றலுமாகியவிரண்டுந்தெளித்தற்குரிய; தலைவிமுன்செல் வோர்தம்மொடுதன்வரல்பாங்கியர்க்குணர்த்திவிடுத்தலும், பாங்கியர் நற்றாய்க் குணர்த்தலுமாகியவிரண்டுமகிழ்ச்சிக்குரிய; நற்றாய்தலைமகனுளங்கோள்வேலனை வினாதலாகியவொன்றும்வினாதற்குரித்து; முன்செல்வோர்பாங்கியர்க்குணர்த்த லாகியவொன்றுஞ்செப்பற்குரித்து. (உக)

* அஞ்சினளஞ்சினளொதுங்கி என்பதும் பிரதிபேதம்.

௧௬௨. மடந்தையை யுடன்போய் வரைந்து மீடற்கு
மவண்மனை வரைதற்குந் தன்மனை வரைதற்கு
மிவையைந்து முரிய செவிலிகூற் றொழித்தே.

(இ-ம்.) செவிலியின்கூற்றொழித்து ஏனையவைந்து கூற்றின் பகுதி யுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) மடந்தையையுடன்போய் வரைந்துமீடற்கும் வரையாமல்மீண்ட வண்மனையின்கண்ணேயாதல் தன்மனையின்கண்ணேயாதல் வரைந்துகோடற்கு மிலக்கணத்தினுரியவாஞ் செவிலிகூற்றாயவொன்றையு மொழித்தல்லாதவைந்து மென்றவாறு. (௨௨)

௧௬௩. வினாதல் செப்பன் மேவலென் றிறைவன்
றனாதில் வரைதற் றன்மூ வகைத்தே.

(இ-ம்.) தலைமகன்மீண்டுவந்து தன்மனையின்கண்ணேவரைதலுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்.) வினாதலுஞ்செப்பலுமேவுதலுமென மூன்றுவகையினையுடைத் தாந்தலைமகன் மீண்டுவந்து தன்மனையின்கண்ணே வரைதலென்றவாறு. (௨௩)

௧௬௪. பணிமொழி நற்றாய் மணனயர் வேட்கையிற்
செவிலியை வினாதலுஞ் செவிலிக் கிகுளை
வரைந்தமை யுணர்த்தலும் வரைந்தமை செவிலி
நற்றாய்க் குணர்த்தலு முற்றாங் கிருவருந்
தலைவியில் வந்துழித் தலைவன பாங்கிக்
கியான்வரைந் தமைநுமர்க் கியம்புசென் றென்றலுந்
தானது முன்னே சாற்றிய துரைத்தலு
மென்னுமிவ் வைந்து மினனிலை வேலோன்
மன்னிய தன்மனை வரைதலின் விரியே.

(இ-ம்.) மீண்டதலைமகன் தலைமகளைத் தன்மனையின்கண்ணே வரைந்து கோடலின் விரியுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) பணிமொழிநற்றாய்மணனயர்வேட்கையிற்செவிலியை வினாதன் முதலாகப் பாங்கிதானதுமுன்னேசாற்றிய துரைத்தலீறாகச் சொல்லப்பட்ட வைந்து மீண்டதலைமகன்றலைமகளைத்தன் மனையின்கண்ணேவரைந்து கோட

லின்விரியாமென்றவாறு. அவற்றுள், பணிமொழிநற்றாய்மணனயர்வேட்கையிற் செவிலியைவினாதற்குச் செய்யுள்:— “தாமாகமேவினும்மனைக்கேவந்துதண் சிலம்பர், மாமாதினைமணஞ்செய்வதற்கேமருவார்கமலப், பூமாதுகேள்வன்புகழ்த் தஞ்சைவாணன்பொருப்பிலினி, யாமாருயிரனையாய்சொல்வமோவவ ரன்னை யர்க்கே.” (தஞ்சை-௩௱௩.) எனவும், “தம்மனைச்சிலம்புகழீஇயயரினும், மெம் மனைவதுவைநன்மணங்கழிகெனச், சொல்லினெவனோமற்றேவென்வேல், மை யறவிளங்கியகழலடிப், பொய்வல்காளையையீன்றதாய்க்கே.” (ஐங்குறுநூறு. ௩௧௧.) எனவும் வரும்.

செவிலிக்கிளைவரைந்தமையுணர்த்தற்குச்செய்யுள்:– “என்னுமியம்புவதி யாய்க்கினிநாமன்னையின்றுதம்மிற், கொன்றுருநித்திலக்கோதைநம்மாதைக் கொடிநெடுந்தேர்க், கன்றுடர்மண்கொண்டவாணன்றென்மாறையிற்காதலன்றா, நன்றுண்மணம்புணர்ந்தாரென்றுதார்நவின்றனரே.” (தஞ்சை-௩௱௪.) என வரும்.

வரைந்தமைசெவிலிநற்றாய்க்குணர்த்தற்குச் செய்யுள்:— “எனைக்கேளிரு நின்றியற்றவங்கேமணவின்பமெய்தி, யனைக்கேண்மைநண்ணியவண்ணல்பின் னுகநம்மன்னையின்றிம், மனைக்கேவருமெனவந்துசொன்னார் தஞ்சைவாணன் வெற்பிற், சுனைக்கேழ்நனைக்கழுநீர்க்குழலாய்சிலதூதரின்னே.” (தஞ்சை-௩௱௭.) எனவும், “மன்னாரன்னமரவந்தழீஇ, மகளிரன்னவாடுகொடிநுடங்கு, மரும்பதங்கொண்டபெரும்பதவேனிற், காதல்புணர்ந்தனளாகியாய்கழல், வெஞ் சினவிறல்வேற்காளையொ, டின்றுபுகுதருமெனவந்தன்றுதூதே.” (ஐங்குறுநூறு-௪௦௦.) எனவும் வரும்.

உடன்போக்கிருவருந்தலைவியில்வந்துழித் தலைவன்பாங்கிக்கியான்வரைந்தமை நுமர்க்கியம்புசென்றென்றற்குச்செய்யுள்:— “கோபுரஞ்சோலைகொடிமதின்மா டங்குலாவிமையோர், மாபுரம்போலுந்தென்மாறைவரோதயன்வாணன்வெற்பி, னீபுரந்தேதந்தமாதையங்கியாம்வரைநீர்மைசொன்ன, நூபுரஞ்சூழடியாய்சென்று கூறுநுமர்தமக்கே.” (தஞ்சை-௩௱௮.) எனவரும்.

பாங்கிதானதுமுன்னேசாற்றியதுரைத்தற்குச்செய்யுள்:—“அன்னைக்கியம் பினனுண்டகையான்முன்னறிந்துதென்னன், றன்னைப்பணிந்துகுற்றேவல்செய் யாதுசமர்க்கெழுந்த, மன்னைப்புறங்கண்டவாணன்றென்மாறைவரையிலெங்கள், பொன்னைப்புணர்ந்துநங்கேண்முன்னர்நீபொன்புனைந்ததுவே.” (தஞ்சை-௩௱௧.) எனவும், “கருவிரன்மந்திக்கல்லாவன்பார்ப், பிருவெதிரீர்ங்கழையேறிச் சிறுகோன், மதிபுடைப்பதுபோறதோன்றுநாட, வரைந்தனைநீயெனக்கேட்டியா, னுரைத்தனெனல்லெனோவஃதென்யாய்க்கே.” (ஐங்குறுநூறு-௨௮௦.) எனவும் வரும்.

இவற்றுள், நற்றாய்மணனயர்வேட்கையிற்செவிலியையினுதலாகியவொன்றும்வினுதற்குரித்து; செவிலிக்கிளைவரைந்தமையுணர்த்தலும், வரைந்தமை செவிலிநற்றாய்க்குணர்த்தலும், பாங்கிதானதுமுன்னேசாற்றியதுரைத்தலுமாகிய மூன்றுஞ்செப்பற்குரிய; தலைமகன்யான்வரைந்தமைநுமர்க்கியம்புசென்றென்றலாகியவொன்று மேவுதற்குரித்து. (உச)

கசுரு. ஆதி யொன்றொழித் தல்லன நான்கு
மாதினை யுடன்போய் வரைந்து மீடற்கு
நீதியி னுரிய நினையுங் காலை.

(இ-ம்.) தலைமகன் புணர்ந்துடன்போய்த் தலைமகளைத் தன்னூரின்கண்ணேவரைந்து கோடலுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) நற்றாய்மணனயர்வேட்கையொழித்தல்லாதநான்குந் தலைமகன் புணர்ந்துடன் போய்த்தலைமகளைத் தன்னூரின்கண்வரைந்து மீடற்குரியவா மாராயுங்காலத்தென்றவாறு. (உரு)

கசுசு. இருவரில் லிற்கு மியைந்தபன் னொன்று
மொருவகை மீண்டு வரைதலின் விரியே.

(இ-ம்.) ஒருவகை மீண்டுவரைதலின் விரியுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) தலைமகன் றம்மூர்சார்ந்தமையுணர்த்தன்முதலாகப் பாங்கிதானது முன்னேசாற்றியதுரைத்தவீறாகச் சொல்லப்பட்டன வவண்மனைவரைதற்குந்தன்மனைவரைதற்குமுரிய வினவிபதினொன்றுமுடன்போய்மீண்டு வரைந்து கோடலின் விரியாமொருபடியாகவென்றவாறு.

ஒருபடியென்றது மேற்சூத்திரங்களுட் கவர்ச்சிநீக்குதற்கெனக்கொள்க. ()

கசுஎ. போக்கறி வுறுத்தல் வரவறி வுறுத்த
னீக்க மிரக்கமொடு மீட்சி யென்றாங்
குடன்போக் கிடையீ டொருநால் வகைத்தே.

(இ-ம்.) உடன்போக்கிடையீட்டின்வகை யுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) போக்கறிவுறுத்தன்முதலாக இரக்கமொடுமீட்சியீறாக நான்கு வகையினையுடைத்தாமுடன் போக்கிடையீடென்றவாறு. (உஎ)

௧௬௮. நீங்குங் கிழத்தி பாங்கியர் தமக்குத்
தன்செல வுணாத்தி விடுத்தலுந் தலைமக
டன்செல வின்றாட் குணர்த்தி விடுத்தலு
மீன்றாட் கந்தணர் மொழிதலு மீன்றா
ளறத்தொடு நிற்றலிற் றமர்பின் சேறலைத்
தலைவி கண்டு தலைவற் குணர்த்தலுந்
தலைமக டன்னைத் தலைமகன் விடுத்தலுந்
தமருடன் செல்பவ ளவன்புற நோக்கிக்
கவன்றாற் றலுமென நுவன்றவை யாறு
முடன்போக் கிடையீட்டு விரியா கும்மே.

(இ-ம்.) உடன்போக்கிடையீட்டுவிரியுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) நீங்குங்கிழத்தி பாங்கியர்தமக்குத் தன்செலவுணர்த்திவிடுத்தன் முதலாகத் தமருடன்செல்பவளவன்புறநோக்கிக்கவன்றாற்றலீறாகச் சொல்லப் பட்டவாறு முடன்போக்கிடையீட்டுவிரியாமென்றவாறு. அவற்றுள், நீங்குங் கிழத்திபாங்கியர்தமக்குத்தன்செலவுணர்த்தி விடுத்தற்குச்செய்யுள்:—"வளவேய் மிடைந்தவழிப்படர்வீர்செங்கைவாணன் றஞ்சைத், தளவேய்நகையென்றுணை வியர்பாற்சென்றுசாற்றுமின்போர்க், களவேளனையவோர்காளைபின்போயினள் கான்பனிநீத், திளவேனில்வல்லிபெற்றுங்கெவ்வநீத்தெழிலெய்தியன்றே." (தஞ்சை-௩௬௦.) எனவும், "சேட்புலமுன்னியவசைநடையந்தணிர், நும்மொன் றிரந்தனென்மொழிவலெம்மூர், யாய்நயந்தெடுத்தவாய்நலங்கவின, வாரிடை யிறந்தனளென்மி, னேரிறைமுன்கையென்னுயத்தோர்க்கே." (ஐங்குறுநூறு. ௩௮௪.) எனவும் வரும்.

தலைமகடன்செலவின்றாட்குணர்த்திவிடுத்தற்குச்செய்யுள்:— "வாயாரநுங் களைவாழ்த்துகின்றேன்றஞ்சைவாணன்வெற்பிற், சாயாதமாதவத்தாழ்சடை யீரன்பர்தம்மொடின்றியான், சேயாறுதேர்மிசைச்செல்வதெல்லாமெங்கள்சேரி யிற்சென், றியாயாகியகொடியாட்கினிதாகவியம்புமினே." (தஞ்சை-௩௬௧.) எனவும், "கடுங்கட்காளையொடுநெடுந்தேரேறிக், கோள்வல்வேங்கைமலைபிறக் கொழிய, வேறுபல்லருஞ்சுரமிறந்தனளவளெனக், கூறுமின்வாழியோவாறு சென்மாக்கள்,நற்றோணயந்துபாராட்டி,யெற்கெடுத்திருந்தவறனில்யாய்க்கே." (ஐங்குறுநூறு-௩௮௫.) எனவும் வரும்.

நற்றாய்க்கந்தணர்மொழிதற்குச்செய்யுள்:– "மருள்கொண்டசிந்தைமலைகிழ வோய்தஞ்சைவாணன்வெற்பில், வெருள்கொண்டமென்பிணைவென்றகண்ணாள் வென்றிவேல்வலங்கை, யருள்கொண்டநெஞ்சினொரண்ணல்பின்னேயகன்றாள

கல்வா, னிருள்கொண்டகொண்டல்செல்லாவரைசூழுமிருஞ்சாரத்தே." (தஞ்சை-௩௯௨.) எனவும், "புன்கண்யானையொடுபுலிவழங்கத்த, நயந்தகாதலற்புணர்ந்து சென்றனளே, நெடுஞ்சுவர்நல்லின்மருண்ட, விடும்பையுறவிநின்கடுஞ்சூன் மகளே." (ஐங்குறுநூறு-௩௮௮.) எனவும் வரும்.

நற்றாயறத்தொடுநிற்றலிற்றமர்பின்சேறலைத்தலைவிகண்டு தலைவற்குணர்த்தற்குச்செய்யுள்:—"உலைப்படுக்கைமுரம்புசெல்லாமலுலகமங்கை, தலைத்தவிர்த்ததமிழ்த்தஞ்சைவாணன்றரியலர்போங், கவலைக்கடத்துச்சிலைத்திரைகோலிக்கடும்பகழித், துவலைப்படைக்கடரோன்றல்பொற்றேர்வங்குஞ்சூழ்கின்றதே." (தஞ்சை-௩௯௩.) எனவரும்.

தலைமகளைத்தலைமகன் விடுத்தற்குச்செய்யுள்:— "ஆறலைவெஞ்சிலைக்கானவரேலென்கையம் பொன்றிரு, னூறலைஞ்சலைநுண்ணிடையாய்நுமரேலவர்முன், சேறலைஞ்சுவல்செல்லல்லைபம்பூகச்செழும்பழுக்காய்த், தாறலைதண்டலைசூழ்தஞ்சைவாணன்றமிழ்வெற்பிலே." "(தஞ்சை-௩௯௪.) எனவும், "வினையமைபாவையினியலிநுந்தை, மனைவரையிறந்துவந்தனையாயிற், றலைநாட்கெதிரிய தண்பெயலெழிலி, யணிமிகுகானத்தன்புறப்பரந்த, கடுஞ்செம்மூதாய்கண்டுங் கொண்டு, நீவிளையாடுகசிறிதேயானே, மழகளிறுரிஞ்சியபராரைவேங்கை, மணவிடுமருங்கினிரும்புறம்பொருந்தி, யமர்வரினஞ்சேன்பெயர்க்குவ, னுமர்வரின் மறைகுவன்மாஅயோளே." (நற்றிணை-௩௬௨.) எனவும் வரும்.

தமருடன் செல்பவளவன்புறநோக்கிக் கவன்றுற்றற்குச்செய்யுள்:—"எமானெனவஞ்சமெற்காத்தவினவ்விரவிபொற்றேர், வாமானின்வாழ்வனவாகப்பன்னுட்டஞ்சைவாணனென்னுர், போமானதரிடத்தென்னையர்தோன்றப்புறங்கொடுத்த, கோமான்மணிநெடுந்தேர்நுகம்பூண்டகுரகதமே." (தஞ்சை-௩௯௫.) எனவும், "அறஞ்சாலியரோவறஞ்சாலியரோ, வறனுண்டாயினுமறஞ்சாலியரோ, வாள்வனப்புற்றவருவிக், கோள்வலென்னையைமறைத்தகுன்றே." (ஐங்குறுநூறு-௩௧௨.) எனவும் வரும்.

இவற்றுள், முனையமூன்றும் போக்கறிவுறுத்தற்குரிய; பின்னையமூன்றும் வரவறிவுறுத்தன்முதலாகிய மூன்றற்குந்தனித்தனியுரிய வெனக்கொள்க. மேற்கூறப்பட்ட கிளவிகளிதற்குமேற்பனவறிந்துகொள்க. (உஅ)

தன்னூர் வரைதலுந் தன்மனை வரைதலு
மென்னுமிவ் விரண்டொழித் தெவற்றினுங் கிழவோ
னந்தணர் சான்றோர் முன்னிட் டருங்கலந்
தந்து வரைத றகுதி யென்ப.

(இ-ம்.) வரைதலுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்,) உடன்போய்த் தன்னூரின்கண்ணே வரைதலு மீண்டுவந்து தன் மனைக்கண்ணே வரைதலுமாகிய விரண்டுமொழித்தல்லாத வெல்லாவரைவின் கண்ணுந் தலைமகனந்தணரையுஞ் சான்றோரையுமுன்னிட் டருங்கலங்கொடுத்து வரைதலுலகத்தியற்கையெனச் சொல்லுவர் புலவரென்றவாறு. அவற்றுள், அவ்வாறு வரைந்துகொண்டுழிக் கண்டோர்மகிழ்ந்து கூறியதற்குச்செய்யுள்:— "சேலாய்புனல்வையைசூழ்தஞ்சைவாணன்றென்மாறையினம், வேலானெனப் பிறர்வேட்டவர்யார்மணம்வேண்டிலின், பாலாரமளியும்பாற்கடலானதுபங்கயக் கண், மாலாயினனிவனுந்திருவாயினண்மாதுமின்றே." (தஞ்சை-௩௬௬.) எனவும், "தயற்கனூளையுந்தாமனன்னூனையு, மியற்றினூர்மணமேத்தருந்தன்மையார், மயற்கையில்லவர்மன்றலின்மன்னிய, வியற்கையன்புடையாரியைந்தார்களே." (சீவக. பதுமையா. ௧௮௪.) எனவும் வரும். (௨௧)

மூன்றாவது வரைவியல் முற்றும்.

# நான்காவது கற்பியல்.

௨௦௦ பொற்பமை சிறப்பிற் கற்பெனப் படுவது
மகிழ்வு மூடலு மூட லுணர்த்தலும்
பிரிவும் பிறவு மருவிய தாகும்.

இவ்வோத்து என்ன பெயர்த்தோவெனின், கற்புணர்த்தினமையிற் கற்பியலென்னும் பெயர்த்து.

(இ-ம்.) கற்பென்னுங்கைகோளதிலக்கணமுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்,) பொலிவமைந்த சிறப்பினையுடைய கற்பென்றுசொல்லப்படுவது உள்ளமகிழ்ச்சியுமூடலு மூடலுணர்த்தலும் பிரிவும் பிறவும் பொருந்தியதாமென்றவாறு.

பிறவென்றதனூற்பிரிந்துழிவரும்விகற்பமெல்லாங்கொள்ளப்படும். (௧)

௨௦௧. இல்வாழ்க் கையே பரத்தையிற் பிரிவே
யோதற் பிரிவே காவற் பிரிவே
தூதிற் பிரிவே துணைவயிற் பிரிவே,

பொருள்வயிற் பிரிவெனப் பொருந்திய வேழும்
வளமலி கற்பின் கிளவித் தொகையே.

(இ-ம்.) கற்பின்கட் கிளவித்தொகையுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) இல்வாழ்க்கை முதலாகப் பொருள்வயிற் பிரிதலீறாகச் சொல்லப் பட்ட வேழுங் கற்பின்கிளவித்தொகை யென்றவாறு. (உ)

உ0௨. கிழவோன் மகிழ்ச்சி கிழத்தி மகிழ்ச்சி
பாங்கி மகிழ்ச்சி செவிலி மகிழ்ச்சியென்
றீங்கு நால்வகைத் தில்வாழ்க் கையே.

(இ-ம்.) இல்வாழ்க்கையின் வகையுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) கிழவோன்மகிழ்ச்சி முதலாகச் செவிலிமகிழ்ச்சியீறாகச் சொல் லப்பட்ட நான்குவகையினையுடைத்தா மில்வாழ்க்கை யென்றவாறு. (௩)

உ0௩. தலைவன் றலைவிமுன் பாங்கியைப் புகழ்தலுந்
தலைவனைப் பாங்கி வாழ்த்தலுந் தலைவியை
வரையுநா ளளவும் வருந்தா திருந்தமை
யுரையா யென்றலும் பெருமக ளுரைத்தலுந்
தலைவனைப் பாங்கி வரையு நாளளவு
நிலைபெற வாற்றிய நிலைமை வினாதலு
மன்றல் மனைவரு செவிலிக் கிருவர்
மன்புற வுணர்த்தலும் வாழ்க்கைநன் றறைதலு
மன்பினைச் சென்று வந்த செவிலி
பொற்றொடி கற்பிய னற்றாய்க் குணர்த்தலு
நன்பினை வாழ்க்கைத் தன்மை யுணர்த்தலு
மன்னவர் காத லறிவித் தலுமெனு
மின்னவை பத்து மில்வாழ்க்கை விரியே.

(இ-ம்.) இல்வாழ்க்கையின் விரியுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) தலைவன் றலைவிமுன்பாங்கியைப் புகழ்தன் முதலாக 'வன்னவர் காதலறிவித்த லீறாகச் சொல்லப்பட்டபத்து மில்வாழ்க்கை விரியா மென்றவாறு. அவற்றுள், தலைவன் றலைவிமுன் பாங்கியைப்புகழ்தற்குச் செய்யுள்:—"நின்மே லடுத்தபசலையின்காரணநின் றுணைவி, யென்மேலெடுத்தவியல்பின்னேபெற்ற

தேழுலகுந், தன்மேலடுத்தபுகழ்த்தஞ்சைவாணன்றமிழ்க்கிரிதன், பொன்மேலடுத்தனபோற்சுணங்கினின்றபுணர்முலையே." (தஞ்சை-௧௬௭.) எனவும், "அதிரிசையருவிப்*பெருவரைத்தொடுத்த,பஃறேனிறாலல்குநர்க்குதவு, நுந்தைநன்னாட்டுவெந்திறன்முருகென, நின்னோய்க்கியற்றியவெறிநின்றோழி, யென்வயினெற்கலிற்போலும்பன்னாள், வருந்தியவருத்தந்தீரநின், றிருந்திழைப்பணைத்தோள்புணர்ந்துவந்ததுவே." (தொல். பொருள். பக்கம்-௧௯௨.) எனவும் வரும்.

தலைவனைப் பாங்கிவாழ்த்தற்குச் செய்யுள்:—"தெரியாடகவிதழ்ப்பூங்கொன்றைவேணியுந்தேவியும்போற், பிரியாதுறையப்பெறுகுதிராற்பிறைமானுநெற்றிப், புரியாழ்நிகர்மொழிப்பூவையுநீயும்புணர்ந்தபல்கேழ், வரியார்சிலையண்ணலேதஞ்சைவாணன்றென்மாறையிலே." (தஞ்சை-௧௬௮.) எனவும், "எக்கர்ஞாழற்பூவினன்ன, சுணங்குவளரிளமுலைமடந்தைக், கணங்குவளர்த்தகறல்வல்லாதீமே." (ஐங்குறுநூறு-௧௪௧.) எனவும் வரும்.

பாங்கி, தலைவியை வரையு நாளளவும் வருந்தாதிருந்தமை வினாதற்குச் செய்யுள்:—"கோங்கநன்மாமுகைக்கொங்கைநல்லாய்மணங்கூடுமெல்லை, யாங்ஙனமாற்றியிருந்தனைநீயிபமாசயிலந், தாங்கனமாறத்தலம்புனை வாணன் றமிழ்த் தஞ்சைவாழ், பூங்கனமார்குழலாரலர்மாலைப்பொறைசுமந்தே". (தஞ்சை-௧௬௯) எனவரும்.

தலைமகள்வருந்தாதிருந்ததற்குக்காரணங்கூறற்குச்செய்யுள்:—"மைதோய்ந்தலர்ந்தமலர்த்தடஞ்சூழ்தஞ்சைவாணனென்னார், மெய்தோய்ந்தசெந்நிற வேல்விழியாய்துயர்வெள்ளம்வெற்பர், கைதோய்ந்தளிப்பவசோகத்தவாய்நிறங்கால்வனவாய், நெய்தோய்ந்தனதழையேபுணையாக்கொண்டுநீந்தினனே." (தஞ்சை-௧௭௦ எனவும், "மட்டம் பெய்தமணிக்கலத்தன்ன, விட்டுவாய்ச்சுனையபகுவாய்த்தேரை, தட்டைப்பறையிற்கறங்குநாடன், றொல்லைத்திங்கணெடுவெண்ணிலவின், மணந்தனன்மன்னெந்தோளே, யின்றுமுல்லைமுகைநாறும்மே". குறுந்தொகை-௧௯௩.) எனவும் வரும்.

பாங்கி, தலைவனை வரையு நாளளவும் நிலைபெறவாற்றிய நிலைமை வினாதற்குச் செய்யுள்:—"அயிரைபரந்தவந்தண்பழனத், தேந்தெழின்மலர்ந்ததூம்புடைத்திரள்கா, லாம்பல்குறுநர்நீர்வேட்டாங்கிவ, ளிடைமுலைக்கிடந்துநடுங்கலானீர், தொழுதுகாண்பிறையிற்றோன்றியாநமக், கரியமாகியகாலைப், பெரியநோன்றனீர்நோகோயானே". (குறுந்தொகை-௧௭௮.) எனவரும்.

மன்றல்மனைவருசெவிலிக்கிளையன் புறவுணர்த்தற்குச்செய்யுள்:—"வளங்கொண்டதஞ்சைவரோதயன்வாணன்றென்மாறையன்னா, ளிளங்கொங்கை

* அருவரைத்தொடுத்த. பி—ம்.

கொண்டுழுதீரங்கொண்மார்பின்முத்தேறபலித்தி, விளங்கொண்பிறைநுதல்வேர்தந்துபோகம் விளைத்தன்புசேர், உளங்கொண்டருத்துதலாலன்னையூரனுவப்புறமே.” (தஞ்சை-௩௭௨.) என வரும்.

பாங்கி யில்வாழ்க்கை நன்றென்று செவிலிக்குணர்த்தற்குச் செய்யுள்:— “சினவேய்களியுங்களிற்றண்ணல்வாணன்றென்மாறையினம், மனவேயகலல்குல்வல்லியன்னாண்மறையோர்முதலாஞ், சனவெதனைகெடத்தானங்களீதலிற்சாலவுநன், றெனவேநடக்கின்றதாலன்னைநாடொறுமில்லறமே.” (தஞ்சை-௩௭௩.) எனவரும்.

மணமனைச்சென்றுவந்த செவிலி, தலைமகள்கற்பு நற்றாய்க்குணர்த்தற்குச் செய்யுள்:- “ஒன்றேநமக்குவந்தெய்தியநன்மையுடன்றெதிர்ந்தார், வன்றோலமர்வென்றவாட்படைவாணன்றென்மாறையில்வாழ், நின்றேகைகற்பினிலைமையெண்ணுதெதிர்நின்றுவெந்நிட், டன்றேவடக்கிருந்தாண்மடப்பாவையருந்ததியே.” (தஞ்சை-௩௭௪.) எனவரும்.

செவிலிநற்றாய்க்குத் தலைமகணன்மனைவாழ்க்கைத் தன்மையுணர்த்தற்குச் செய்யுள்:—“விண்மேலமரர்விரும்பமராவதிவெள்ளமுந்நீர், மண்மேலடைந்தனவாழ்க்கையதானதுவாணன்றஞ்சை, பண்மேலளிமுரல்குங்குமத்தோளவர்பங்க்யம்போற், கண்மேலருள்பெற்றுவாழ்மடமாதர்கடிமனையே.” (தஞ்சை-௩௭௫.) எனவும், “முளிதயிர்பிசைந்தகாந்தண்மெல்விரல், கழுவுறுகலிங்கங்கழாஅதுடீஇக்குவளையுண்கண்குய்ப்புகைகமழத், தான்றுழந்தட்டதீம்புளிப்பாக, ரினிதெனக்கணவனுண்டலி, னுண்ணிதின்மகிழ்ந்தன்றொண்ணுதன்முகனே.” (குறுந்தொகை-௧௬௭.) எனவும் வரும்.

செவிலிநற்றாய்க்கிருவர்காதலுமறிவித்தற்குச்செய்யுள்:-“நனையகத்தல்கியநாண்மலரோதிநயந்துறையும், மனையகத்தல்லிடைவைகுதலாற்றஞ்சைவாணனென்னார், வினையகத்தல்குதல்செல்லுவரேனுமவ்வேந்தர்பொற்றேர், முனையகத்தல்கல்செல்லாதொருநாளுமுகிழ்நகையே.” (தஞ்சை-௩௭௬.) எனவும், “கானங்கோழிக்கவர்குரற்சேவ, லொண்பொறியெருத்திற்றண்சிதருறைப்ப, புதனீர்வாரும்பூநாறுபுறவிற், சீறூரோளேமடந்தைவேறூர், வேந்துவிடுதொழிலொடுசெலினுஞ், *சேந்துவாரலறியாதுசெம்மறேரே.” (குறுந்தொகை-௨௪௨.) எனவும் வரும்.

இவற்றுட்டலைவன்றலைவிமுன் பாங்கியைப்புகழ்தலாகியவொன்றும், கிழவோன்மகிழ்ச்சிக்குரித்து. தலைவனைப்பாங்கி வாழ்த்தன்முதலாகச் செவிலிக்குவாழ்க்கை நன்றென்றறைதலீறாகச் சொல்லப்பட்டவாறனுட் பெருமகளுரைத்தலாகிய வொன்றுங்கிழத்திமகிழ்ச்சிக்குரித்து. அல்லாதவைந்தும் பாங்கிமகிழ்ச்

* சேர்ந்து. பி - ம்.

சிக்குரிய. செவிலிநற்றாய்க்குத்தலைமகள்கற்பியலுணர்த்தன்முதலாகியமூன்றுஞ் செவிலிமகிழ்ச்சிக்குரியவெனக் கொள்க. (௪)

௨0௪. வாயில் வேண்டல் வாயின் மறுத்தல்
வாயிலோர் வித்தல் வாயிலோர் தலைவென்
றாய பரத்தையி னகற்சிநால் வகைத்தே.

(இ-ம்.) பரத்தையிற்பிரிவின் வகையுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) வாயில்வேண்டன்முதலாக வாயிலோர்தலைீறாக நான்குவகையினையுடைத்தாம் பரத்தையிற் பிரிவென்றவாறு. (௫)

௨0௫. காதலன் பிரிவுழிக் கண்டோர் புலவிக்
கேதுவி தாமவ் விறைவிக் கொன்றலுந்
தனித்துழி யிறைவி துனித்தழு திரங்கலு
மீங்கிது வென்னெனப் பாங்கி வினாதலு
மிறைமகன் புறத்தொழுக் கிறைமக ளுணர்த்தலுந்
தலைவியைப் பாங்கி கழறலுந் தலைவி
செவ்வணி யணிந்து சேடியை விடுப்புழி
யவ்வணி யுழையர்கண் டழுங்கிக் கூறலும்
பரத்தையர் கண்டு பழித்தலும் பரத்தைய
ருலகிய னோக்கி விடுத்தலிற் றலைவன்
வரவுகண் டுவந்து வாயில்கண் மொழிதலும்
வரவுணர் பாங்கி யரிவைக் குணர்த்தலும்
முதிரா மென்முலை யெதிர்கொண்டு பணிதலும்
புணர்ச்சியின் மகிழ்வுமென் றாங்கப் பன்னொன்று
முணர்த்த வுணரு மூடற் குரிய.

(இ-ம்.) பரத்தையிற் பிரிவிலுணர்த்தவுணருமூடற்குரிய விரியுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்.) காதலன்பிரிவுழிக் கண்டோர் புலவிக்கேது விதாமவ்விறைவிக் கென்றன் முதலாகப்புணர்ச்சியின் மகிழ்தலீறாகச் சொல்லப்பட்ட பதினொன்று முணர்த்தவுணரு மூடற்குரியவா மென்றவாறு:—அவற்றுள், காதலன்பிரிவுழிக் கண்டோர் புலவிக்கேதுவிதாமவ் விறைவிக்கென்றற்குச் செய்யுள்:— "மாறையர் காவலன்வாணன்றென் றஞ்சையில்வாணுதற்கிவ், வாறயர்காரணமாகு மன்றே ற

தொல்லையயானையுடன், சாறயர்வி தியரிப்பறைநயாரப்பத்தழுங்குழத், குறையர் குறைமிகள்வான்வயலூரனைச்சூழ்ந்தனவே." (தஞ்சை-ந.எஎ.) எனவரும்.

தனித்தழி யிறைவி தனித்தழு திரங்கற்குச் செய்யுள்:—"வன்போதணி தொங்கல்வாணன்றென்மாறைமகிழ்நர்நம்மே, லன்போடு நன்னெஞ்ச றிவறை போகவழலுன்வெந்த, பொன்போனிறங்கொண்டிரவுங்கண்ணீரும்புலர வதுபார்த், தென்போலெவரிங்ஙனேயிமையாமலிருப்பவரே." (தஞ்சை-ந.எஅ.) எனவும், "சிறைபனியுடைந்தசேயரிமழைக்கட் பொறையருநோயொடு புலம் பலைக் கலங்கிப், பிறருங்கேட்குநருளர்கொல்லுரைசிறந், தாதைதூற்றுங்கூதிர் யாமத், தானுளம்புலம்புதோறுளம்பு, நாநவில்கொடுமணிநல்கூர்குரலே." (குறுந் தொகை- அசு.) எனவும் வரும்.

ஈங்கிது வென்னெனப்பாங்கி வினுதற்குச் செய்யுள்:—"எம்மாதிரமும்புர வலர்தேடியிரந்துழல்வோர், தம்மாதுயரந்தணித்தருள் வாணன்றமிழ்த் தஞ்சை வாழ், நம்மாவியன்னவர்நாடொறுநாடொறுநல்கவுநீ, விம்மாவருந்துவதென்பிரிந் தாரின்விளங்கிழையே." (தஞ்சை-ந.எக.) எனவரும்.

இறைமகன்புறத்தொழுக் கிறைமகளுணர்த்தற்குச்செய்யுள்:—"தாராகநல் கினர்காரிகையாய்தஞ்சைவாணன்றன்னைச், சேராதவரென்னத்தீவினையேனை யச்செங்கண்வன்கட், காராகழனிக்கரும்பினஞ்சாயக்கதழ்ந்துசெந்நெல், லாராத யலிற்பஞ்சாயாருமூராயலவர்க்கே." (தஞ்சை:ந.அ0.) எனவும், "என்கேட்டியே மூயிருவிலத்தும்வரனத்து, மூன்கேட்டுங்கண்டுமுடிவறியேன் பின்தேட், டணி யிகவாநிற்கவவனணங்குமாதர், பணியிகவான்சாலப்பணிந்து." (திணைமாலைநூற் றைம்பது-நந.ஓ.) எனவும் வரும்,

தலைவியைப்பாங்கிகழறற்குச்செய்யுள்:—"புனையலங்காரங்கற்பியல்போற் றியும்போற்றருஞ்சீர்,மனையறம்பாவித்தும்வாழ்வதல்லாற் றஞ்சைவாணனன்று, டனையவண்டார்குழலாரணங்கேமக்கன்பரிந்நா, ளினையவென்றூர்வயில்வாவுரை யாடவியல்பல்லவே." (தஞ்சை-ந.அக.) எனவும், "இது மற்றெவனோதோழி துனியிடை, யின்னரென்னுமின்னுக்கிளவி, யிருமருப்பெருமையீன்றணிக்காரா, வுழவன்யாத்தகுழவியினகலாது, பாஅற்பைம்பயிராருமூரன், றிருமனைப்பலக டம்பூண்ட, பெருமுதுபெண்டிரேமாகியநமக்கே. (குறுந்தொகை க-கஅக.) எனவும் வரும்.

தலைவி செவ்வணியணிந்து சேடியைவிடப்புழியவ்வணியுழையர்கண்டமுன் னிக்கூறற்குச் செய்யுள்:—"வேளாண்மரபுவிளக்கியவாணன்மின்னூர்கழல்சூழ், தாளான்வளங்கெழுதஞ்சையன்னீர்சங்கந்தாநன்னீர்த், தோனாமணியன்ன தொல்குலவோடையிற்றோன்றியுந், வானாவலர்தொடுப்பார்க்கெங்ஙனே வந்து

வாயததுவே." (தஞ்சை-௩அ௨.) எனவும், "அரத்தமுடி இயணிபழுப்புப்பூசிச். சிரத்தையாற்செங்கழுநீர்சூடிப்-பரத்தை, நினைநோக்கிக்கூறினுஞ் மொழிய லென்று, மனைநோக்கிமாணவிடும்." (திணைமாலைநூற்றைம்பது-கசச.) எனவும் வரும்.

பரத்தையர்கண்டு பழித்தற்குச் செய்யுள்:—"படியொன்றுசாலியனையவர் சேரிப்படர்பவளக், கொடியொன்றுநீலமலர்ந்ததுகாட்டக்கொடியவெம்போர், வடியொன்றுகூரிலை வேல்வல்லவாணன்றென் மாறையிற்பொற், றொடியொன்றுதோண்மடவார்சேரிவாய்வந்துதோன்றியதே." (தஞ்சை-கஅ௩.) எனவரும்.

பரத்தை யுலகியனோக்கி விடுத்தலிற் றலைவன்வரவுகண் டுவந்துவாயில்கண் மொழிதற்குச் செய்யுள்:—"வாருந்துபச்சிளநீர்முலையார்மதன்வாணன்றஞ்சை, யாருந்தொழத்தகுமெம்பெருமாட்டிதன்னேவலினாற், சேரும்பரத்தையர்சேரியிலேசென்றசேடியைக்கண், ரோருந்திரைப்புனலூரன்வந்தானின்றுலகியற்கே." (தஞ்சை-௩அச.) எனவரும்.

தலைமகன்வரவுணர்பாங்கி, யரிவைக்குணர்த்தற்குச்செய்யுள்:-"தன்னாவளவயல்சூழ்தஞ்சைவாணன்றரியலர்போ, லுள்ளாதுனைப்பண்டகன்றனராயினுமுள்ளியிப்போ, தென்னாதுவந்துன்கடையினின்றார்நம்மிறைவர்குற்றங், கொள்ளாதெதிர்கொள்வதேகுணமாவதுகோமளமே." (தஞ்சை-௩அ௫.) எனவரும்.

தலைவனைத்தலைவியெதிர்கொண்டு பணிதற்குச்செய்யுள்:—"மருவிற்பெருநலமன்னுவதாந்தஞ்சைவாணன்வெற்ப, ரொருவிற் பசலையுருக்குவதாநமக்கூடலெவ்வா, திருவிற்புருவவிளங்கொடியேயெய்துமெய்தலில்லாத், திருவிற்புனைநறுந்தார்வரைமார்பர்திருமுனின்றே." (தஞ்சை-௩அசு.) எனவரும்.

புணர்ச்சியின் மகிழ்தற்குச்செய்யுள்:—"மன்னவர்காமநெடுங்கடல்வாணன்றென்மாறையன்னாள், றொன்னலம்வார்முலைமத்தந்தழீஇத்தடந்தோளிணையாம் பன்னகநாணிற்கடைந்திதழ்வார்திரைப்பட்டநன்னீ, ரின்னமிழ்தார்ந்திமையோரமையாவின்பமெய்தினரே." (தஞ்சை ௩அ௭.) எனவரும். (௯)

௨0௯. வெள்ளணி யணிந்து விடுத்துழிப் புள்ளணி
[1] மலைவே லண்ணல் வாயில் வேண்டலுந்
தலைவிநெய் யாடிய திருவை சாற்றலுந்
தலைவன் றன்மனத் துவகை [2] கூறலுந்
தலைவிக் கவன்வரல் பாங்கி சாற்றலுந்
தலைவி புணர்ந்து தலைவனொடு புலத்தலும்

(1) மாலை, பி - ம். (2) கூர்தல், பி - ம்.

பாணன் முதலாப் பாங்கி யீறாப்
பேணிய வாயில் பெரியோன் விடுத்துழி
மறுத்தலும் விருந்தொடு வந்துழிப் பொறுத்தல்கண்
டிறையோன் மகிழ்தலு மின்றமகள் விருந்துண்
டொளித்த வூடல் வெளிப்பட நோக்கிச்
சீறே லென்றவள் சீறடி தொழுதலுமிஃ
தெங்கையர் காணி னன்றன் றென்றலு
மங்கவர் யாரையு மறியே னென்றலுங்
காமக் கிழத்தியைக் கண்டமை பகர்தலுந்
தாமக் குழலியைப் பாங்கி தணித்தலுந்
தணியா ளாகத் தலைமக னூடலு
மணிவளைப் பாங்கி யன்பிலை கொடியையென்
றிணர்த்தார் மார்பனை யிகழ்தலும் பிறவு
முணர்த்த வுணரா வூடற் குரிய.

(இ-ம்.) உணர்த்தவுணராவூடற்குரியகிளவிகளை யுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) வெள்ளணியணிந்து விடுத்துழித் தலைவன் வாயில்வேண்டன் முதலாகப் பாங்கி தலைவனை யன்பிலை கொடியையென்றிகழ்தலீறாகச் சொல்லப் பட்டனவும், பிறவுமுணர்த்தவுணராவூடற்குரியவாமென்றவாறு. அவற்றுள்,

வெள்ளணியணிந்துவிடுத்துழிப் புள்ளணிமாலைவேலண்ணல் வாயில்வேண் டற்குச் செய்யுள்:—"என்பாற்குறையையினைந்துமறுதெதிர்கொள்ளவல்லே, தன்பாற்புலவிதணிசென் றுநீதஞ்சைவாணன்வைய, மன்பாற்பாவும்புகழுடையா னருளேயனையா, யுன்பாற்புலவியுறுள்வண்ணவார்குழலொண்ணுதலே." (தஞ்சை-நஅஅ.) எனவரும்.

தலைவிநெய்யாடிய திருவைசாற்றற்குச் செய்யுள்:—"மலர்புரையோர்கொண்ட வாட்கணெங்கோமன்கைவாணன் றஞ்சைப், பலர்புகழ்பாலற்பயந்து நெய்யாடி னள்பாங்கெவர்க்கு, மலர்புரைநீடொளியாடியுட்பாவையன்றூட்குளநீர், புலர்புன லூரவென்றேதிருவுள்ளமிப்போதுனக்கே." (தஞ்சை-நஅக.)எனவும், "குவளை மேய்ந்தகுறுந்தாளெருமை, குடநிறைதீம்பால்படூஉமூர, புதல்வனையீன்றிவ ணெய்யாடினளே." (தொல்-பொருள்-பக்கம்-நஇக.) எனவும் வரும்,

தலைவன் றன்மனத்துவகை கூறற்குச்செய்யுள்:—"மையணிவேல்விழிவா ணுதல்கூர்ந்தவாணன் றஞ்சைக், கொய்யணிநாண்மலர்க்கொம்பான்றன்குழ

விப்பயந்த, நெய்யணிமேனியிலையவிழ்பூண்டகிலையறிந்தே, கையணிவால்வளையைக்கண்டநாளினுங்காதன்மையே." (தஞ்சை-௩௧௦.) எனவரும்.

தலைவிக் கவன்வரல் பாங்கிசாற்றற்குச் செய்யுள்:— "ஏரார்புதல்வன்பிறந்தனன்வாழியவென்னுமுன்னே, வாரார்வளமனைவந்துநின்றூர்கங்குல் வாணன்றஞ்சை, நீராவிநீலநெடுங்கண்மின்னெனின்னைநீப்பதல்லாற், றேராதொழிகுவரோபெரியோர்தஞ்சிறுவனையே." (தஞ்சை-௩௧௧.) எனவும், "நெடுநாவொண்மணிகடிமனையிரட்டக், குரையிலைபோகியவிரவுமணற்பந்தர்ப், பெரும்பாண்காவல்பூண்டெனவொருசார், திருந்திழைமகளிர்விரிச்சிநிற்ப, வெறியுறவிரிந்தவறுவைமெல்லணைப், புனிறுநாறுசெவ்வியொடுபுதல்வன்றுஞ்ச, வையவியணிந்தநெய்யாட்டீரணிப், பசிநோய்கூர்ந்தமென்மையாக்கைச், சீர்கெழுமடந்தையீரிமைபொருந்த, நள்ளெனக்கங்குற்கள்வன்போல, வகன்றுறையூரனும்வந்தனன், சிறந்தோன்பெயரன்பிறந்தமாறே." (நற்றிணை-௪௦.) எனவும் வரும். (இது, முன்னிலைப் புறமொழி.)

தலைவியுணர்ந்து தலைவனொடு புலத்தற்குச் செய்யுள்:— "வயங்கேழுலகும்புரக்கின்றவாணன்றென்மாறையன்ன, நயங்கேழ்பெருவளநல்குநல்லூரநயந்துநண்ணி, முயங்கேல்சிறுவற்பயந்தவென்மேனியின்முத்துவடந், தயங்கோரகமுழுதும்பழுதாமதுதானினக்கே." (தஞ்சை-௩௧௨.) எனவும், "கரும்புநடுபாத்தியிற்கலித்தவாம்பல், சுரும்புபசிகளையும்பெரும்புனலூர, புதல்வனையீன்றவென்மேனி, முயங்கன்மோதெய்யநின்மார்புசிதைப்பதுவே." (ஐங்குறுநூறு-௬௫.) எனவும் வரும்.

பாணன்முதலாகப் பாங்கியீறுகப் பேணியவாயில்கள் பெரியோன்விடுத்துழித் தலைமகள் பாணனை மறுத்தற்குச் செய்யுள்:— "தலையாகியதன்மையூரற்குவாணன்றமிழ்த் தஞ்சைசூழ், மலையாகியமதில்வையையைநன்னாட்டெங்கைமான்படுக்கும், கலையாதநின்னிசைக்கண்ணிகொண்டேதிரிகன்றுதின்னிப், புலையாகடக்கவெம்மிற்போகபோகபுறங்கடையே." (தஞ்சை-௩௧௩.) எனவும், "புலைமகனாதலிற்பொய்ந்நின்வாய்மொழி, நில்லல்பாணசெல்லினிப்பரியல், பகலெஞ்சேரிகாணி, னகல்வயலூரனுணவும்பெறுமே." (தொல்-பொருள்-பக்-௩௧௭.) எனவும் வரும்.

வாயின்மறுக்கப்பட்டபாணன் கூறற்குச் செய்யுள்:— "நினக்கேதகுநின்னெடும்புனலூரனுநீயுமவன், றனக்கேதகுவைதமிழ்த்தஞ்சைவாணன்றடங்கிரிசூழ், புனக்கேகயமன்னநின்னடிபோற்றிப்புகன்றகன்று, மெனக்கேதகுமிகையாலெம்பிராட்டியெறிந்தகல்லே." (தஞ்சை-௩௧௪.) எனவரும்.

தலைமகள் விறலிவாயின் மறுத்தற்குச் செய்யுள்:— "வண்புனலூர்வையைசூழ்தஞ்சைவாணனைவாழ்த்தலர்போற், கண்புனலூருமென்காதல்கண்டேநின்

கடைத்தலைக்கே, தண்புனலூரன்வந்தானென்றுசாற்றினைதானமுறப், பண்புனலூர்களெல்லாம்பாடியேற்றண்ணும்பாண்மகளே." (தஞ்சை-நூகரு.) எனவும், "விளக்கினன்னசுடர்விடுதாமரை, களிற்றுச்செவியன்னபாசடைதயங்க, வுண்டுறைமகளிரிரியக்குண்டுநீர், வாளைபிறழுமூரற்குநாளை, மகட்கொடையெதிர்ந்தமடங்கெழுபெண்டே, தொலைந்தநாவினுலைந்தகுறுமொழி, யுடம்பட்டோராய்த் தாயரோடழிவுடன், சொல்லலைகொல்லோநீயேவல்லைக், களிறுபெறுவல்சிப்பாணன்கையதை, வள்ளுயிர்த்தண்ணுமைபோல, வுள்யாதுமில்லதோர்போர்வையஞ்சொல்லே." நற்றிணை-நூசு௦.) எனவும் வரும். பிறவு மன்ன.

விருந்தொடுவந்துழித் தலைமகள்பொறுத்தல்கண்டு தலைமகன் மகிழ்தற்குச் செய்யுள்:-"புரவேயெதிர்ந்தநமக்குவிருந்தின்றுபோலவென்றும், வரவேபுணர்ந்தநம்மாதவம்வாழியவாணன் றஞ்சைக், குரவேய்கருமுகிற்கொந்தளபாரங்குரும்பைகொங்கை, யரவேய்நுடங்கிடையாள்விழியூர்சிவப்பாற்றுதற்கே." (தஞ்சை-நூகசு.) எனவும், "தடமருப்பெருமைமடநடைக்குழவி, தூண்டொறும்யாத்தகாண்டகுநல்லிற், கொடுங்குழைபெய்தசெழுஞ்செய்பேழைச், சிறுதாழ்செறித்தமெல்விரல்சேப்ப, வாளையீர்ந்தடிவல்லிதின்வகைஇப், புகையுண்டமர்த்தகண்ணடைபெறப், பிறைநுதற்பொறித்தசிறுநுண்பல்வியர், ரந்துகிற்றலையிற்றுடையினணப்புலந், தட்டிலோளேயம்மாவரிவை, யெமக்கேவருகதில்விருந்தேசிவப்பான்று, சிறியமுள்ளெயிறுதோன்ற, முறுவல்கொண்டமுகங்காண்கம்மே." (நற்றிணை-கஉ௦.) எனவும் வரும்.

தலைமகன் விருந்துகண்டொளித்தவூடல் பள்ளியிடத்துவெளிப்படத் தலைமகன் சீறேலென்றவள்சீறடிதொழற்குச் செய்யுள்:—'தெரியோர்பொருட்டன்றுதேர்வின்றியூடல்செயிர்த்தவர்க்குக், கரியோர்தெளித்தென்னகாரணங்காட்டுவர்காணுண்டுதேன், வரியோர்தொடைப்புயன்வாணன்றென்மாறைமலர்த்திருவே, பெரியோர்பொறுப்பரன்றேசிறியோர்கள்பிழைத்தனவே." (தஞ்சை-நூகஎ.) எனவரும்.

இஃதெங்கையர்காணினன்றன்றென்றற்குச் செய்யுள்:—"எண்போனெஞ்சமுநீருமென்பாதமிறைஞ்சுதலுங், கண்போலுமெங்கையர்காணினன்றேகயன்மாதிரத்துத், திண்போதகந்தொறுந்திட்டியவாணன்செழுந்தஞ்சைசூழ், வண்போதளவியநீர்வையைநாட்டுறைமன்னவரே." (தஞ்சை-நூகஅ.) எனவரும்.

அங்கவர்யாரையு மறியேனென்றற்குச் செய்யுள்:-"பாவைநீபுலவியினீடல் பாவியேற், காவியொன்றிரண்டுடம்பல்லதூற்றுநீர்க், கூவல்வாய்வெண்மணல்குறுகச்செல்லுமே, மேவிப்பூங்கங்கையுள்விளைந்தவன்னமே." (சீவகசிந்தா-குணமாலை-கசுஎ.) எனவரும்.

தலைமகள் காமக்கிழத்தியைக்கண்டமை பகர்தற்குச்செய்யுள்:— "போயே தெருவிற்றனிவிளையாடும்புதல்வற்புல்ல, நீயேதிலையல்லைநின்மகனேயிவனீயும வன், றாயேவருகெனச்சேயன்னவாணன்றமிழ்த்தஞ்சைமான், எயேயெனநிற்ற லானறிந்தேனவளெங்கையென்றே." (தஞ்சை-௪00.) எனவும், "நாயுடை முதுநீர்க்கலித்ததாமரைத், தாதினல்லி* யவிரிதழ்புரைய, மாசிலங்கைமணிமரு ளவ்வாய், நாவொடுநவிலாநகைபடுதீஞ்சொல், யாவரும்விழையும்பொலந்தொடிப் புதல்வனைத், தேர்வழங்குதெருவிற்றமியோற்கண்டே, கூரெயிற்றரிவைகுறுகி யாருங், காணுநரின்மையிற்சேர்த்தனள்பேணிப், பொலங்கலஞ்சுமந்தபூண்டாங் கிளமுலை, வருகமாளவென்னுயிரெனப்பெரிதுவந்து, கொண்டனளின்றோட் கண்டுநிலைச்செல்லேன், மாசில்குறுமகளெவன்பேதுற்றனை, நீயுந்தாயையிவற் கெனயான்றற், கரையவந்துவிரைவனள்கவைஇக், களவுடம்படுநரிற்கவிழ்ந்து நிலங்கிளையா, நாணினள்்ிறைஞ்சிணிலைகண்டியானும், பேணினேனல்லனோமகிழ்ந வானத், தணங்கருங்கடவுளன்னோளின், மகன்றாயாதல்புரைவதாங்கெனவே." (அகநானூறு-௧௬.) எனவும் வரும்.

தலைமகளைப் பாங்கி புலவிதணித்தற்குச் செய்யுள்:— "மாவாரணமன்னவா ணன்றென்மாறைநம்மன்னர்நின்னைப், பாவாய்பணியவும்பார்க்கிலைநீயிடப்பாக மங்கை, தாவாதசங்கரன்கங்கைதன்கொங்கைதழீஇயிதழ்ப், பூவார்சடைமுடி மேல்வைத்தபோதும்பொறுத்தனளே." (தஞ்சை-௪0௧.) எனவும், "உப்பமைந் தற்றாற்புலவியதுசிறிது, மிக்கற்றானீளவிடல்." (திருக்-௧௩0௨.) எனவும்வரும்.

தலைமகள் புலவிதணியாளாகத் தலைமகனூடற்குச் செய்யுள்:— "தழங்கார் புனல்வையைசூழ்தஞ்சைவாணன்றனதருள்போற், பழங்காதலென்னவென் னைபதனெஞ்சேயிவள்பண்டுபைம்பொற், கழங்காடிடமுங்கடிமலர்க்காவுங்கடந்து புள்ளும், வழங்காவழிநமக்கோர்துணையாய்வந்தமானல்லளே." (தஞ்சை-௪0௨.) எனவும், "எவ்வியிழந்தவறுமையாழ்ப்பாணர், பூவில்வறுந்தலைபோலப்புல்லென், றினைமதிவாழிநெஞ்சேமனைமரத், தெல்லுறுமௌவனாறும், பல்லிருங்கூந்தல் யாவளோநமக்கே." (தொல்-பொருள்-பக்-௩௫௮.) எனவும் வரும்.

பாங்கியன்பிலை கொடியையென் றிணர்த்தார்மார்பனையிகழ்தற்குச் செய் யுள்:— "மைந்நாண்மலர்த்தொடைவாணன்றென்மாறையெம்மன்னவுவந், தந் நாண்முயங்கியமிழ்தெனவார்ந்தனிராரவமுற்று, முந்நாண்மதிவட்டமென்முலை மாதைமுனிந்துதஞ்சென், றிந்நாண்மிகவுவர்த்தீர்புலவாநிற்றிரெங்களையே." (தஞ்சை-௪0௩.) எனவும், "வேம்பின்பைங்காயென்றோழிதரினே, தேம்பூங் கட்டியென்றனிரினியே, பாரிபறம்பிற்பனிச்சுனைத்தெண்ணீர், தைஇத்திங்கட்

* அயலிதழ் என்றும். பி - ம்.

டண்ணியதரினும், அதுவே, வெய்யவுவர்க்குமென் றனி, லையவற்றலன்பின் பாலை." (குறுந்தொகை-கககச.) எனவும் வரும். (எ)

உ0எ. ஆயிழை மைந்தனு மாற்று மையும்
வாயி லாக வரவெதிர் கோட
மணந்தவன் போயபின் வந்த பாங்கியோ
டிணங்கிய மைந்தனை யினிதிற் புகழ்தலுந்
தலைவனைப் புகழ்தலுஞ் சிலைநுதற் பாங்கி
மனைவியைப் புகழ்தலு மினையவும் பிறவு
மனைவகை மொழிந்த வதன்பாற் படுமே.

இதுவுமது.

(இ-ள்.) ஆயிழைமைந்தனு மாற்றுமையும் வாயிலாகத்தலைமகன்வந்துழித் தலைமகளெதிர்கோடன் முதலாகப்பாங்கி மனைவியைப் புகழ்தலீறுகச்சொல்லப் பட்டனவும், பிறவு மத்தன்மைத்தாகிய வுணர்த்தவுணராவுடற்குரியவாமென்ற வாறு; இவை வேறுகூறிய தவைபோல வூடற்சிறப்பின்மை நோக்கியென்க. அவற்றுள், மகனுமாற்றுமையும்வாயிலாகத் தலைமகன்வந்துழித் தலைமகளெதிர்கோடற்குச் செய்யுள்:—"வெள்ளம்பரந்தன்ன வேட்கைசென்றாலு மிகப்பெரியோர், உள்ளஞ்சிறியவர்மேற்செல்வரோவொளிர்கோமளஞ்செய், வள்ளங்கமலமலர்த் தஞ்சைவாணன்றென்மாறையன்னப், புள்ளம்புனல்வயலூரபுன்காமம்புகல்வதன்றே." (தஞ்சை-௪0௪.) எனவும், "வெண்ணுதற்கம்புளரிக்குரற்பேடை, தண்ணறும்பழனத்துக்கிளையோடாலு, மறிவில்பாணர்மலிகேழூரநீ, சிறுவரினினையசெய்தி, நகாரோபெருமநிற்கண்டிசினோரே." (ஐங்குறுநூறு - அ௫.) எனவும் வரும்.

தலைமகனைப்புணர்ந்துநீங்கியபின்வந்தபாங்கியொடுதன்மகனைப்புகழ்தற்குச் செய்யுள்:—" இருமையிலேயும்பயன்களெல்லாந்தன்னையீன்றநமக், கொருமையிலேவந்துறத்தகைந்தான்மைந்தனெண்சுடர்போல், வருமயிலேகொண்டுமோதடிந்தானன்னவாணன்றஞ்சைத், திருமயிலேயனையாய் புனலூரனைத்தேருடனே." (தஞ்சை-௪0௫.) எனவும், "இம்மையுலகத்திசையொடுவிளங்கி, மறுமையுலகமு மறுவின்றெய்துப, செறுநரும்விழையுஞ்செயிர்தீர்காட்சிச், சிறுவர்ப்பயந்தசெம் மலோரெனப், பல்லோர்கூறும்பழமொழியெல்லாம், வாயேயாகுதல்வாய்த்தனந் தோழி, நிரைதார்மார்பனெருநலொருத்தியோடு, வதுவையயர்தல்வேண்டிப்புதுவதி, னியன்றவணியனித்தெருவிறப்போன், மாண்டேர்மாமணிகறங்கக்கடைகழிந்து, காண்டல்விருப்பொடுதளர்புதளர்போடும், பூங்கட்புதல்வனைநோக்கிநெடுந்தேர், தாங்குமதிவலவவென்றிழிந்தனன்றாங்காது, மணிபுரையவ்வாய்மார்பகஞ்

செனைப், புல்லிப்பெருமசெல்லினியகத்தென, விடுப்போற்கொல்லான்கலுழ்த விற்றடுத்த, மாநிதிக்கிழவனும்போன்மென்மகனே, தானேபுகுதந்தோனேயா னது, படுத்தனெனருகனுணியிடித்திவற், கலக்கினன்போலுமிக்கொடியோனெ னச்சென், றலைக்குங்கோலொடுகுறுகத்தலைக்கோண், டிமிழ்கண்முழவினின்சீ ரவர்மனைப், பயிர்வனபோல்வந்திசைப்பவுந்தவிரான், கழங்காடாயத்தன்றுநம்ம ருளிய, பழங்கணோட்டமுநலிய, வழுங்கினனல்லனோவயர்ந்தனன்மணனே.” (அகநானூறு-௬௬.) எனவும் வரும்.

தலைவி தலைவனைப்புகழ்தற்குச் செய்யுள்:—“கொண்டாளிற்றுன்னியகே ளிர்மற்றில்லைகுறிப்பினென்று, தண்டாதவர்சொன்னசால்புகண்டேன் றலமேழ் புரக்கும், வண்டார்மலர்ப்புயன்வாணன்றென்மாறைமகிழ்நர்முன்னு, ஞண்டா கிய பழங்கேண்மையினாளுமொழிந்திலரே.” (தஞ்சை-௪௦௬.) எனவரும்.

பாங்கி மனைவியைப் புகழ்தற்குச் செய்யுள்:—“சிறந்தார்புகழ்தருந்தீம்புன லூரன்செய்தீமையெல்லா, மறந்தார்வமெய்து வணங்குதலாலிவள்வாணன்றஞ் சை, நிறந்தாரகையன்னநித்திலம்போலுநெடுங்குலத்திற், பிறந்தார்நிறைந்தகற் போர்வடிவேபெற்றபெற்றியளே.” (தஞ்சை-௪௦௭.) எனவும், “யாயாகியளே மாஅயோளே,மடைமாண்செப்பிற்றமியள்வைகிய,பெய்யாப்பூவின்மெய்சாயின ளே, பாசடைநிவந்தகணைக்காலெய்த, லினமீனிருங்கழியோதமல்குதொறுங், கயமூழ்குமகளிர்கண்ணின்மானும், தண்ணந்துறைவன்கொடுமை, நம்முன்னாணிக் காப்பாடும்மே.” (குறுந்தொகை-செய்-௯) எனவும் வரும். பிறவுமன்ன (௮)

௨௦௮. முன்றுருத் திரத்து மொழிந்தவை யெல்லா
மான்ற பரத்தையி னகற்சியின் விரியே.

(இ-ம்.) பரத்தையிற்பிரிவின் விரியுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) காதலன்பிரிவுழிக் கண்டோர்புலவிக்கேதுவிதாமவ்விறைவிக்கென்றன்முதலாகப் பாங்கி மனைவியைப்புகழ்தலீறுகச் சொல்லப்பட்டனவெல்லாம் பரத்தையிற்பிரிவின் விரியா மென்றவாறு.

இவைவாயில்வேண்டன் முதலாக நால்வகைக்குமேற்குமா றறிந்துகொள்க.

௨௦௯. பிரிவறி வுறுத்தல் பிரிவுடன் பாடாமை
பிரிவுடன் படுத்தல் பிரிவுடன் படுதல்
பிரிவுழிக் கலங்கல் வன்புறை வன்பொறை
வருவுழிக் கலங்கல் வந்துழி மகிழ்ச்சியென்
றொருமையிற் கூறிய வொரன்பது வகைய
கல்வி முதலா வெல்லாப் பிரிவும்.

(இ-ம்.) நிறுத்தமுறையானே யோதற்பிரிவுமுதலிய வவ்வகைப் பிரிவுக ளின்வகை யுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) பிரிவறிவுறுத்தன்முதலாக வந்துழிமகிழ்ச்சியீறாகச் சொல்லப் பட்ட வொன்பதுவகையினையுடையவாங் கல்விமுதலாகிய வவ்வகைப் பிரிவு மென்றவாறு. அவற்றுள், கல்விக்குப்பிரிவுதலைமகனுணர்ந்ததோழி தலைமகட் குணர்த்தற்குச் செய்யுள்:—"மல்வித்தகங்கொண்டதோளுடையான்றஞ்சைவா ணன்றொல்சீர், நல்வித்தகன்புவிநாவில்வைத்தோன்வையநாடனையாய், கல்வித் தடங்கடனீந்தியகாதலர்கற்றவர்முன், சொல்வித்தவென்றழலார்சுரம்போகத்து ணிந்தனரே." (தஞ்சை-௪0அ.) எனவரும்.

தலைமகன் கல்விக்குப் பிரிந்துழித் தலைமகள் கார்ப்பருவங்கண்டு புலம்பற் குச் செய்யுள்:—" யாணர்க்குழன்மொழியென்செய்குவேன் கல்வியெல்லையெல் லாங், காணப்பிரிந்தவர்காண்கிலராற்கடன்மேய்ந்துதஞ்சை, வாணர்க்கெதிர்ந்த வர்மங்கையர்போலுமென்வல்லுயிரின், ஊணற்பமென்னவெண்ணுவருமேகமுரு முடனே." (தஞ்சை-௪0௯.) எனவரும்.

ஓதற்குப்பிரிந்துழிக் கார்ப்பருவங்கண்டு வருந்திய தலைமகளைத் தோழியாற் றுவித்தற்குச் செய்யுள்:—"காதற்கயம்படிந்துண்ணேடுகாமக்கனிநுகரா, தோதற்க கன்றவுணர்வுடையோருடைநீருலக, மாதர்க்கமைந்தருள் வாணன்றென்மாறை வரக்கடவா, ராதற்கணங்கனையாய்புயலேதுவறிந்தருளே." (தஞ்சை-௪௧0.) எனவரும் பிறவுமன்ன.

காவற்பிரிவு தலைமகனுணர்ந்ததோழிதலைமகட்குணர்த்தற்குச்செய்யுள்:— "விண்காவல்கொண்டதிலோத்தமைதான்முதன்மெல்லியலார், கண்காவல் கொண்டருள்காரிகைகாவலர்கார்க்கடல்சூழ், மண்காவல்கொண்டமனத்தினராயி னர்வாணன்றஞ்சைப், பண்காவல்கொண்டமொழிச்செய்யவாயிதழ்ப் பைங்கிளியே." (தஞ்சை-௪௧௧.) எனவரும்.

தலைமகன்காவற்குப் பிரிந்துழித் தலைமகள்கூதிர்ப்பருவங்கண்டு வருந்திய தற்குச் செய்யுள்:—"மன்னுயிர்காவலன்வாணன்றென்மாறையில்வந்தளியா, ரென்னுயிர்காவலரேந்திழையாயிதயம்புலர்த்திக், கொன்னுயிர்வாடைகொடும்ப ணிநீரிற்குளிர்குழைத்துப், பின்னுயிராமலென்மேற்பூசுநாளுமென்பேசுவதே." (தஞ்சை-௪௧௨.) எனவரும்.

காவற்குப்பிரிந்துழிக் கூதிர்ப்பருவங்கண்டுவருந்தியதலைமகளைத் தோழியா ற்றுவித்தற்குச் செய்யுள்:—"வரற்காலமென்றென்றெனப்பலகூடல்வளைத்துதி ராம், விரற்காலவின்றுமெலியன்மின்னேசென்றமேதினிகாத், தரற்காலகுஞ்சர

மஞ்சமஞ்சூர்ந்துறைவிசுகின்ற, சார்காலம்வந்தடைந்தார் தஞ்சைவாணன்றமிழ் வெற்பரே." (தஞ்சை-௪௧௩.) எனவரும்.

தூதிற்குப்பிரிவு தலைமகனுணர்ந்ததோழி தலைமகட்குணர்த்தற்குச் செய்யுள்:—"தூதாகவன்பர்செலத்துணிந்தாரென்றுஞ்சொற்புலவோர், மாதாகவன் பசிதீர்த்தருள்வாணன்றென்மாறையிந்து, மீதாகவம்புகிடந்தன போலுங்கண் மெல்லியலிப், போதாகவம்புகல்வோரிகலார்தம்புரம்புகவே." (தஞ்சை-௪௧௪) எனவரும்.

தலைமகன்றூதிற்குப் பிரிந்துழித் தலைமகள் முன்பனிப்பருவங்கண்டு வருந்தியதற்குச் செய்யுள்:—"மலிகின்றவண்புகழ்வாணன்றென்மாறையைவாழ்த்தலர்போன், மெலிகின்றசிந்தையுமேனியுங்கொண்டுவிளர்ப்பெனும்பேர், பொலிகின்றகஞ்சுகம்போர்த்திருந்தேனைப்புரந்தருவார், நலிகின்றமுன்பனிநாளினண்ணார்முனைநண்ணினரே." (தஞ்சை-௪௧௫.) என வரும்.

தூதிற்குப்பிரிந்துழி முன்பனிப்பருவங்கண்டுவருந்தியதலைமகளைத் தோழியாற்றுவித்தற்குச் செய்யுள்:—"சுற்றுங்குழனின்பிணிவிடுப்பான்வந்துதோன்றினர்பார், முற்றும்பொழிகின்றமுன்பனிகாண்முகிலுங்கடலும், வற்றும்பருவத்து மண்புரப்பான்றஞ்சைவாணனென்னார்ச், செற்றும்படையின்வெம்போர்தணிப்பானன்றுசென்றவரே." (தஞ்சை-௪௧௬ ) எனவரும் பிறவுமன்ன.

வேந்தர்க்குற்றுழி யுதவியிற்பிரிவு தலைமகனுணர்ந்ததோழி தலைமகட்குணர்த்தற்குச் செய்யுள் :—"நண்பானமன்னர்க்கிடர்தணிப்பானெண்ணிநல்லுதவிப், பண்பானமன்னர்படர்தலுற்றார்பனிநீர்பொழியுந், தண்பானலந்தொடையம்புயவாணன்றமிழ்த்தஞ்சைவாழ், வெண்பானலங்கொள்செவ்வாயன்னமேயன்னமென்னடையே." (தஞ்சை-௪௧௭.) எனவரும்.

தலைமகன்வேந்தர்க்குற்றுழி யுதவியிற்பிரிந்துழித் தலைமகள் பின்பனிப்பருவங்கண்டு வருந்தியதற்குச் செய்யுள்:—"இன்னற்படுகின்றவென்னையெண்ணார்தமக்கின்றுணையாம், மன்னற்குதவிப்பிரிந்தங்காதலர்வாணன்றஞ்சைக் கன்னற்கடிகையறிவதல்லாற்பகல்காண்பரிதாம், பின்னற்கனையிருள்கூர்துன்பமேவியபின்பனியே." (தஞ்சை-௪௧௮.) எனவரும்.

வேந்தர்க்குற்றுழி யுதவியிற் பிரிந்துழிப் பின்பனிப்பருவங்கண்டு வருந்திய தலைமகளைத் தோழியாற்றுவித்தற்குச்செய்யுள்:—"வடுக்கண்டனையகண்மங்கை நல்லாய்தஞ்சைவாணன்வெற்பி, னடுக்கங்குளிர வசைகின்றவாடையகன்றவர்க்கு, நடுக்குஞ்செய்பின்பனிநாளின்வந்தாரமர்கண்பனுற்ற, விடுக்கண்களையு வென்றேயகன்தானமிகந்தவரே." (தஞ்சை-௪௧௯.) எனவரும்.

பொருள்வயிற்பிரிவு தலைமகனுணர்ந்ததோழி தலைமகட்குணர்த்தியதற்குச் செய்யுள்:— "மஞ்சைப்புனைமதின்மாறைவரோதயன்வாணர்பிரான், தஞ்சைப்பதியன்னவெண்ணலர்போற்றனிநாமிருக்க, நெஞ்சைப்பொருள் வயின் வைத்தாங்கேள்வர்நன்னீண்மதியின், பிஞ்சைப்புரைநுதலாய்ப்பிரிவா னின்று பேசினரே." (தஞ்சை-சஉ௦.) எனவரும்.

தலைமகன் பொருள்வயிற்பிரிந்துழித் தலைமக ளிளவேனிற்பருவங்கண்டு வருந்தியதற்குச் செய்யுள்:—"நங்கணிரங்கவரும்பொருடேடநடந்தவன்பர், செங்கணிருங்குயிலார்ப்பதுகேட்கிலர்செந்தமிழோர், தங்கணிடும்பைதவிர்த்தருள்வாணன்றென்றஞ்சைவஞ்சி, இங்கணிவந்ததுபோற்கவினார்முகத்தேமொழியே." (தஞ்சை-சஉக.) எனவரும்.

பொருள்வயிற்பிரிந்துழி யிளவேனிற்பருவங்கண்டு வருந்தியதலைமகளைத் தோழியாற்றுவித்தற்குச்செய்யுள்:—"வார்த்தனபாரமடமயிலேகுயின்மாருதமாந், தேர்த்தனிவீரன்றிருநாளும்வந்ததுசேர்பின்சென்றார், தார்த்தடமேருவெனும் புயவாணன்றஞ்சாபுரிநின், றார்த்ததுகேட்டுவந்தார்பொருடேடவகன்றவரே." (தஞ்சை-சஉஉ.) எனவரும். பிறவுமன்ன.

கல்வியிற்பிரிவுமுதலாகிய வைந்தினுள்ளும் தூதுமுதவியுங் காரணமாகிய பிரிவின்க ணவ்வினை யோர்யாண்டின்முடியாது நீட்டித்துமுடிந்துழித் தலைமகளுருவு வெளிப்பாடுகண்டு சொல்லியதற்குச் செய்யுள்:— "மைக்குஞ்சரநிரையாற்றஞ்சைவாணன்மருவலரைக், கைக்குங்களங்கெழுபாசறையூடேயலும் வில்லும், மொய்க்குஞ்சுடரினவம்புலிதானுமுயங்கியெல்லாத், திக்குந்தொழவருமே யருளோலைத்திருமுகமே." (தஞ்சை-சஉ௩.) எனவும், "முல்லைநாறுங்கூந்தல் கமழ்கொள, நல்லகாண்குவமாஅயோயே, பாசறையருந்தொழிலுதவிநங், காதலன்னாட்டுப்போதரும்பொழுதே." (ஐங்குறுநூறு-சசசு.) எனவும் வரும்.

பாசறைமுற்றிமீண் டேர்வயின்வந்ததலைமகன் பாகற்குச்சொல்லியதற்குச் செய்யுள்:— "மால்கொண்டவாரணவாணன்றென்மாறைவலவநண்ணார், கால்கொண்டவாளமர்கையகல்பாசறைக்கைவயின்முட், கோல்கொண்டவாறுநின்னேவல்கொண்டியானிக்கொடிநெடுந்தேர், மேல்கொண்டவாறுநம்மூர்வந்த வாறும் வியப்பெனக்கே." (தஞ்சை-சஉச.) எனவரும்.

தலைமகளோடிருந்த தலைமகன் கார்ப்பருவங்கண்டு வந்துசொல்லியதற்குச் செய்யுள்:—"கொத்தலரோதியங்கொம்பானனாள்பொங்குகொங்கைவிம்ம, முத்தலராகமுயங்கினம்யாமுழுநீர்விழிபோல், மைத்தலர்நீலமலர்வயல்சூழ் தஞ்சை வாணன்வண்மைக், கைத்தலமானவினிப்பொழிவாழியகார்முகிலே." (தஞ்சை-

சஉ௫.) எனவும், "தாழிருடுமியமின்னித்தண்ணென, வீழுறையினியசிதறி யூழிற், கடிப்பிடுமுரசின்முழங்கியிடித்திடித்துப், பெய்தினிவாழியோபெருவான் யாமே, செய்வினைமுடித்தசெம்மலுள்ளமோ, டிவளின்மேவினமாகிக்குவளைக், குறுந்தாணெடுமலர்நாறு, நறுமென்கூந்தன்மெல்லணையேமே. (குறுந்தொகை-உஎ0.) எனவும் வரும். (க0)

நான்காவது கற்பியன் முற்றும்.

உ

# ஐந்தாவது ஒழிபியல்.

உக0. ஒழிபெனப் படுவ தகப்பாட் டுறுப்பும்
வழுவு மமைவுந் தழுவிய தாகும்.

இவ் வோத்தென்ன பெயர்த்தோவெனின் முன்னர்வந்தவியலுணான்கினுள் ளுங்கூறிக் கூறாதவொழிபிலக்கணமுணர்த்தினமையான் ஒழிபியலென்னும் பெயர்த்து.

(இ-ம்.) ஒழிபாவதிதுவென்பதுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) ஒழிபென்று சொல்லப்படுவது அகப்பாட்டிற்குரியவுறுப்புக்களையும், அகப்பாட்டிலக்கணத்தினைத்தப்பியதனையும், அமைந்தநீதியினையும் பொருந்தியதாமென்றவாறு. (க)

உகக. திணையே கைகோள் கூற்றே கேட்போ
ரிடனே காலம் பயனே முன்ன
மெய்ப்பா டெச்சம் பொருள்வகை துறையென
வப்பா லாறிரண் டகப்பாட் டுறுப்பே.

(இ-ம்.) அகப்பாட்டுறுப்பின் பாகுபாடுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) அகப்பாட்டுறுப்பாவன திணைமுதலாகத்துறையீறாகப் பன்னிரு பகுதிப்பட்டனவாமென்றவாறு. (உ)

உகஉ. அவற்றுள்,
முன்னவை யிரண்டுஞ் சொன்னவை யாகும்.

(இ-ம்.) நிறுத்தமுறையானே இணையுங்கைகோளுமிவையென்ப துணர்த் துதனுதலிற்று.

(இ-ள்.) அப்பன்னிரண்டனுள்ளு முற்பட்ட இணையுங் கைகோளுமாகிய விரண்டு மேலகத்திணையியலிற்சொல்லப்பட்டனவா மென்றவாறு. (க.)

உகஉ. தலைவன் றலைவி பார்ப்பான் பாங்கன்
பாங்கி செவிலியென் றீங்கிவ் வறுவருஞ்
சாற்றிய களவிற் கூற்றிற் குரியர்.

(இ-ம்.) களவுகைகோளகத்துக்கூற்றிற் குரியோரை யுணர்த்து தனுத லிற்று.

(இ-ள்.) தலைவன்முதலாகச் சொல்லப்பட்டவறுவரும் மேற்சொல்லப் பட்ட களவினகத்திற்கூற்றிற்குரியராவ ரென்றவாறு. (உ)

உகச. நற்றாய் கண்டோர் பாணன் கூத்தர்
விறலி பரத்தை யறிவரென் றெழுவரு
மறுவரென் றவரு மாகியு வனைவருங்
குறைவறு கற்பிற் கூற்றிற் குரியர்.

(இ-ம்.) கற்பிற்கூற்றிற்குரியோரையுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) நற்றாய்முதலாகியவெழுவரும் மேற்சொல்லப்பட்ட தலைவன் முதலாகிய வறுவருமாகிய பதின்மூவரும் குற்றமற்ற கற்பினகத்துக்கூற்றிற் குரியராவ ரென்றவாறு. (ங)

உகரு. பயந்தோன் றன்னை யுயங்கு நோயறிவோர்
*ஊரவ ரயலோர் சேரியோ ரென்றிவர்
முகத்துரை நிகழா வகப்பொரு ளகத்தே.

இதுவு மகப்பொருளகத்து முகத்துரைநிகழாதோரை யுணர்த்துதனுத லிற்று.

(இ-ள்.) பயந்தோன்முதலாகச் சொல்லப்பட்டவர்முகத்துச் சொன்னி கழா வகப்பொருளகத்தென்றவாறு.

எனவே யவை பிறராலெடுத்துப் பிறராலோர் சொற்றந்தடுத்துக்கூறப்படு மெனக்கொள்க.

---

* அறிஞர் என்றும் பி-ம்.

இதற்குச் செய்யுள்:—"..............எந்தையுமிலனுறப்பெறுநின், சிறபு சிவப்பவேயவல்குலவி,..............................வெவனிலங்குறுமகளியுங்குதி யென்னு," மித்தன்மையன தந்தைகூறினுணைத் தோழி யெடுத்துக்கூறுதலாம் பிறவு மன்ன.

உகசு. தமர்வரி னிடைச்சுரந் தன்னிற் கிழத்தியோ
டமர்தரு கிழவோனாணையுங் கூறும்.

(இ-ம்.) தலைவன் கூற்றுள் வரைவியலின் ஒழிபுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) புணர்ந்துடன்போகின்றகாலத்துத் தலைமகடமர்பிற்செல்லி றலைமகன் றலைமகளோடாணையுங்கூறுவனென்றவாறு.

உதாரணம், "கடுஞ்செம்மூதாய்கண்டுங்கொண்டு நீவிளையாடுகசிறிதே" என்பதாம்.

உகஎ. உடன்போய் மீண்ட கொடுங்குழை மடந்தை
பிரிவுழித் தலைவனொடு சாத்தியல்பு பேசலும்
பிரிந்துழி நெஞ்சொடும் பிறரொடும் வருந்திச்
சொல்லலு முரியள் சொல்லுங் காலை.

இ-ம்.) தலைவிகூற்றுள் வரைவியலின் ஒழிபுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) புணர்ந்துடன்போய் மீண்டதலைமகள் பிரியுங்காலத்துத் தலைமகனோடுசாத்தியல்புகூறலு மவன்பிரிந்தகாலத்து வருந்தி நெஞ்சொடும்பிறரொடுஞ் சாத்தியல்புசொல்லலு முரியளாராய்ந்து சொல்லுமிடத்தென்றவாறு.

எனவே புணர்ந்துடன்போகாத்தலைமகள் சாத்தியல்பு கூறாளென்றவாறு.

தலைமகன்பிரியுங்காலத் தவனொடுசாத்தியல்பு கூறற்குச்செய்யுள்:-"வினைக் கலம்வினை திரோவையவன்றுநாம், பணைத்தாளோமைப்படுசினைபயந்த, பொருந் தாப்புகர்நிழலிருந்தனெமாக, நடுக்கஞ்செய்யாதுநண்ணுவழித்தோன்றி, யொடித் துமிசைக்கொண்டவோங்குமருப்பியானை, பொறிபடுதடக்கைசுருக்கிப்பிறிதோ, ராறிடையிட்டவளவைக்குவேறுணர்ந், தென்றூழ்விடரகஞ்சிலம்பப், புன்றலை மடப்பிடிபுலம்பியகுரலே." (நற்றிணை-௩௧௮.) என்பதாம்.

பிரிந்துழி நெஞ்சொடு சாத்தியல்பு கூறற்குச்செய்யுள்:— "வில்லுழவர் நாளுமறுகுபுள்ளும்போவர்கொல்." என்பதாம்.

பிரிந்தழிப் பிறரொடு காத்தியல்பு கூறற்குச்செய்யுள்:—"அழியாய்தோழி யவர்சென்றவாறே, தறுகட்கொண்கனன்ன, சிறுகண்யானைதிரிதருகாடே," என்பதாம். இவை களவின்வழிவந்த கற்பிறொழிபெனக்கொள்க. (அ)

௨௧௮. தலைவன் றலைவியொடு நற்றாய் கூறாள்.

(இ-ம்.) நற்றாய்கூற்றிற்கெய்திய தொருசார் விலக்கல் நுதலிற்று.

(இ-ள்.) தலைவனோடுந் தலைவியோடு நற்றாய் கூறப்பெறாளென்றவாறு.()

௨௧௯. புணர்ந்துடன் போய துணர்ந்த பின்னை
ரந்தணர் தெய்வ மயலோ ரறிவர்
சிந்தைநோ யறிவோர் செவிலிபாங் கியொடு
கண்டோர்க் குரைக்கும் பண்புடை நற்றாய்.

(இ-ம்.) நற்றாய்கூற்றுக் கெய்தியதன்மேற் சிறப்புவிதியுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) அந்தணர்முதலாகச் சொல்லப்பட்டவனைவரோடும் நற்றாய் கூறுந், தலைமகள் புணர்ந்துடன்போனவாறு தானறிந்தபின்னென்றவாறு. (௧௦)

௨௨௦. தாயொடும் பாங்கி தான்முதலா ரொடுஞ்
சேயிழைச் செவிலியுஞ் செப்பு மாங்கே.

(இ-ம்.) செவிலிகூற்றுக் கெய்தியதன்மேற் சிறப்புவிதியுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) நற்றாயோடும்பாங்கிமுதலானோரோடும் தலைமகள்செவிலித்தாயுஞ் சொல்லு, மவள் புணர்ந்துடன்போதன்மை தானறிந்த பின்னென்றவாறு.

இவ்விருவர் கூற்றிற்கு முதாரண முடன்போக்கினுட் காட்டப்பட்டன ()

௨௨௧. தாயர் பாங்கியர் தலைவன் றலைவியோ
டேயு மென்ப கண்டோர் கூற்றே.

(இ-ம்.) கண்டோர்கூற்றிற் கெய்தியதன்மேற் சிறப்புவிதியுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) தாயர் முதலானவரோடு நிகழுங் கண்டோர்கூற்றென்று சொல்லுவர் புலவரென்றவாறு.

உதாரண முடன்போக்கினுள்ளுங் கற்பினுள்ளுங் கண்டுகொள்க. (கஉ)

உஉஉ. சாற்று மெழுவருந் தலைவன் றலைவியோ
டேற்றன கூறுப விடந்தொறு மிடந்தொறும்.

(இ-ம்.) மேற்சொல்லப்படாதவர் கூற்றுக் கெய்தியதன்மேற்சிறப்புவிதி யுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) மேற்சொல்லப்படாத பார்ப்பானும், பாங்கனும், பாணனும், கூத்தரும், விறலியரும், பரத்தையரும், அறிவருமென்கின்ற வெழுவருந் தலைமகனோடுந் தலைமகளோடு மிடந்தொறு மிடந்தொறும் பொருந்தியவற்றைக் கூறுவரென்றவாறு. (கங)

உஉங. நெஞ்சு நாணு நிறைசோ றறிவுஞ்
செஞ்சுடர்ப் பருதியுந் திங்களு மாலையும்
புள்ளு மாவும் புணரியுங் கானலு
முள்ளுறுத் தியன்றவு மொழிந்தவை பிறவுந்
தன்சொற் கேட்குந் போலவுந் தனக்கவை
யின்சொற் சொல்லுந போலவு மேவல்
செய்குந போலவுந் தேற்றுந போலவு
மொய்குழற் கிழத்தி மொழிந்தாங் கமையும்

(இ-ம்.) தலைவிகூற்றுக் கெய்துவதோர் வேறுபாடுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) நெஞ்சுமுதலாகக் கானலீறாகச் சொல்லப்பட்டனவு மவையல்லாத பிறவுந் தன்சொற்கேட்கின்றனபோலவும், தனக்கவையின்சொற்சொல்லுகின்றனபோலவும், ஏவல்செய்குநபோலவும், தன்னைத்தேற்றுகின்றனபோலவுஞ் சொல்லியமாத்திரத்தானே யாற்றுந் தலைமகளென்றவாறு.

பிறவுமென்றதனாற் கழியு நெய்தலு மாமுதலாயினவுங் கொள்க. உதாரணம் மேற்காட்டியவற்றுள்ளும் பிறவற்றுள்ளுங் கண்டுகொள்க. (கச)

உஉச. இறையோன் முதலோர் யாரொடு மின்றித்
தம்மொடு தாமே சாற்றியு மமைப.

(இ-ம்.) எல்லார்கூற்றுக்கு மெய்துவதோர் வேறுபாடுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) மேற்சொல்லப்பட்ட தலைவன் முதலாகிய பதின் மூவரும் யாரோடுங்கூறாது தம்மொடு தாமே கூறியமைவரென்றவாறு. உதாரண மேற்காட்டியவற்றுள்ளும் பிறவற்றுள்ளுங் கண்டுகொள்க. இத்துணையுங் கூறப்பட்டது கூற்றியலெனக் கொள்க. (௧௫)

உ௨௫. கிழவோன் கூற்றுங் கிழத்தி கூற்றும்
பழமறை யோர்முதற் பதின்மருங் கேட்ப.

(இ-ம்.) நிறுத்தமுறையானே கேட்போரென்னு முறுப்பைக்கூறுவான்றொடங்கித் தலைவன்கூற்றும், தலைவிகூற்றும் உணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) தலைவன்கூற்றுந் தலைவிகூற்றும் பார்ப்பான் முதலாகிய பதின்மருங்கேட்பரென்றவாறு.

தலைவன் றலைவியோடு நற்றாய் கூறாள் எனவே நற்றாயோடு அவ்விருவருங் கூறாரென்பது போதருதலான் மறையோன்முதலிய பதினொருவருள் நற்றாயையொழித்துப் பதின்மரென்றாரென்க. (௧௬)

உ௨௬. மறையோன் கூற்று மறிவர் கூற்று
மிறையோன் முதலா வெல்லாருங் கேட்ப.

(இ-ம்.) மறையோன்கூற்று மறிவர்கூற்று முணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) பார்ப்பானு மறிவருமாகிய விருவர் கூற்றுந் தலைமகன் முதலாகிய வெல்லாருங் கேட்பரென்றவாறு.

இவ்விரண்டு சூத்திரத்தானுஞ் சொல்லியது கேட்போரிவரெனக்கொள்க.

உ௨௭. நெறிப்படு கரும நிகழ்வுழி யிடனே.

(இ-ம்.) நிறுத்தமுறையானே இடனென்னு முறுப்புணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) முறைப்பட்டகாரியம் நிகழுநிலை, யிடமென்னுமுறுப்பா மென்றவாறு.

அன்றித் தன்மை, முன்னிலை, படர்க்கை யெனினுமமையும், நெறிப்பட்ட கருமமாவன களவுங் கற்பு மென்பனவாம். (௧௭)

உ௨௮. சென்றது, நிகழ்வது, மெதிர்வது மெனமுறை
நின்று பொருளுணர நிகழ்வது காலம்.

(இ-ம்.) நிறுத்தமுறையானே காலமென்னு முறுப்புணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) இறந்தகாலமு நிகழ்காலமு மெதிர்காலமுமென வண்டவே நின்றுலகத்துள்ள பொருள்களை யறியும்படியாக நடப்பது காலமென்னு முறுப்பாமென்றவாறு. (௧௯)

௨௨௯. இப்பொருள் பயக்குமிஃ தென்பது பயனே.

(இ-ம்.) நிறுத்தமுறையானே பயனென்னு முறுப்புணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) இப்பொருளை இதுபயக்குமென்று சொல்லுவது பயனென்னு முறுப்பாமென்றவாறு. (௨௦)

௨௩௦. இன்னோர்க் கின்னுழி யிதுபயக் குமெனு
முன்னந் தருவது முன்ன மாகும்.

(இ-ம்.) நிறுத்தமுறையானே முன்னமென்னு முறுப்புணர்த்துத னுதலிற்று.

(இ-ள்.) இத்தன்மையர்க் கிவ்விடத் திதுதருமென்னுங் குறிப்பினை வெளிப்படுப்பது முன்னமென்னு முறுப்பாமென்றவாறு. (௨௧)

௨௩௧. நகைமுத லாயிரு நான்குமெய்ப் பாடு
நிகழ்பொருள் மெய்ப்பட நிற்பமெய்ப் பாடே.

(இ-ம்.) நிறுத்தமுறையானே மெய்ப்பாடென்னு முறுப்புணர்த்துத னுதலிற்று.

(இ-ள்.) நகையு மழுகையு மிழிவரலு மருட்கையு மச்சமும் பெருமிதமும் உவகையும், வெகுளியு மென்னுமெட்டுவகை மெய்ப்பாடும் அவ்விடத்து நிகழும் பொருளைக்கேட்டோர் மெய்யின்கண்ணே வெளிப்பட நிற்பன மெய்ப்பாடென்னு முறுப்பாமென்றவாறு.

மெய்ப்பாடு வெளிப்பாடெனக்கொள்க. (௨௨)

௨௩௨. சொல்லலே யாயினுங் குறிப்பே யாயினுஞ்
சொல்லி முடித்தல் வேண்டுவ தெச்சம்.

(இ-ம்.) நிறுத்த முறையானே யெச்சமென்னு முறுப்புணர்த்துத னுதலிற்று.

(இ-ள்.) ஒருசொல்லேயாயினு மொருகுறிப்பேயாயினுங் கூட்டிப் பொருண்முடித்தல்வேண்டிநிற்ப தெச்சமென்னு முறுப்பாமென்றவாறு. (உங)

உஙங. ஒருதிணைக் குரிமை பூணா நிலைமை
பொருள்வகை யென்மனார் புலமை யோரே.

(இ-ம்.) நிறுத்தமுறையானே பொருள்வகையென்னு முறுப்புணர்த்துத லுதலிற்று.

(இ-ள்.) இத்திணைக்கே யிப்பொருளுரித்தாவது என்னாமல் எல்லாத் திணைக்கும் பொதுவாய் நிற்கு நிலைமை பொருள்வகை யென்று சொல்லுவ ரறிவுடையோரென்றவாறு.

அவையாவன:—நிரனிறைமொழிமாற்று, சுண்ணமொழிமாற்று, அடிமறிமொழிமாற்று, அடிமொழிமாற்று, பூட்டுவிற்பொருள்கோள், புனல்யாற்றுப்பொருள்கோள், தாப்பிசைப்பொருள்கோள், அளைமறிபாப்புப்பொருள்கோள், கொண்டுகூட்டுப்பொருள்கோள் என ஒன்பதாம். (உச)

உஙச. சொல்லிய வல்ல வொன்றினு மவற்றொ
டொல்லும் வகைதேர்ந் துணர்த்தியல் வழாமை
யுரைப்போர் கேட்போ ருண்மை யின்றி
யுரைக்குங் கவியே யுரைப்பது துறையே.

(இ-ம்.) நிறுத்தமுறையானே துறையென்னு முறுப்புணர்த்துத லுதலிற்று.

(இ-ள்.) மேற்சொல்லப்பட்ட மக்களு மாவு முதலாயின வன்றிப் பிறவொன்றின வாயினு மவற்றை முன்சொல்லியவற்றொடும் பொருந்தும்வண்ண மாராய்ந் திலக்கணம் வழுவாதபடியாகத் தன்னையன்றி யுரைப்போருங் கேட்போருமுண்டாகவின்றிக் கவிசொல்லும்புலவன் றானே கூறுவது துறையென்னு முறுப்பாமென்றவாறு.

“உழையும்வெங்கானமும்போலுங்கண்ணுளொருகாலமுன்னங், குழையுமெம்பாலென்றுகொண்டநெஞ்சேகவிக்கோடைமண்மேன், மழையுமர்தாரமும்வர்தன வாணன்றென்மாறைபின்மார், தழையுமம்போலின்னேனகவின்வாடத்தவஞ்செய்ததே.” (தஞ்சை-கக.) என்னும் பாட்டிற்குத் திணை-குறிஞ்சி. கைகோள்-களவு. கூற்று-தலைமகன்கூற்று. கேட்போர்-நெஞ்சு. இடம்-தனியிடம். முன்னிலையுமாம். காலம்-இறந்தகாலம். பயன்-குறைநேர்தல். முன்னம்-இவ்விடத்

தெனக்கிதுதருமென்பது. மெய்ப்பாடு - மருட்கை. எச்சம் - இனியென்செய் வேமென்னுஞ்சொல். பொருள்வகை-சொற்றொறுஞ்சொற்றொறும் பொருள்ற்று வந்தமையாற், புனல்யாற்றுப்பொருள்கோளாம்.

"ஏமானெனவஞ்சமெற்காத்தலினவ்விரவிபொற்றேர், வாமானின்வாழ்வன வாகபன்னூட்டஞ்சைவாணனென்னூர், போமானதரிடத்தென்னையர்தோற்றப் புறங்கொடுத்த, கோமான்மணிநெடுந்தேர்துகம்பூண்டகுரகதமே." (தஞ்சை - ௩௯௫.) என்னுமிப்பாட்டிற்குத் திணை - பாலை. கைகோள் - கற்பு. கூற்று-தலைமகள்கூற்று. கேட்போரில்லை. இடம்-சுரத்திடம். காலம் - இறந்தகாலம். பயன்-ஆற்றுவது. முன்னம்-இக்காலத்திற்கிது தருவதென்பது. மெய்ப்பாடு-உவகை. எச்சம் - நின்றுனுயின் எனபட்டொழியுமென்னுங்குறிப்பு. பொருள்வகை - குரகதமெற்காத்தலின் வாழ்வனவாகவென இறுதிபுமுதலும் பொருள்படநிற்றலின் பூட்டுவிற் பொருள்கோள்.

"காதற்கயம்படிந்துன்னெடுகாமக்கனிநுகரா, தோதற்ககன்றவுணர்வுடை யோருடைநீருலகம், மாதர்க்கமைந்தருள்வாணன்றென்மாறைவரக்கடவா, ராதற் கணங்கனையாய்புயலேதுவறிந்தருளே." (தஞ்சை-௪௧௦.) என்னும் பாட்டிற்குத் திணை - முல்லை. கைகோள் - கற்பு. கூற்று - தோழிகூற்று. கேட்போர் - தலைமகள். இடம் - மனையிடம். காலம் - எதிகாலம். பயன் - ஆற்றுவது. முன்னம் - இவ்விடத்திவட்கிதுதருவதென்பது. மெய்ப்பாடு - உவகை. எச்சம் - நீவருந்தல் வேண்டாவென்னுஞ்சொல். பொருள்வகை - சொற்றொறுஞ் சொற்றொறும் பொருளற்றுவந்தமையாற், புனல்யாற்றுப்பொருள்கோள்.

"போயேதெருவிற்றனிவிளையாடும்புதல்வற்புல்ல, நீயேநிலையல்லைநின்மகனேயிவனீயுமவன், றாயேவருகெனச்சேயன்னவாணன்றமிழ்த் தஞ்சைமான், ஏயேயெனநிற்றலானறிந்தேனவனெங்கையென்றே." தஞ்சை-௪௦௦.) என்னும் பாட்டிற்குத் திணை - மருதம். கைகோள் - கற்பு. கூற்று - தலைமகள் கூற்று. கேட்போர் - தலைமகன். இடம் - பள்ளியிடம். காலம் - இறந்தகாலம். பயன் - பரத்தையிற்பிரிவொழித்தல். முன்னம் - இவ்விடத்திவற்கிதுதருவதென்பது. மெய்ப்பாடு - அச்சம். எச்சம் - நீமறைத்தல்வேண்டாவென்னுஞ்சொல், பொருள் வகை - புனல்யாற்றுப்பொருள்கோள்.

"வெடிக்கின்றவிப்பியுமிழ்நிலம்பைத்தலைவெம்பருவாய்த், துடிக்கின்ற நிக்கனிற்றென்றுறைவெஞ்சொற்புலவோர், வடிக்கின்றமுத்தமிழ்வாணன் றென்மாறையெம்மான்மருங்கை, 'யொடிக்கின்றகொங்கைகண்டாலெவர்நெஞ்சு குகாதவரே." (தஞ்சை-௨௨௨.) என்னும் பாட்டிற்குத் திணை - நெய்தல். கைகோள் - களவு. கூற்று - தோழிகூற்று. கேட்போர் - தலைமகன். இடம் - தனியிடம். காலம் - எதிர்காலம். பயன் - வரைவு. முன்னம் - இவ்விடத்திவர்க்கிது

தருமென்பது. மெய்ப்பாடு - அச்சம். எச்சம் - வரைதல்வேண்டுமென்னுஞ் சொல். பொருள்வகை - புனல்யாற்றுப்பொருள்கோள். பிறவுமன்ன. (உ௫)

உ௩௫. அவற்றுள்,
எச்சமின்றியு மினையு மென்ப.

(இ - ம்.) எச்சவுறுப்புக்காவதோர் புறனடையுணர்த்துதனுதலிற்று.

(இ - ள்.) மேற்கொள்ளப்பட்ட திணைமுதலாகிய பன்னிரண்டனுள்ளும் எச்சமென்னுமுறுப்பொழிந்து தொடரவும்பெறு மகப்பாட்டென்று சொல்லுவர் புலவரென்றவாறு.

அதற்குச் செய்யுள்:—"சேலார்புனல்வையைசூழ்தஞ்சைவாணன்றெனமா றையினம், வேலானெனப்பிறர்வேட்டவர்யார்மணம்வெண்டுகிலின், பாலாரமவி யும்பாற்கடலானதுபங்கயக்கண், மாலாயினனிவனூர்திருவாயினண்மாதுமின்றே" (தஞ்சை-௩௬௯.) இதற்குத் திணை - முல்லை. கைகோள் - கற்பு. கூற்று - கண் டோர்கூற்று. கேட்போர் - தம்மிற்றும். இடம் - வதுவைமனையிடம். காலம் - நிகழ்காலம். பயன் - காட்சி. முன்னம் - இவ்விடத்திவர்க்கிது தருமென்பது. மெய்ப்பாடு - உவகை. எச்ச மில்லை. பொருள்கோள் - புனல்யாற்றுப்பொருள் கோள். பிறவுமன்ன. (உ௬)

உ௩௬. உவமைப் பொருளு மிறைச்சிப் பொருளுமென்
றிருவகைப் பொருளு மெய்துமகப் பாட்டினுள்.

(இ - ம்.) அகப்பாட்டுள் வரும்பொருள்க ளிவையென்ப துணர்த்துதனுத லிற்று.

(இ-ள்.) உவமைப்பொருளு மிறைச்சிப்பொருளுமென்று கூறப்பட்ட விரண்டுவகைப்பொருளும்வரு மகப்பாட்டிடத்தென்றவாறு. (உ௭)

உ௩௭. உள்ளுறை யுவமம் வெளிப்படை யுவமமென
வெள்ளரு முவம மிருவகை யுடைத்தே.

(இ-ம்.) உவமைவகை யுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) உள்ளுறையுவமும், வெளிப்படையுவமமுமென விரண்டுகூற் றினையுடைத்தா மகப்பாட்டினுட்கிடக்கு முவமப்பொருளென்றவாறு. (உ௮)

உ௩௮. அவற்றுள்,
உள்ளுறை யுவம மும்த்துணர் வகைத்தாய்ப்
புள்ளொடும் விலங்கொடும் பிறவொடும் புலப்படும்.

(இ-ம்.) உள்ளுறையுவம மிவ்வியல்பிற்றென்ப துணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) மேற்சொல்லப்பட்ட விரண்டுவமத்துள்ளும் உள்ளுறையுவம மாவது ஆராய்ந்தறியும் பகுதியினையுடைத்தாய்ப் புள்ளொடும் விலங்கொடும் பிறவொடுந் தோன்றுமென்றவாறு.

உதாரணம்:—"இழைவிளையாடுமிளமுலைசாயற்கிடைந்தமஞ்ஞை, தழை விளையாடுங்கடிப்புனங்காத்துங்கலையகலா, குழைவிளையாடுமுயர்சிலம்பாவின்று முன்பொருட்டான், மழைவிளையாடுமதிற்றஞ்சைவாணன்மலயத்திலே." (தஞ்சை-உ௩௮.) இதனுண் மானைப்பிரியாது கலைவிளையாடுமெனவே யதுபோல நீயுந் தலைவியைப்பிரியாது விளையாடுகவென வுள்ளுறையுவமம் விலங்கொடுதோன்றியவாறு காண்க. பிறவு மன்ன. (உக)

௨௩௯. வெளிப்படை யுவமம் வினைபயன் மெய்யுரு
வெளிப்பட நின்று விளங்குவ தாகும்.

(இ-ம்.) வெளிப்படையுவமமாமாறுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்.) வெளிப்படையுவமமாவது தொழிலும், பயனும், வடிவும், நிறனும் புலப்படுமாறு நின்றுவிளங்குவதாமென்றவாறு. (௩௦)

௨௪௦. கருப்பொருட் பிறக்கு மிறைச்சிப் பொருளே.

(இ-ம்.) இறைச்சிப்பொருளாமாறுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்.) இறைச்சிப்பொருளாவது தெய்வமுதலாகிய பொருளின்கண்ணே பிறக்குமென்றவாறு. (௩௧)

௨௪௧. காமஞ் சாலா விளமை யோள்வயிற்
குறிப்பறி வுறாது கூறியாங் கவளோ
டுறப்பக் கூறுவ தகப்புறக் கைக்கிளை.

(இ-ம்.) வழுவமைதி கூறுவான்றொடங்கி முதற்கண் அகப்புறக்கைக்கிளையுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) காமஞ்சாலாவிளமைத் தன்மையினையுடைய தலைமகள்பக்கத்துத்தலைமகன் குறிப்பறியாது சென்றுசார்ந் தவளோடு மேன்மேலுங்கூறுவ தகப்புறக்கைக்கிளையாமென்றவாறு.

அன்னதாதல், "ஊர்க்காணியந்தபொதும்பரு"ளென்னுங்குறிஞ்சிக்கலி, ௨௦-ஆம் செய்யுளுள்ளும், பிறவற்றுள்ளுங் கண்டுகொள்க. (௩௨)

௨௪௨. அதுவே,
இறைமையில் லோர்க்கு மிழிகுலத் தோர்க்கு
முறைமையி னுரித்தே முன்னுங் காலை.

(இ-ம்.) அகப்புறக்கைக்கிளைக்குரியாரை யுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) மேற்சொல்லப்பட்ட கைக்கிளைதான் றலைமைப்பாடில்லாதார்க்கு மிழிந்த குலத்தார்க்கு முறையானுரித்தா மாராயுங்காலத்தென்றவாறு.

முறைமையென்பது மேற்சொல்லிய முறைமை. முன்னுங்காலையென்றது தனுலிது பயின்றுவாராதெனக்கொள்க.

“எயிஃதொத்த” னென்னும் குறிஞ்சிக்கலி ௨௬-ஆம் செய்யுளுள்ளும், “என்னேற்றனைகொல்லோ” வென்னு மருதக்கலி, (௨௧) ஆம் செய்யுளுள்ளும் கண்டுகொள்க. (௩௩)

௨௪௩. அகன்றுழிக் கலங்கலும் புகன்றமடற் கூற்றுங்
குறியிடை யீடுந் தெளிவிடை விலங்கலும்
வெறிகோள் வகையும் விழைந்துடன் போக்கும்
பூப்பிய லுரைத்தலும் பொய்ச்சூ ளுரையும்
தீப்பி னாடலும் போக்கழுங் கியல்பும்
பாசறைப் புலம்பலும் பருவமா றுபடுதலும்
வன்பொறை யெதிரழிந்து மொழிதலு மன்புறு
மனைவியுந் தானும் வனமடைந்து நோற்றலும்
பிறவு மகப்பொருட் பெருந்திணைக் குரிய.

(இ-ம்.) அகப்பொருட்பெருந்திணைக்குரியவை யிவையென்பதுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) அகன்றுழிக்கலங்கன்முதலாகத் தலைவியுந்தானும் வனமடைந்து நோற்றலீறாகச் சொல்லப்பட்டனவும், பிறவு மகப்பொருட்பெருந்திணைக்குரிய வாமென்றவாறு. (௩௪)

௨௪௪. படலே றுதலோடு விடைதழாலென்று
குற்றிசை தன்னொடு குறுங்கலி யென்று
சுரநடை தன்னொடு முதுபாலை யென்று
தாபத நிலையொடு தபுதார நிலையெனப்

புகன்றவை யியற்பெயர் பொருந்தா வாயி
னகன்ற வகப்புறப் பெருந்திணைத் தாகும்.

(இ-ம்.) அகப்புறப்பெருந்திணை யுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) மடலேறன்முதலாகத் தபுதாரநிலையீறாகச் சொல்லப்பட்டன வியற்பெயர் கூடாவாயி னகப்புறப்பெருந்திணைக்காகு மென்றவாறு.

எனவே யியற்பெயர் கூடுமாயின் புறப்பொருட்பெருந்திணையா மென்பதாயிற்று. அவற்றுள், மடலேற்றிற்குதாரணம் நெய்தற்கலியுட் கண்டுகொள்க. விடைதழாற்குதாரணம் முல்லைக்கலியுட் கண்டுகொள்க. சுரநடைமுதலான நான்கற்குமுதாரணம் புறப்பொருள்வெண்பாமாலையுட் கண்டுகொள்க. (௩௫)

௨௪௫. பாட்டுடைத் தலைவன் கிளவித் தலைவனெனப்
பாட்டினுட் பாடப் படுவோ ரிருவர்.

(இ-ம்.) அகப்பாட்டினுட் பாடப்படுவோ ரிவரென்ப துணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) அகப்பாட்டினுட் பாடப்படுவோர் பாட்டுத்தலைமகனுங் கிளவித்தலைமகனுமென விருவரென்றவாறு. (௩௬)

௨௪௬. அவருள்,
உயர்ந்தோன் பாட்டுடைத் தலைவ னாகும்.

(இ-ம்.) மேற்சொல்லப்பட்டவரு ளுயர்ந்தோனை யுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) மேற்சொல்லப்பட்ட விருவருள்ளு முயர்ந்தோன் பாட்டுடைத் தலைவனுமென்றவாறு.

“ அரிபெய்சிலம்பினும்பலந்தொடலை ” என்னும் பாட்டினுள் “மழைவளந் தரூஉமாவண்டித்தன், பிண்டிநெல்லினுறந்தையாங்கட், கழைநிலைபெறூஉக் காவிரிநீத்தம், குழைமாணொள்ளிழைநீவெய்யோளொடு, வேழவெண்புணைதழீஇப்பூழியர், கயநாடியானையின்முகனமர்ந்தாஅங், கேந்தெழிலாகத்துப்பூந்தார் குழைய, நெருநலாடினைபுனலே” (அகநா-௬.) என்னுமதனானும், “வேளாப் பார்ப்பான்”என்னும் பாட்டினுட்,“கழித்துறைசெறியாவாளுடையெறழ்த்தோ, ளிரவுத்துபின்மடிந்ததானை, யுரவுச்சினவேந்தன்பாசறையேமே.” (அகநா-௨௪) என்றதனானும் பாட்டுடைத்தலைமக னுயர்ந்தானுதலறிக. இதனுள், வேந்தனென்றது பாண்டியனை, பிறவுமன்ன. (௩௭)

உசஎ. நிலப்பெயர் வினைப்பெயர் பண்புகொள் பெயரொடு
குலப்பெய ரியற்பெயர் கூறுப வவர்க்கே.

(இ-ம்.) தலைமக்கட்குக்கூறப்படும் பெயர்களிவையென்பதுணர்த்துத லுதலிற்று.

நிலப்பெயர் முதலாகிய வைந்துபெயருங்கூறுவர் மேற்சொல்லப்பட்ட தலைமக்க ளிருவர்க்குமென்றவாறு.

அவற்றுள், நிலப்பெயராவன:— மலைநாடன், சோணாடன், பாண்டியநாடன் என்றாற்போல்வனவும், சிலம்பன், ஊரன், சேர்ப்பன் என்றாற்போல்வனவுமாம். வினைப்பெயராவன:— கடம்பெறிந்தான், தூங்கெயிலெறிந்தான், வடிம்பலம்ப நின்றான் என்றாற்போல்வனவுங் கோவலன், வேட்டுவனென்றாற்போல்வனவுமாம். கோவலனென்பது கோபாலனென்னும் வடமொழித்திரிபாய் ஆப்புரத்தற்றொழின்மேனின்றது. வேட்டுவனென்றது வேட்டைத்தொழிலின் மேனின்றது. பண்புகொள்பெயராவன:—நெடுஞ்சேரலாதன், இளஞ்சேட் சென்னி, பெருவழுதியென்றாற்போல்வனவும், தோன்றல், அண்ணல் என்றாற்போல்வனவுமாம். குலப்பெயராவன:—சேரன், சோழன், பாண்டியனென்றாற் போல்வனவும், குறவன், ஆயன் என்றாற்போல்வனவுமாம், இயற்பெயராவன குரவராதியுராற் பெற்றபெயரெனக்கொள்க. (௩அ)

உசஅ. அவற்றுள்,
இயற்பெயர் கிளவித் தலைவற் கிசையார்.

(இ-ம்.) கிளவித்தலைமகற்குக் கூறுப்பெய ரிஃதென்ப துணர்த்துதலுத

(இ-ள்.) மேற்சொல்லப்பட்டபெயருட் குரவராதியாற் பெற்றபெயரினைக் கிளவித்தலைமகற்குச் சொல்லார் புலவரென்றவாறு, (௩௧)

உசக. இருவரு மொருங்கே வருதலுந் தனித்தனி
வருதலு மிருவரும் வாரா தொழிதலு
முரிய வென்மனா ருணர்ந்திசி னோரே.

(இ-ம்.) அகப்பாட்டினுட்டலைமக்கள் வரும்வகையும், வாராவகையு முணர்த்துத லுதலிற்று,

(இ-ள்.) மேற்சொல்லப்பட்ட தலைமக்களிருவருங் கூடவருதலும், பாட்டுடைத்தலைமகனேவருதலும், கிளவித்தலைமகனேவருதலு, மவ்விருவரும்வாரா தொழிதலுமுரியவா மகப்பாட்டிற்குளென்றுசொன்னா ரறிந்தோரென்றவாறு.

"அரிப்பவர்பாம்பின்வரிப்புறவினைகளி, குன்றுகெழுகுறிஞ்சிக்குன்றுடைக நாடன், தண்டுறையூரன்பெண்டினையாயிற், பலவாகுகநின்னெஞ்சிற் படரே, யோவாதியுமாரிவண்கைக், கடும்பகட்டியானைநெடுந்தேராஞ்சிக், கோன்முனையிராவூர் போலச், சிலவாகுகநீதுஞ்சுநாளே." (குறுந்தொகை-௯௧.) என்னும் பாட்டினுளிருவரும் வந்தவாறு கண்டுகொள்க. "பெருங்கரைநிவந்தசிறுநறுநெய்தலுங், கருங்கயத்தமன்றசெந்தாமரையு, மரும்பவிழ்புறவிற்பூத்தமுல்லையு, மிரும்புபொதிந்திணரியபொன்னவிழ்வேங்கையு, மொருங்குநின்றுகமழும்பலர்மல்குமறுகிற்* குடவர்கோமான்குணவீற்றமனைத், தருந்தேரோன்பொன்றணிபொழிதடக்கைத், தொண்டிக்கோமான் விண்டவர்த் தேய்க்குங், கேளோம்புநெடுந்தகைபறையிற் சாஅய், நன்னலமிழந்ததீவினையேனொடு, பண்டைபோலாதின்றுபிறிதாகிக், கடுங்கதிர்காந்ததண்பனி, நெடும்புலம்படர்ந்ததண்டுறைக்குருகே." என்னும் பாட்டினுட் பாட்டுடைத்தலைமகனே வந்தவாறுங்கண்டுகொள்க. "கொண்டுறிப்பண்டம் விலையொரீஇக்கொற்சேரி, நுண்டுளைத்துன்னூசிவிற்பாரி—னொன்றுறனும், வேறல்லைபாணவியலூரன்வாய்மொழியைத், தேறவெமக்குரைப்பாய்நீ." என்னும் பாட்டினுட் கிளவித்தலைமகன்வந்தவாறு கண்டுகொள்க. "தேரோன்மலைமறைந்தசெக்கர்கொள்புன்மாலை, யாரான்பிறையனுவந்துதுஞ்-சீர்சால், சிறுகுழலோசை செறிதொடிவேல்கொண், டெறிவதுபொலுமெமக்கு." (ஐந்திணை யைம்பது-எ.) என்னும் பாட்டினுள் இருவரும் வாராதொழிந்தவாறு கண்டுகொள்க. பிறவுமன்ன. (௪௦)

௨௫௦. அகப்புறப் பாட்டு மிகப்பில வகையே.

(இ-ம்.) அகப்புறப்பாட்டுக்காவதோர் விதியுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) அகப்பாட்டிற்சொன்ன விலக்கணங்களைக் கடவா தகப்புறப் பாட்டு மென்றவாறு.

உதாரணம் வெண்பாமாலையுள்ளும், பிறவற்றுள்ளுங் கண்டுகொள்க. இத்துணையுங் கூறப்பட்டவெல்லாம் அகப்பாட்டிற்கு மகப்புறப்பாட்டிற்கு முரிய வுறுப்புக்களாம். (௪௧)

௨௫௧. முத்திறப் பொருளுந் தத்தந் திணையொடு
மரபின் வாராது மயங்கலு முரிய.

(இ-ம்.) ஐந்திணைக்குமுரிய பொருளின் வழுவமைதி யுணர்த்துதனுதலிற்று.

* பலவுமல மறுகின் என்பது பிரதிபேதம்.

(இ-ள்.) முதல் கருவுரி யென்னு மூன்று கூற்றவாகிய பொருளும் தத் தமக்குரிய திணையோடுகூடிய விலக்கணமுறையின் வாராது பிறதிணையோடு மயங்குதலும் உரியவாமென்றவாறு.

அஃதென்னையெனின், பெரும்பொருள்கத்து "உரிப்பொருளல்லன மயங் கவும்பெறுமே." என்பதனாலும், உரிப்பொருட்சூத்திரத்துள் "தேருங்காலை" என்னு மாலசினானும் பெறும்.

உதாரணம்:— "கறங்குமணிநெடுந்தேர்கண்வாளறுப்பப், பிறங்குமணன் மேலலவன்பரப்ப, வறங்கூர்கடுங்கதிர்வல்விரைந்துநீங்க, நிறங்கூருமாலைவரும்." (திணைமொழியைம்பது சஅ.) என்னு நெய்தற்பாட்டினுள் முல்லைக்குரிய மாலை யாகிய முதற்பொருண்மயங்கினவாறு கண்டுகொள்க. "அன்னாய்வாழிவேண் டன்னை" யென்னும் குறிஞ்சிப்பாட்டுள், "மான்கணமரமுதற்றெவிட்டவான்க ணங், கன்றுபயிர்குரலமன்றுநிறைபுகுதா, வேங்குவயிரிசையகொடுவாயன்றி, லோங்கிரும்பெண்ணையகமடலகவப், பாம்புமணியுமிழப்பல்வயிற்கோவல, ராம் பலந்தீங்குழற்றெள்விளிபயிற்ற" என்புழிமுல்லைக்குரியகருப்பொருளாகிய வான் கணமும் பாம்பும் கோவலரு மாம்பற்குழலு மதற்குரிய முதற்பொருளாகிய மாலை யும் நெய்தற்குரிய கருப்பொருளாகிய வன்றிலும் பனையும் வந்தவாறு கண்டு கொள்க. "உரைத்திசிற்றோழியதுபுரைத்தோவன்றே, யருத்தங்கமழுமீன்றோ, டுறைப்பவென்றியிரீஇயரொன்னுபிரே." என்னுஞ்சிற்றட்டகத்துக் குறிஞ்சிப் பாட்டினு ளூடலென்னு முரிப்பொருண் மயங்கியவாறு கண்டுகொள்க.

"சிலைவிற்பகழிச்செந்துவராடைக், கொலைவிலெயினர்தங்கைநின்முலைய, சுணங்கெனநினைதிநீயே, யணங்கெனநினையுமென்னணங்குறுநெஞ்சே." என்னு மைங்குறுநூற்றுப் (கசக) பாலைப்பாட்டினுட்புணர்தலென்னு முரிப்பொருள் வந்தது. "நாளுநாளுமாள்வினையழுங்க, வில்லிருந்துமகிழ்வோற்கில்லையாற்புக ழெனவொண்பொருட்ககல்வர்நங்காதலர், கண்பனிதுடையினித்தோழிநீயே." என்பது இருத்தலென்னு முரிப்பொருள் சிற்றட்டகத்துப்பாலைப்பாட்டினுள் வந்தது.

"வளமலர்ததைந்தவண்டுபடுநறும்பொழின், முளைநிரைமுறுவலொருத்தி யொடுநெருநற், குறிநீசெய்தனையென்பவலரே, குரவநீள்சினையுறையும், பருவ மாக்குயிற்கௌவையிற்பெரிதே." என்பது வூடலென்னுமுரிப்பொருள்வந்த வைங்குறுநூற்றுப்பாலைப்பாட்டு;(கசக) "வெறுக்கைக்குச்சென்றார்விளங்கிழாய் தோன்றார்; பொறுக்கவென்றாற்பொறுக்கலாமோ-வொறுப்பபோற், பொன்னு ளுறுபவளம்போன்றபுணர்முருக்க, மென்னுளுறுநோய்பெரிது." (திணைமாலை நூற்றைம்பது, அஎ-ம் செய்யுள்.) இரங்கலென்னு முரிப்பொருள்வந்த பாலைப்பாட்டு.

"இகல்வேந்தன்சேனையிறுத்தவாய்போல" என்பது புணர்தலென்னுமுரிப்பொருள்வந்த கலித்தொகை முல்லைப்பாட்டு. "புறவணிநாடன்காதன்மடமகளொண்ணுதல்பசப்பநீசெலிற்றெண்ணீர்ப், போதவிழ்தாமரையன்னநின், காதலம்புதல்வனழுமினிமுலைக்கே." என்பது பிரிதலென்னுமுரிப்பொருள்வந்த வைங்குறுநூற்றுமுல்லைப்பாட்டு. (சஉச.)

"உதுக்காணதுவேயிதுவென்மொழிகோ, நோன்சினையிருந்தவிருந்தோடடுப்புள்ளினங், தாம்புணர்ந்தமையிற்பிரிந்தோருள்ளா, தீங்குரலகவக்கேட்டுநீங்கிய, வேதிலாளரிவண்வரிற்போதிற், பொம்மலோதியும்புனைய, லெம்முந்தொடாலென்குவமன்னே." (குறுந்தொகை-ககூக.) என்பது ஊடலென்னுமுரிப்பொருள்வந்த முல்லைப்பாட்டு.

"என்னரேயேற்றதுணைபிரிந்தாராற்றென்பா, ரன்னரேயாவரவரவர்க்குமுன்னரே, வந்தாரந்தேங்காவருமுல்லைசேர்தீந்தேன், கந்தாரம்பாடுங்களித்து" இது இரங்கலென்னுமுரிப்பொருள்வந்த திணைமாலை முல்லைப்பாட்டு. (க0சு)

"பழனக்கம்புள்பயிர்ப்பெடையகவுங், கழனியூரநின்மொழிவலென்றுந், துஞ்சுமனைநெடுநகர்வருதி, யஞ்சாயோவிவடந்தைகைவேலே" என்பது புணர்தலென்னு முரிப்பொருள்வந்த வைங்குறுநூற்று மருதப்பாட்டு, (சு0)

"அழுந்துபடுவிழுப்புண்வழும்புவாய்புலரா, வெவ்வநெஞ்சத்தெஃகெறிந்தாங்குப், பிரிவிலபுலம்பிநுவலுங்குயிலினுந், தேறுநீர்கெழீஇயவாறுநனிகொடிதே, யதனினுங்கொடியாடானேமதனி, றுய்த்தலையிதழபைங்குருக்கத்தியொடு, பித்திகைவிரவுமலர்கொள்ளீரோவென, வண்டுசூழ்வட்டியடிரிதரு, தண்டலையுழவர்தனிமடமகளே." என்பது இருத்தலென்னு முரிப்பொருள்வந்த நற்றிணை (கூஎ) மருதப்பாட்டு. இரங்கற்கு மிதுவே யுதாரணம்.

"சுறவுப்பிறழிருங்கழிநீந்தியல்கலு, மிரவுக்குறிக்கொண்கண்வந்தனன், விரவுமணிக்கொடும்பூண்விளங்கிழையோயே." என்பது புணர்தலென்னுமுரிப்பொருள் வந்த சிற்றட்டகத்து நெய்தற்பாட்டு.

"கணங்கொளருவிக்கான்கெழுநாடன், குறும்பொறைநாடனல்வயலூரன், றண்கடற்சேர்ப்பன்பிரிந்தெனப்பண்டையிற், கடும்பகல்வருதிகையறுமாலை, கொடுங்கழிநெய்தலுங்கூம்பக், காலைவரினுங்களைஞரோவிலரே." என்பது இருத்தலென்னு முரிப்பொருள்வந்த வைங்குறுநூற்று நெய்தற்பாட்டு. (கஅங.)

"கண்டிகுமல்லமோகொண்கநின்கேளே, யொள்ளிழையுயர்மணல்வீழ்ந்தென, வெள்ளாங்குருகைவினவுவோளே." என்பது ஊடலென்னு முரிப்பொருள்வந்த வைங்குறுநூற்று நெய்தற்பாட்டு. (கஉஉ)

பிறவு மிவ்வாறு இவற்றினீங்கி மயங்கிவருவனவெல்லாங் கண்டுகொள்க. இத்துணையுங்கூறியது வழுவமைதியாம். (சஉ)

உருஉ. கூறிய வல்ல வேறுபிற தோன்றினுங்
கூறிய வற்றொடுங் கூட்டி மெய்கொளக்
கூறி யுணர்த்தல் குணத்தோர்க் கியல்பே.

(இ-ம்.) அதிகாரத்திற்காவதோர் புறனடையுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) ஈதில்பொருள் வேறேதோன்றினவாயினும் அவற்றையிதனு ளெடுத்தோதப்பட்ட பொருள்களோடுகூட்டி யுண்மைபுலப்படச்சொல்லிப்பிறர்க் குணர்த்துதல் குணமுடையோர்க்கிலக்கணமென்றவாறு. (சந)

ஐந்தாவது ஒழிபியன் முற்றும்.

அகப்பொருள்விளக்க முற்றும்.

"அகத்திணை நூற்றுப் பதினே ழடங்கா
மிருத்தகள வைம்பதுடன் மேனுன்—இருத்த
வரைவிருபத் தொன்பஃது மன்னுங்கற் பீரைந்
துரையொழிபு நாற்பஃதோ டொன்று."

"போக்கெல்லாம் பாலை புணர்த னறுங்குறிஞ்சி
யாக்கஞ்சே ரூட லணிமருதம்—நோக்குங்கா
லில்லிருத்தன் முல்லை யிரங்க னறுநெய்தல்
சொல் விரிந்த நூலின் றொகை."

# மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

## சங்கப்பதிப்பு.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஞானாமிர்த மூலமும் உரையும் ... ... | 1 | 0 | 0 |
| 2. | சைவமஞ்சரி ... ... ... | 1 | 8 | 0 |
| 3. | யாப்பணியிலக்கணங்கள் (விசாகப்பெருமாளையர் பஞ்சலக்ஷண வினாவிடையினின்று எடுத்தவை) | 0 | 10 | 0 |
| 4. | வைத்தியசாரசங்கிரகம் ... ... | | | |
| 5. | பன்னூற்றிரட்டு ... ... ... | | | |
| 6. | மகாபாரதம் அரும்பதவுரையுடன ... ... | 4 | 0 | 0 |
| | தாத்திரத்திரட்டு ... ... | | | |
| | மிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய. முதற்பாகம் . | 6 | 0 | 0 |
| | ஷை இரண்டாம்பாகம் ... ... ... | 4 | 8 | 0 |
| | ஷை மூன்றாம் பாகம் ... ... ... | 5 | 0 | 0 |
| 9. | அபிதானசிந்தாமணி ... ... ... | | | |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் ... (நச்சினார்க்கினியருரை உரையாசிரியருரையுடன்) | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக்கலம்பகம் ... ... ... | 0 | 4 | 0 |
| 12. | அருதாம்பிகைபிள்ளைத்தமிழ் ... ... | 0 | 8 | 0 |
| 13. | கலைசைச்சிலேடைவெண்பா ... ... ... | 0 | 5 | 0 |
| 14. | தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ... | 1 | 0 | 0 |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை ... ... ... | | | |
| | சயகப்புலவராற்றுப்படை உரையுடன் ... | | | |
| | பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) ... ... | 0 | 4 | 0 |
| | திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன ... | 0 | 1 | 0 |

## செந்தமிழ்ப்பிரசுரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஐந்திணையைம்பது உரையுடன் ... ... | 0 | 3 | 0 |
| 2. | கனாநூல் (5) இனியதுநாற்பது (உரையுடன்) ... | 0 | 3 | 0 |
| *3. | வளையாபதிச்செய்யுட்கள் | | | |
| 4. | புலவராற்றுப்படை (திருக்குருகூர் இரத்தின கவிராயர் இயற்றியது.) ... ... | 0 | 3 | 0 |
| 6. | நேமிநாதம் (உரையுடன்) ... ... ... | 0 | 12 | 0 |
| *7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) ... ... | | | |
| *8. | திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) | | | |
| *9. | அநுமானவிளக்கம் ... ... ... | | | |
| 10. | அட்டாங்கயோகக்குறள் ... ... | 0 | 2 | 0 |
| 11.* | விவசாயரசாயனசாஸ்திரச்சுருக்கம் ... | | | |
| 12.* | பன்னிருபாட்டியல் ... ... | | | |
| 13.* | நான்மணிக்கடிகை (பழைய உரை) ... ... | | | |
| 14 | முத்தொள்ளாயிரச்செய்யுட்கள் ... .. | 0 | 2 | 0 |
| 15. | திருச்செந்திற்கலம்பகம் ... ... .. | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா ... ... .. | 0 | 6 | 0 |
| 17. | சுகசந்தர்சனதீபிகை ... ... .. | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப்பொருட்பாடம்... .. ... | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா ... ... ... ... | 0 | 3 | 0 |
| 20. | நரிவிருத்தம் ... ... ... ... | 0 | 2 | 0 |
| 21 | சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) ... ... | 0 | 6 | 0 |
| 22 | திருக்கலம்பகம் (ஷை) ... | | | |
| 23 | விக்கிரமசோழனுலா ... ... ... | | | |
| 24. | குருமொழிவினாவிடை ... ... ... | 0 | 1 | 0 |
| 25. | சே[illegible]ருமான் இரட்டைமணிமாலை ... | 0 | 1 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| 26. | திருத்தணிகைத் திருவிருத்தம் ... ... | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத் திருப்பணிமாலை ... ... | 0 | 6 | 0 |
| 28. | சந்திராலோகம் ... ... ... | 0 | 2 | 0 |
| 29. | சோழவம்சசரித்திரச்சுருக்கம் ... ... | 1 | 0 | 0 |
| 30. | ஞானாமிர்தக்கட்டளை ... ... ... | 0 | 3 | 0 |
| 31. | பாண்டியம் ... ... ... ... | 0 | 4 | 0 |
| 32. | மனீஷாபஞ்சகம் ... ... ... | 0 | 8 | 0 |
| 33. | வேளிர் வரலாறு ... ... ... | 0 | 8 | 0 |
| 34. | அகப்பொருள்விளக்கம் ... ... ... | 1 | 4 | 0 |
| 35 | திருமந்திர நூறுபாட்டுக்குறை ... ... | | | |
| 36 | உவமானசங்கிரகம் ... .. ... | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் ... ... | | | |
| 38. | திருப்புல்லாணிமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 39. | பழமொழிமூலமும் பழைய உரையும் .. (முதல் 100 செய்யுள்) | 1 | 0 | 0 |
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ... | 0 | 8 | 0 |
| 41. | பொருட்டொகைநிகண்டு ... . | 0 | 6 | 0 |
| 42. | அகராதிநிகண்டு ... ... ... | 0 | 12 | 0 |
| 43. | மேகவிடுதூது ... ... ... | 0 | 2 | 0 |
| 44. | திருக்ர நறுல்மாலை ... | 0 | 2 | 0 |
| 45. | தண்டலையார்சதகம் . ... ... | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் ... ... . | 0 | 3 | 0 |
| 47. | பழமொழிமூலமும் பழைய உரையும் ... (இரண்டாவது 100 செய்யுள்) | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடும் தமிழும் .. ... | 0 | 4 | 0 |
| 49. | கடைவள்ளலார் காலம் ... ... | 0 | 6 | 0 |
| 50. | தமிழரும் ஆந்திரரும் ... ... ... | 0 | 4 | 0 |

வேறு பதிப்பு.

| | | | |
|---|---|---|---|
| 1. | சேரன் செங்குட்டுவன் ... .. ... | 1 | 0 |
| 2. | வஞ்சிமாநகர் ... ... | 0 | 8 |
| 3. | ஜோதிமாலை (தமிழ்நாவலர்) .. | 0 | 4 |
| 4. | சிவஞானசுவாமிகள்மீது இரட்டைமணிமாலை ... | 0 | 1 |

இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது

குறிப்பு :—

1. சங்கத்தினின்றும் மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக் கொண்டு வெளியாகிவரும் "செந்தமிழ்" பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ 4—0—0. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச் சந்தா ரூ 4—8—0. இதுவரை 23 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 3, 7, 8, 9, 10-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டுசெய்யப்பெறாத கைவசமுள்ள தொகுதிகளுள் 22 ந் தொகுதிமுடிய, தொகுதி 1-க்கு ரூ 2—0—0 வீதமும், 23-வது தொகுதி ரூ 4-வீதமும் விலைக்கு விற்கப்படும். பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகட்கானால் ஏற்பட்ட கிரயத்துக்குமேல் அணா 12 ஆகும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம் ஒன்றில் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்குமேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

லெக்ஷ்மீநாராயணையர்,
மானேஜர்.

| | | | | |
|---|---|---|---|---|
| 26. | திருத்தணிகைத் திருவிருத்தம் ... ... | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத் திருப்பணிமாலை ... ... | 0 | 6 | 0 |
| 28. | சந்திராலோகம் ... ... ... | 0 | 2 | 0 |
| 29. | சோழவம்சசரித்திரச்சுருக்கம் ... ... | 1 | 0 | 0 |
| 30. | ஞானாமிர்தக்கட்டளை ... ... ... | 0 | 3 | 0 |
| 31. | பாண்டியம் ... ... ... ... | 0 | 4 | 0 |
| 32. | மகீஷாயனுக்கம் ... ... ... | 0 | 8 | 0 |
| 33. | கேசவிர்வரலாறு ... ... ... | 0 | 8 | 0 |
| 34. | அகப்பொருள்விளக்கம் ... ... ... | 1 | 4 | 0 |
| 35. | திருமந்திரநூறுபாட்டுக்குறை ... ... | | | |
| 36. | உவமானசங்கிரகம் ... ... ... | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் ... ... | | | |
| 38. | திருப்புல்லாணிமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 39. | பழமொழிமூலமும் பழைய உரையும் ... (முதல் 100 செய்யுள்) | 1 | 0 | 0 |
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ... | 0 | 8 | 0 |
| 41. | பொருட்டொகைநிகண்டு ... ... | 0 | 6 | 0 |
| 42. | அகராதிநிகண்டு ... ... ... | 0 | 12 | 0 |
| 43. | மேகவிடுதூது ... ... ... | 0 | 2 | 0 |
| 44. | திருக்குற்றாலமாலை ... ... . | 0 | 2 | 0 |
| 45. | தண்டலையார்சதகம் .. ... ... | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் ... ... ... | 0 | 3 | 0 |
| 47. | பழமொழிமூலமும் பழைய உரையும் ... (இரண்டாவது 100 செய்யுள்) | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடுந் தமிழும் ... ... | 0 | 4 | 0 |
| 49. | கடைவள்ளலார் காலம் ... ... | 0 | 6 | 0 |
| 50. | தமிழரும் ஆந்திரரும் ... ... ... | 0 | 4 | 0 |

வேறுபதிப்பு.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | சேரன் செங்குட்டுவன் ... ... ... | 1 | 0 | 0 |
| 2. | வஞ்சிமாநகர் ... ... ... | 0 | 8 | 0 |
| 3. | ஜோ[illegible]மாலை (தமிழ்க்காவல்) ... ... | 0 | 4 | [illegible] |
| 4. | சிவஞானசுவாமிகள்மீது இரட்டைமணிமாலை ... | 0 | 1 | [illegible] |

இவ்வடையாளமிட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு :—

1. சங்கத்தினின்றும் மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக் கொண்டு வெளியாகிவரும் "செந்தமிழ்" பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ 4—0—0. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ 4—8—0. இதுவரை 23 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 3, 7, 8, 9, 10-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டுசெய்யப்பெறாத கைவசமுள்ள தொகுதிகளுள் 22-ந் தொகுதிமுடிய, தொகுதி 1-க்கு ரூ 2—0—0 வீதமும், 23-வது தொகுதி ரூ 4-வீதமும் விலைக்கு விற்கப்படும். பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகட்கானால் ஏற்பட்ட கிரயத்துக்குமேல் அணா 12 ஆகும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம் ஒன்றில் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்குமேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

லெக்ஷ்மீநாராயணையர்,